


கல்கி





KALKI
8-12-1968

40 காசு



இவன் பெரியவனானதும் யாராகவிருப்பான்? என்ஜினியரா? கட்டடக் கலைஞனா? டாக்டரா? அல்லது வக்கீலா? இவர்களில் யாராகவிருக்க இவன் விரும்பினாலும், அதற்கு, பணம் செலவாகும் — ஏராளமாகத்தான். இவனது வருங்கால வாழ்வு வளம் பெறுவதற்காக நீங்கள் பணம் சேமித்து வருகிறீர்களா? வட்டி பெற்று பணம் பெருகிக்கொண்டே வரும் யுகோ பாங்க்கில் சேமித்து வாருங்கள்.

தி
யுனைடெட்
கமர்ஷியல்
பாங்க்
லிட்.


நீங்கள் பணம் சேமிக்கலாம், யுகோ பாங்க் உங்களுக்கு உதவி செய்ய முடியும்.

தலைமை ஆபீஸ்: கல்கத்தா

ASP/UCO 9/68



நல்ல
ஒளியிருந்தால்
பெறலாம்
சிறந்த பார்வை
bajaj
Softlite
bajaj lamp
விளக்குகள்-சிறந்த நிலைமையில் இந்தியாவில் தயாரிக்கப்படுகின்றன, உலகின் மிகச்சிறந்தவற்றிற்கு ஈடானவை.
டூராலிக்ட் காயில் ஃபிலமெண்ட் கொண்ட பஜாஜ் விளக்குகள்-
குறைந்த பவருக்கு அதிக ஒளியைத் தருகின்றன.
நீடித்து உழைக்கின்றன.
பஜாஜ் சாஃப்ட் லாம்புகள்:-
கூசாத ஒளியைத் தருகின்றன
சிறந்த ஒளி பரவலைத் தருகின்றன
உங்கள் கண்பார்வையைக் காக்கின்றன.
பஜாஜ் ஃப்ளுரோசெலண்ட் விளக்குகளும் உபகரணங்களும் ஒளி சம்பந்தமான தேவைகளையும், பிரச்னைகளையும் தீர்க்கின்றன.
எலெக்ட்ரிகல்ஸ் லிமிடெட்
45-47, வீர்நரிமன் ரோடு, பம்பாய்-1
இந்தியா முழுவதிலும் கிளைகளுண்டு
heros' BE 34 B-TAM


WIN Rs. 25,000
IN ATTRACTIVE PRIZES
ENTER THE new SILKO SHAMPOO SLOGAN CONTEST
TWO SETS OF PRIZES, TWO OPPORTUNITIES, WITH JUST ONE ENTRY.
(A) PRIZES FOR ARRANGING THE 8 SLOGANS IN CORRECT ORDER
1st PRIZE: GODREJ REFRIGERATOR 9 CFT
2nd PRIZE: KISSAN GRINDMASTER 'MINI'
3rd PRIZE: U.M.S. GRUNDIG ELECTRO MODEL P45
4th PRIZE: MAZDEN ICE-CREAM CHURNER
5th PRIZE: BUSH BARON TRANSISTOR
6th PRIZE: HGE THERMAL URN
over 125 consolation prizes.
PRIZES FOR BEST SLOGAN SUBMITTED BY CONTESTANTS (B)
1st PRIZE: BAJAJ COOKING RANGE 'SENIOR'
2nd PRIZE: ADLER AIR CIRCULATOR WITH REGULATOR
3rd PRIZE: MURPHY TABLE MODEL RADIO
4th PRIZE: MURPHY TRANSISTOR RADIO
5th PRIZE: MANTECH ICE-CREAM FREEZER
6th PRIZE: BUSH BANJO
over 125 consolation prizes.
A
The first thing you have to do is to arrange the 8 slogans given by us in your order of preference.
ENTER NOW IT'S SO EASY
B
Then write one brief, catchy slogan for New Silko Shampoo yourself.
That's all you do, it's so simple, separate prizes will be given to winners in the two categories, although you send in both entries in just one form.
NEW SILKO SHAMPOO
ANOTHER CHOICE PRODUCT FROM PEARLINE-PARIS, MAKERS OF COSMETICS FOR OVER A GENERATION.
FREE - A useful gift with every large size bottle
Get your entry forms from any Pearline-Paris Dealer.
NO ENTRY FEE!
CLOSING DATE: 15th February, 1969.
THE CROWN OF RENOWN
PEARLINE-PARIS PRIVATE LIMITED, BOMBAY 1
Other Pearline Products: Icy-Kool (After Shave Lotion) Vitex (hair vitaliser), Depil (hair remover), Brilliantine, Eau-de-Cologne, Lavender, Lotion, Perfumes.

சிங்கார்
குங்குமம்



உங்கள் மேனி வண்ணத்திற்கும், சேலைக் கலர்களுக்கும் இசைவான பல நிறச்சாயல்களில் கிடைக்கும் சிங்கார் குங்குமம், உங்கள் எழிலுக்கு எழில் கூட்டி முகத்திற்குப் பொலிவைத் தருகிறது.

அது எடுப்பான ப்ளாஸ்டிக் குப்பிகளில் அல்லது ட்யூபுகளில் கிடைக்கிறது.



Bottle design Registered
Patent No: 128338

PIPIS PRODUCTS



J brothers/TA

விசாரணைகளுக்கு எழுதவும்: பேரமவுண்ட் ப்ராடக்ட்ஸ்
A - 30 - ஸ்ரீ ராம் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், G. D. அம்பேத்கார் ரோடு, பம்பாய்-31. DD.

கல்கி



ராஜாஜி மலர் பொருளடக்கம்

கீலக, கார்த்திகை 23 :: டிசம்பர் 8

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் வரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே சம்பவங்களும் கற்பனையே.

• டுவின் டஸ்கர் டிரில், பாப்லின், லாங்கிளாத் • டஸூர், காபர்டைன், ஸாடின் டக் •

ஹார்வி
ஸாராபாண்ட்
ஸூட்டிங்ஸ்



ஹார்வி தயாரிப்புகளின்
தரமேன்மையும் டெரீன் TERENE
நூலின் டீக்கான தன்மையும்
இணைந்தவை



டுவின் டஸ்கர்
துணிகள்

நயமான விலைகளில் தரமுள்ள துணிகள்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட், மதுரை
மானேஜிங் ஏஜண்டுகள் :
ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

மதுரையைச் சேர்ந்த ஹார்விஸ்

ஹார்வி
டுவின் டஸ்கர்



HMC-860/I TAM

ஸாராபாண்ட் 'டெரீன்' இணைந்த ஸூட்டிங்ஸ் • ஹார்வி 'டெரீன்' காட்டன் ஸூட்டிங்ஸ் • ஹார்வி 'டெரீன்' காட்டன் ஷர்டிங்ஸ் •

ஸாராபாண்ட் 'டெரீன்' இணைந்த ஸூட்டிங்ஸ் • ஹார்வி 'டெரீன்' காட்டன் ஸூட்டிங்ஸ் • ஹார்வி 'டெரீன்' காட்டன் ஷர்டிங்ஸ் •

ஸாராபாண்ட் 'டெரீன்' இணைந்த ஸூட்டிங்ஸ் • ஹார்வி 'டெரீன்' ஸூட்டிங்ஸ்



துயரினைப் போக்கவந்த தூய்மையே வாழி; எங்கள்
அயர்வினை நீக்கவந்த ஆண்மையே வாழி; நாட்டிற்(கு)
உயர்வினை ஆக்கவந்த உள்ளமே வாழி; நல்ல
செயலினை ஊக்கவந்த செல்வமே, தெளிவே வாழி!



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்மிடடி பாப்பா — பாரதியார்

மலர் 28 ★ இதழ் 19

நன்றி செலுத்த ஒரு நன்னாள்

இந்த டிசம்பர் 8-ந் தேதி நம் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய ராஜாஜி தொண்ணூறு பிராயங்களைப் பூர்த்தி செய்து, தொண்ணூற்றொராவது பருவத்தில் பிரவேசிக்கிறார். ஒவ்வொரு விநாடியும் உலகுக்கு உபகாரமாக நீண்ட நெடும் வாழ்வு வாழ்ந்து வரும் பெருந்தகையைப் பக்தியுடன் பணிகிறோம்.

ராஜாஜியின் தனிப் பெருமை, பல்வேறு துறைகளில் அவரது மேதாவிலாஸம் பரிபூரணமாகப் பிரகாசிப்பது தான். அவரது அரசியல் சேவை பெரிதா, ஆன்மிக சேவை பெரிதா, இலக்கிய சேவை பெரிதா என்றே கூற வொண்ணாமல் மலைக்க வைக்கிறார். அரசியல் அறிவில் இமய பர்வதமாக இருக்கிறார் எனில், ஆன்மிக அறிவிலோ மேரு மலையாக விளங்குகிறார். உலக வாழ்வின் அன்றாட நடப்புக்களில் எவ்வளவு நுட்பமான விஷய ஞானம் அவருக்கு உள்ளதோ, அதே அளவுக்கு விஞ்ஞானத்திலும், கலைஞானத்திலும் பரம பக்குவமான தேர்ச்சி எய்தி யிருக்கிறார். இவருக்குத் தெரியாத விஷயமே இந்தப் பிரபஞ்சத்தில் இல்லையோ என்று வியக்குமாறு எதைப் பற்றியும் தெளிவாக, திட்டவட்டமாகத் தெரிந்துவைத்திருக்கிறார். தெரிந்து வைத்திருப்பது மட்டுமல்ல, தாம் தொட்ட விஷயங்கள் அத்தனையையும் தங்கமாக்கி விடுகிற அற்புத ரஸவாதம் அவருக்கு ஒரு வித்தியாகக் கைவந்திருக்கிறது.

இப்படி ராஜாஜி பலப்பல விதங்களில் சிகரமாக இலங்குவதன் இரகசியம் இதுதான்: அவர் ஒரு பக்தர். அவரது மற்ற எல்லாப் பெருமைகளையும் பெருமைப்படுத்துவது இந்த பக்தியே. ஜன சமுதாயத்தில் ஈசுவரனைக் காண்பதாலேயே அவர் அரசியலில் அரும் சேவை ஆற்றி வருகிறார். சகல கலைகளிலும் அவர் ஈசுவரனின் லீலா விபூதிகளைக் கண்டு ரமிப்பதாலேயே அவரது அறிவு எல்லாத் துறைகளையும் தழுவி, அவற்றில் ஆழ்ந்து ஈடுபடுகிறது. இவ்வுலக வாழ்வில் காண்கிற பெருமை—சிறுமை யாவற்றிலும், ஒரு பரமாத்மனின் விளையாட்டுக் கரத்தைக் காண்பதாலேயே அவரது திருஷ்டி எதையும் ஒதுக்கிவிடாமல், அனைத்தையும் அணைத்து, ஆராய்ந்து ரசிக்கிறது. அவரது மக்கள் சேவை, அறிவுப் பிரசாரம், இலக்கியப் பணி யாவும் பக்தியின் பல்வேறு ஸ்வரூபங்கள்தான். பிரபஞ்சத்தில் மகா புத்திமான்களாகவும், பெருமனத்தவர்களாகவும் தோன்றிய ஒருசிலரிலும் 'பக்தன்' என்ற சிறப்புக்கு உரியவர்கள் மிக மிகக் குறைவே. எல்லாவற்றையும் அறிவால் வென்றபின் அந்த அறிவையும் இதயத்தால் வெல்வதே பக்தி நிலை. எல்லாவிதப் பெருமைகளும் எய்திய பின், அந்தப் பெருமைகளையும் எளிமையில் கரைப்பதே பக்தி நிலை. அந்த அமிருத நிலையில் நிலைத்தவர் ராஜாஜி.

அன்பைப் போலவே துவேஷமும் கூட அவனது லீலைதான் என்று காண்கிற ஒரு கனிந்த உள்ளம், தருமத்தைப் போலவே அதருமமும் அவனது விளையாட்டே என்று புரிந்து கொள்கிற ஒரு பழுத்த உள்ளம் செயலற்று இருந்துவிடாமல், உலக வாழ்வில் ஈடுபட்டு அன்புக்காகவும் தருமத்துக்காகவும் இம்மியளவும் இடைவிடாமல் அயராது பாடுபடுவது மர்மத்திலும் மர்மமான விஷயம். இது எப்படி நிகழுகிறது என்று யாரும் விடை காண முடியாது. ஆனால் இப்படித்தான் நிகழுகிறது என்று அழுத்தம் திருத்தமாக எடுத்துக்காட்ட அவ்வப்போது மகான்கள் இம்மேதினியில் தோன்றி மண்ணைப் புண்ணியமாக்குகிறார்கள். அவ்வாறு புவியைப் புனிதமாக்கி வருபவர் ராஜாஜி.

அவருக்கு நாம் தரக்கூடிய எந்தப் பொருளும் தேவையில்லை. ஆயினும் சூரியனுக்கும் கர்ப்பூரம் காட்டி நன்றி தெரிவிக்கும் நம் சம்பிரதாயப்படி, அவரது பிறந்த நாளில் நிறைந்த நெஞ்சுடன் அவருக்கு நன்றி கூறி நமஸ்கரிக்கிறோம்.

ராஜாஜியின் கருத்துக்கள்

டாக்டர் எம். மதியாஸ் அவர்களை நாகர்கோவில் இடைத் தேர்தலில் சுதந்திரக் கட்சி வேட்பாளராக நிறுத்தி வைப்பது என்று தமிழக சுதந்திரக் கட்சி செய்த முடிவைக் கட்சியின் மத்திய பார்லிமெண்ட் குழுவும் அங்கீகரித்து விட்டது. தி. மு. க.வும் முஸ்லிம் லீகும் சுதந்திரக் கட்சி வேட்பாளருக்கு முழு ஆதரவும் நல்குகின்றன.

திரு காமராஜ் அவர்களை இந்த இடைத் தேர்தலில் ஈடுபடுத்துவதற்கு முயலுபவர்கள் அவரிடம் நல்ல நட்பு கொண்டவர்கள் என்று சொல்ல முடியாது. எனினும், இந்தத் தேர்தலிலிருந்து பின்வாங்குவது திரு காமராஜ் அவர்களுக்கு இயலாது என்றே தோன்றுகிறது. காங்கிரஸ் வெற்றி பெற்றாலும் அது உண்மையில் வகுப்புவாதம் பெற்ற வெற்றியாகவே இருக்கும். எனவே, வெற்றி கிடைத்தாலும் அதைக் காங்கிரஸ் உண்மையான பெருமையின் அடையாளமாகக் கொள்ள முடியாது.

காங்கிரஸ் தோல்வியடைந்தாலோ அது ஒரு தனி நபருக்கு மகத்தான விபத்தாகும். இருந்த போதிலும், தாம் நிற்கப் போவதில்லை என்று இப்போது திரு காமராஜ் சொல்ல இயலாது.

கம்யூனிஸ்ட்களின் எல்லாப் பிரிவினரும் சுதந்திரக்கட்சி வேட்பாளரை எதிர்ப்பார்கள். காங்கிரஸுக்கே வாக்கு அளிப்பதன் மூலமோ, தங்கள் வேட்பாளராக ஒருவரை நிறுத்தி வைப்பதன் மூலமோ அவர்கள் காங்கிரஸுக்கு உதவுவர்.

சர்வாதிகாரக் கொள்கைகளையும், சர்க்காரின் சர்வாதீனத்தையும் ஆட்சேபிக்கும் எல்லா மக்களும் டாக்டர் மதியாஸின் வேட்பை ஆதரிப்பார்கள் என நம்புகிறேன்.

* * *

ராஜ்ய சர்க்கார்களின் லாட்டரியை மத்திய சர்க்கார் நிறுத்த முடியாது என்று தில்லி மந்திரி ஸ்ரீ வி. ஸி. சுக்லா சொல்வது சரியான நீதி முறை என்று நான் ஒப்புக் கொள்ளவில்லை. மிகவும் உயர் கட்டத்தில் இவ்விஷயத்தை ஆலோசித்தாயிற்று என்று அவர் மக்கள் சபையில் கூறியுள்ளார். ஆயினும், ராஜ்யங்களுக்குப் பணம் திரட்டுவதற்கு லாட்டரி நடத்த அரசியல் சாஸனம் ராஜ்ய சர்க்கார்களுக்கு அதிகாரம் தந்துள்ளதா என்பதையும், இவ்வாறு அதிகாரம் அளிக்கப்படாத பட்சத்தில் அவை லாட்டரி நடத்துவது சரியா என்பதையும் குறித்து சுப்ரீம் கோர்ட்டின் யோசனை கேட்கப்படவில்லை என்றே எண்ணுகிறேன்.

இந்திய அரசியல் சாஸனப்படி, நிதி சேகரிப்பதில் உபரியான அதிகாரங்களை மேற்கொள்ள வேண்டியது மத்திய சர்க்கார்தான்; ராஜ்ய சர்க்கார்கள் அல்ல. ஏழாவது ஷெட்யூலில் ராஜ்யங்களின் வருமானத்துக்குரிய இனங்களாகப் பட்டியலில் குறிப்பிட்டுள்ளவற்றுக்கு மேல் செல்லுவதற்கு ராஜ்யங்களுக்குச் சட்டப்படி அதிகாரமில்லை என்பது சாஸனத்தின் பிரிவைப் பார்த்தால் தெரியும். சர்க்கார் சம்பந்தமற்ற அதிருஷ்டப் போட்டிகளுக்கு லைசென்ஸ் வழங்கும் அதிகாரம் ராஜ்ய அரசாங்கத்துக்கு இருப்பதால், ராஜ்ய கஜானாவுக்காக, அதிருஷ்டப் போட்டி நடத்திப் பணம் திரட்டச் சர்க்கார் தனக்குத் தானே லைசென்ஸ் வழங்கிக் கொள்ளலாம் என்று ஆகாது.

தார்மிகமாகவும், கொள்கை ரீதியிலும் பலமான ஆட்சேபம் எழுப்பப்படுகையில், சாஸனம் விதிக்கும் தடைக்குப் பூரண மதிப்புத் தர வேண்டியதுதான். சுப்ரீம் கோர்ட்டுக்கு இவ்விஷயத்தை விடவேண்டும்.

சென்னையிலிருந்து வெளியாகும் ஆங்கில, தமிழ்ப் பத்திரிகைகளையும், லாட்டரி டிக்கெட் விற்கும் இடங்களில் நெரிகிற கூட்டத்தையும் பார்த்தால், இப்படியொரு துரதிருஷ்டவசமான திட்டத்தை முன்யோசனையின்றி நடத்துவதால் எவ்வளவு தீய, நெறியற்ற விளைவுகள் ஏற்பட்டுள்ளன என்பது விளங்கும்.

* * *

சாஸனம் தருகிற ஜீவாதார உரிமைகளையும் பார்லிமென்ட் மறுக்கலாம், அல்லது மாற்றலாம் என்ற நோக்கத்துடன் ஸ்ரீ நாத்பாய் கொண்டுவர இருக்கும் மசோதா, இந்திய அரசியல் சாஸனகர்த்தர்களின் இலட்சியத்தையே அடியோடு அற்றுப் போகச் செய்வதாகும். ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொருவிதமான அரசியல் கட்சியிடம் ஆட்சிப் பொறுப்பு அமையக்கூடும். எனவே, நாடு சுதந்திரமாக முன்னேற வேண்டுமாயின், தனிமனிதர்களைச் சர்க்காரின் குறுக்கீடுகளிலிருந்து நிரந்தரமாகக் காக்க வேண்டும் என்ற உறுதியான கருத்தின் மீதே சாஸனம் வகுக்கப்பட்டது. பிரஜைகளின் கையையும் காலையும் கட்டிப் போட்டு அவர்களை அவ்வப்போது நடக்கிற ஆட்சியிடம் (அதாவது பார்லிமென்டைக் கட்டுப்படுத்தும் சக்தி பெற்ற ஒரு குழுவிடம்) ஒப்புவித்துவிட வேண்டும் என்பதே ஸ்ரீ நாத்பாயின் மசோதா. இது குறித்து காங்கிரஸ் கட்சியில் மாற்றுக் கருத்துக்கள் நிலவுவதில் அதிசயமில்லை.

* * *

அந்நியக் கடன்களுக்காக இந்தியா ஆண்டு ஒன்றுக்குத் தரவேண்டிய வட்டி 168 கோடி ரூபாய். இருப்பினும் ஸ்ரீ மொரார்ஜி தேசாய், இந்தியாவால் கடன்களைத் திருப்பித் தர இயலாமல் போகக்கூடும் என்ற ஐயத்துக்கே இடமில்லை என்று நவம்பர் 26ந் தேதி பார்லிமென்டில் அழுத்திக் கூறியிருக்கிறார். தைரியமாக அவர் இப்படிச் சொன்னதற்கு அர்த்தம், எல்லை வரம்பே இல்லாமல் அவர் வரி விதிக்கத் தயாராக இருக்கிறார் என்பதே. வரி விகிதம் ஓரளவுக்கு மேல் அதிகமானால், முதலீடுகள் குறைந்து, சர்க்காரின் மொத்த வருமானமும் குறையும். இதையும் ஸ்ரீ

அண்டை நாட்டின் அன்புப் பிரதமர்



ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரி இந்தியப் பிரதமராகவும் ஸ்ரீமதி சிரிமாவோ இலங்கைப் பிரதமராகவும் இருந்தபோது இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினர் குறித்து நல்லதோர் உடன்பாடு காணப் பட்டது. இன்று லால்பகதூர் நம்மிடை இல்லை. ஸ்ரீமதி சிரிமாவோ பதவியில் இல்லை. ஆயினும் உடன்பாட்டின் அடிப்படையான அறமும், நேசப்பான்மையும் நிரந்தரமாக உள்ளன என்பதை நிரூபிப்பது போல, ஈழப் பிரதமர் ஸ்ரீ சேனநாயகா அவர்கள் பாரதத்துக்கு வருகை புரிந்துள்ளார். இலங்கையில் பல பிரச்னைகள் நெருக்கடி நிலை அடைந்துள்ளபோதிலும், தேசிய வேலை நிறுத்தம் இன்று எதிர்நிற்பதையும் பொருட்படுத்தாமல் அவர் இந்தியாவுக்கு விஜயம் செய்திருப்பது அவரது உத்தம நட்புப்பாங்குக்குச் சான்றாகும். இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு வரும் இந்திய வம்சா வளியினர் ஒரு லட்சம் ரூபாய் வரையில் கொண்டுவர அவர் புதிதாக வகை செய்திருப்பது பாராட்டுக் குரியது. இரு நாடுகளுக்கிடையேயுள்ள கச்சத் தீவு முதலிய இதர பிரச்னைகளும் சுமுகமாகத் தீர்க்கப்படும் என்பதற்கு அறிகுறி கண்டு அகமகிழ்கிறோம். நமது பிரதமரும் துணைப் பிரதமரும் ஈழப் பிரதமருக்குத் தில்லியில் தந்த வரவேற்பு இந்நாடு முழுவதும் அளித்த வரவேற்பின் உருவகம் எனக் கருதி அக்காட்சியை இங்கு வெளியிடுகிறோம்.

தேசாய் பொருட்படுத்த மாட்டார் என்று தோன்றுகிறது.

ஃஃஃ


கேரள ராஜ்யத்தில் மலபார் மாவட்டத்தில் நடந்துள்ள 'நேரடி நடவடிக்கைகள்' பயங்கர எச்சரிக்கையாகும். இந்த நடவடிக்கைகளுக்குப் பின்னால் ஓர் இயக்கம் செயல்படுவது நிச்சயம் என்று ஸ்ரீ நம்பூதிரிபாட் கூறுகிறார். குற்றத்தில் ஈடுபட்டவர்களில் ஒருவரே அப்ரூவராகி, அது பற்றி வெளியிடுவதுண்டு. இது அந்த ரகத்தைச் சேர்ந்த சாட்சியாகவே எனக்குத் தோன்றுகிறது.

குற்றம் புரிபவர்களைத் தப்பவிட்டு, அதற்குப் பிற்பாடு சந்தேகாஸ்பதமானவர்களைப் பிடிக்கும் காரியத்தையே போலீஸார் செய்து வருகின்றனர். இந்திய சர்க்காரும் இதற்குமேல் செல்லவில்லை.

கம்யூனிஸ்ட்கள் அனைவருமாகச் சேர்ந்து ஒரு நாசகார சமுதாயமாவர். அவர்களுக்குள் பிரிவுகள் இருப்பதால், இதனை மறந்து விடக்கூடாது. தனிப்பட்ட நபவர்களின் மனமாறுபாடுகளே அக்கட்சியில் உள்ள பிரிவுகளுக்குக் காரணம். எப்படித்தான் மறைத்தாலும் கம்யூனிஸ்ட்கள் அனைவருக்கும் பொதுவான வேலை முறை நாச காரியங்களே. எனவே, அவர்கள் அனைவரும் சட்டப்படி தடை செய்யப்பட வேண்டியவர்களே.

ஃஃஃ

சென்னையின் மிக முக்கியமான, திறம் மிகுந்த தொழிலதிபர்களில் ஒருவரான ஸ்ரீ வி. ராமகிருஷ்ண அவர்களின் மறைவுக்கு ஆழ்ந்த வருத்தம் தெரிவிக்கிறேன். 1947ல் அவர் ஐ. ஏ. எஸ். சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். அதிலிருந்து தொழிலபிவிருத்தியில் ஈடுபட்டிருந்தார். தென் இந்தியாவின் தொழில் முன்னேற்றத்துக்கு அவரது மரணம் மகத்தான நஷ்டமாகும்.



அன்று!
'படுத்துக் கொண்டே ஜயிப்பேன்'
என்று கூறினர் காமராஜர்.
இன்று
நாகர்கோயிலில்
நர்த்தனம்

தெய்வ தூதர்

ஜெரோம் டி'ஸௌஸா

புனிதப் பாதிரியாராகிய ஜெரோம் டி'ஸௌஸா அவர்கள் தூய்மைக்கும், விரத அனுஷ்டானங்களுக்கும் பெயர் பெற்ற ஜெஸுவைட் துறவிக் குழுவைச் சேர்ந்தவர். சென்னை லயோலா கல்லூரியில் முதல்வராக அரும்பணி புரிந்தவர். சிறந்த கல்வியாளராகிய அவர் அரசியல் நிர்ணய சபையில் அங்கம் வகித்தவர். சில ஆண்டுகள் ரோமாபுரியில் போப் அவர்களின் வாடிகன் சாம்ராஜ்யத்தில் பணிபுரிந்தார். தற்போது திண்டுக்கல் பெஸ்கி கல்லூரியில் உள்ளார்.

□

காந்திய சகாப்தத்தின் மகாபுருஷர்களில் எஞ்சியிருக்கும் ஒரே ஒருவர் ராஜாஜி. சில விதங்களில் இவரே அம்மகாபுருஷர்களில் முதன்மை ஸ்தானம் பெற்றவர். குருநாதர் காந்தியடிகளின் ''பிரபை'' ஆசாரிய வினோபா பாவேயிடம் அதிக அளவில் காணப்படினும் அவர் அடுத்த தலைமுறையைச் சேர்ந்தவர். அவர் வாலிபத்திலேயே காந்திஜியின் செல்வாக்குக்கு ஆட்பட்டவர். அவரை முற்றிலும் மகாத்மாவே உருவாக்கினார் எனலாம். ஆனால் ராஜாஜி ஏறக்குறைய காந்திஜிக்குச் சம வயதினர். அவர் ஓரளவு முதிர்ச்சி பெற்ற பருவத்திலேயே காந்திஜியின் சக்திக்கு ஆளானார். அதன் முன்பே வாழ்க்கைப் பிரச்னைகள் குறித்து அவரது அடிப்படை நோக்கு பரவலான முறையில் நிர்ணயமாகியிருக்கும். எனவே குருநாதரான காந்திஜியின் போதனைகளை ராஜாஜி சுதந்திர மனப்போக்குடனேயே ஏற்க முடிந்தது. அந்தப் போதனையை மாறுகின்ற காலங்களுக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்பச் சரிப்படுத்திக்கொள்வதிலும் ராஜாஜிக்கு அதிக ஆற்றல் உண்டு. அவர் உண்மையான காந்தியவாதி. எனினும் மற்ற காந்தியவாதிகளிடமிருந்து வித்தியாசமானவர்.

ராஜாஜி என்ற வியக்தியின் மிகச் சிறந்த அம்சம் எது என்று என்னைக் கேட்டால், அவரது அறிவு சார்ந்த திருஷ்டியின் தெளிவும், யாவற்றையும் ஊடுருவிப் பார்க்கும் நோக்கும், உணர்ச்சிகளை வென்ற புத்தி சக்தியுமே என்பேன். மதியின் தெளிவுக்கு அநுசரணையாக அவரது வாக்கும் தெளிவானது. அவரது வாக்கு வன்மை விசேஷமானது. அவருக்கென்று ஓர் எழுத்து நடை உண்டு. அது எளிமையானது, நேரடியானது, சக்தி வாய்ந்தது. விரிந்த வீச்சு உள்ளது. அதன் எளிமையைப் பார்க்கும்போது இப்படி விரிந்த வீச்சு இருக்கும் என்பதே தெரியாது ஏமாந்து விடுவோம். இது அவரது தமிழ் நடைக்கும் பொருந்தும் என்று நினைக்கிறேன். ஆங்கிலத்தைப் பொருத்தமட்டில் அவரது நடை மிக மிகத் தெளிவானது; திரும்பத் திரும்ப அடிபட்ட சொற்றொடர்களை அவரிடம் காண முடியாது; உவமைகளும், சின்னஞ்சிறு கதைகளும் கூறுவதில் அவர் பெற்றுள்ள அசாதாரண வரப்பிரசாதம் அவரது நடையை மேலும் செழிக்கச் செய்கிறது. கீழ் நாடுகள் மேல் நாடுகள் இரண்டிலுமே ராஜாஜி போல் பூரண ஆற்றலுடன் ஆங்கில மொழியை உபயோகிக்கக் கூடியவர்கள் வெகு சிலரே இருப்பர். ஒரு காலத்தில் அவரது எழுத்துக்களில் சில ஆங்கில வசன இலக்கியங்களில் தலைசிறந்தவற்றுடன் இடம் பெறும்.

அடிப்படையான கருத்துக்களைச் சக்தியுடனும் முழுமையுடன் சிந்திப்பதில் — இக்கருத்துக்களை இம்மியும் பிறழாமல் உத்வேகத்துடன் மொழிவதில் — அவர் மற்றெந்தத் தலைவரையும் விட காந்திஜிக்கு ஒப்பாக இருக்கிறார். சற்றும் அச்சமற்றிருப்பதிலும் அவர் காந்திஜி போன்றவர். மக்கள் என்ன எண்ணுவார்கள் என்பதைப் பொருட்படுத்தாமல் தமது அறிவு காணும் உண்மைகளை — தம் மனச்சாட்சியின் ஆணைகளை — பூரண விசுவாசத்துடன் எடுத்தியம்புவதிலும் அவர் காந்திஜிக்கு நிகரானவர். இன்னது செய்தால் தேசத்துக்கு நன்மை உண்டாகும் என்று அவர் எண்ணிவிட்டால், அதன் பின் அவர் அதைச் செய்வதற்கு எவ்விதமான மானுடப் பற்றும் குறுக்கே நிற்காது. ஒரு 'கூட்டணி' அவசியமாக ஏற்பட வேண்டுமெனில், அப்போது பழைய துவேஷங்களையும், எதிர்ப்

அணு ஆயுத ஒழிப்பு பற்றிப் பேச அமெரிக்கா சென்று கென்னடியைச் சந்தித்த ராஜாஜி இந்தியா திரும்புகையில் வாடிகனில் போப் ஜானைத் தரிசித்து காந்தி சமாதான நிறுவனத்தின் நற்பணிக்கு அவரது ஆசியைப் பெற்றார்.



புணர்ச்சிகளையும் பொருட்படுத்த மாட்டார். ராஜாஜி, நட்பு என்பது எல்லா இனங்களிலும் ஒரே போன்ற கருத்துக் கொண்டிருப்பது என்று எண்ணவில்லை. கருத்துப் பிணக்கு என்ற சோதனையிலும் நட்புக் குலையாதிருக்க வேண்டும் என்று காந்திஜி போல் கருதுபவர் ராஜாஜி. ஆரம்ப காலத்தில் ராஜாஜி காங்கிரஸிடம் மிகுந்த விசுவாசமும் ஈடுபாடும் கொண்ட தொண்டராக இருந்தவர்தான். எனினும் அவர் அந்த மகத்தான ஸ்தாபனத்திலிருந்து பிரிந்து வருவதற்கு இந்தப் பழைய ஈடுபாடு குறுக்கே நிற்கவில்லை. முதலில், சுதந்திரம் பெறுவதற்குக் கூலியாக பாகிஸ்தானைப் பிரித்துத் தரவேண்டியதுதான் என்று கூறி காங்கிரஸிலிருந்து வெளியேறினார். பிறகு, சமீப காலத்தில் காங்கிரஸ் சோஷலிஸத்தின் உட்கிடைகளை அவரால் ஒப்ப முடியாதபோது காங்கிரஸிலிருந்து வெளியேறினார். தமது சக்தி அனைத்தையும், அறிவு வளம் அனைத்தையும் சுதந்திரக் கட்சியை உருவாக்கவே செலவிடுவது என்று முடிவு செய்தார். காங்கிரஸ் கொள்கையின் அதிதீவிரப் போக்கை காந்திஜியால் ஒப்புக் கொள்ள முடியாதபோது, காந்திஜியும் காங்கிரஸின் நாலணா மெம்பராகக்கூட இல்லாமல் அந்த ஸ்தாபனத்தை விட்டு வெளியேறியதை நாம் இங்கு நினைவுகூர்வோமாக!

ராஜாஜியினுடைய புத்தி சக்தியில விசேஷம் என்னவெனில், மிகவும் வயோதிக தசையிலும் அந்தச் சக்தி அப்படியே இருப்பதுதான். அவரைவிட பலப்பல ஆண்டுகள் வயதில் சிறியவர்களின் புத்திக்குரிய நிட்சண்யமும், விழிப்பும் அவரது அறிவில் காணப்படுகின்றன. இந்தத் தொண்ணூற்று ஓராம் பருவத்திலும் அவரால் எந்த ஒரு பிரச்னையையும் அலசிப் பார்த்து, அதன் சாராம்சங்களை ஒரு சில வார்த்தைகளில், பிரமிப்பூட்டும் கச்சிதத்துடன் தெள்ளத் தெளிய விளக்க முடிகிறது. அரசியல், பொருளாதாரம், சமயம், தத்துவம், இலக்கியத் திறனாய்வு — என்றிப்படிப் பல துறைகளில் அவரது அறிவு இவ்விதம் செயல்படுகிறது. மிஸ் மேயோவின் 'அன்னை இந்தியா' என்ற புத்தகம் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். 'சாக்கடை இன்ஸ்பெக்டரின் அறிக்கை' என்று இப்புத்தகத்தைப் பற்றிக் காந்திஜி சுருக்கமாக, ஆனால் தீர்மானமாக வருணித்தார். அப்புத்தகத்தில் இந்தியர்கள் சிறு வயதிலேயே தேக திடத்தையும், புத்திவன்மையையும் இழந்துவிடுகின்றனர் என்றும், முப்பது வயதிலேயே மூப்படைந்து விடுகின்றனர் என்றும் குறிப்பிட்டிருக்கிறது. (மிஸ் மேயோவின் புத்தகத்திலிருந்து ஒரு பிரெஞ்சு எழுத்தாளர் இந்தக் கருத்தையே பெற முடிந்தது என்று எனக்கு ஞாபகம்.) உலகில் வேறெந்தப் பகுதியிலும் காண முடியாத அளவுக்கு இந்தியாவின் சில பாகங்களில்தான் நூறு வயது கண்டவர்கள் அதிக விகிதாசாரத்திலுள்ளனர் என்பது மிஸ் மேயோவுக்குத் தெரிந்திருக்கவில்லை. முதுமையிலும் அறிவு சக்தியுடன் செயலாற்றுவதற்கு உதாரணமாகக் காலஞ்சென்ற ஸர் எம். விசுவேசுவரையாவையும், பேராசிரியர் கார்வேயையும் கண்டோம். நூறுவது வயதிலும் இவர்களது அறிவு சக்தியுடன் செயலாற்றியது; அவர்களைவிடவும் சிறப்பாக 91வது வயது காணும் ராஜாஜி, இளம் போர்க் கலைஞன் கூர்வாளை வீசுவது போல் தமது பேனாவைப் பிரயோகிப்பதைக் காண்கிறோம்.

காந்திஜி, பண்டித நேரு ஆகியோரின் தலைமையில் இயங்கிய காங்கிரஸ் கட்சியை இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு கலைத்து விட வேண்டும் என்று காந்திஜி பரிந்துரை செய்தார். காங்கிரஸை ஒரு தனிப்பட்ட அரசியல் கட்சியாக நீடிக்கக் கூடாது என்பது அவரது கருத்து. மிகவும் மாறுபட்ட கருத்துக்கள் கொண்ட பலரை 'சுயராஜ்யம் வேண்டும்' என்ற ஒரே அம்சத்தில் மட்டும் ஒன்றுபடுத்திப் பரந்து விரிந்த ஓர் அகில இந்திய ஸ்தாபனமாக ஆனது காங்கிரஸ். எனவே சுயராஜ்யம் வந்த பின் ஆங்கிலேய மாதிரியை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட ஜனநாயக அரசியல் ஆட்சி முறையில் காங்கிரஸ் கட்சி ஒரு தனிப்பட்ட அரசியல் கட்சியாகச் செயலாற்றக் கூடாது என காந்திஜி கருதினார். அவரது யோசனைக்குக் காங்கிரஸ் செவிசாய்க்கவில்லை. தேசத்தின் பொருளாதாரத்தையும் சமுதாயத்தையும் புனர் நிர்மாணம் செய்கின்ற ஆரம்பக் கட்டங்களில் ஒரு பெரிய தேசியக் கட்சி இருக்க வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர்கள் கருதினர். ஆயினும் விரைவிலேயே கட்சியிலுள்ள மாறுபட்ட கருத்தினர் கட்டுக்கோப்பாக இருக்கின்ற நிலையைக் காக்க முடியாது என்று புலனாயிற்று. தாய்க் கட்சியிலிருந்து பல முக்கியமான கோஷ்டிகள் பிரிந்தன. ஆரோக்கியமான இரு கட்சி முறைக்கு இது வழி செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். துரதிருஷ்ட வசமாக அப்படி இன்றி, துண்டு துண்டாகப் பல கட்சிகள் தோன்றின. சென்ற தேர்தலுக்குப் பிறகு ஸ்திரமற்ற கூட்டு சர்க்கார்கள் ஏற்பட்டன. நமது அரசியல் வாழ்வில் மிகவும் துன்பமூட்டும் சம்பவங்கள் ஏற்பட்டன. தேர்தல் காலத்தில் செய்த பிரமாணங்களை முறித்து ஏராளமானவர்கள் கட்சி விட்டுக் கட்சி மாறினர். இதற்கு முடிவு காணாவிடில் உண்மையான ஜனநாயக ஆட்சி நடப்பதே அசாத்தியமாகி விடும். ஏனெனில் இவ்வாறு கட்சி மாறுவது சட்டசபைத் தேர்தல் முறையையே தோல்வியுறச் செய்கிறது.

ஜனநாயகத்தைக் காக்க வேண்டுமாயின் பரந்த அடிப்படையில் இரண்டே இரண்டு கட்சிகளிடை நமது அரசியல் வாழ்வு பகுக்கப்படுவது அவசியம் எனத் தோன்றுகிறது. முந்தைய வாழ்முறைகளின் நல்ல அம்சங்களைக் காத்துத் தரும் கன்ஸர்வேடிவ்கள், புது முறைகளைப் பின்பற்றும் முற்போக்காளர்கள் என்று இவ்விரு கட்சியினரைக் கூறலாம்.

ராஜாஜி கூறுவதை எல்லா விஷயங்களிலும் ஒப்புக்கொள்ள இயலாதவர்களும் அவர் சுதந்திரக் கட்சியைச் சிருஷ்டித்து வளர்ப்பதில் காட்டிய ஆற்றலும், விடா முயற்சியும் மேற்சொன்னவாறு நம்முடைய

மகாத்மாவின் மணிமொழி

ராஜாஜியின் விவேகத்திலும், நேர்மையிலும், சட்டசபையாளர் என்ற முறையில் அவருக்குள்ள இணையற்ற திறனிலும் எனக்குக் கரை காணாத நம்பிக்கை உண்டு. அவர் புரிந்துள்ள சாதனைகள் அற்ப சொற்பமானவை அல்ல. அவரை விடச் சிறந்த ஒரு சத்தியாக்கிரக வீரர் நம்மிடை கிடையாது. ('ஹரிஜன்', ஸெப். 10, 1938)

எவரிடமும் பக்க பலத்தை எதிர்பார்க்காத திறம் படைத்தவர் ராஜாஜி; எவர் மீதும் துவேஷ எண்ணம் கொள்ள முடியாத தத்துவ தரிசனம் வாய்ந்தவர் அவர் என்பதை நான் நன்கு அறிவேன். அவர் மிகவும் நுண்ணிய நகைச்சுவை உணர்வு பெற்றவரான படியால் தம்மைக் குறித்தே செய்கிற கேலியையும் கூட ரசிக்கக் கூடியவர்.

('ஹரிஜன்', ஸெப். 22, 1940)



பூரணமாக அலசிப் பார்க்காமல் எந்த ஒரு முடிவுக்கும் ராஜாஜி வரமாட்டார். அவ்விதம் ஒரு முடிவுக்கு வந்த பின், எத்தனை கசப்புக்களையும் பொருட்படுத்தாமல் அந்த இலட்சியத்தின் அந்தம் வரையில் செல்வார். எனக்கு அவரிடமுள்ள விசுவாசத்தில் அவருக்குப் பெருத்த நம்பிக்கை உண்டு. நான் எப்படி அவரை ஒருபோதும் விட்டதில்லையோ அதேபோல் அவரும் என்னை ஒருபோதும் விட்டதில்லை.

(பத்திரிகை அறிக்கை, ஸெப். 28,1944)

ராஜாஜி என்னுடைய மிகப் பழைய நண்பர்களில் ஒருவர். என் கொள்கைகளுக்கெல்லாம் வாக்கின் மூலமும், செயலின் மூலமும் விளக்கம் தருபவர்களில் அவர் தலை சிறந்தவர் என்பதை உலகறியும். 1942ல் அவர் என்னிடமிருந்து மாறுபட்டதை அறிவேன். அம்மாறுபாட்டை அவர் பகிரங்கமாக வெளியிட்ட திறத்துக்கு எவ்வளவு மரியாதை செலுத்தினாலும் தகும். அவர் தமது நம்பிக்கைப்படி நடக்க அஞ்சாத மகத்தான சமூக சீர்திருத்தவாதி. அவரது அரசியல் அறிவும், ஒழுக்கத்தின் நிறைவும் ஐயத்துக்கு அப்பாற்பட்டவை. ('ஹரிஜன்', பிப். 10, 1946)

அரசியல் இரு பெரும் கட்சிகளிடையே பகுக்கப்படுவதற்கு உதவிய மகத்தான நடவடிக்கை என்று ஒப்புக் கொள்வர். இந்தியாவில் உள்ள மற்ற கன்ஸர்வேடிவ் கட்சிகள் மட்டும் தமது வகுப்புவாதத்தையும் பிரதேசப் பற்றையும் விட்டு, மதச்சார்பின்மையை ஏற்கவும், அரசியல் சாஸனத்துக்கு இசைய சிறுபான்மையினரின் நலனைக் காக்கவும் முன்வந்தால் இந்தியாவில் ஆரோக்கியமான இரு கட்சி முறை பரிணமிக்கும். ஒருபுறத்தில் சோஷலிஸ பாணியில் சமுதாயம் அமைக்க விரும்பும் காங்கிரஸின் முற்போக்காளர் இருப்பார்கள்; மறுபுறத்தில், சமூகத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் அதிகமாகத் தனி மனித சுதந்திரம் கோருபவர்களும், காந்திஜி கருதியது போலவே மிகக் குறைவாக ஆட்சி அதிகாரம் செலுத்தும் சர்க்காரே சிறந்த சர்க்கார் என்று கருதுவோரும் இருப்பார்கள்.

விசேஷமான வளம் பெற்றிராத நாடு இந்தியா. பொருளாதார அறிவில் அதிக முன்னேற்றம் காணாத நாடு இந்தியா. பூரண அபிவிருத்தி பெறாமல் இன்னும் அபிவிருத்திப் பாதையிலேயே உள்ள நாடு இந்தியா. இப்படிப்பட்ட ஒரு நாட்டின் வளர்ச்சிக்குச் சர்க்காரின் கட்டுப்பாடும், சர்க்காரின் தொழில் ஆதிக்கமும் முக்கியமாக உள்ள கலப்புப் பொருளாதாரம் நல்லதா, அல்லது தனியார் துறையை முக்கியமாகக் கொண்ட சுதந்திரமான போட்டியுள்ள பொருளாதாரம் நல்லதா என்பது இன்னும் முடிவு காணப்படாத பிரச்னையாகும். இப்பிரச்னைக்கு விடை காண்பதில் இரு வேறு அரசியல்—பொருளாதாரக் காரியத் திட்டங்கள் உண்டாவது இயற்கை. இதனுல் இரு கட்சி முறை உண்டாகும். கம்யூனிஸ்டுகள் மைனரிட்டியாவர். முக்கியமான இரண்டே கட்சிகள் ஏற்படுவதால் மனப்பூர்வமான கொள்கைப் பிடிப்பு உள்ளவர்களே அரசியலில் இருப்பார்கள். இவர்கள் கட்சி விசுவாசம் என்ற பெயரில் பிடிவாதமாக இராமல், அதமபட்சமாகவே கட்சிப் பற்றுள்ளவராயிருப்பர். விரும்பத்தக்க இந்நிலைக்கே ராஜாஜியின் சமீப கால அரசியல் பணி நாட்டை இட்டுச் செல்கிறது என நம்புகிறேன்.

ஆனால் ராஜாஜியின் ஈடுபாடுகள் இந்திய அரசியலோடு நின்றுவிடுவனவல்ல. அவை உலகம் முழுவதையும் தழுவுபவை. அவர் சர்வதேச நிலையை உன்னிப்பாகக் கவனித்து வருகிறார். அணு ஆயுதத் தீமை பற்றி ஆழ்ந்த கவலை கொண்டவர் ராஜாஜி. இதில் அவர் காட்டிய பெருத்த விசாரம்தான் அவர் உத்வேகத்துடன் புரிந்த ஒரு சாகஸச் செயலுக்குக் காரணமாயிற்று. தமது என்

பத்துநாலாவது வயதில் அவர் அமெரிக்காவுக்குப் பிரயாணம் மேற்கொண்டு, வல்லரசுகளுடன் அணு ஆயுத பரிகரணத்துக்காக வாது புரியச் சென்றது சாகஸமேயன்றோ? இப்பயணத்தின்போது, இந்தியாவுக்குத் திரும்புகையில் அணு ஆயுத விஷயமாக இருபத்து மூன்றாவது போப் ஜான் அவர்களுடன் பேசுவதற்காக அவர் ரோமாபுரிக்கு வந்தார். அப்போது, அதாவது 1962ல் நான் ராஜாஜியை ரோமில் சந்தித்ததும், அவரைப் புனிதத் தந்தையான போப் ஆண்டவரிடம் அறிமுகப்படுத்தியதும், இவ்விருவருக்கிடையே மொழிபெயர்ப்பாளனகப் பணியாற்றியதும் என் நினைவுப் பொக்கிஷத்தில் நான் மிகவும் போற்றும் ஒரு புதையல் சொத்தாகும்.

போப் ஆண்டவர் தரிசனத்துக்கு ஏற்பாடு செய்யுமாறு என்னைக் கேட்டுக் கொண்டதன் மீது நான் அவ்வாறே செய்தேன். இருப்பினும் போப் அவர்களின் சாம்ராஜ்யமான வாடிகன் என்ற பீடத்தின் அதிகாரிகளே மொழி பெயர்ப்புப் பணி செய்வது வழக்கமாதலால், எனக்கு இந்தப் பணி அளிக்கப்படும் என்று நான் சிறிதுகூட எதிர்பார்க்கவில்லை. ஆயினும் ராஜாஜியின் விருப்பம் வென்றது. இரு மாபெரும் மனிதர்கள் இதயம் கலந்து உரையாடுவதைக் காண்கின்ற இணையற்ற ஆனந்தம் எனக்குக் கிடைத்தது. போப் ஆண்டவர் தமக்குரிய முறையில், தகுந்த சமயம் வரும்போது அணு ஆயுத பரிகரணத்துக்கு முயற்சி எடுப்பதாக வாக்குறுதி கொடுத்தார். இதற்குப் பிறகு வெகு சீக்கிரத்திலேயே உலக அமைதி குறித்து அவரது பிரகடனம் வெளியாயிற்று. அது அணு ஆயுதப் போர் முறையைச் சிறிதும் விட்டுக் கொடுக்காமல் கண்டனம் செய்தது. இந்தப் பிரகடனத்தை ராஜாஜி படித்தவுடன் அது அவரது இதயத்தைத் தொட்டுவிட்டது. போப் ஆண்டவருக்குத் தமது ஆழ்ந்த நன்றியறிதலைத் தெரிவிக்கச் சொல்லி எனக்கு எழுதினர். அவரது கடிதம் எனக்குக் கிடைக்கும் சமயத்தில் போப் ஜான் அவர்கள் உடல் நலிவுற்றுத் தம் அறைக்குள்ளேயே முடக்கப்பட்டு விட்டார். அந்தப் பயங்கர நோய் இன்னும் சில நாட்களில் அவரது உடலையே தூக்கிச் செல்ல இருந்தது. அப்போது ஸ்ரீ டெல் அக்வா பாதிரியார் மூலமாக (இப்பொழுது இவர் கார்டினல் பதவியில் உள்ளார்) ராஜாஜியின் கடிதத்தைப் போப் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மூன்று நாட்களில் அப்பாதிரியார் மூலமாகவே போப் அவர்களின் பதில் வந்தது. ராஜாஜியின் செய்தியைத் தாம் போற்றுவதாகவும், தமது நோயிலும் இந்தியாவையும் அதன் தலைவரையும் அடிக்கடி நினைவு கொண்டு அவர்களுக்காகப் பிரார்த்திப்பதாகவும் போப் அவர்கள் எனக்குத் தெரிவித்திருந்தார்.

இது இக்கட்டுரையில் கடைசி அம்சத்துக்கு என்னை இட்டுச் செல்கிறது. போப் ஜான் அவர்கள் முனிவராகவே நம் கண்ணெதிரில் உயிர் வாழ்ந்து காட்டிய தேவ தூதர். ராஜாஜி ஓர் அரசியல் தலைவர்—மத நம்பிக்கையில் போப் ஜான் அவர்களிடமிருந்து மிகவும் மாறுபட்டவர். எனினும் இவ்விருவருக்கும் பொதுவாக ஓர் அம்சம் இருந்தது — ஆண்டவனிடம் அசையாத நம்பிக்கை என்பதே இவ்வம்சம். இருவரும் ஆன்மிகப் பண்புகளே மனித வாழ்வில் முதலிடம் பெற்றவை என்று கருதினர். ராஜாஜி அறிவு வழியில் சிறந்தவர்; உணர்ச்சி வேகத்துக்குத் தம்மை ஆட்படுத்திக் கொள்ளாதவர். அவரது மத நம்பிக்கை ஆழ்ந்து பகுத்தறிந்து ஏற்பட்ட ஒன்று. அவரது கடுமையான நீண்ட வாழ்க்கைக்குப் பலமும், இசைவும், நிரமும், மேம்பாடும் ஊட்டியது இந்த மத நம்பிக்கையே. அவர் எவ்வளவோ விஷயங்கள் எழுதுகிறார். இருப்பினும், ஆண்டவனைப் பற்றியும், அவனது எல்லையின்மை பற்றியும், அவனது செயல்கள் பிரபஞ்ச முழுவதற்கும் பொதுவாயிருப்பது பற்றியும், அவனது திட்டத்தில் காணும் பேரறிவுத் திறன் பற்றியும் ராஜாஜி எழுதும்போது அது நம் இதயத்தை உலுக்குவதுபோல் மற்ற விஷயங்கள் நம்மைத் தொடுவதில்லை. இதிலும் அவர் காந்திஜியைப் போன்றவர்—அதாவது அவர் ஒரு தெய்வ தூதர். பார்லிமென்டில் மகாத்மாவுக்கு நினைவஞ்சலி செலுத்துகையில் ஜவாஹர்லால்ஜி அவரைத் 'தெய்வ தூதர்' என்றே குறிப்பிட்டார். தமக்கே உரிய விதத்தில், தமக்கே உரிய அளவில் ராஜாஜியும் தெய்வ தூதர் ஆவார். இந்த மங்களமான பிறந்த தின விழாவில் ராஜாஜிக்குத் தெய்வ அனுக்கிரகம் பெருகுமாக! தமது வாக்கின் வேகத்தாலும், அந்த வாக்குப்படி வாழ்ந்து காட்டுகிற உதாரண வாழ்வின் சக்தியாலும் நம் மக்களுக்குத் தொண்டு புரிந்து அவர்களுக்கு இன்பம் ஊட்டுவதற்காக ராஜாஜியை ஆண்டவன் பல்லாண்டுகள் நமக்குக் காத்துக் கொடுப்பானக!

அட்டைப்பட விளக்கம்

தருமம் மறுபடி வெல்லும்


இவ்வாண்டு 'கல்கி'ப் பத்திரிகை ராஜாஜி ஜயந்தி கொண்டாடுவதில் ஒரு தனிச் சிறப்பு உண்டு. ராஜாஜி எழுதிய மகாபாரதம் 'கல்கி'யில் வெளியாகிறபோதே நிகழும் ஜயந்தி அல்லவா இது? அந்த மகாபாரதம் உணர்த்தும் படிப்பினை ஓரளவுக்கு நடைமுறையிலும் மேவத் தொடங்கியிருக்கும் சமயமும் இதுவே !


பாரதப் படிப்பினை என்ன? 'தர்மத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்; தர்மம் மறுபடி வெல்லும்' என்பதே. அதற்கேற்ப, தற்போது தலைவரவர்களின் தளராத தொண்டின் பயனாக அதரும மூட்டம் சிறுகச் சிறுக விலகித் தருமம் ஒளிவிடத் தொடங்கியுள்ளது. இத்தருணத்தில் தருமசக்தியின் உருவமான பீமசேனன், அதரும பலத்தின் உருவாம் துரியோதனனை வெற்றி கொண்ட சம்பவத்தை ராஜாஜி மலரின் புறவிதழாக மணம் பரப்பச் செய்திருப்பது பொருத்தம்தானே?



தயாரிப்பு: வாண்டுமாமா

19





உருளும் கோலி!

'வழி கண்டு பிடி' என்று விருந்திலே வெளியாகும் படங்களில் பென்சிலைக் கொண்டு கோடு கிழித்து விடை காண்பீர்கள் இல்லையா? இப்போது அதே போல, ஆனால் அதைவிடச் சுவாரஸ்யமானதோர் விளையாட்டு இது. ஏதாவது ஓர் அட்டைப் பெட்டியின் மூடியை எடுத்துக் கொண்டு அதில் வெள்ளைக் காகிதத்தை ஒட்டுங்கள். பிறகு அருகே காட்டியுள்ளது போலப் பென்சிலால் வரைந்து கொள்ளுங்கள். அந்தக் கோட்டின் மீதாகத் தீக்குச்சிகளை ஒரு பக்கத்தில் கோந்து தடவி ஒட்ட வையுங்கள். (செல்லோ டேப் இருந்தால் தீக்குச்சிகளை அதைக் கொண்டு பொருத்தி விடலாம் சுலபமாக) தேவைக்கு ஏற்றபடி தீக்குச்சிகளை இணைத்தோ, ஒடித்துத் துண்டுகளாக்கியோ இந்தப் புதிர்ப் பாதையை அமையுங்கள். தயாராகிவிட்டதா? இனி ஒரு சிறிய கோலிக் குண்டை 'ஆரம்பம்' என்ற இடத்தில் வைத்துப் பெட்டியைக் கையில் ஏந்தியபடி மெதுவாக அதைத் தீக்குச்சி வேலி கட்டிய பாதைகளிடையே உருட்டி 'முடிவு' என்ற வாசல் வழியே வெளியே கொண்டு வாருங்கள். கோலிக் குண்டு பெட்டியின் ஓரங்களின் வழியே கீழே நழுவி விழக் கூடாது. தீக்குச்சிச் சுவரைத் தாவிக் கடக்கக்கூடாது. அப்படி நேருமானால் மறுபடி ஆரம்பத்திலிருந்து தொடங்க வேண்டியதுதான். நீங்கள் நினைப்பது போல இது அத்தனை சுலபமல்ல. ஆனால் பயிற்சியும், கைகளில் நிதானமும் கூடுமானால் பத்தே விநாடிகளில் கோலிக் குண்டை முறையாக வெளியே கொண்டு வந்துவிடலாம். யார் மிகக் குறைந்த நேரத்தில் கோலிக் குண்டைப் புதிர் பாதையின் வழியே செலுத்திக் கொண்டு வருகிறார்களோ அவர்களுக்குச் 'சாம்பியன்' பட்டம் அளிக்கலாம்.

பொல்லாத எலிகள்!

எலித் தொல்லை தாங்காமல் ஒருவர் எலிப் பொறி வாங்கி வந்தார். ஆனால் பொறியில் வைக்க வடை வாங்க மறந்து விட்டார். சற்று யோசித்துவிட்டு ஒரு பத்திரிகையில் வெளியாகியிருந்த வடையின் வர்ணப் படத்தைக் கத்தரித்துப் பொறிக்குப் பொருத்திவிட்டார்.

மறுநாள் காலையில் அவர் கண்ட காட்சி அவரைத் திடுக்கிட வைத்தது. பத்திரிகையில் பிரசுரமான ஒரு கொழுத்த எலியின் படம் பொறிக்குள் இருந்தது!


இந்தக் காரியத்தைச் செய்தது பொடிப் பயல் என்பதை அறியாத அவர், "பொல்லாத எலிகள்தான்!" என்று வியந்து கொண்டிருந்தார்.



தப்பு...தப்பு...தப்பு...!

பூமியின் ஆகர்ஷண சக்தியைக் கண்டு சொன்னது யார் என்றால் உடனே நீங்கள் 'ஐசக் நியூட்டன்' என்று கூறி மரத்திலிருந்து ஆப்பிள் விழுந்ததைக் கண்ட நியூட்டனின் கதையையும் கூறுவீர்கள். ஆனால் இந்தக் கதை தப்பு...தப்பு...தப்பு! ஆப்பிள் பழக் கதையை உண்டாக்கியவர் வால்டேர் என்பவர். நியூட்டனின் உறவினர் ஒருவரிடமிருந்து கேட்டு இந்தக் கதையை இவர் 1738ல் பிரசுரித்தார். ஆனால் நியூட்டன் தம்முடைய எழுத்துக்களில் இந்தச் சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடவே இல்லை. மரத்திலிருந்து பழம் பூமியை நோக்கி விழுவதைக் கண்டதும் நியூட்டனுக்கு ஆகர்ஷண சக்தி பற்றிய புதிய ஞானோதயம் உண்டானதாக விளக்கவே இந்தக் கதை. ஆனால் இவருக்கு முன்பே வெகு காலமாக மனிதர்களுக்கு ஆகர்ஷண சக்தி பற்றித் தெரியும். ஆனால் அதில் இருந்த குழப்பங்களையும் மூட நம்பிக்கைகளையும் களைந்து பூவுலக ஆகர்ஷணம் பற்றி விளக்கமும் ஓர் உருவமும் கொடுத்த புகழ் நியூட்டனுக்கு உண்டு. ஆனால் ஆப்பிள் பழக் கதையோ தப்பு...தப்பு...தப்பு!









" நத்தையார்!"

ஈரோடு ஆற்றலரசு

சின்னச் சின்ன நத்தை — அதன்
முதுகில் முரட்டு மெத்தை!
முன்னே நீட்டும் கொம்பால் — அது
தன்னைக் காத்துக் கொள்ளும்!

சத்தம் கேட்ட போதே — தம்பி
சுருங்கி ஓடாய் உருளும்!
பத்தே அடிகள் கடக்க — மணி
பலவும் எடுத்துக் கொள்ளும்!

வேலிக் கரையின் ஓரம் — ஆங்கு
நாளும் விரும்பிக் கிடக்கும்!
காலே இல்லா நத்தை — அது
கடக்கும் விதமே வித்தை!

கண்டுபிடி!

இங்கே கொடுத்துள்ள ஏழு வரிசைப் படங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு உருவ அமைப்பு மட்டும் அதன் தன்மையிலிருந்து மாறுபட்டிருக்கிறது. மாறுபட்ட அந்த உருவம் எது என்பதைப் பிரித்துக் காட்ட முடியுமா?


விடை: 1-E, 2-B, 3-E, 4-A, 5-C, 6-D, 7-A.



விந்தை உலகம்!

□ வேட்டைக்காரர்கள் எந்த மிருகத்துக்கு அதிகமாகப் பலியாகிறார்கள் என்று கேட்டால் நீங்கள் உடனே சிங்கம், புலி, சிறுத்தை - என்று இப்படிச் சொல்லுவீர்கள். ஆனால் வேட்டைக்காரர்களின் உயிர்களை அதிகமாகப் பலிவாங்குவது காட்டெருமைகள்தான். ஆப்பிரிக்கக் காடுகளில் வாழும் எருமைகள் ரொம்பப் பயங்கரமானவை. 'கேப்' எருமைகள் என்று இவைகளுக்குப் பெயர். நன்றாக வளர்ந்த இவ்வகை எருமை ஐந்தடி உயரம் இருக்கும். உறுதியான இதன் கொம்புகளுக்கிடையே உள்ள தூரம் வளைவுக்கு வளைவு மூன்றரை அடிகளாகும். குளம்புள்ள மிருகங்களுள் மிகக் கொடியது இந்த எருமைகள்தான் என்பது வேட்டைக்காரர்களின் முடிவு. பெரிய உருவமோ கொம்புகளோ இதன் பயங்கரத்துக்குக் காரணமல்ல. காயப்படுத்தப்பட்டால் இது மூர்க்காவேசத்தோடு வருகிறதே அப்போது அதன் வேகம், பலம், இது தான் அபாயமானவை. துப்பாக்கிக் குண்டுகள் இதன் உடலில் பாயாது. பாய்ந்தாலும் பலன் தராது. இதன் வேகத்தை ஓரளவு குறைக்கும். அவ்வளவுதான். இதனை வீழ்த்தக் கண்களுக்கு மேலே இரண்டு கொம்புகளும் ஆரம்பமாகும் குறுகலான நெற்றிப் பொட்டில் துப்பாக்கிக் குண்டு பாய வேண்டும். குறி தவறினாலோ....? கொடிது கொடிது காட்டெருமை கொடிது!

□ பிராணி உலகிலேயே தன் குரலுக்குப் பெயரும் புகழும் பெற்றது எது தெரியுமா? உங்களுக்குத் தெரியாது. முதலை என்று நான் சொன்னால் அது உங்களுக்கு வியப்பாக இருக்கும். ஆனால் அது தான் உண்மை. 'அலிகேட்டர்' என்றழைக்கப்படும் பெரிய முதலைகள் உற்சாகமாகக் குரலெடுத்துப் பாடினால் (ஓசை எழுப்பினால்) ஒரு மைல் தூரம் வரை அது கேட்குமாம்!



மகாபாரதம்

ராஜாஜி

72. எட்டாம் நாள் யுத்தம்

எட்டாவது நாள் உதயமாயிற்று. பீஷ்மர் கௌரவ சேனையைக் கூர்ம வியூகமாக வகுத்தார். யுதிஷ்டிரன் திருஷ்டத்யும்னனைப் பார்த்து, ''கௌரவர்களுடைய கூர்ம வியூகத்தைப் பார். அதை ஒழிக்கக் கூடிய எதிரணி வகுப்பில் சீக்கிரமாக நம்முடைய சேனையை ஒழுங்குபடுத்து'' என்றான்.

திருஷ்டத்யும்னன் பாண்டவ சேனையை மூன்று சிகரங்கள் கொண்ட வியூகத்தில் அமைத்தான். பீமசேனன் ஒரு கொடுமுடியிலும் சாத்யகி மற்றொரு கொடுமுடியிலும் தத்தம் படைகளுடன் நின்றார்கள். நடுவில் யுதிஷ்டிரன் நின்றான். யுத்தக் கலையை நம்முடைய முன்னோர்கள் நன்றாகவே கற்றிருந்தார்கள். அநேகமாக அது க்ஷத்திரியர்களுக்குள் கர்ண பரம்பரையாகவே இருந்து வந்தது. புத்தகங்களில் எழுதப்படவில்லை. எதிரிகள் உபயோகிக்கக்கூடிய ஆயுத பலத்திற்கும் அந்தக் காலத்தில் அனுசரித்து வந்த போர்முறைகளுக்கும் தகுந்தவாறு அரசர்கள் தங்களுடைய ஆயுதங்களையும் முறைகளையும் ஒழுங்குபடுத்தி வந்தார்கள்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி குருக்ஷேத்திர யுத்தம். பாரதத்தில் காணப்படும் யுத்த வர்ணனையை இந்தக் காலத்து யுத்த முயற்சிகளோடு ஒப்பிட்டு இது வெறும் கற்பனைக் கதை, சாரமில்லை என்று தள்ளிவிடக் கூடாது. நூற்றைம்பது வருஷங்கள்தான் ஆயின, ஆங்கில வீரன் நெல்ஸன் நடத்திய கப்பற் சண்டை நடந்து. அவனுடைய கப்பல்களையும் அவன் கையாண்ட ஆயுதங்களையும் இப்போது கையாளப்படும் யுத்தப் படைகளையும் ஆயுதங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அவன் காலத்தில் நடந்தவையெல்லாம் மிகவும் விநோதமாகத்தான் தோன்றும். நூற்றைம்பது வருஷத்திய நிலைமையைவிடப் பன்மடங்கு புராதனமானது பாரதப் போர்.

மற்றொரு விஷயத்தையும் நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். யுத்த விஷயங்களைப் பற்றிக் கவிஞர்களும் ஆசிரியர்களும் எழுதிய நூல்களில் ஆயுதங்களைப் பற்றியும், யுத்த நடவடிக்கைகளைப் பற்றியும் சரியான விவரங்களும் விளக்கமும் எதிர்பார்க்க முடியாது. பழைய காலத்தில் வழங்கி வந்த போர் முறைகள் க்ஷத்திரியப் பண்பாட்டில் சேர்ந்த விஷயங்கள். அவற்றின் ரகசியங்களும் தத்துவங்களும் அந்தத் தொழிலைச் சேர்ந்தவர்களுக்குள் கர்ண பரம்பரையாகக் கிடந்தன. கவிகளும் ரிஷிகளும் எழுதிய நூல்களில் அவற்றின் விளக்கங்களைக் காண முடியாது. இப்போதும் கூடச் சிறுகதையிலும் பெருங்கதையிலும் ஒருவனுக்கு நோய்ச் சிகிச்சை நடத்தப்பட்டதாகச் சொல்லும்போது கொடுக்கப்பட்ட மருந்துகளையெல்லாம் விசாரித்து ஆசிரியர் கதையில் எழுதுவதில்லை. எழுதினால் பொருத்தமில்லாமல் இருக்கும். ஆகையால் மகர வியூகம் என்றால் என்ன, அம்புகளைச் சரமாரியாகப் பொழிந்து அரண் உண்டாக்கிக் கொள்ளுவது எப்படி, பாணத்தால் பாணத்தை வெட்டுவது எப்படி, உடம்பெல்லாம் அம்புகள் தைத்தும் பிழைப்பதெப்படி, கவசங்கள் எந்தமட்டில் வீரர்களைக் காத்தன முதலிய விவரங்கள் அனைத்தும் நமக்குப் புரியும்படி வியாசர் தம்முடைய புராணத்தில் எழுதவில்லை. அவர் எழுதியிருக்கிற அளவு எழுதியிருப்பதே விசேஷம்.

எட்டாவது நாள் போரின் முதல் பாகத்திலேயே திருதராஷ்டிர புத்திரர்களில் எண்மரைப் பீமன் கொன்றான். துரியோதனனுடைய உள்ளத்தை இது பிளந்தது. ஆட்ட மண்டபத்தில் தான் செய்த பிரதிக்ஞையைப் பீமன் இன்றே தீர்த்து விடுவான் போலிருக்கிறது என்று எல்லோரும் பயந்தார்கள்.

அருச்சுனனுக்கு அன்று பெரிய துக்கம் நேரிட்டது. அவனுடைய


அருமை மைந்தன் இராவான் கொல்லப்பட்டான். நாக கன்னிகை வயிற்றில் அருச்சுன னுக்குப் பிறந்த இந்த வீரன் பாண்டவர்களுக்குத் துணையாக வந்து போர் புரிந்து கௌரவப் படையில் மிக்க நாசம் உண்டாக் கினான். துரியோதனன் இரா வானை எதிர்க்க ராக்ஷசனை அலம்புசனை அனுப்பினான். இரு வருக்கும் கோரமான யுத்தம் நடந்து முடிவில் இராவான் கொல்லப்பட்டான்.

இந்தச் செய்தி அருச்சுனனை எட்டியதும் அவனுக்குத் தாங்க முடியாத துக்கம் உண்டாகி வாசு தேவரைப் பார்த்து, ''விதுரர் முன்னமேயே சொன்னார், இரு பக்கத்திலும் பெருந் துக்கம் அடைவோம் என்று. பொருளுக் காக இத்தகைய இழிவான காரி யம் செய்து வருகிறோம்! இவ் வளவு கொலைகளைச் செய்து நாமாவது அவர்களாவது என்ன சுகம் அடையப் போகிறோம்? மதுசூதனா! யுதிஷ்டிரர் துரியோ தனனை ஐந்து கிராமங்களையே னும் கொடு, யுத்தம் வேண் டாம் என்று கேட்டதின் தீர்க்க தரிசனம் இப்போதுதான் எனக் குத் தெரிகிறது. மூர்க்கனை அந்தத் துரியோதனன் ஐந்து கிராமங்களைக் கொடுக்க மறுத்து இருபக்கமும் நடைபெறும் இந்த மகா பாபச் செயல்களுக்கெல் லாம் காரணமானான். இவன் பயந்தவன், கோழை என்று ஜனங்கள் இகழ்வார்களே என் றல்லவோ நான் யுத்தம் செய்கி றேன்? யுத்தகளத்தில் வீழ்ந்து கிடக்கிற க்ஷத்திரியர்களைப் பார்த்து என் மனம் கொதிக் கிறது. நம்முடைய பிழைப்பு பாதகப் பிழைப்பு'' என்று சொல் லிப் பரிதபித்தான். எப்போ துமே இது அருச்சுனனுடைய தர்மசங்கடம்.

இராவான் கொல்லப்பட்ட தைக் கண்ட பீமசேனனுடைய குமாரன் கடோத்கசன் சேனை முழுவதும் நடுங்கும்படி கர்ஜித் துக் கௌரவ சேனையை அழிக்க ஆரம்பித்தான். அநேக பகுதி களில் கௌரவ சேனை பயந்து கலைய ஆரம்பித்தது. அதைக் கண்ட துரியோதனன் தானே கடோத்கஜனை எதிர்க்க முன் வந்தான்.

துரியோதனனுக்குத் துணையாக வங்க தேசத்து அரசன் யானைப் படையுடன் சென் றான். எட்டாவது நாள் யுத்தத்தில் துரியோ தனன் மிகவும் தைரியமாகப் போர் புரிந்தான். கடோத்கஜனுடைய படையிலிருந்த அநேக வீரர்களை வதம் செய்தான். இதைக் கண்டு மிகக் கோபங்கொண்ட கடோத்கஜன் துரியோ தனன் மேல் சக்தியை வீசினான். வங்க சேனாதி பதி திடீரென்று தன் யானையை மத்தியில் செலுத்தித் துரியோதனனைக் காத்தான். யானை யானது கடோத்கஜனுடைய சக்தியாயுதத் துக்கு இரையாயிற்று.


பீஷ்மர் துரியோதனன் அபாயத்திலிருக் கிறான் என்று ஊகித்துப் பெரும் படை ஒன் றைத் துரோணர் தலைமையில் அரசனுக்கு



உதவியாக அனுப்பினார். கௌரவ சேனையிலுள்ள புகழ்பெற்ற வீரர்கள் பலர் ஒன்றுகூடிக் கடோத்கஜனை எதிர்த்தார்கள்.

அப்போது கிளம்பிய கர்ஜனையிலிருந்து கடோத்கஜனுக்கு அபாயம் நேரிட்டதாக அறிந்து யுதிஷ்டிரன் பீமசேனனை உதவியாக அனுப்பினான். பீமன் வந்ததும் முன்னைவிடக் கோரமான போர் நடந்தது.

எட்டாவது நாள் யுத்தத்தில் மொத்தம் துரியோதனனுடைய தம்பிமார்களில் பதினாறு பேர் மாண்டனர்.



73. ஒன்பதாம் நாள் யுத்தம்

ஒன்பதாவது நாள் போர் ஆரம்பமாவதற்கு முன் துரியோதனன் பீஷ்மரிடம் சென்று, தனக்கு நேர்ந்த தோல்விகளைப் பற்றிப் பிரலாபித்துக் கொடிய மொழிகளை ஈட்டியினால் குத்துவதுபோல் பேசி, அந்தத் தர்மாத்மாவைப் பீடித்தான். ஆயினும் பிதாமகர் பொறுமை இழக்கவில்லை.

''சக்திக்குத் தக்கபடி முயற்சி செய்கின்றவனும், உனக்காக யுத்தத்தில் பிராணனை ஹோமம் செய்கின்றவனுமான என்னை ஏன் இவ்வாறு துன்புறுத்துகிறாய்? சொல்லத் தக்கது எது, சொல்லத் தகாதது எது என்பதை அறியாமல் பேசுகிறாய். மரணம் சமீபிக்கும்போது மரங்கள் எல்லாம் பொன்மயமாகத் தோன்றும் என்பார்கள். அவ்வாறு இப்போது நீ விஷயங்களை விபரீதமாக உணர்கிறாய். வேண்டுமென்று நீ செய்துகொண்ட விரோதத்தின் பயனை இப்போது அனுபவிக்கிறாய். ஆண்மையை இழக்காமல் தைரியமாகப் போர் செய்வதே இப்போது நீ செய்யக் கூடியது. அதுவே தருமமாகும். சிகண்டியை நான் எதிர்த்துப் போர் செய்வது முடியாது. ஸ்திரீயை வதம் செய்வது என்னால் முடியாத காரியம். பாண்டவர்களை என் கையால் கொல்ல என் மனம் ஒவ்வாது. இந்த இரண்டு விஷயங்களைத் தவிர்த்து மற்றபடி எல்லா வீரர்களையும் எதிர்த்துப் போர் செய்வேன். க்ஷத்திரிய குலத்துக்குப் பொருந்திய முறையில் நீயும் மனத் தளர்ச்சியில்லாமல் யுத்தம் செய்'' என்று பிதாமகர் துரியோதனனுக்கு இதம் சொல்லிவிட்டு அன்று சேனையை அணிவகுக்க வேண்டிய முறையைப் பற்றியும் சொல்லியனுப்பினார்.

துரியோதனன் ஆறுதல் அடைந்து துச்சாதனனை அழைத்து, ''தம்பி! நம்



'வியாஸருடைய உள்ளத்தை அப்படியே வெளியில் எடுத்துக் காட்டுவது என்பது ஸ்ரீ ராஜாஜி அவர்களைத் தவிர வேறு யாராலும் முடியாது. நல்ல மனமுடையவர்கள் கல்கி பத்திரிகையில் மகாபாரதம் படித்தார்களேயானால் ஸ்ரீ வியாஸரே ஸ்ரீ ராஜாஜி என்றுதான் கூறுவார்கள்.'

வேதவித்தான பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரவர்களுடைய மேற்கண்ட கருத்தை கல்கி 10-11-68 இதழ் வட்ட மேஜைப் பகுதியில் படித்து மெய்சிலிர்த்தேன். இதே கருத்துத் தொனிக்க ரசிகமணியவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே 'வியாசர் விருந்தை' இவ்விதம் பாராட்டியுள்ளமை நினைவில் வந்தது:

'வியாசர் பூர்வ காலத்தவர். அவரோடு நமக்குப் பழக்கம் கிடையாது. ராஜாஜியையோ நமக்குத் தெரியும். அவர்கள் நம்மோடு நாள்தோறும் பல துறைகளிலும் பழகி வருகிறவர்கள். நம்மோடு கலந்து பேசுகிறார்கள்.'

''வியாசர் வாழ்கின்றார்'' என்று ராஜாஜியைக் குறித்துச் சொல்லாமல் சொல்கிறார் ரசிகமணி.

- வி. ச. வாசுதேவன்.

முடைய முழு பலத்தையும் இன்று யுத்தகளத்தில் செலுத்து. பீஷ்மர் பரிசுத்தமான எண்ணத்துடனேயே நமக்காகப் போர் புரிகிறார். சிகண்டி ஒருவனை மட்டும் நான் எதிர்க்க முடியாது என்றார். வேறு யாரைப் பற்றியும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. சிகண்டி அவரைத் தாக்காமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். அஜாக்கிரதையாக இருந்தால் சிம்மத்தைக் கூடச் செந்நாய் கொன்றுவிடு மல்லவா?'' என்றான்

ஒன்பதாவது நாள் யுத்த களத்தில் அபிமன்யுவுக்கும் அலம்பசனுக்கும் பெரும் போர் நடந்தது. புகழ்பெற்ற தனஞ்சயனைப் போலவே குமாரனும் யுத்தம் செய்து அலம்பசனை ரதமிழந்து யுத்தகளத்தை விட்டு ஓடச் செய்தான்.

சாத்யகிக்கும், அசுவத்தாமனுக்கும் பெரும் யுத்தம் நடந்தது. துரோணர் அருச்சுனனை எதிர்த்தார். பிறகு எல்லாப் பாண்டவ வீரர்களும் பீஷ்மரை எதிர்த்தார்கள். துரியோதனன் பீஷ்மரைக் காக்கத் துச்சாதனனை ஏவினான். பீஷ்மர் கடும் போர் புரிந்து பாண்டவ வீரர்களுடைய முயற்சிகளை வீணாக்கினார். பாண்டவ சேனை, சுற்றிச் சுற்றித் தடுமாறும் பசுக் கூட்டத்தைப் போல் தீனமான நிலையை அடைந்தது.

அப்போது கிருஷ்ணன் தேரை நிறுத்தி, ''பார்த்தனே! நீயும் உன் சகோதரர்களும் பதின்மூன்று ஆண்டுகள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த காலம் இப்போது வந்திருக்கிறது. க்ஷத்திரிய தருமத்தை நினைவுக்குத் தந்துகொள். பீஷ்மரைக் கொல்லத் தயங்க வேண்டாம்!'' என்றான்.

அருச்சுனன் தலை குனிந்து, ''கொல்லத் தகாத ஆசாரியர்களையும் பிதாமகரையும் கொல்லுவதைவிட வனவாசமே சுகமாக இருந்தது. ஆயினும் நீ சொல்வதைச் செய்கிறேன்; ரதத்தைச் செலுத்து!'' என்றான். அருச்சுனன் மிகவும் வருத்தப்பட்டுக் காரியத்தில் விருப்பமில்லாதவனாகச் சென்றான். பீஷ்மரோ மத்தியான காலத்துச் சூரியன் போல் ஜொலித்தார்.

பார்த்தனுடைய தேர் பீஷ்மரை நோக்கிச் சென்றதும் பாண்டவசேனை மறுபடியும் தைரியம் அடைந்தது. பீஷ்மர் அருச்சுனனுடைய தேரின் பேரில் பொழிந்த அம்பு மழையானது அதை முற்றிலும் மூடிவிட்டுப் பாகனாவது குதிரையாவது தேராவது அருச்சுனனாவது ஏதுமே தெரியாமல் போயிற்று. கிருஷ்ணன் பரபரப்பில்லாமல் ஜாக்கிரதையாகத் தேரை நடத்தினான். அருச்சுனன் செலுத்திய அம்புகளினால் பீஷ்மர் பிடித்த வில் பல முறை அறுபட்டுக் கீழே விழுந்தது. பீஷ்மர் அருச்சுனனைப் புகழ்ந்து வேறு வில்லை எடுத்துப் பார்த்தனையும் கிருஷ்ணனையும் அடித்துக் காயப்படுத்தினார்.

அப்போது, ''நீ சரியாகப் போர் புரியவில்லை'' என்று கிருஷ்ணன் அருச்சுனனுக்குச் சொல்லிக் கோபத்துடன் தேரை விட்டுக் கீழே குதித்து சக்ராயுதத்தை எடுத்துப் பீஷ்மரை நோக்கிச் சென்றான்.

கோபத்துடன் வரும் வாசுதேவனிடம் பீஷ்மர், ''புண்டரிகாக்ஷனே! வருவாய்! உன்னால் கொல்லப்பட்டு நான் உயிர் விடுவேன்'' என்று வரவேற்றார்.

அருச்சுனன் கேசவனைப் பின் தொடர்ந்து இரு கைகளாலும் கட்டிப் பிடித்துக் கொண்டு, ''ஆயுதம் எடுத்துப் போர் புரியப் போவதில்லை என்று நீ சொன்ன வார்த்தையைப் பொய்யாக்க வேண்டாம். இது என் பொறுப்பு. அன்புக்குரிய பீஷ்மரை நான் அம்பு எய்து வீழ்த்துவேன். நீ தேர் ஏறிக் குதிரைகளை நடத்து'' என்று சொல்லி வாசுதேவனைப் பின் திரும்பச் செய்தான்.

பீஷ்மர் போரை மறுபடியும் துவக்கினார். பாண்டவர் சேனை மிகவும் அடிபட்டுக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில் சூரியன் அஸ்தமனமானான். யுத்தம் நிறுத்தப்பட்டது. (தொடரும்


America (Uncle Sam) gives a Crown of thorns to Nixon

ஓவியர் 'விஜு'வுக்குக் கார்ட்டூன் வரைய ராஜாஜி அவர்கள் கொடுத்த கருத்தும் படமும். ஜனாதிபதி பதவி என்ற முள் கிரீடத்தை நிக்ஸனுக்கு அமெரிக்கா (ஸேம் மாமா) தருகிறது.




Stars & Stripes in Uncle Sam's hat. And a beard















யார் இந்தத் தலைவர்கள் ?

மேலே உள்ள படங்கள் ஒவ்வொன்றிலும் ராஜாஜி யாரோ ஒரு தலைவரிடம் மிகவும் முக்கியமான சம்ப ஷணையில் ஈடுபட்டிருக்கிறு ராஜாஜியி தைக் கவர்ந்துள்ள அந்தத் தலைவர்கள் யார் யார் என் கண்டுபிடிக்க முடிகிறதா பாருங்கள்.

உங்களுக்கு உதவ இதோ சில குறிப்புக்கள் :

1. தத்துவ ஞானி, 2. ஆனந்த பவனம்,
3. தமிழக மந்திரி, 4. ஒருகாலத்தில் சோஷலிஸவாதி,
5. இந்தாறு ஓடும் மாநிலத்தைச் சேர்ந்தவர்,
6. பல நாடுகளில் இந்தியத் தூதராய் விளங்கியவர்,
7. திட்டத்துக்குப் பேர் போனவர்.

(விடை: 35ம் பக்கம்)



ராஜாஜி சொல்கிறார்!

பரம்பொருள் தரிசனம்

யமதர்ம ராஜன் நசிகேதனுக்குச் சொன்னானல்லவா? பரம்பொருள் தரிசனம் சாஸ்திரம் படித்தால் மட்டும் கிடைத்து விடாது. புத்தி சூட்சமத்தாலும் கற்ற கல்வியினாலும் வாதப் பிரதிவாதங்களினாலும் ஆத்ம ஞானம் வந்து விடாது. ஆண்டவன் அருள் வேண்டும். அதற்கு உள்ளம் கரைந்து உருக வேண்டும்; பக்தி வேண்டும்.

மனிதன் எம்மாத்திரம்?

பூமியின் சுற்றளவு சுமார் இருபத்தையாயிரம் மைல். இந்த அளவு கொண்ட பூகோளத்தை ஒரு சிறு எலுமிச்சம்பழம் அளவாக வைத்துக் கொண்டால் சூரியனுடைய பரிமாணம் ஒன்பது அடி குறுக்களவு கொண்ட ஒரு பெருஞ் சுடர்க் கோளமாகும். அந்த அளவு கொண்ட சூரியனும் கூட சில நட்சத்திரங்களுக்கு முன், அணு மாத்திரமே யாகும். இவ்வளவு மகத்தான இடைவெளியில் இவ்வளவு பேரளவு கொண்டு அங்கங்கே சுழன்று செல்லும் அண்டங்களின் வேகங்களையும், நிலைகளையும் இடைவிடாமல் ஆண்டுவரும் மகா சக்தியே ஈசுவர சக்தி. இதில் மனிதனின் பிரமாணம் எவ்வளவு சிறியது! அவனுடைய வெறுப்பு விருப்புகளையுமே வைத்து உலகத்தின் நன்மை தீமையை அளக்க முடியுமா?



ராஜாஜி

கிரிக்கெட்

ஆடுவாரா?

(33ம் பக்கம் பார்க்க)

காதல் ஒரு ஜுரமன்று: விவாகம் ஒரு மருந்தன்று

காதல் கொண்டு கூடிய தம்பதிகளானால் மிகவும் சிரேஷ்டம். அதுபோக, கடவுள் படைத்த இருவர் 'நாம் சேர்ந்து' அன்புடன் இல்லற வாழ்க்கை நடத்துவோம்' என்று காதலின் வேகமின்றிச் சாதாரணமாய்க் கூடினவர்களானாலும் சரி, அவ்வாறு வாழ்ந்து உலகத்தில் அன்பென்னும் செல்வத்தைப் பெருக்கலாம். காதல் என்பது ஒரு ஜுரமாகவும் விவாகம் என்பது அதற்கொரு மருந்தாகவும் எண்ணக் கூடாது. அவ்வாறு கொண்டால் விவாகம் முடிந்ததும் ஜுரம் தணிந்து போகும். மருந்தும் ஜுரமும் கணக்குத் தீர்ந்து போகும். காதல் என்பது ஒரு ஜுரமன்று. பூவின் மணம் போல் அது ஓர் இயற்கைச் சக்தி, ஆறாத சக்தி. சில சமயம் அது தானாகப் பொங்கும். இல்லாவிட்டால் மின்சார சக்தியைப் போல் நாம் உண்டாக்கி வளர்த்துக் கொள்ளலாம்.

காதல் என்பதும் மற்றப் பிரகிருதி சக்திகளைப் போல் ஆண்டவனுடைய சொருபமேயாகும். அதை எந்தக் கோயிலிலும் ஆராதித்துத் தரிசிக்கலாம். ஆனால் பக்தி வேண்டும்; சிரத்தை வேண்டும். பக்தி இருந்தால் எந்தக் கோயிலிலும் ஈசுவரன் இருக்கிறான். உன் மனைவி உனக்கென்று கட்டப்பட்ட காதல் தெய்வத்தின் கோயிலாவாள். நோன்பிருந்து வந்தித்தாயானால் காதல் என்னும் பராசக்தியின் அவதாரத்தை அக்கோயிலில் தரிசிப்பாய். இல்லையானால் கல்லைத்தான் காண்பாய். அது கல்லின் குற்றமல்ல; உன் குற்றமே.

பண்பாடு

சீலமும் கல்வி கலை அறிவும், நல்லுணர்ச்சியும் அழகுபடக் கலந்து நிற்பது பண்பாடு என்றால், அது எல்லா நாட்டினருக்கும் ஒன்றுதானே எனத் தோன்றலாம். அப்படியல்ல. கண்ணும் மூக்கும் முகமும் மற்ற அங்கங்களும் அந்தமாகப் பொருந்தி நிற்பது அழகு என்றாலும், பிராணி உலகத்திலும் மக்கள் உலகத்திலும் எத்தனை வகை வகையான அழகைப் பார்க்கிறோம்? இவ்வாறே பல நாடுகளின் பலவிதப் பண்பாடுகளும். உலகமெல்லாம் ஒன்று என்பது உண்மை. அழகெல்லாம் ஒன்று என்பதும் உண்மை. ஆயினும் வேறுபாடுகளே உலகத்தின் பேரழகு.

சிறுகதை

நல்ல சிறுகதைக்கு அடையாளம் ஒன்றே. அதைப் படித்து முடிக்கும்போது நல்லவர்களுடைய மனத்தில் மகிழ்ச்சி தோன்றி உள்ளம் பூரிக்கும்.

சத்தியாக்கிரகம்

சத்திய நெறியில் நின்று அச்சம் என்பது சிறிதும் இல்லாமல் அதர்மத்தைக் கண்டவிடத்து அதனுடன் போர் புரிந்து நிற்கிறவனே சத்தியாக்கிரகி. அத்தகைய சத்தியாக்கிரகியின் போர் எப்பேர்ப்பட்டது? பிறருடைய அசத்தியம், அதர்மம், ஹிம்ஸை இவைகளை உண்மையில் வெல்ல வேண்டுமானால், தானும் அசத்தியம், அதர்மம், ஹிம்ஸை இவைகளை எவ்விதத்திலும் செய்யாமல் இருப்பதுதான். பிறரிடத்துள்ள சினம், பகை, தீமை இவைகளைப் போக்குவதற்கு வழி, தான் அவைகளுக்கு மாறான பொறுமை, அன்பு, நன்மை இவைகளைச் செய்வதேயாகும். பழிக்குப் பழி வாங்கும் உலகைப் போக்கை ஒழித்து,

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்து விடல்

என்ற திருக்குறள் வாக்கியத்தின் வழி நிற்றலுமாம்.


சத்தியம்

எல்லா மதங்களினுள்ளும் உத்தமமான மதம் நமது வேதாந்தம். அது ஓர் உலர்ந்து போன கட்டையென்று சிலர் எண்ணுவது தவறு. அது நிழலும் கனியும் தரும் உயிருள்ள மரம். சத்தியமே அதன் உயிர். சத்தியம் என்றைக்கும் உலர்ந்து போகாது. பசித்த பிராணி உணவு தேடுவது போல் நம்முடைய முனிவர்கள் உண்மையைத் தேடி அலைந்தார்கள். உபநிஷத்துக்களைச் சரிவரப் படித்தால் இதை உணரலாம்.

குற்றம்

பிராட்டியைத் தியானிப்போமாக. நம்முடைய பிழைகள் அதிகம். அவளுடைய கருணையின்றி நமக்குக் கதியில்லை. "குற்றம் செய்யாதார் எவர் தாம்?" என்று கேட்ட அவள் நம்மையும் காப்பாள்.

ராஜாஜி வரைந்த ராதாவின் படம்!






மே 15, 1947. புதுதில்லியில் ஸ்ரீ லாலா ஸ்ரீராம் வீட்டில் குமாரி ராதாவின் பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. நாட்டியத்தைக் காண நேருஜி ராஜாஜி உள்படப் பாரதத் தலைவர்கள் பலர் வந்திருந்தனர்.

இடைவேளையின்போது குமாரி ராதா நேருஜியிடம் தனது ஆட்டோகிராப் நோட்டுப் புத்தகத்தைக் கொடுத்து அதில் அவரது கையெழுத்தைப் பெற்றாள். அத்துடன் முன்பு ராஜாஜி தனக்குப் போட்டுக் கொடுத்த கையெழுத்தையும் நேருஜியிடம் காட்டினாள் குமாரி ராதா. அதைப் பார்த்துவிட்டு நேருஜி சிரித்தார். சிரிப்புக்குக் காரணம் ராஜாஜி, குமாரி ராதாவின் ஆட்டோகிராப் புத்தகத்தில் நடனமாடும் சிறுமி ஒருத்தியின் படத்தை வரைந்து அதனடியில் கையெழுத்துப் போட்டுத் தந்திருந்ததுதான்.

"ராஜாஜி!" என்று அவரைத் திரும்பிப் பார்த்து அழைத்த நேருஜி கூறினார்: "உங்களுக்கு உள்ள எத்தனையோ திறமைகளுடன் சித்திரம் வரையும் திறனும் உண்டு என்பதை எனக்கு இதுவரை நீங்கள் சொல்லவேயில்லையே!"

பரதநாட்டியம் பயின்ற ராதாவுக்கெனப் பிரத்தியேகமாக ராஜாஜி அன்புடன் வரைந்தளித்த சித்திரத்தையும், அதன் கீழே அவர் கையெழுத்தையும் படத்தில் காணலாம்.



007 பாலு
கதை: குமரன்
படம்: விஜயா
"சந்திரா பேசுகிறேன்" என்று குரல் கேட்டதுமே பாலு டெலிபோனை வைத்து விட்டு வாசலுக்குப் பாய்ந்தான். அண்ணனின் மோட்டார் சைக்கிள் அவனை வா! வா! என்று அழைப்பது போலிருந்தது.
சத்தம் கேட்டு மாடியிலிருந்து எட்டிப் பார்த்து இரைந்தான் அண்ணன்
டேய் எங்கேடா சொல்லாமல் கொள்ளாமல் வண்டியை எடுத்துண்டு போறே? அப்பா வரட்டும், உதைக்கச் சொல்றேன்!
அண்ணன் பேசி முடிப்பதற்குள்ளாகவே வெகு தூரம் சென்று விட்டான் பாலு.
சில நிமிஷங்களில் சந்திராவின் வீட்டை அவன் அடைந்த போது....
ஷ்....ஷ்....! பாலு! இப்படி வா. மறைவாக நில்!
சந்திரன் மாமா அரைமணி நேரமாய்ப் பெட்டிக்குள் எதை எதையோ எடுத்து வைத்துக் கொண்டிருந்தார். சற்று முன்னால் தான் டிப்டாப்பாக உடை தரித்துக் கொண்டு கிளம்பினார். பெட்டி வீட்டிலேயே இருக்கிறது.
ஒரு வேளை 'டாக்ஸி' பிடித்துவரப் போயிருப்பாரு பாலு! வெளியூருக்குத்தான் புறப்படுகிறார் போலிருக்கு!
அதோ ஒரு டாக்ஸி வருகிறது பாலு!
வந்து, சந்திரன் வீட்டெதிரே தான் நிற்கிறது. எங்கே, பைனாகுலரை இப்படிக் கொடு!
டாக்ஸியின் பின்புறம் பெட்டியை ஏற்றியாகி விட்டது. இப்போ கிளம்பி விடுவார்.


சந்திரா! என்ன நேர்ந்தாலும் சரி என்று இப்போ இவனை நான் பின் தொடர்ந்து சென்றே ஆகவேண்டும். நீயும் வருகிறாயா? உன் உதவி எனக்குத் தேவைப் படலாம்.
ஆகட்டும் பாலு! ஆனால்....
... நாம் செய்வது தவறல்லவா? உனக்கு லைசென்ஸ் இல்லையே, மோட்டார் சைக்கிள் ஓட்ட!
இதோ பார்! சிறிய மீனைப் போட்டுத்தான் பெரிய மீனைப் பிடிக்கணும். சின்ன தவறுகளைச் செய்தாலும் முடிவில் பெரிய திருட்டுக் கும்பலைப் பிடிக்கப் போகிறோம் என்ற பலம் நமக்குண்டு!
இப்போ நாம் செய்யற சின்ன தப்புக்களுக்கெல்லாம் பின்னால் ஏதாவது ஒரு விதத்தில் பிராயச்சித்தம் பண்ணிவிடலாம், சந்திரா. கவலைப்படாதே!
டாக்ஸியைத் தொடர்ந்து மோட்டார் சைக்கிள் விரைந்து கொண்டிருந்த அதே நேரத்தில்....
... சந்திரன் வீட்டைக் கண்காணித்து வந்த ஸி. ஐ. டி. பார்த்தனுக்கு டெலிபோன் செய்தார்.
பெட்டியுடன் டாக்ஸியில் ஏறிப் போயிருக்கிறான் சார்!
என்ன? பாலுவும் சந்திராவும் மோட்டார் சைக்கிளிலே அவனைப் பின் தொடர்ந்திருக்காளா? ஆல் ரைட்! மேலே நான் கவனிச்சுக்கிறேன்.
304! உடனே ஜீப்பை எடுக்கச் சொல்லு! சீக்கிரம்! ஸி. ஐ. டி. கள் ஆறுமுகம், வேலவன், சாம்பு, நீலகண்டன் நாலு பேரும் என்னோடு வரட்டும்.
தொடரும்....



இவரைப்பற்றி இவர்கள்

□✻□



சத்தியாக்கிரக தத்துவங்களைப் பற்றிப் புத்தகம் ஒன்றும் நான் எழுதவில்லை. ஆனால் ஸி. ஆர். எப்படியோ என்னுடைய வழிகளையும் தத்துவங்களையும் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார். அது எனக்கே வியப்பாகத்தான் இருக்கிறது! —காந்திஜி



ராஜாஜியின் புத்தி கூர்மையும், தன்னலம் கருதாத குணநலனும் பிரச்னைகளை ஆழ்ந்து நோக்கி, அலசி ஆராயும் ஆற்றலும் நமக்குள்ள ஒரு மிகப் பெரிய சொத்தாகும். —ஜவாஹர்லால் நேரு



ராஜாஜியின் சந்திப்பு என்னைப் பண்படுத்திய மகத்தான சக்திகளில் ஒன்று. —ஜான் கென்னடி



ராஜாஜி மிகவும் 'பொல்லாதவர்'தான்! மற்றவர்களுக்குத் தோன்றாததெல்லாம் அவருக்குத் தோன்றுகிறது. மற்றவர்களுக்கு விளங்காததெல்லாம் அவருக்கு விளங்குகிறது. மற்றவர்கள் செய்யத் தயங்கும் காரியங்களை யெல்லாம் அவரால் தயங்காமல் செய்ய முடிகிறது. இதெல்லாம் 'பொல்லாத்தனம்' அல்லவா?


—அமரர் 'கல்கி'



மற்றவர்களை அறிவாளிகளாக உருவாக்கும் அறிவாளிகள், மற்றவர்கள் தடுமாறும்பொழுது அவர்களை உறுதிகொண்டவர்களாக ஆக்கும் உறுதி படைத்தவர்கள்தான் தலைசிறந்த தலைவர்கள். அப்படிப்பட்ட தலைவராக ராஜாஜி விளங்குகிறார்.

—ஸி. என். அண்ணாதுரை

டாடாவிஷன்



டாடாவின் பெருநோக்கு. தீர்க்க தரிசனமுள்ள கருத்துக்கள் இருந்து என்ன? அவை மக்களிடையே பரவாவிட்டால் என்ன பயன்?—அவை மக்களைத் தறுதறு என்று செயல்படுத்த வேண்டாமா?

ஜாம்ஷெட்பூரில் நல்ல கருத்துக்கள் செயலாகாமல் வீணாவதில்லை. ஏற்ற உதவிகளும் சூழ்நிலையும் அங்கே உள்ளன. இத்தகைய ஒன்றே குடும்ப நலத்திட்டம்.

இந்தத் திட்டம் ஜாம்ஷெட்பூரில் தொடங்கிய மூன்று ஆண்டுகளுக்குள் 'விவாத-வட்டங்களில்' கலந்து கொள்வோர் தொகை பத்து மடங்காக உயர்ந்து விட்டது. விவாதத்தின் விளைவாக எழுந்த தெளிவான உறுதி: 1965-இல் ஜாம்ஷெட்பூரில் பிறப்புவிகிதம் குறையத் தொடங்கி விட்டது.

டாடா எஃகு ஸ்தாபனத்தின் குடும்ப நலத் திட்டத்தினால் ஜாம்ஷெட்பூர் மக்களுக்கு என்ன பயன்?

இரண்டு நவீன நகரத்துக் குடும்பத் திட்ட நிலையங்களும் ஆறு பிரசவ, குழந்தை பராமரிப்பு வி[illegible]களும் இனமாகக் குடும்பக் கட்டுப்பாட்டு சாதனங்களை வழங்குகின்றன; ஆலோசனை கூறுகின்றன.

இரண்டு நகர நிலையங்களிலும் டாடா மெயின் ஆஸ்பத்திரியிலும் 'வாஸக்டமி' ஆபரேஷன் செய்யப்படுகிறது. அதைச் செய்து கொள்ளும் கம்பெனி ஊழியருக்கு ஆபரேஷன் செலவு இல்லை. அதோடு ரொக்கப் பரிசாக ரூ. 200/- தரப்படுகிறது. போனவருஷம் ஆகஸ்டு டிசம்பர் காலத்தில் 1650 பேர் ஆபரேஷன் செய்து கொண்டதில் வியப்பில்லை. கம்பெனி ஊழியரின் மனைவியர் 'டியூபெக்டமி' ஆபரேஷன் செய்து கொண்டாலோ, 'லூப்' பொருத்திக் கொண்டாலோ ஊக்கப்படுத்தும் வகையில் ரொக்கம் வழங்கப்படுகிறது.

டாடா ஸ்டீல்

TN 4428

நூறு ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள்

ராஜாஜி

'மேம்பட்ட பக்தியுடையவனுக்குச் சாஸ்திரம் இல்லை, முறையுமில்லை' என்று வடக்குத் திருவீதிப் பிள்ளை, அவருடைய அற்புத நூலாகிய ''ஈடு'' என்கிற திருவாய் மொழி வியாக்கியானத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறார். இது இக்காலத்து யுவர்களுக்கு ரொம்ப ஆறுதல் தரும்.

ஆனால், இதைக் கொண்டு நாம் எல்லா ஆசாரத்தையும் விட்டுவிடலாம் என்று எண்ணி விடலாகாது. இந்தக் காலத்துச் சூழ்நிலையில் நம்முடைய புராதன ஆசாரங்களை, பூரணமாகவும் சரியாகவும் அவலம்பிப்பது கஷ்டம். முடியாத காரியம் என்றே சொல்லலாம். ஆனபோதிலும் மக்கள், முக்கியமாக வாலிபர்கள் பரம்பரை ஆசாரங்களை முற்றிலும் விட்டுவிடாமல் ஓரளவாவது அனுசரித்து, உள்ளத்தூய்மையும் தேக சுத்தமும் காத்து வருவது நல்லதாகும். மிகவும் சுலபமாகச் செய்யக் கூடியதை மட்டும் சொல்லுகிறேன்.


காலை படுக்கையை விட்டு எழுந்திருப்பதற்குமுன் பகவானைக் கொஞ்சம் தியானித்து விட்டு எழுந்தால் நல்லது. பகவானைத் தியானிப்பதற்கு நிற்க வேண்டும், உட்கார வேண்டும் என்பதில்லை. எந்த நிலையிலும் தியானிக்கலாம். படுத்துக் கிடந்தும் தியானிக்கலாம். ''என் உள்ளத்தைக் காத்தருள்வாய். நீ கோயிலிருக்கத் தகுந்த இடமாக என் உள்ளத்தைச் சுத்தமாக வைப்பேனாக'' என்று மனத்துக்குள் சொல்லி எழுந்திருக்கவும். பகவானைத் தகப்பன் சொரூபமாகவும், எஜமானன் சொரூபமாகவும், தாய் சொரூபமாகவும் எப்படியாயினும் தியானிக்கலாம். தாயாக பாவிப்பதே சிறந்த முறை என்று எனக்குத் தோன்றுகிறது. அந்த அந்த சமயத்தில் தோன்றியபடி செய்யலாம்.

எழுந்தபின், பல் தேய்த்து, வாய் கொப்பளித்து, கண்கள், மூக்கு, காது முதலிய அங்கங்களை நன்றாகச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். இதைச் செய்யும் பொழுது மௌனமாக 'அச்சுத', 'அனந்த', 'கோவிந்த' என்று மனத்தில் ஜபம் செய்து கொண்டே சுத்தி செய்து கொள்ள வேண்டும். முழுமுதற் பொருளாகிய கடவுளே அச்சுதன். எங்கும் பரவி நிற்கும் பொருளானபடியால், அனந்தன். அவனே நம்மைக் காக்கும் அப்பன் ஆனபடியால், கோவிந்தன்.

உணவு உட்கொள்வதற்குமுன், எப்போதும் கையை நன்றாகக் கழுவிக் கொண்டு ஆரம்பிக்க வேண்டும். 'கோவிந்த' என்று

''தண்ணீரே! உன்னுள் அடங்கி இருக்கிறது அமிருதம். எல்லா ருசியும் நீயே தருகிறாய். உன் அபார சக்தியில் எனக்கும் கொஞ்சம் தருவாய்!''





மனத்தில் சொல்லிவிட்டு, ''இந்த உணவை எனக்குத் தந்தாய், என் உடலுக்கு இது சக்தி தர வேண்டும்!'' என்று வேண்டிக் கொண்டு சாப்பிட ஆரம்பிக்க வேண்டும். தண்ணீர் அல்லது காப்பி, மோர், பால் எதையேனும் பானம் செய்யும் போதும், இதுவே முறை. இவ்வாறு மனத்தைப் பக்குவப்படுத்தி உணவை உட்கொண்டால் மிகுந்த பயன் தரும். இதற்கு ஒரு நிமிஷம் போதும். யாருக்கும் அதனால் தொந்தரவு இல்லை. இதைச் செய்யும்போது வெளி வேஷம் வேண்டாம். விளம்பரப்படுத்துவதில் பக்தியின் சக்தி குறைந்து போகிறது.



குளிக்கும் போது, தண்ணீரைக் கடவுள் சொரூபமாக அறிந்து குளிக்க வேண்டும். ஜலம் என்பது மிகச் சிறந்த பொருள். மகா சக்தி கொண்ட மூலப் பொருள். மின்னலிலும் இடியிலும் அதைப் பார்க்கலாம். ஜலத்தில் பகவான் இருக்கிறான். பரம்பொருளுக்கு ஜலம் மிகப் பிரியமான கோயில். அந்தச் சிறந்த பொருளில் நாம் குளிக்கிறோம். நம்முடைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்!



'' தண்ணீரே, நீ ஆகாயத்தினின்று மகிழ்ந்து கீழே இறங்குகிறாய். ஆற்றில் குதித்து ஓடுகிறாய். மகிழ்ச்சியே உருவம் கொண்ட பொருள் நீ. உன் அபார சக்தியில் எனக்கும் கொஞ்சம் தருவாய். என் அகக்கண்ணைப் பெருக்குவாயாக. அறிவைத் தருவாயாக. உனக்குள் அடங்கி நிற்கிறது அமிருதம். எல்லா ருசியும் நீயே தருகிறாய். என் உடலைக் காத்து வருவாயாக. குழந்தை பேரில் தாய் செலுத்தும் அன்பு, உன்னிடம் நான் பெற்று வருகிறேன். அம்மா, நீரே, நீ எந்த அழுக்கையும் சுத்தம் செய்துவிடுகிறாய். அதுவே உன் விளையாட்டு. என் உள்ளத்தையும் நீ அப்படியே சுத்தம் செய்துவிட வேண்டும். உன்னைப் போல் நிர்மலமாக நானும் ஆக வேண்டும். இந்த எண்ணத்தை என் உள்ளத்தில் உண்டாக்குவாயாக'' என்று பிரார்த்தனை செய்து கொண்டே உடம்பை நன்றாகத் தேய்த்து ஸ்நானம் செய்ய வேண்டும்.




ஒருவர் எச்சில் மற்றொருவர் உணவில் எந்த விதத்திலும் சேரலாகாது. சமையல் வேலை செய்யும் போதும், பரிமாறும்போதும் கைகளை நன்றாகக் கழுவி வேலை செய்ய வேண்டும். பாரத தேசத்தில் உடை, உணவு விஷயங்களில் நிருமாணிக்கப்பட்ட எச்சில் தீட்டு முறைகள் எல்லா வைத்திய சாஸ்திரத்தைக் காட்டிலும் முக்கியமானவை. இவற்றைக் கைவிடுவது மடமை. நாகரிகத்துக்கு விரோதம். உணவைப் போலவே குடிக்கும் ஜலமும். அதில் எச்சில் சேரலாகாது. வாயில் வைத்து உறிஞ்சாமல் எடுத்துக் குடிப்பது நம்முடைய முன்னோர்கள் காத்து வந்த முக்கியமான பண்பாடு. அதை, இந்தக் காலத்தில் ரொம்ப மறந்துவிட்டோம். ஆயினும் ஒருவர் வாயில் வைத்துக் குடித்த பாத்திரத்தைச் சுத்தம் செய்யாமல் மற்றொருவர் உபயோகிப்பது தவறு. எவ்வளவு அவசரமாயினும் இந்த ஆசாரத்தைக் காக்க வேண்டும்.



வாயில் விரல் வைத்தால் சுத்தம் செய்யாமல் மற்ற எதையும் அந்தக் கையால் தீண்டலாகாது.

ஒருவர் கை துடைத்த துணி, மற்றவர் உபயோகிக்கலாகாது. அவரவர் தத்தம் கைத்துண்டு வைத்துக் கொண்டு தினசரி தோய்த்து உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும். வெளியிலிருந்து வீட்டுக்குள் நுழையும்போது கால்களை நன்றாகக் கழுவி ஈரத்தைத் துடைத்துக் கொண்டே செல்ல வேண்டும். வீடெல்லாம் ஈரம் செய்வது நல்ல பண்பாடல்ல. அழுக்குப் பட்ட ஜலம் எச்சிலைப் போலாகும்.



ராஜாஜி-எல்.பி.டபிள்யூ.

அமரர் கல்கி அவர்களைக் காண அவர் வீட்டுக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னால் வந்திருந்தார் ராஜாஜி. வாசலில் சில சிறுவர்கள் கிரிக்கெட் ஆடிக் கொண்டிருந்தார்கள். சில விநாடிகள் ஆட்டத்தை நின்று கவனித்தார் ராஜாஜி. பிறகு மட்டையைத் தாம் வாங்கிக்கொண்டு விக்கெட் எதிரே நின்றார். 'பௌலர்' வீசிய பந்து அவர் காலில் பட்டுவிட்டது. 'அடடா! 'பாட்' கூடக் கட்டிக் கொள்ளவில்லையே? ஒரு வேளை வலித்திருக்குமோ?' என்று சிறுவர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருக்கையில் ''என்ன எல்.பி.டபிள்யூ.வா?'' என்று சிரித்தபடியே கேட்டுவிட்டு ராஜாஜி, வீட்டுக்குள் சென்றுவிட்டார், கல்கியைப் பார்க்க.

கிரிக்கெட் ஆட அவருக்கு அதிக வாய்ப்போ நேரமோ கிடைத்திருக்காதுதான். ஆனால் தர்மம், அரசியல், அரசியல் தர்மம் என்று பேசும் ராஜாஜி, கிரிக்கெட் தர்மத்தைப் பற்றியும் பேசுவார் என்பதை மேலே உள்ள படம் நிரூபிக்கிறது. இவ்வாண்டு ஜூன் மாதத்தில் லாலா அமர்நாத் ராஜாஜியை அவர் இல்லத்தில் சந்தித்து வணக்கம் தெரிவித்தார். லாலா அமர்நாத் கடைசியாக எப்போது கிரிக்கெட் ஆடினார் என்று கேட்டறிந்த ராஜாஜி ''அப்படியானால் நீங்கள் இந்திய கிரிக்கெட்டில் மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்தவர்'' என்றார். பிறகு முதல் இரண்டு தலைமுறை ஆட்டக்காரர்களை நினைவுபடுத்திக் கொண்டு அவர்களைப் பற்றிப் பேசினார். அமர்நாத் தலைமையில் ஆஸ்திரேலியாவில் இந்தியக் கோஷ்டி ஆடிக் கொண்டிருந்தபோது ராஜாஜி கவர்னர் ஜெனரலாக இருந்தார். இந்திய கோஷ்டியை ஊக்குவித்து அடிக்கடி கடிதம் எழுதுவார் ராஜாஜி. ''அந்தக் கடிதங்களையெல்லாம் இன்னமும் பத்திரமாக வைத்திருக்கிறேன்'' என்றார் அமர்நாத்.

பட்டோடி (பெரியவர்) நவாப் இளம் வயதிலேயே காலமாகிவிட்டபோதிலும் அவருடைய மகன் கிரிக்கெட் ஆட்டத்தில் சிறந்து விளங்குவது கண்டு தாம் மகிழ்வதாகத் தெரிவித்தார் ராஜாஜி.

படம்: இந்தியன் எக்ஸ்பிரஸ்

சாப்பிடும் இடம் தனியாகவும், மற்ற காரியங்கள் செய்யும் இடம் சாத்தியமான வரையில் வேறாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். இது சாத்தியமில்லா விட்டால், மிகக் கவனமாக வீட்டின் தூய்மையைப் பார்த்துக் கொள்ள வேண்டும். வீட்டில் ஈக்கள் வராமலிருப்பதே சுத்தமாக இருப்பதற்கு அடையாளம்.

தட்டில் சாப்பிட்டால் அவரவர் தம் தட்டை நன்றாகக் கழுவித் துடைத்து வைத்துக்கொள்ள வேண்டும். எச்சில் இலைகளை ஈமொய்க்க விடாமல் சீக்கிரம் எடுத்து இங்குமங்கும் போடாமல் சரியானபடி குப்பைக்கென்று வைக்கப்பட்ட தொட்டி அல்லது பாத்திரத்தில் போட்டுவிட வேண்டும்.

சாப்பிடுவதற்கு முன்னும், சாப்பிட்ட பின்னும் உடனே வாயை நன்றாக நல்ல ஜலத்தில் கொப்பளிக்க வேண்டும். இது முக்கியமான ஆசாரம். பாரத தேசத்தைச் சேர்ந்த சிறந்த ஆசாரம். இந்தப் பண்பாட்டை நாம் விட்டு விடலாகாது. கொப்பளிக்கும்போதும் நான் சொல்வேன் கேட்பீர்களானால்: 'அச்சுத அனந்த கோவிந்த' என்று சொல்லிக் கொப்பளிக்கவும். 'நான் உண்ட உணவை எனக்கு ஆண்டவன் தந்தானே' என்று நன்றி செலுத்தி வாய் கொப்பளிக்க வேண்டும்.

நம்முடைய கை அலம்பும் ஆசாரமும், வாய் கொப்பளிக்கும் ஆசாரமும், எச்சில் சேராமல் உண்ணும் ஆசாரமும், தினமும் குளிக்கும் ஆசாரமும் நூறு ஹெல்த் இன்ஸ்பெக்டர்களின் வேலைக்குச் சமம். கைகளை அலம்பி, வாய் கொப்பளிக்கும்போது, மெதுவாக ஜலத்தை உமிழ வேண்டும். இங்குமங்கும் சிதறும்படி உமிழலாகாது. உமிழ வேண்டிய இடத்திலேதான் உமிழ வேண்டும். மூக்கைச் சிந்தும்போதும் இதைக் கவனிக்க வேண்டும். இதை முக்கியமான பண்பாடாகக் கவனிக்க வேண்டும்.

உடுத்தியிருக்கும் துணியில் மூக்கைச் சிந்துவதும், அலம்பிய கையைத் துடைப்பதும் கூடாது. அதற்காகத் தனித் துண்டை வைத்துக்கொள்ள வேண்டும். நல்ல வைதீகர்களின் நடவடிக்கைகளைக் கவனித்து வந்தால் நான் எழுதியிருப்பதைப் படித்தறிவதைக் காட்டிலும் எல்லாம் நன்றாகத் தெரிந்து கொள்ளலாம்.

இரவில் படுத்துத் தூங்கும்போது ஆண்டவனைத் தியானித்துத் தூங்க வேண்டும். இதற்கு ஒரு நிமிஷமே போதும். ''இன்று நான் செய்த குற்றங்கள் இன்றோடு தீர்ந்து போக வேண்டும். அவை மறுபடி என்னைச் சேராதிருக்கச் செய்வாய்'' என்று ஆண்டவனுக்குச் சொல்லிவிட்டுத் தூங்க வேண்டும். பகவான் உன் பக்கத்திலேயே இருக்கிறான், எங்கேயோ தூரத்தில் அல்ல.

பக்தி பூரணமாக இருப்பின், ஆசாரக் குறைவு பாதிக்காது என்பது உண்மை. ஆனால் உண்மையான பக்தி இருக்கிறதா அல்லது வெறும் ஆசையா, அகம்பாவமா என்பதை அவரவர் தத்தம் உள்ளத்தை அவ்வப்போது சோதித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆண்டவனை மோசம் செய்ய முடியாது.

நன்றி: பக்தன், செப்டம்பர் 1954

GRASIM

STAPLE FIBRE A SUPPLEMENT TO COTTON AND OTHER FIBRES



Among Indian technological achievements Gwalior Rayon's success in producing Rayon Grade Pulp from indigenous raw materials without any foreign aid or collaboration has, perhaps, been the most remarkable. The staple fibre produced from the pulp has been a boon to the hard-pressed textile industry which was deprived of valuable raw materials when vast areas of cotton-growing land were lost to Pakistan as a result of Partition.

Grasim Staple Fibre is unique in many respects, and is, in effect, a supplement to all natural fibres including cotton, wool, silk, jute, as well as to synthetic fibres. When blended or mixed with other fibres, it increases the usefulness of the resultant fabrics, making them cooler, softer, and more comfortable while at the same time helping to lower costs.


Today Gwalior Rayon contributes substantially to the national economy. It keeps hundreds of textile mills busy, gives employment to thousands of people, helps clothe lakhs more, saves crores of rupees in foreign exchange, contributes handsomely and in ever-increasing amounts to the national exchequer—these are just a few of the calculable benefits.


Besides Rayon Grade Pulp and Staple Fibre, Gwalior Rayon also produces high quality fabrics and fabricates its own machinery and equipment.

As the needs of the nation for the basic necessities of life are constantly growing, Gwalior Rayon, conscious of its responsibilities, has already made plans to expand its production. It is the constant endeavour of the Company to serve the country to its utmost ability.


THE GWALIOR RAYON SILK MANUFACTURING (WVG.) CO. LTD.

Birlagram, Nagda.















ராஜாஜியைச் சந்திக்கும் தலைவர்கள் :

1. டாக்டர் ராதாகிருஷ்ணன்
2. ஜவாஹர்லால் நேரு
3. மு. கருணாநிதி
4. எம். ஆர். மசானி
5. மாஸ்டர் தாராசிங்
6. விஜயலக்ஷ்மி பண்டிட்
7. காமராஜ்





கிளிஞ்சல் கோபுரம்

ஜெகசிற்பியன்

அத்தியாயம் எட்டு

இது என்ன கோபம்?

"வாங்க, வாங்க! ரொம்ப சீக்கிரம் வந்துட்டீங்களே?" என்று புன்னகையுடன் வரவேற்றார் கனகசபை.

அந்த வாலிபர்களில் ஒருவர் ஜிப்பாவும், பைஜாமாவும் அணிந்திருந்தார்; கையில் ஒரு தோல் பை இருந்தது. இன்னொருவர் பேண்டும் ஷர்ட்டும் தரித்திருந்தார்; அவரது தோளில் விலை உயர்ந்த காமிரா ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது.

"ரெய்ன்போ பப்ளிசிடியிலிருந்து தானே வருகிறீங்க? இப்படி உட்காருங்க!" என்று தம் எதிரே இருந்த சோபாக்களைக் காட்டினார் கனகசபை. "மானேஜர் மயில்வாகன் சௌக்கியமா?"

"இருக்கிறார் சார்! உங்களை ரொம்ப விசாரித்ததாகச் சொல்லச் சொன்னார்" என்று கூறிய ஜிப்பாக்காரர், "நான் தான் எங்க கம்பெனியின் சீஃப்-ஆர்ட்டிஸ்ட்; இவர் காமிராமேன்" என்றார், தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளும் தோரணையில்.

"சந்தோஷம். எங்கே, நம்ம கம்பெனி விளம்பரங்களுக்கு நீங்க தயாரிச்சிருக்கிற 'ஸ்கெட்ச்'களைக் காட்டுங்க, பார்க்கலாம்?"

ஜிப்பாக்காரர் தம் பையிலிருந்து சில விளம்பர லே-அவுட்டுகளை எடுத்துக் கனகசபையின் எதிரே டீப்பாயின்மேல் பரப்பி வைத்தார். கனகா இண்டஸ்ட்ரீஸில் உற்பத்தியாகும் பூட்டுக்கள், இரும்புப் பெட்டிகள், மற்றும் பல இரும்புச் சாமான்கள் ஆகியவைகளைத் தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்வதற்காகத் தயாரிக்கப் பெற்ற படங்கள் அவை. இன்றைய விளம்பரக் கலை மோஸ்தர்படி அவையனைத்தும் போட்டோக்களைக் கொண்டு உருவாக்கப்பட்டிருந்தன.

ஒரு விளம்பரத்தில்: முதுகைக் காட்டிக்கொண்டிருக்கும் பெண்ணொருத்தி கதவைச் சாத்திப் பூட்டுகிறாள்; அவளுடைய முகத்தின் முக்கால் பாகத்தைக் கூந்தல் மறைத்து விட்டிருக்க, பின்னிடையின் அழகை மட்டும் பிரமாதமாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. பக்கவாட்டில் இரட்டைச் சாவிகளுடன் கூடிய பூட்டு ஒன்றின் பெரிய போட்டோப் படம்! — இது பூட்டு விளம்பரத்துக்கு.

ஓர் அறையின் வாசலில் மெல்லிய திரை தொங்குகிறது. திரைக்குப் பின்னால் ஒரு பெண் உடை மாற்றிக் கொண்டிருப்பது மங்கலாகத் தெரிகிறது!—இது ஸ்கிரீன் பித்தளைக் குழாய் விளம்பரத்துக்கு. மற்றொரு விளம்பரம்:

ஒரு படுக்கை அறை. கட்டிலில் கணவன் உட்கார்ந்திருக்க, மனைவி அவனது மார்பில் முகம் புதைத்துச் சாய்ந்திருக்கிறாள். பக்கத்தில் ஓர் இரும்புப் பெட்டி இருக்கிறது. சன்னல் வழியே முகமூடித் திருடன் ஒருவன் எட்டிப் பார்க்கிறான். அவனைக் கண்டு கணவன் அலறுகிறான்: 'ஐயோ, திருடன்! திருடன்!'. மனைவி மொழிகிறாள்: 'பரவாயில்லை. அவன் திரும்பிப் போய் விடுவான். ஏனென்றால் இது கனகா இண்டஸ்ட்ரீஸில் தயாரான இரும்புப் பெட்டி!'

இன்னும் இம்மாதிரி ஐந்தாறு படங்கள் இருந்தன. அவ்விளம்பரங்களிலெல்லாம் — அதற்குத் தக்கபடி — ஒரே பெண்ணைப் பலவிதமான 'போஸ்'களில் நிறுத்தி. அந்தப் பெண்ணின் முகத்துக்கு முக்கியத்துவம் தராமல்,

கூடுமானவரையில் அதைமறைத்துவிட்டு அவளது உடல் அழகுக்கு மட்டுமே பிராதான்யம் அளித்து எடுத்த போட்டோப் படங்களை வெட்டி ஒட்டிக் கவர்ச்சிகரமான வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன.

கனகசபை உற்சாகத்துடன் ஒவ்வொரு படமாகப் பார்த்தார். அவருக்கு எல்லாமே பிடித்திருந்தன. ஆனால் விளம்பர வாசகங்கள் எழுதப்பட்டிருந்த எழுத்துக்களின் வடிவ அமைப்பில் மட்டும் அவருக்கு அவ்வளவாகத் திருப்தி ஏற்படவில்லை. காரணம், அவர் ஒரு காலத்தில் 'டைப் - ஃபவுண்டரி'யில் வேலை செய்தவர் அல்லவா? எனவே, ''இந்த வரியின் எழுத்துக்கள் கொஞ்சம் 'போல்டா'க இருக்கணும்; அந்த வரி 'கண்டன்ஸ்டு' டைப்பிலே இருந்தால் நல்லா யிருக்கும்; மூணாவது வரியில் உள்ள இந்த நாலு வார்த்தைகளும் 'ஐட்டலி'க்கிலே இருக்கட்டும்'' என்று சில திருத்தங்கள் சொல்ல ஆரம்பித்து விட்டார். ஓவியரும் அவர் சொல்வதை வெகு கவனமாகக் கேட்டுக்கொண்டார்.

இந்தச் சமயம் மாடியிலிருந்து சுகுணா இறங்கி வந்தாள். குளித்து வேறு ஆடையணிமணிகள் புனைந்திருந்த அவள் இப்போது மிகவும் அழகாகக் காணப்பட்டாள்.

''வாம்மா, சுகுணா! உன்னைத்தான் எதிர்பார்த்துக்கிட்டிருக்கிறேன்'' என்று மகிழ்ச்சி கலந்த அன்புடன் தம் மகளைத் திரும்பிப் பார்த்த கனகசபை, ''இப்படி வந்து உட்காரம்மா!... இதோ, இதுகளெல்லாம் நம்ம கம்பெனிச் சாமான்களை விளம்பரப்படுத்தறதுக்காக வரைஞ்சிருக்கிற படங்கள். இப்பத்தான் முதல் முதலாகப் பத்திரிகைகளிலே விளம்பரப்படுத்தப் போகிறேன். இதுக்காக இந்த வருஷம் முப்பதாயிரம் ரூபாய் ஒதுக்கி வைக்கிறதுன்னு தீர்மானிச்சு, விளம்பரம் செய்யற பொறுப்பை 'ரெயின்போ பப்ளிசிடீஸ்' என்கிற கம்பெனியிடம் ஒப்படைச்சிருக்கிறேன். எஸ்டிமேட் எல்லாம் போட்டு விஸ்டும் கொடுத்துட்டாங்க. இப்ப நம்ம ஒப்புதலுக்காகச் சில விளம்



பர 'லே - அவுட்'டுகளை அனுப்பியிருக்காங்க. நீயும் இவைகளைப் பாரு; உன்னோட அபிப்பிராயம் என்னன்னு சொல்லு!'' என்றார்.

அந்த அறையில் புதிய மனிதர்கள் இருவர் உட்கார்ந்திருந்தாலும் எவ்வித தயக்கமோ கூச்சமோ காட்டாமல் சாதாரணமாக வந்து தன் தந்தையின் பக்கத்தில் அமர்ந்த கருணா, டீப்பாயின் மேல் இருந்த விளம்பரப் படங்களை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தாள். அவள் முகம் வியப்பால் விரிந்து, பிறகு வெறுப்பால் வெளிறிச் சிறுத்தது. அந்த விளம்பர 'லே-அவுட்'டுகளிலுள்ள வாசகங்களையும், கம்பெனிப் பொருள்களின் சித்திரங்களையும் பார்க்காமல், அவற்றுக்கு அனுசரணையாக உபயோகப் படுத்தியிருந்த நங்கையின் புகைப்படங்களை மட்டுமே அவள் கூர்ந்து கவனிப்பதாகத் தோன்றியது.

சிறிது நேரத்துக்குப் பின் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவள் போல் தன் தந்தையை ஏறிட்டுப் பார்த்து, ''எம்ப்பா! இவைகளுக்கெல்லாம் நீங்கள் இன்றைக்கே ஒப்புதல் கொடுத்துடணுமா? இல்லே நாளைக்குக் கொடுக்கலாமா?'' என்று மிகவும் நிதானமாகக் கேட்டாள்.

''அப்படி ஒண்ணும் அவசரமில்லேம்மா! நாளைக்கும் கொடுக்க



லாம்; நாளை மறுநாளும் தரலாம்'' என்று சிரித்த கனகசபை, ''ஏன், உனக்கு என்ன தோணுது?'' என்றார் அக்கறையாக.

''இன்னும் கொஞ்சம் ஆற அமர யோசித்து ஒப்புதல் தரலாமேன்னு நினைக்கிறேன்.''

''அப்படியே செய்துட்டாப் போச்சு!'' என்று தலையாட்டியபடி எதிரே உட்கார்ந்திருந்தவர்கள் பக்கம் திரும்பினார் கனகசபை.

அந்த விளம்பரக் கலைஞர்கள் எவ்வித மான எதிர்க் கேள்வியோ, விளக்கப் பதிலோ சொல்லாமல் பவ்யப் புன் முறுவல் பூத்தனர். ''ஆகட்டும் சார்! அவங்க சொல்றதும் சரிதான். நீங்க எப்ப ஃபோன் பண்ணுறீங்களோ அப்ப வந்து உங்களைச் சந்திக்கிறோம்'' என்று பணிவுடன் கூறிய ஓவியர் கைகூப்பிய வாறு எழுந்தார். ஃபோட்டோகிராப்ப ரும் அவ்வாறே சொல்லி வணங்கினார். இருவரும் அங்கிருந்து அமைதியாக வெளியேறினர். அவர்கள் விளம்பரக் கம்பெனியில் பணிபுரிபவர்கள் அல்லவா?

அவர்களுடைய தலை மறைகிற வரையில் காத்திருந்தவர் போல் சட் டென்று திரும்பி, ''ஏன் சுகுணா! இந்த விளம்பரப் படங்களிலே உனக்கு எத னுச்சும் குறை தென்படறதா? எதுக்கு அப்படிச் சொல்லிட்டே?'' என்று கேட் டார் கனகசபை.

அந்த 'லே-அவுட்'டுகளை மீண்டும் எடுத்துப் பார்த்து முகத்தைச் சுளித்த சுகுணா, ''குறை என்று எதையும் குறிப் பிட்டுச் சொல்ல முடியாது அப்பா! ஆனாலும் மொத்தத்தில் எனக்கு இந் தப் படங்களில் ஒன்றுகூடப் பிடிக்கலே'' என்றாள்.

''என்னம்மா இப்படிப் பேசறே? கொஞ்சம் தெளிவாகத்தான் சொல் லேன்.''

''ஆமாம்பா! இந்த விளம்பரப் படங்களையெல்லாம் அந்த ஆர்ட் டிஸ்டை விட்டுக் கையாலேயே முழு வதையும் வரைஞ்சிடச் சொல்லுங்க. பெண்ணின் போட்டோ படத்தைச் 'செட்' பண்ண வேண்டாம்.''

இதைக் கேட்டுக் கடகடவெனச் சிரித்த கனகசபை ஏதோ சொல்ல வாயெடுத்த சமயம் வாசலில் ஒரு ஸ்கூட்டர் வந்து நிற்கவே, தலையை உயர்த்தி எட்டிப் பார்த்தார். முத்து சிவன்தான் ஸ்கூட்டரை விட்டு இறங்கி வந்து கொண்டிருந்தான்.

அவசரமாக எழுந்த கனகசபை, ''வாங்க தம்பி, வாங்க!'' என்று அன்பும் கனிவுமாக வரவேற்றுக் கொண்டே வராந்தாவுக்குச் சென்றார்.

முத்துசிவன் வருவதைக் கண்டு சுகு ணாவின் அழகு வதனம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. கண்ணிமைகள் படபடக்க அவனையே ஒரு கணம் மெய்ம்மறந்து பார்த்த அவள் சட்டென்று எதையோ நினைத்துக் கொண்டவள் போல் பர பரப்புடன் அங்குமிங்கும் நோக்கினாள். இப்போது அவளுடைய முகத்தில் ஒரு வித கலவரம் சூழ்ந்தது. டீப்பாயின் மேல் கிடந்த அவ்விளம்பர 'லே-அவுட்'டுகளை வெடுக்கென்று எடுத்து எல்லாவற்றையும் ஒருசேர அடுக்கிப் பிடித்து, 'டர்'ரென்று கிழித்தாள்! மேலும் மேலும் அவற்றைக் கிழித்துக் கொண்டே சடாரென எழுந்து போய் டெலிஃபோன் இருந்த மேஜைக்குக் கீழே ஒரு கழிவுக் காகிதக் கூடையில் போட்டுவிட்டு அங்கேயே மேஜைமேல் ஒருக்களித்துச் சாய்ந்தவாறு தலை குனிந்து நின்று கொண்டாள்.

முத்துசிவனை அழைத்துக் கொண்டு உள்ளே வந்த கனகசபை இதைப் பார்த்துத் திடுக்குற்றவராய் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்று, பிறகு உடனே தம்மைச் சமாளித்துக்கொண்டு 'இப்போது அதைப் பற்றி அவளிடம் எது வும் கேட்க வேண்டாம்' என்று எண் ணியவர் போல் மெல்லச் சிரித்தபடி, ''சொர்ணு! சொர்ணு! முத்துத் தம்பி வந்திருக்கிறாரே!'' என்று உற்சாகமாகக் குரல் கொடுத்துவிட்டு, ''உட்காருங்க தம்பி! கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தான் உங்களைப் பற்றிப் பேசிக் கொண் டிருந்தோம்; நீங்களும் வந்துட்டீங்க'' என்றார்.

வெட்கக் குழைவுடன் தயங்கித் தயங்கி வந்த முத்துசிவன் ஒரு சோபா வில் அடக்கவொடுக்கமாக அமர்ந்தான். உள்ளே வரும்போதே அந்த அறையில் சுகுணா இருப்பதை அவன் பார்த்து விட்டானானாலும் அவளைப் பார்த்த மாதிரி காட்டிக் கொள்ளவில்லை. அவள் நின்றிருந்த பக்கம் தன் பார்வையைச் செலுத்தவுமில்லை.

நேற்று சென்ட்ரல் ஸ்டேஷனில் அவனை அவள் பார்த்தும் பாராதது போல் போனதற்குப் 'பழி' வாங்கும் நடவடிக்கையாக இப்போது அவன் இம்மாதிரி அவளைப் பார்க்காமல் இருந் தானா? அல்லது அவளது தந்தை கனக சபை பக்கத்தில் இருக்கும்போது அவ ளைப் பார்ப்பது மரியாதை கெட்ட விஷ மத்தனம் என்று எண்ணி இப்படிப் பத விசாக இருந்தானா?

இரண்டும் அல்ல; ஸ்கூட்டரை விட்டு இறங்கி வராந்தாப் படியில் கால் வைத்து ஏறும்போதே கூடத்து அறைச் சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு பெரிய

போட்டோப் படம் அவனுடைய பார்வையில் பட்டுவிட்டது. அந்தப் படத்தைப் பார்த்ததால் கிளர்ந்த ஒருவிதத் துயர உணர்ச்சியே அவனை அவ்வாறு ஒடுக்கி முடக்கியது. சோபாவில் வந்து உட்கார்ந்த பின்னும் அப்படித்தான் அவன் பார்த்துக் கொண்டிருந்தான்.


ஆமாம்; அது அவனுடைய தந்தையின் படம். திறமை வாய்ந்த புகைப்பட நிபுணரால் பெரிதாக்கப்பட்டு அழகிய சட்டம் போட்டு அறையின் முகப்புச் சுவரில் மாட்டப்பட்டிருந்த அந்தப் படத்துக்குச் சரிகை மாலையும் சூட்டப்பட்டிருந்தது. அவர் ஒரு தன்னலமற்ற தேசபக்தர் — சுதந்திரத்துக்காகப் பாடுபட்ட வீரத் தியாகி — என்பதால் அவருடைய படம் அங்கே அத்தனை பூஜிதப் பாங்குடன் மாட்டப் பட்டிருக்கிறதென்று சொல்ல முடியாது; ஒரு காலத்தில் அவர் இந்தக் கனகசபைக்கு முதலாளியாயிருந்தவர் என்பதையும், அவரது அன்பின் ஆதரவு கிடைத்ததாலேயே இவர் வாழ்க்கையில் படிப்படியாக முன்னேற முடிந்தது என்பதையும் நன்றி உணர்ச்சியோடு தினந்தினம் நினைவுகூரவே அவருடைய படம் அங்கு மாட்டி வைக்கப்பட்டிருந்தது. கடல் நீர் இன்னமும் உப்புக் கரித்துக் கொண்டிருப்பதற்குக் காரணம் இல்லாமல் போகுமா?

இதற்கு முன் முத்துசிவன் இரண்டொரு முறை இங்கு வந்தபோதுகூட இப்படித்தான் அந்தப் படத்தைப் பார்த்ததும் சற்று நேரத்துக்குத் தன்னையே மறக்கும்படியான நிலையிலாகி விட்டிருக்கிறான். இப்போதும் அத்தகையதொரு மறதியின் பரபரப்பு அவனை ஆட்கொண்டு விட்டதாலேயே அங்கு யாரைப் பார்க்க வந்தானோ, அவளே அவனுடைய கண்ணெதிரில் ஓவியப் பாவையென ஒசிந்து நின்றிருந்ததைக் கடைக்கண்ணால்கூடக் கவனியாமல் — கட்டை மாதிரி வந்து உட்கார்ந்து விட்டான்.

''வாங்க தம்பி! அம்மா சௌக்கியமா இருக்கிறாங்களா?'' என்று முகமெல்லாம் மகிழ்ச்சி பொங்கக் கேட்டுக் கொண்டே வந்து கதவருகில் நின்றாள் சொர்ணத்தம்மாள்.

''இருக்கிறாங்கம்மா! உங்களை ரொம்பக் கேட்டதாகச் சொல்லச் சொன்னாங்க!'' என்று வள்ளுவர் வழங்கிய உரிமையை எடுத்துக் கொண்டு ஒரு சிறு பொய்யைச் சொல்லி வைத்தான் முத்துசிவன். ஆமாம்; அவன் இங்கு வந்திருப்பது அவனுடைய தாயார் அன்னபூரணியம்மாளுக்குத் தெரியாது. அவளிடம் இவன்சொல்லிவிட்டும் வரவில்லை.

உரிமையும் சுதந்திரமும்



ராஜாஜி அவர்கள் ஒரு சமயம் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது பெட்டியில் சுந்தரம் என்றொருவரும் ஏறினார்.

இரவெல்லாம் விளக்குகளைப் போட்டுக் கொண்டு, இன்னொருத்தருக்குத் தொந்தரவு தருகிறோம் என்ற நினைப்பே வராத சுந்தரம், சுவாரஸ்யமாகப் புத்தகம் படித்துக் கொண்டே இருந்தார்.

ராஜாஜி அவர்கள் ஒன்றுமே பேசாமல், கைக்குட்டையால் தமது கண்களைக் கட்டிக் கொண்டு படுத்து விட்டார்.

விடியற்காலையில்தான், விளக்குகளைப் போட்டுக் கொண்டு ராஜாஜி அவர்களைத் தூங்க விடாது செய்திருக்கிறோம் என்பதை உணர்ந்த சுந்தரம் குற்ற உணர்ச்சியுடன், ''உங்களுக்கு நான் ரொம்பவும் தொந்தரவு தந்துவிட்டேன் போலிருக்கிறது.......'' என்றார்.

ராஜாஜி அவர்கள், ''ஒருவரின் சுதந்திரம் எனக்கு உறுத்தலாயிருக்கும் பட்சத்தில், எனது கண்களைக் கட்டிப் போட்டுக் கொள்ள எனக்கு உரிமையுண்டு; ஆனால் அவருடைய சுதந்திரத்தில் தலையிட நான் யார்?'' என்று பதில் சொன்னார்.

அவர் உரிமையின் அளவு தெரிந்தவர். சிரித்த முகத்துடன் சொன்னார். சுதந்திரத்தின் அளவு புரியாதவர் குறுகிப் போய் அமர்ந்தார்.

சுந்தரம் சொன்னதைக்
கேட்டு எழுதியவர்: இளவேனில்

கருணையையும் முத்துசிவனையும் மாறி மாறிப் பார்த்தபடி புன்முறுவலுடன் உட்கார்ந்திருந்த கனகசபை மனைவியின் பக்கம் திரும்பி, ''தம்பிக்குக் காப்பி டிபன் கொண்டு வாயேன்!'' என்று சொல்லி, ''ஏன் தம்பி, உங்க தங்கச்சியை யெல்லாம் நல்லபடியாகப் புருஷன் வீட்டுக்கு அனுப்பி வைச்சுட்டீங்களா?'' என்று கரிசனக் கனிவுடன் விசாரித்தார்.

தன் தந்தையின் நினைவில் ஆழ்ந்து, அவருடைய படத்தையே பார்த்துக் கொண்டிருந்த முத்துசிவன், இப்போதுதான் தான் இருக்கும் சூழ்நிலை உணர்வுபெற்றவனாய், மெல்லத் திரும்பி ''அனுப்பி வைச்சுட்டேன்! நேத்திக்குத்தான் எல்லோரையும் அனுப்பிச்சேன்!'' என்றான் இளநகையுடன்.

''ரொம்ப சந்தோஷம்!... பெரிய தம்பி?.... பெரிய தங்கச்சி?...''

''அவங்களும் பயணமாகிப் போயிட்டாங்க.''

''அப்ப.... நீங்களும் உங்க அம்மாவும் மட்டும்தான் வீட்டிலே தனியாக

இருக்கிறீங்கன்னு சொல்லுங்க?...பேச்சுத் துணைக்குக்கூட யாரும் இல்லாம வெட்டு வெட்டுன்னு ரொம்பக் கஷ்டமாயிருக்குமே!'' என்று கூறி மெல்லச் சிரித்தார் கனகசபை. ''முதல்லே கொஞ்ச நாளைக்கு அப்படித்தான் இருக்கும்; அப்புறம் பழக்கப்பட்டுப் போயிடும்.''

''ஆமாங்க.''

''ஆனாலும் உங்க அம்மாவுக்குச் சிரமம்தான்! வயசு ஆகிடுச்சு பாருங்க; நீங்க ஆபீசுக்குப் போயிடுவிங்க; அவங்க நாளெல்லாம் வீட்டிலே அடைஞ்சு கிடக்கிறவங்களாச்சே! கூப்பிடற குரலுக்கு ஏன்னு கேட்க யாராவது இருக்கணும். எடுக்கப் பிடிக்க ஒரு துணை இல்லேன்னா...? பெரிய மனுஷி!....... த்சொ, த்சொ!....''

பதிலேதும் சொல்லாமல் மௌனமாய்ப் புன்னகை பூத்தபடி தலைகுனிந்து உட்கார்ந்திருந்தான் முத்துசிவன்.

ஒரு தட்டு நிறைய இனிப்பு, காரம் பட்சணங்களுடன் காப்பியும் கொண்டு வந்து முத்துசிவனின் எதிரில் வைத்த சொர்ணத்தம்மாள், ''சாப்பிடுங்கள் தம்பி!'' என்று உபசரித்தாள்.

முத்துசிவன் உணவு விஷயத்தில் கொஞ்சம் வயிறுதாரி. சாப்பிடுவதற்கு மட்டும் எங்கும், எப்போதும் 'பிகு' செய்து கொள்ள மாட்டான். ஆகவே அவன் சகஜமாகச் சாப்பிடத் தொடங்கினான்.

டெலிஃபோன் மணி கிணுகிணுத்தது.

''யாருன்னு கேளு, சுகுணா!'' என்றார் கனகசபை.

''ஹலோ!.... ஆமாம்; நான்தான் பேசறேன்!... வசந்தியா?... என்னடீ விஷயம்?... அப்படியா? சரி, நாளைக்குத் தானே? அவசியம் வரேன்!... என்ன, நீகூட உங்களவரோடு சேர்ந்துட்டியா? சேச்சே!...சும்மா விளையாட்டுக்குக் கேட்டேண்டீ!... கோபிச்சுக்காதே! ...... தொல்லை பொறுக்க முடியவில்லையா? அட, பாவமே!... நான்கூட உன்னிடம் ஒரு விஷயமாய்ப் பேசணும்னு இருக்கிறேன்... கொஞ்சம் முன்னாடிதான் உன்னை நெனைச்சேன்!... ஓ, எஸ்...சரி; வைச்சுடட்டுமா?''

சுகுணா டெலிபோனை வைத்துவிட்டு, ''உங்களுக்கு இல்லேப்பா! என் சிநேகிதி பேசினாள்''என்று சொல்லிக்கொண்டே விருட்டென்று திரும்பி, மாடிப் படிக்கட்டை நோக்கி நடந்தாள்.

டிபன் சாப்பிட்டு முடிந்ததும், கை கழுவ எழுந்து போகும் சாக்கில் அவளைப் பார்த்து எப்படியும் ஒரு புன்முறுவல் காட்டிவிட வேண்டும் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்த முத்துசிவன் அவசரமாக எழுந்தான். ஆனால் அதற்குள் சுகுணா மாடிக்குப் போய் மறைந்து விட்டாள். இவ்வளவு நேரம் அவனுக்காக நின்றிருந்தும், தன்னை அவன் திரும்பிக்கூடப் பார்க்கவில்லையே என்ற கோபம் போலும் அவளுக்கு!

ஏமாற்றமடைந்த முத்துசிவனின் முகம் வாடித் துவண்டது. சுவையான பட்சணங்கள் உண்ட திருப்திகூட இப்போது அதில் தென்படவில்லை. தன் மனத்தின் உணர்ச்சிகளை வெளிக் காட்டாமல் மறைக்க முயல்பவன் போல் கைக்குட்டையால் முகத்தை அழுத்தித் துடைத்தபடியே மீண்டும் வந்து சோபாவில் உட்காராமல் அதன் தலைப்பைப் பிடித்துக் கொண்டு தயங்கி நின்றான்.

கனகசபையும், சொர்ணத்தம்மாளும் ஒருவரையொருவர் பார்த்து ஏதோ கண் சமிக்ஞை செய்து கொண்டனர். 'கேளுங்கள்' என்று சொல்வதுபோல் அவளும், 'இப்போது வேண்டாம்' என்பதுமாதிரி அவரும் தலையாட்டினர்.

''என் தங்கை மைதிலியின் கல்யாணத்துக்கு நீங்களெல்லாம் வந்திருந்து சிறப்பித்துவிட்டுப் போனதற்கு எனது பணிவன்பான நன்றியைத் தெரிவிக்கத்தான் இப்ப இங்கே வந்தேன்...''என்று குழைவுடன் கூறியவாறு முன்னால் நகர்ந்தான் முத்துசிவன்.

''எங்களுக்கு நன்றி சொல்ல வந்திங்களா? நல்ல வேடிக்கைதான்!'' என்று கூறிக் கலகலவெனச் சிரித்த கனகசபை சட்டென்று சிரிப்பை நிறுத்திவிட்டு ஒருவித பக்தி விநயத்துடன் திரும்பிச் சுவரில் மாட்டப்பட்டிருந்த அந்தப் போட்டோப் படத்தைப் பார்த்தவாறு, ''நாங்க எங்க நன்றிக் கடனைச் சமர்ப்பிக்கத்தான் உங்க வீட்டுக் கல்யாணத்துக்கு வந்தோம் தம்பி! அப்படி ஒரு சந்தர்ப்பத்தை அளித்த உங்களுக்கு நாங்கதான்...'' என்று வாக்கியத்தை முடிக்காமல் இழுத்து நிறுத்திவிட்டு மெல்லக் கண் மூடினார்.

''சுகுணா! சுகுணா!'' என்று மாடிப் படிப் பக்கம் பார்த்துக் குரல் கொடுத்தாள் சொர்ணத்தம்மாள்.

''அப்ப நான் வரட்டுங்களா?''என்று சொல்லிக்கொண்டே தன்னையும் மீறிய ஒரு துணிவுடன் மாடிப் படிக்கட்டை அண்ணாந்து நோக்கினான் முத்துசிவன்.

சுகுணா வரவில்லை!

முத்துசிவனின் முகம் வெளிறிச் சிறுத்தது. தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு கொஞ்சம் விறைப்பாகவே நடந்து போய் ஸ்கூட்டரில் ஏறிப் புறப்பட்டுவிட்டான். **(தொடரும்)**

விமர்சனம்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

தமிழ் நாட்டின் கலைச் செல்வம் இப்போது எல்லாத் துறைகளிலும் புதிய வளர்ச்சியடைந்துவருகின்றது. பண்டை நூல்களின் சிறப்பையும் பழங் கலையின் அழகையும் புது உணர்ச்சியுடன் அனுபவித்து வருகிறோம். புதுப் பண்டங்களையும் கலைஞர்கள் ஆக்கி வருகிறார்கள். ''மொழி பலவாயும் தமிழ் சிறப்புற்றது'' என்று பாடப்பட்ட நம் தாய் மொழிக்கும் நாட்டுக்கும் இதுவே செய்யவேண்டிய நல்ல பணி. கீதமும் நடனமும் நாட்டியமும் கதையும் கட்டுரையும் எல்லாமே புதிதாகத்தழைத்து வளர்ந்து வருகின்றன. இதைக் கண்டு மகிழாத தமிழனில்லை. இன்னும் வளர வேண்டும். வளரும்! சந்தேகமில்லை.

கலை வளர்ச்சியும் கலை விமரிசனமும் வேகத்துடன் நடைபெறுவது இயற்கை. கலைஞன் உண்டாக்கித் தந்த பண்டத்தை அறிவும் ஆராய்ச்சி நுட்பமும் செலுத்தி விமரிசிப்பதும் ஒரு கலையே ஆகும். இந்தக் கலை இப்போது மிகச் செழிப்பாகவே வளர்ந்து வருகிறது. ஆனால் விமரிசனம் ஓர் ஆக்க சாதனமாக இருக்க வேண்டும். அதைக் கொலைப் படையாக உபயோகிக்கலாகாது.

சரியான முறையில் எழுதப்பட்ட விமரிசனங்கள் மேன்மேலும் நல்ல பண்டங்கள் உண்டாவதற்கு வேண்டிய ஊக்கம் ஊட்டி வழிகாட்டும் கருவியாகவே பயன்படும். புதிதாகத் தோன்றிய ஒரு கதையாயினும் பாட்டாயினும் நாட்டியமாயினும், வேறு எதுவாயினும், அது வனத்தில் தோன்றிய ஒரு புது மலரைப் போலே ஆகும். அதை மிக அன்புடனும் கவனத்துடனும் தொட வேண்டும். அநாகரிகமாகப் பிடித்துக் கசக்கி விடக் கூடாது. விருந்தினனைப் பற்றித் திருவள்ளுவர்,

> **மோப்பக் குழையும் அனிச்சம்; முகந்திரிந்து**
> **நோக்கக் குழையும் விருந்து**

என்று அழகாகவும், அழகுக்கு மேல் உண்மையாகவும் சொல்லியிருக்கிறபடி மலர்ந்த முகத்தோடும், அசூயை நீங்கிய உள்ளத்தோடும் வந்த விருந்தினனை உபசரிக்க வேண்டியதைப் போலவே, கலை உலகத்தில் தோன்றிய விருந்தையும் அசூயை, பகை ஏதுமின்றி விமரிசனக் கலைஞன் எதிர் கொண்டு உபசரித்து எழுத வேண்டும். அவ்வாறு செய்வதே விமரிசன மரியாதை.

கலையுலகத்தில் புதிதாகத் தோன்றிய ஒரு பொருள் தன் ஜீவ சக்தியினால்தான் நிலைத்து நின்று வளர்கிறது. உண்மை அழகும் சக்தியும் அதில் இல்லையாயின் தானாக அழிந்து மறைந்து விடும். அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. பயனின்றி இடத்தை அடைத்துக் கொண்டு நிற்காது. ஆகையால் நூல்களிலும் மற்ற கலைப் பண்டங்களிலுமுள்ள குணங்களை மக்கள் உணரும்படி எடுத்துக் காட்டி அவைகளை நன்றாக ஆதரிக்கும்படி செய்வதே விமரிசனம் எழுதுவோரின் முக்கியமான கடமை. காட்ட வேண்டிய குற்றம், குறைகளைத் தொட்டதும் தொடாததுமாகவே எடுத்துக் காட்ட வேண்டும். இனிமேல் ஆக்கப்படும் கலைப் பண்டம் அந்தக் குற்றமும் குறையுமின்றி நல்ல வடிவத்துடன் தோன்றுவதற்குச் சாதனமாகும் அளவில் மட்டும் குற்றத்தையும் குறையையும் லேசாக எடுத்துக் காட்ட வேண்டுமேயொழிய பூத்த புஷ்பம் வாடி அழிந்து போகும் முறையில் விமரிசனம் செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் வரும் கலைஞர்களின் ஊக்கம் பயத்திலும் வெறுப்பிலும் மூழ்கிக் கெட்டுப் போகும்.

குழந்தைகளை வளர்த்துப் பாலிப்பதைப் போலவே அன்பின் மூலமாகத்தான் கலையை வளர்க்க வேண்டும். பழைய நாட்களில் கடினமான முறைகளும் வசையும் தண்டனையும் குழந்தைகளுக்கு நன்மை செய்யும் என்று எண்ணி வந்தோம். இப்போது அனைவரும் ஏற்கும் சிசு பரிபாலன முறை அன்பு முறையே. அதுவே கலைகளின் புது மலர்ச்சிக்கும் தகுந்த முறை.

அநாகரிகமோ ஆபாசமோ கண்டால் அதைக் கண்டிக்கத்தான் வேண்டும். அநாகரிகமும் ஆபாசமும் கலைக்குப் பகையாகும். அதைப் பற்றித் தாட்சண்யம் காட்டக் கூடாது. ஆனால் ஆபாசமேதுமில்லாமல், அழகு குறைந்திருப்பதைப் பற்றி அடித்துச் சொல்ல வேண்டியதில்லை.

எது எவ்வாறாயினும் ஒரு விதி உண்டு. மனத்தில் துவேஷமோ பொறாமையோ இருப்பின் அந்த மனப்பான்மை விமரிசனத்துக்கு உதவாது. விமரிசனம் செய்ய ஒரு விஷயத்தை எடுக்கும்போது தன் உள்ளத்தில் ஒருவன் பொறாமையின் சாயலைக் கண்டா

ணுல், அந்த விமரிசன வேலையில் இறங்கவே கூடாது.

ஸ ஹ நாவவது | ஸ ஹ நெள புநக்து |
ஸ ஹ வீர்யம் கரவாவஹை | தேஜஸ்வி
நாவ வதீத மஸ்து | மா வித்விஷா வஹை |
ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி :||


இதுவே மந்திரம். அறிவை நாடும் மாணுக்கனும் ஆசானும் ஓத உட்காரும் பொழுது சொல்லும் கடவுள் வணக்க மொழிகள். ''மா வித் விஷா வஹை'' என்ருல் ''என் உள்ளத்தில் துவேஷம் இருக்கக் கூடாது. ஆண்டவனே!'' என்று பகவானை வேண்டிக் கொள்வது. துவேஷமானது அறிவுக்கும் உண்மை மொழிக்கும் பெரும் பகை. ஆகையால் எக்காரணத்திஞலாவது மனத்தில் பொருமையோ துவேஷமோ இருந்தால் விமரிசனம் செய்வதற்கு அது தடை என்று அறிந்து பேசாமல் இருப்பது நல்லது. அவ்வித எண்ணங்கள் இல்லாத வேறு யாராவது விமரிசனம் எழுதட்டும் என்று இருந்து விட வேண்டும்.

கலை கலையாகவே இருக்கும் வரையில் அபாயமிருக்கவில்லை. யார் எது சொன்ஞலும் பண்டத்தின் அழகு தன் வேகத்தைச் செலுத்திக் கொண்டே போகும். உண்மைக்கு அபாய முண்டாகாது. ஆனுல் கலையுடன் பணமும் வந்து கூடிற்ருகில், உடனே பொருமையும், துவேஷமும் தோன்றி விடுகின்றன. முதலில் நல்ல நண்பஞகத்தான் பணம் வந்து சேருகிறது. ஆனுல் முடிவில் அது கலைக்குப் பரம விரோதியாகி விடுகிறது. அதன் வேகத்திஞல் பொருமையும் துவேஷமும் மனிதர் உள்ளங்களில் விஷம் போல் ஏறிவிடுகின்றன. மனத்தில் பொருமை இருப்பின் ஒருவன் பாடுவதற்கு முன்னமேயே அவன் பாட்டு நன்ருக இராது என்று பலருக்குத் தோன்றி விடுகிறது. ஒருவன் நடிக்கு முன்னமேயே அவன் நடிப்பு சீராக நடக்காது என்று முன்கூட்டியே விமரிசனம் கூட எழுதிவிடத் தோன்றும்.

பண எண்ணம் நிறைந்த மனத்தில் கலை ரஸத்துக்கு இடமேது? பொருமையோ வெறுப்போ குடி கொண்ட உள்ளத்தில் உண்மைக்கு இடமில்லை. அந்த மனப்பான்மையில் விமரிசனம் என்பதே பொய்யாகும். விமரிசனம் எழுதுவது வியாபாரச் சூழ்ச்சியாக முடியும்.

விமரிசனம் எழுதுவது இலேசான காரியமல்ல. செடிகளுக்குக் களை எடுத்துத் தண்ணீர் ஊற்றும் வேலை. தமிழ் நாட்டில் உள்ள இளைஞர்கள் கலை வளர்ச்சியில் அளவிறந்த ஆசை வைத்து வருகிருர்கள். அவர்களுக்கு ஓரளவு உதவு மென்று இச் சிறு கட்டுரையை எழுதினேன்.

கல்கி, செப்டம்பர் 10, 1943



பச்சைக் குழந்தையும் பாரத ரத்தினமும்


★

''களங்க மில்லாத உள்ளம்தான் ஆஞல் எதிர்காலத்தில் காத்திருக்கிறதே கடன் சுமை!''

குழந்தையைக் கொஞ்சும்போது ராஜாஜியின் உள்ளத்தில் இந்த எண்ணமும் எழுந்திருக்குமோ?

படம் அனுப்பியவர்: **எஸ்.சண்முகவேலு**

★







பிரகாசமான ஒளி, நம்பகமுள்ள சக்தி-அது 'எவரெடி' யாகத்தான் இருக்கும்!


(ரயில் பிரயாணம் செய்யும்போது ராஜாஜி ஓர் அநுபவம் பெற்றார். அது சில பழைய நினைவுகளை ஊட்டியது. அந்த நினைவுகளை வைத்து ராஜாஜி வாழ்க்கைத் தத்துவம் ஒன்றை இந்தக் கட்டுரையில் விளக்குகிறார்!)

டிக்கெட்டில்லாப் பிரயாணம்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

அறுபத்தைந்து கலைகளுக்குள் ஒரு கலை யாரும் டிக்கெட்டில்லாத புகை வண்டிப் பிரயாணம். எப்போதாவது ஒரு தடவை நீங்கள் டிக்கெட்டு வாங்காமல் ரயில் ஏறி ஊர் போய்ச் சேரப் பாருங்கள்! அப்பொழுது இது சாதாரணமான காரியம் அல்ல, ஒரு தனிக் கலை என்பது தெரியும். முன் நாட்களில் புகை வண்டியும் டிக்கெட்டும் இல்லையாகையினால் கலைகளை அறுபத்து நான்காகவே வகுத்தார்கள். பிறவியோடு வந்த சாதுர்யமும், வெகு நுட்பமான உணர்ச்சிப் பயிற்சியும் வேண்டியிருப்பதே கலையின் இலக்கணம். ஆகையால் டிக்கெட்டு வாங்காமல் வெற்றிகரமாகப் பிரயாணம் செய்வதும் அதனுள் அடங்கும். ஒரு நாள், — பல வருஷங்களுக்கு முன் — கொச்சி ரயிலில் ஏறினேன். இரண்டாம் வகுப்பு 'கம்பார்ட்மெண்'டில் வேறு யாருமில்லை. சாதாரணமாக ஜனங்களுடன் கூடிப் பேசிக் காலம் கழிப்பதே பெரும்பாலோர் வழக்கமானாலும், ரயில் ஏறும்போது மட்டும் என்ன காரணமோ வேறு யாருமில்லாமல் தனியாக வண்டியில் இருப்பது ஒரு சுகமாகத் தோன்றுகிறது.

சாமான்களையெல்லாம் ஒழுங்காக ஸீட்டுக்குக் கீழே வைத்துப் படுக்கையை விரித்துச் சந்தோஷமாகப் படுத்தேன். அன்று ஐம்பது மைல் மோட்டார் பஸ்ஸில் அலைந்திருந்தபடியால் சில நிமிஷங்களுக்குள் நன்றாகத் தூங்கிப் போனேன். காலையில் எழுந்த போது அரக்கோணம். வழியில் வண்டிக்குள் வேறு யாரும் ஏறவில்லை என்று கண்டு மறுபடியும் திருப்தியடைந்தேன். தண்ணீர் அறைக்குள் சென்று காலைக் கடன்கள் கழித்துவிட்டுக் காப்பி இட்லி வாங்கிச் சாப்பிட்டு விட்டுப் புஸ்தகம் ஒன்றைத் திறந்து படிக்க ஆரம்பித்தேன். வண்டியும் புறப்பட்டது. கொஞ்ச நேரம் சென்றதும் கம்பார்ட்மெண்டில் ஏதோ ஒரு நிகழ்ச்சி நடப்பதாக ஓர் உணர்ச்சி தாக்கிற்று. திரும்பிப் பார்த்தேன். ஸீட்டின் கீழ் வைத்திருந்த என் பெட்டிக்கு மேற்புறம் மெதுவாக ஒரு தலை வெளிப்பட்டது. யாருமில்லாத வண்டியில் இவ்வாறு ஒரு சிரோதயமாவதைப் பார்த்துத் திடுக்கிட்டேன்.



பிறகு அது முழு மனித சரீரமாக என் முன் நின்றது. பிசாசு பயம் போய் மானிட பயம் உண்டாயிற்று.

அவ்வளவாக நான் கொலைப் பிசாசுக் கதைகள் படிக்கும் வழக்கம் இல்லை. சினிமாவுக்குப் போவதுமில்லை. ஆயினும் எப்போதோ நாற்பது வருஷங்களுக்குமுன் துப்பறியும் கதைகள் படித்ததின் பயனாக இருக்க வேண்டும். ஒரு பெரிய கொலைக்குத் தயாரானேன். ஆள் கதவண்டை நின்று கொண்டு ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். இருபத்தெட்டு வயதிருக்கும். ஒரு வெள்ளை ஜிப்பா. பொத்தான் போட வேண்டியது. ஆனால் பொத்தான் இல்லை. இடுப்பில் ஒரு வெள்ளைத் துணி அடைவளைஞ்சானாகக் கட்டியிருந்தான். மோவாய்க்கட்டை அகன்று பருத்திருந்தது.

''யார் நீ?'' என்றதற்கு மலையாளத் தமிழில் பதில் சொன்னான்.

''இறங்கி விடுகிறேன்'' என்றான்.

''எங்கே ஏறினாய்?'' என்று அதிகாரமாகக் கேட்டேன்.

''அந்த ஆபீசு அறியானில்ல'' என்றான். பிறகு அவன் சொன்னதில் இரவு சுமார் மூன்று மணிக்கு இவன் வண்டிக்குள் ஏறி ஸீட்டுக்குக் கீழே பெட்டிக்குப் பின்புறமாக ஒளிந்து கொண்டு வந்ததாகத் தெரிந்தது.

அப்போதுதான் என் பணப்பை ஞாபகத்துக்கு வந்தது. நான் தண்ணீர் அறைக்குள் போயிருந்த போது தலையணைக்குக் கீழ் வைத்திருந்த பணப் பையை இவன் எடுக்காமல் விட்டதற்கு மனத்தில் நன்றி செலுத்தி அவனை ஒரு மூலையில் உட்காரச் சொன்னேன். அவன் உட்காரவில்லை. ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்துத் தந்திக் கம்பத்தில் குறிக்கப்பட்ட மைல் கணக்கைப் பார்த்துக் கொண்டான். ஆசாமி பயிற்சி அடைந்த கலைஞன் என்று தெரிந்து கொண்டேன். சென்னைக்கு வருவதற்கு முன்னாலேயே ஏதேனும் ஒரு ஸ்டேஷனில் இறங்க வேண்டும் என்பது இவன் கருத்து. ஆனால் ஸ்டேஷன்களில் நிற்காமலே வண்டி சென்றது. ஏதோ எதிர்


பாராத காரணமாக ஆவடி ஸ்டேஷனில் வண்டி நின்றது.

''இதற்கு மேல் சென்னைதான். இங்கே இறங்கிவிடு'' என்றேன். அவனும் மெதுவாகக் கதவைத் திறந்து இரண்டு பக்கமும் பார்த்தான். ஏதோ தடைப்பட்டது. மற்றொரு பக்கத்துக் கதவண்டை போய் அதையும் திறந்து முன்போல இரண்டு பக்கமும் பார்த்துவிட்டு மறுபடியும் திரும்பி வந்தான்.

'' இதுதான் உனக்கு அவகாசம். இதை விட்டால் சென்னைதான். இறங்கி விடு'' என்றேன்.

தைரியம் பண்ணிக் கொண்டு இறங்கினான். இறங்கிக் கதவை ஓசைப்படாமல் மெதுவாக மூடி வண்டி ஓரமாக நடந்தான். அப்போது அவன் முகமும் பாவமும் உடனே மாறிவிட்டன. நாடக மேடைக் கலைஞன்கூட இவ்வளவு சாமர்த்தியம் காட்ட முடியாது. மேல் வகுப்புப் பிரயாணிகளின் 'ஸர்வெண்டு' போல் எல்லா விதத்திலும் காட்டிக் கொண்டு, நடந்து போனான்.

இவன் இஷ்டப்பட்டிருந்தால் இரவில் என்னதான் செய்திருக்கக் கூடாது? கலைஞனுடைய இலக்கணங்களில் ஒன்று தன் கலையைத் தவிர வேறு தொழிலில் இறங்கமாட்டான். அவன் கதவு மூடிய நிதானத்திலும் வெளியில் நடந்து போகும் போது அவன் முகத்தை மாற்றிக் கொண்ட சாமர்த்தியத்தையும் பார்த்து மெச்சினேன். இவன் சினிமாவில் நடிக்கப் பிறந்தவன். இவ்வாறு வீணாகக் காலம் கழிக்கிறானே என்று எண்ணி வருத்தப்பட்டேன். இவனைப் பார்த்ததும் என் நண்பர் பாரிஸ்டர் குருசாமி அய்யர் நினைவு உண்டாயிற்று.



குருசாமி அய்யர் ஒரு காலத்தில் மிகவும் பிரசித்திபெற்ற பாரிஸ்டராக இருந்தார். இப்போது, பாவம், தொழிலிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார். அவர் ஒரு நாள் நான் ஏறிய வண்டியிலிருந்தார். இரண்டாம் வகுப்புத்தான். அப்பொழுதே இவர் வக்கீல் தொழிலில் அக்கறை குறைந்து போய் வியாபாரத்தில் இறங்கியிருந்தார். பணம் வைத்தவர்களிடம் போய் உபயோகமற்ற கம்பெனிகளுக்குப் பங்கு சேர்க்கும் வேலையில் காலம் கழித்து வந்தார். இவர் எடுத்துக் கொண்ட கம்பெனிகள் எல்லாம் முதல் பணம் என்னவாயிற்று என்று தெரியாமல் கலைந்து வந்தன. இவரிடம் பொதுவாக எல்லாருக்கும் நம்பிக்கை போய்விட்டது. ஆயினும் இவர் மீசையையும் அகன்ற நெற்றியையும் பருத்திருந்த தொப்பையையும் பார்த்து நண்பர்கள் இவரிடம் ஒருவித அன்பும் மதிப்பும் வைத்து வந்தார்கள். ''ரொம்பக் கஷ்டத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறேன், ஐந்நூறு ரூபாய் கொடுத்தால் மிஞ்சுவேன்'' என்பார். ஐந்நூறு ரூபாய் இல்லாமற் போனாலும் 'ஐயோ பாவம்' என்று இருபத்தைந்து ரூபாயாவது கொடுத்து அனுப்புவார்கள். இவ்வாறு குருசாமி அய்யருடைய வாழ்க்கை நடந்து வந்தது. ஒரு காலத்தில் மாதம் ஒன்றுக்கு இரண்டாயிரம் மூவாயிரம் சம்பாதித்தவர் என்பதை எண்ணி நானும் பரிதாபப்படுவதுண்டு.

இரவு நான்கு மணி, காட்டுப்பாடி ஸ்டேஷன். ஒரு டிக்கெட்டுச் சோதனைக்காரர் உள்ளே ஏறி என்னை எழுப்பி டிக்கெட்டு கேட்டார். ''இதென்ன, இரவில் எழுப்பும் வழக்கமில்லையே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?'' என்று சொல்லிக் கோபமாக என் டிக்கெட்டை எடுத்துக் காட்டினேன். மரியாதையற்றவர்களிடம் என்ன விவாதம் என்று மேற்கொண்டு அவரிடம் ஒன்றும் பேசாமல் இருந்துவிட்டேன். குருசாமி அய்யரை டிக்கெட்டு இன்ஸ்பெக்டர் எழுப்பப் பார்த்தார். ''ஸார், ஸார் !'' என்று கத்தினார். குருசாமி அய்யருக்கோ தூக்கம் தெளியவில்லை. எனக்கு இன்ஸ்பெக்டர் பேரில் கோபம் அதிகரித்தது.

'' ஏனையா, இப்படிச் செய்கிறீர் ?'' என்றேன்.

தன் வேலை தனக்குத் தெரியும் என்று பொருள்படும் பார்வை ஒன்று என் பக்கம் பார்த்துவிட்டு, இன்ஸ்பெக்டர், ''ஸார், ஸார் !'' என்று விடாமல் கூப்பாடு போட்டார்.

அவர் கடைசியில் எழுந்து ஒன்றும் பேசாமல் கதவைத் திறந்து மெதுவாகவும் கம்பீரமாகவும் கீழே இறங்கினார். அவர்களுக்குள் கொஞ்சம் நேரம் ஏதோ வாக்குவாதம் நடந்தது. இப்படி நடந்து கொண்டிருக்க ரயில் வண்டி புறப்பட்டது. வண்டி நகர்ந்ததும் பாரிஸ்டர் குருசாமி அய்யர், டிக்கெட்டு உத்தியோகஸ்தர் கன்னத்தில் பளீர் என்று ஓர் அறை அறைந்தார். அறைந்துவிட்டு வண்டியில் ஏறிக் கதவைப் படார் என்று மூடி, வெளிப் பிடியை ஒரு கையில் பத்திரமாக டிக்கெட்டு உத்தியோகஸ்தர் அந்தக் கதவைத் திறக்க முடியாதபடி பிடித்துக் கொண்டே ஜன்னல் வழியாகத் தலையை நீட்டி உத்தியோகஸ்தரை ஆங்கிலத்தில் ஆசீர்வாதம் செய்து கொண்டே

இருந்தார். கொஞ்ச தூரம் போனபின் வந்து படுக்கையில் பேசாமல் படுத்து விட்டார்.

சென்னை ஸ்டேஷனில் இருவரும் இறங்கினோம். கூலிக்காரர்கள் மூட்டைகளைத் தூக்கினார்கள். இவரைப் பார்க்க இவர் மகனும் ஒரு குமாஸ்தாவும் வந்தார்கள். அவர்கள் சாமான்களுடன் முன்னால் போனார்கள். இவர் கையை வீசிக் கொண்டு கம்பீரமாகப் பின்னால் சென்றார். எல்லாரும் டிக்கெட்டு எடுத்துக் கொடுத்த இடத்தில் இவர் ஏதொரு டிக்கெட்டும் எடுத்துக் கொடுத்ததை நான் காணவில்லை. அவருடைய தைரியமே அவருக்கு டிக்கெட்டு! வழியில் நின்ற சென்னை டிக்கெட்டு உத்தியோகஸ்தனை ஒரு புன்சிரிப்புச் சிரித்துக் கௌரவித்துவிட்டு வெளியேறினார்.

நான் வக்கீல் வேலை பார்த்து வந்த காலத்தில் அதே தொழிலில் ஈடுபட்ட ஒரு சகோதரர் இந்தக் கலையில் கைதேர்ந்தவர், நான் நேரில் பார்த்ததில்லை. நண்பர்கள் சொல்லத்தான் தெரியும்.

சேலத்திலிருந்து சங்ககிரிக்கு அவர் கோர்ட் வேலையாகப் போவார். ரயிலிலிருந்து இறங்கியதும் மடமட வென்று ஸ்டேஷன் மாஸ்டர் ஆபீசுக்குள் நுழைவார். உருமாலையும் பெரிய சொக்காயும் போட்டிருக்கும் ஆள் எங்கேயும் போகலாம், உட்காரலாம் என்ற வழக்கப்படி அங்கே நாற்காலியில் உட்காருவார். அங்கிருக்கும் துணை ஸ்டேஷன் மாஸ்டர் இன்னும் அங்கிருந்த சம்பளமில்லாமல் வேலை செய்யும் உத்தியோக அபேக்ஷகர் ஒருவர், இவர்களிடம் யோக க்ஷேமம் பேசிக் கொண்டு கொஞ்ச நேரம் கழிப்பார். இதற்குள் கூலி போர்ட்டர் இவருக்காக வெளியில் ஒரு குதிரை வண்டி பேசி அதில் இவருடைய பெட்டி படுக்கையை வைத்துவிட்டு அங்கேயே வண்டியண்டை காத்திருப்பான். வக்கீலும் சில நிமிஷங்கள் கழித்து ஸ்டேஷன் மாஸ்டரிடம் விடைபெற்றுக் கொண்டு ஆபீசுக்கென்று தனியாக இருந்த வெளிக் கதவைத் திறந்து கொண்டு புறப்பட்டுப் போய்க் குதிரை வண்டியில் ஏறுவார். ஸ்டேஷன் மாஸ்டர் ஆபீசிலிருந்தவர்கள் எண்ணுவார்கள், போர்ட்டரிடம் டிக்கெட்டு கொடுத்துத்தான் சாமான் வெளியேறி இருக்க வேண்டும் என்று. அங்கேயோ, எஜமானரிடம் டிக்கெட்டு இருப்பதாகக் கூறி போர்ட்டர் சாமான்களை எடுத்துக் கொண்டு போவதை டிக்கெட்டுப் பரிசோதகர் தடுக்காமல் விடுவார்.

இம்மாதிரி பல தடவைகள் நடந்தபின் ஒரு நாள், ''தங்களுடைய டிக்கெட்டு எங்கே?'' என்று உமேதுவார் குமாஸ்தா கேட்டார். ''அடடா! டிக்கெட்டு வாங்கவே மறந்து விட்டேன்'' என்று ஜேபியில் பணப் பையைத் துளாவினார்.

ஃ ஃ ஃ

இந்த மோசக் கதைகள் இப்போது என்னத்திற்கு?


சாஸ்திரத்தில் திருட்டு, பொய், மோசம் எல்லாம் பெரும் பாவமாகச் சொல்லப்படுகிறது. சாஸ்திரம் படியாத பாமரர்களுங்கூட இதையெல்லாம் பாவமாகவே பெரும்பாலும் கருதுகிறார்கள். ஒரு சிலர்தான் குடும்ப சம்ரக்ஷணைக்காகவோ, தம் வயிறு வளர்க்கவோ, வேறு வழி காணாமல் திருட்டு மோசங்களில் இறங்குகிறார்கள். இதில் வழக்கப்பட்டபின் கஷ்டப்பட்டுச் சம்பாதிப்பதைக் காட்டிலும் இதுவே சுகமான வழி என்று எண்ணி அபாயங்களையும் துன்பங்களையும் எப்படியோ தாண்டித் தப்பி மோசத் தொழிலை நடத்துகிறார்கள். ஆரம்பத்தில் ஒருவிதமாகவிருக்கும். பிறகு அதிலேயே மனம் சிக்கிக் கொண்டு விடமுடியாமல் போகும். சில பெரிய மனிதர்கள் ஆடம்பர வாழ்க்கைக்குப் பணம் போதாமல் திருடுவதிலும், மோசம் செய்வதிலும் இறங்கிவிடுகிறார்கள். திருடுவதில் அபாயங்கள் அதிகம். ஆகையால் பணக்காரர்கள் திருடுவதில்லை. மோசமும், பித்தலாட்டமும் அவர்கள் கையாளுவார்கள். ஜனங்களை ஏமாற்றுவதற்குப் பெரிய மனிதர்களுக்கு வசதிகள் அதிகமுண்டு. ஏழைகளுக்கு அவ்வளவு சௌகரியமில்லை. இதனால்தான் ஏழைகள் திருடியும், பணக்காரர்கள் மோசம் செய்தும் தொழிலை விபாகித்துக் கொண்டிருக்கிறார்கள். பொதுவாகப் பார்த்தால் இரண்டும் ஒன்றே. ஆனால் பிறவிக் குண வித்தியாசங்களுமுண்டு. பிறவிக் குணங்களுடன் வாலிபப் பருவத்தில் ஏற்படும் பயிற்சிப் பழக்கங்களும் சேர்ந்து கொள்வது உண்டு. சிலர் எவ்வளவு கஷ்டத்தினிடையிலும் திருடுவதும் மோசம் செய்வதும் இடையாது. சிலர் வெகு இலேசாக இரண்டிலொன்று பயின்று விடுகிறார்கள். இதற்கெல்லாம் நாம் கோபித்துக் கொள்ளக் கூடாது. மனிதன் ஏன் தவறான வழியில் செல்கிறான் என்பதின் உண்மையான காரணத்தை அடிக்கடி நினைவுக்குத் தந்து கொள்ள வேண்டும். தீய செயல்கள் செய்தவர்களைக் கண்டு சாந்தம் இழக்காமல் அவர்கள்பால் அன்பு பாராட்ட இது பயன்படும்.

தன்னைத் தான் அடக்கியாளாமல் எண்ணங்கள் போனபடி விட்டுவிட்டால், பிறப்புடன் வந்திருக்கும் கர்ம மூட்டையின் வேகம் வேலை செய்யும். குண ரூபமாக அது அனைவரையும் வேதனைப்படுத்துகிறது. அந்த சுபாவம் காரிய ரூபமாக வெளிப்படுகிறது. இதை ஒருவனிடம் கண்டு நாம் கோபிக்கலாமா? மற்றவர்கள் செயலைக் கண்டு வெறுப்படையும் போதெல்லாம், அவனவன் தன் குறைகளை நினைவுக்குத் தந்து கொள்ள வேண்டும். ''உன் மனம் சுத்தமாக இருக்கிறதா? உன் சுபாவம் உனக்குத் தெரியுமே! மற்றவர்களுக்கு வெளிப்படையாகாவிடினும் அது உள்ளே செய்யும் வேலையை நீ கண்டிருக்கிறாயே! அதை அடக்கினது உன் பாக்கியம். மற்றவர்கள் அந்தப் பாக்கியத்தை அடையாமற் போனதற்கு வருந்த வேண்டும். கோபம் வேண்டாம்'' என்று தனக்குள் எச்சரிக்கை செய்து கொள்ள வேண்டும். பாவம் செய்தான் என்று ஒருவனையும் நாம் துவேஷிக்கக் கூடாது. நாம் அந்தப் பாவம் செய்யவில்லை என்று கர்வப்படவும் கூடாது.

— கல்கி, செப்டம்பர் 20, 1943

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி



பூர்வகதை :

இன்றைக்கு 1070 ஆண்டுகளுக்கு முன்னால் சோழ மகா சாம்ராஜ்யத்துக்கு விஜயாலயன் அடிகோலினான். அதற்கு நூறு ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாவது பராந்தக சோழரின் ஆட்சிக் காலத்தில் சோழப் பேரரசு தென்னாட்டில் இணையற்ற வலிமையுடன் விளங்கிற்று. இரண்டாவது பராந்தகருக்குச் சுந்தர சோழர் என்ற காரணப் பெயரும் உண்டு. சுமார் பத்து ஆண்டுகள் புகழுடன் அரசு புரிந்து சோழப் பேரரசை நாலாபுறமும் விஸ்தரித்த பிறகு சுந்தர சோழர் பாரிச நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையானார். அவருடைய மூத்த புதல்வன் ஆதித்த கரிகாலன் காஞ்சியில் அவருடைய பிரதிநிதியாகவும் வடதிசைப் படையின் மாதண்டநாயகன், அதாவது பிரதம சேனாதிபதியாகவும் இருந்தான். கடைசிப் புதல்வன் அருள்மொழி வர்மன் (பிற்காலத்தில் ராஜ ராஜன் என்று புகழ் பெற்றவன்) இலங்கைத் தீவில் போர் புரிந்து கொண்டிருந்தான். இருவருக்கும் நடுவில் பிறந்த சரித்திரப் பிரசித்திபெற்ற குந்தவை தேவி மற்ற அந்தப்புர மாதருடன் குடந்தைக்கு அருகில் இருந்த பழையாறை நகரில் இருந்தாள்.

விஜயாலய சோழன் காலத்திலிருந்து சோழர்களுக்கு உறுதுணைவர்களாக இருந்து வந்தவர்கள் பழுவூர்ச் சிற்றரசர்களாகிய பழுவேட்டரையர் வம்சத்தினர். அச்சமயம் அண்ணன் -- தம்பிகளாகிய இரு பழுவேட்டரையர்கள் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். பெரிய பழுவேட்டரையர் தனாதிகாரி, தானிய பண்டார நாயகர், இறை விதிக்கும் தேவர் ஆகிய மிக முக்கிய பதவிகளை வகித்து வந்தார். சின்னப் பழுவேட்டரையராகிய காலாந்தககண்டர் தஞ்சைக் கோட்டையின் தளபதியாக இருந்து சுந்தர சோழரின் பாதுகாப்புக்குப் பொறுப்பு வகித்தார்.

பெரிய பழுவேட்டரையர் அறுபது வயதுக்குமேல் நந்தினி என்னும் பூர்வோத்தரம் அறியாத அழகியை மணந்தார். அது முதல் அவருடைய மனம் மாறத் தொடங்கியது. சுந்தர சோழருக்குப் பிறகு அவருடைய புதல்வர்கள் இருவரும் பட்டத்துக்கு வரக்கூடாது என்றும், சுந்தர சோழரின் பெரிய தந்தையின் புதல்வனாகிய மதுராந்தகனை பட்டத்துக்கு வரவேண்டும் என்றும் தீர்மானித்தார். இதற்குச் சோழ சாம்ராஜ்யத்துப் பெரிய தளபதிகள், பிரமுகர்கள், சிற்றரசர்கள் முதலியோரின் ஆதரவைத் தேடி, பெரும்பாலும் வெற்றி பெற்றார்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் பழைய வாணர்குலத்தைச் சேர்ந்த வல்லவரையன் வந்தியத்தேவன் என்னும் நம் கதாநாயகன் காஞ்சியிலிருந்து தஞ்சைபுரிக்குப் பிரயாணமானான். ஆதித்த கரிகாலனிடமிருந்து அவனுடைய தந்தைக்கும் தங்கைக்கும் ஓலைகள் கொண்டு போனான். வழியில் வீரநாராயண ஏரிக் கரையில் சம்புவரையர் மாளிகையில் ஒரு நாள் இரவு தங்கினான். சம்புவரையரின் புதல்வன் கந்தமாறன் வந்தியத்தேவனுடைய நண்பன். சம்புவரையரின் கோட்டை மாளிகையில் பழுவேட்டரையரும் மற்றும் பல பிரமுகர்களும் சுந்தர சோழரின் புதல்வர்களுக்கு எதிராகச் செய்த சதியைப் பற்றி அறிந்து கொண்டான்.

அங்கே அவனுக்கு அறிமுகமான ஆழ்வார்க்கடியான் என்னும் வீர வைஷ்ணவனும் மேற்படி சதியாலோசனையைப் பற்றித் தெரிந்து கொண்டான். அது மட்டுமின்றி, திருப்புறம்பயம் பள்ளிப் படைக்கருகில் நள்ளிரவில் நடந்த கொலைகாரச் சதியைப் பற்றியும் ஆழ்வார்க்கடியான் தற்செயலாகத் தெரிந்து கொள்ள நேர்ந்தது.

வந்தியத் தேவன் குடந்தை ஜோசியர் வீட்டிலும் அரசலாற்றங் கரையிலும் குந்தவைத் தேவியைச் சந்தித்தான். ஆனால் அவளை இன்னாரென்று அவன் தெரிந்து கொள்ளவில்லை.

தஞ்சைக் கோட்டைக்கருகில் மூடுபல்லக்கில் சென்ற நந்தினி தேவியைப் பார்த்து அவளிடம் பழுவூர் முத்திரை மோதிரத்தைப் பெற்றான். அதன் உதவியினால் தஞ்சைக் கோட்டைக்குள் பிரவேசித்துச் சுந்தர சோழரிடம் ஓலையையும் கொடுத்தான். மேலும், அவருக்கு நேர இருந்த அபாயத்தைப் பற்றி எச்சரிக்க ஆரம்பிக்கையில் சின்னப் பழுவேட்டரையர் வந்துவிட்டார். அவன் பேரில் ஐயங்கொண்டு கண்காணிப்பில் வைத்தார். கண்காணிப்புச் செய்தவர்களை ஏமாற்றிவிட்டு வந்தியத்தேவன் பெரிய பழுவேட்டரையரின் தோட்ட மாளிகையில் லதா மண்டபத்தில் நந்தினி தேவியைக் கண்டான். நந்தினி அவனைத் தனது மோகவலையில் சிக்க வைக்க முயன்றதுடன், குந்தவைப் பிராட்டி மறு ஓலை கொடுத்தால், அதைத் தன்னிடம் கொண்டு வந்து காட்டவேண்டும் என்றும் கோரினாள்.

அதே சமயத்தில் திருப்புறம்பயம் பள்ளிப்படைச் சதியில் ஈடுபட்ட ரவிதாஸன் என்பவனும் நந்தினியைப் பார்க்க வந்தான். அவளிடம் இலங்கையில் செலாவணியாகக்கூடிய பொற்காசுகளைப் பெற்றுக் கொண்டான்.

ரவிதாஸனைக் கொண்டு வந்தியத்தேவனைக் கண்காணிப்பில் வைத்திருக்க நந்தினி விரும்பினாள். ஆனால் அதற்குள் அவன் மறைந்து விட்டான்.

இரவு ஒரு ஜாமத்துக்குப் பெரிய பழுவேட்டரையர் தஞ்சைக்குத் திரும்பி வந்தார். கோட்டைத் தளபதியாகிய சின்னப் பழுவேட்டரையரைப் பார்த்து அன்று நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றித் தெரிந்து கொண்டு தமது மாளிகைக்குத் திரும்பினார். சின்னப் பழுவேட்டரையரின் வார்த்தைகள் அவருக்குத் தம் இளம் மனைவி நந்தினியின் பேரில் ஐயங்களை எழுப்பியிருந்தன.

ஆனால் நந்தினியைப் பார்த்துப் பேசியபோது அந்த ஐயங்கள் எல்லாம் பறந்துவிட்டன. நந்தினி காலால் இட்ட பணியைத் தலையால் நிறைவேற்றும் மன நிலையை அடைந்தார். சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி பதவிக்குப் பெரிய பழுவேட்டரையரே உரியவர் என்ற எண்ணத்தை அவருடைய மனத்தில் நந்தினி எழுப்பி விட்டாள்.

முக்கிய சரித்திர பாத்திரங்களையும் தமிழ் நாட்டுச் சரித்திர நிகழ்ச்சிகளையும் அடிப்படையாகக் கொண்ட இப்பெருங் கதையை வாசகர்கள் இந்த இடத்திலிருந்தும் படிக்கத் தொடங்கலாம்.



நாற்பதாம் அத்தியாயம்

இருள் மாளிகை

காணமற்போன வந்தியத்தேவன் என்ன ஆனான் என்பதை இப்போது நாம் கவனிக்கலாம். இருளடைந்த மாளிகைக்கு அருகில் சென்று அவன் மறைந்து நின்றான் என்பதைப் பார்த்தோம் அல்லவா? மந்திரவாதியும் நந்தினியும் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதை அவன் முதலில் காது கொடுத்துக் கேட்க முயன்றான். ஆனால் அவர்களுடைய பேச்சு ஒன்றும் அவன் காதில் விழவில்லை. அதைக் கேட்டுத் தெரிந்து கொள்வதில் அவ்வளவாக அவனுக்குச் சிரத்தையும் இல்லை. நந்தினியிடம் பேசிக் கொண்டிருந்தபோது தன் அறிவு தன்னை விட்டு அகன்று ஒருவித போதை உணர்ச்சி உண்டாகியிருந்தது என்பதை இப்போது உணர்ந்தான். மறுபடியும் அவளைச் சந்திக்காமல் தப்பித்துக் கொண்டு போய் விட்டால் நல்லது. பழுவேட்டரையர்களிடம் அகப்பட்டுக் கொள்வதைக் காட்டிலும் இந்த இளைய ராணியிடம் அகப்பட்டுக் கொள்வதில் அபாயம் அதிகம் இருக்கிறது. அவர்கள் முன்னிலையில் தன் அறிவு நன்றாய் இயங்குகிறது; தோள் வலி ஓங்குகிறது; அரையில் உள்ள கத்தியில் எப்போதும் கை இருக்கிறது. யுக்தியினாலும் ஒரு கை பார்க்கலாம்; கத்தியினாலும் ஒரு கை பார்க்கலாம். ஆனால் இந்த மோகினியின் முன்னால் புத்தி மயங்கி விடுகிறது; கையும் கத்தி பிடிக்கும் சக்தியை இழந்து விடுகிறது. மீண்டும் இவள் முன்னால் சென்றால், என்ன நேருமோ என்னவோ? போதும் போதாததற்கு, மந்திரவாதி ஒருவனுடைய கூட்டுறவும் இவள் வைத்துக் கொண்டிருக்கிறாள்! இரண்டுபேரும் சேர்ந்து என்ன மாய மந்திரம் செய்வார்களோ? குந்தவைப் பிராட்டியிடம் தான் இவளுக்கு எவ்வளவு துவேஷம்? அந்த துவேஷம் இவளுடைய கண்களில் தீப்பொறியாக வெளிப்படுகிறதே! ஒருவேளை மனத்தை மாற்றிக்கொண்டு பழுவேட்டரையரிடம் தன்னைப் பிடித்துக் கொடுத்தாலும் கொடுத்துவிடலாம்! பெண்களின் சபல சித்தமும் சஞ்சல புத்தியும் பிரசித்தமானவை அல்லவா? ஆகையால் மீண்டும் இவளைச் சந்திக்காமல் தப்பித்துக்கொண்டு போய் விட்டால் நல்லது. ஆனால் எப்படி? தோட்டத்துக்குள் புகுந்துதான் வழி கண்டு பிடித்துப் போக வேண்டும்! மதில் ஏறிக் குதிக்க வேண்டும்! மதிலுக்கு வெளியில் தன்னைத் தேடி வந்தவர்கள் காத்திருந்தால்?.... வேறு ஏதேனும் உபாயம் இல்லையா? வந்தியத்தேவா! இத்தனை நாளும் உனக்கு உதவி செய்து வந்த அதிர்ஷ்டம் எங்கே போயிற்று? யோசி! யோசி! மூளையைச் செலுத்தி யோசி! கண்களையும் கொஞ்சம் உபயோகப்படுத்து! நாலா பக்கமும் பார்! இதோ இந்த இருள் அடைந்த மாளிகை இருக்கிறதே! இது ஏன் இருள் அடைந்திருக்கிறது? இதற்குள்ளே என்ன இருக்கும்? இதன் உள்ளே புகுந்தால் இதன் இன்னொரு வாசல் எங்கே கொண்டு போய் விடும்? எல்லாவற்றுக்கும் இதற்குள் புகுந்து பார்த்து வைக்கலாமா? இப்போது உபயோகப்படாவிட்டாலும் வேறு ஒரு சமயத்துக்கு உபயோகப்படலாம். யார் கண்டது?

ஆனால், இதற்குள்ளே எப்படிப் பிரவேசிப்பது? எவ்வளவு பெரிய, பிரம்மாண்டமான கதவு! இதற்கு எவ்வளவு பெரிய பூட்டு! அப்பப்பா! என்ன அழுத்தம்! என்ன கெட்டி! ஆ! இது என்ன? கதவுக்குள் ஒரு சிறிய கதவு போலிருக்கிறதே! கையை வைத்ததும் இந்தச் சிறிய கதவு திறந்து கொள்கிறதே! அதிர்ஷ்டம் என்றால், இது வல்லவா அதிர்ஷ்டம்! உள்ளே புகுந்து பார்க்க வேண்டியதுதான்!

பெரிய கதவுக்குள்ளே, பார்த்தால் தெரியாதபடி பொருத்தியிருந்த சிறிய கதவைத் திறந்து கொண்டு வந்தியத்தேவன் அந்த இருளடைந்த மாளிகைக்குள் புகுந்தான். உள்ளே காலடி வைத்ததும் அவனுக்குத் தோன்றிய முதல் எண்ணம், தான் அம்மாளிகைக்குள் புகுந்தது நந்தினிக்குத் தெரியக் கூடாது என்பதுதான். ஆகையால் சிறிய கதவைச் சாத்தினான். சாத்தியவுடன் உள்ளிருந்த இருள் இன்னும் பன்மடங்கு கனத்து விட்டதாகத் தோன்றியது. கதவு திறந்திருந்த ஒரு விநாடி நேரத்தில் சில பெரிய தூண்கள் நிற்பது தெரிந்தது. இப்போது அதுவும் தெரியவில்லை. இருட்டு என்றால், இப்படிப்பட்ட இருட்டைக் கற்பனை செய்யவும் முடியாது!.... சீச்சீ! வெளிச்சத்திலிருந்து இருட்டில் வந்திருப்பதால் முதலில் இப்படித்தான் இருக்கும். சற்றுப் போனால் இருட்டின் கனம் குறைந்து பொருள்கள் மங்கலாகக் கண்ணுக்குப் புலப்படும். இதை எத்தனையோ தடவை அனுபவத்தில் கண்டிருந்தும், இருளைக் கண்டு கலக்கம் ஏன்? சும்மா நிற்பதற்குப் பதில்

கொஞ்சம் நடந்து பார்க்கலாம். கையினால் தடவிக் கொண்டே போகலாம். முதலில் தெரிந்த தூண் இப்போது இல்லாமல் எங்கே போய் விடும்?.... சற்றுத் தூரம் குருடனைப் போல் கையை முன்னால் நீட்டிக் கொண்டு வந்தியத் தேவன் நடந்தான். அவன் நினைத்தபடியே ஒரு தூண் கைக்குத் தட்டுப்பட்டது! ஆ! எவ்வளவு பெரிய தூண்! கருங்கல் தூண்! இதைச் சுற்றி வளைத்துக் கொண்டு மேலே போய்ப் பார்க்கலாம். மேலும் கொஞ்ச தூரம் நடந்ததும் இன்னொரு தூண் கைக்கு அகப்பட்டது. ஆனால் இன்னமும் கண்ணுக்கு ஏதும் தெரிந்த பாடாயில்லை. திடீரென்று கண் குருடாகப் போய் விட்டதா, என்ன? இது என்ன பைத்தியக்கார எண்ணம்! கண் திடீர் என்று எப்படிக் குருடாகும்? இன்னும் கொஞ்சம் நடந்து பார்க்கலாம். மேலே தூண் ஒன்றும் கைக்கு அகப்படவில்லை! ஏதோ பள்ளத்தில் இறங்குவது போன்ற உணர்ச்சி உண்டாகிறது! ஆ! இதோ ஒரு படி! நல்ல வேளை, விழாமல் தப்பினேம்! இப்படியே இந்த இருட்டில் ஒன்றும் தெரியாமல் எத்தனை நேரம், எத்தனை தூரம் போவது?.... ஏதனாலோ வந்தியத்தேவன் மனத்தில் ஒரு பீதி உண்டாயிற்று. மேலே போகத் துணிவு ஏற்படவில்லை. வந்த வழியில் திரும்ப வேண்டியதுதான்! கதவைத் திறந்து கொண்டு லதா மண்டபத்துக்கே போக வேண்டியதுதான்! இந்தப் பயங்கர இருட்டில் உழலுவதைக் காட்டிலும், நந்தினியை மீண்டும் சந்தித்து அவளுடைய யோசனைப்படி நடப்பதே நல்லது. என்ன வாக்குறுதி கேட்டாலும் இப்போதைக்குக் கொடுத்து விட்டால், பிறகு சமயம் போல் பார்த்துக் கொள்கிறது! இவ்வாறு எண்ணி வந்தியத் தேவன் திரும்பினான். ஆனால் திரும்பிச் செல்லும் வழி வந்த வழியேதானா? எப்படிச் சொல்ல முடியும்!.... நடக்க நடக்கக் கைக்கு ஒன்றும் தட்டுப்படவில்லையே! அந்தக் கருங்கல் தூண்கள் எங்கே போயின! கதவைக் கண்டு பிடிக்க முடியாமலே போய் விடுமோ? இரவெல்லாம் இந்த இருளில் இப்படியே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்க நேரிடுமோ? கடவுளே! இது என்ன ஆபத்து!....

ஆகா! இது என்ன ஓசை! சடசடவென்ற ஓசை! எங்கேயிருந்து வருகிறது! வௌவால்கள் சிறகை அடித்துக் கொள்ளும் ஓசையாக இருக்க வேண்டும். அவ்வளவு இருட்டில் வௌவால்கள் நிறையக் குடிகொண்டிருப்பது இயல்புதானே? இல்லை! இது வௌவால் இறகின் சத்தம் மட்டும் இல்லை! காலடிச் சத்தம்! யாரோ நடக்கும் சத்தம்!... நடப்பது யார்? மனிதர்கள்தானா? அல்லது.... வந்தியத் தேவனுடைய தொண்டை உலர்ந்து போயிற்று! நா மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது! திடீரென்று யாரோ அவன் முகத்தில் இடித்தாற் போலிருந்தது. வந்தியத்தேவன் தன் சக்தியையெல்லாம் காட்டி ஒரு குத்து விட்டான்! குத்திய கை துண்டிக்கப் பட்டது போல வலித்தது. இன்னொரு கையினால் தொட்டுப் பார்த்தான். இருட்டில் கருங்கல் தூணின் பேரில் மோதிக் கொண்டதுமல்லாமல் அதைக் குத்தியதாகவும் தெரிந்து கொண்டான்! கையை அவ்வளவு 'விண், விண்' என்று வலித்திராவிட்டால் வந்தியத் தேவன் சிரித்தேயிருப்பான். ஆயினும் அதனால் அவனுடைய பயம் சிறிது அகன்றது. முழுதும் அகலவில்லை. காது கொடுத்துக் கேட்ட போது அந்தக் காலடிச் சத்தம் மேலும் மேலும் கேட்டது. ஒரு சமயம் எட்டிப் போவது போல இருந்தது! இன்னொரு சமயம் நெருங்கி வருவது போல் இருந்தது! வந்தியத்தேவன் நின்ற இடத்திலேயே நின்று உற்றுக் கேட்டான். அதே சமயத்தில் ஓசை வந்த திசையை நோக்கி அவனுடைய கண்களும் உற்றுப் பார்த்தன.


ஆ! வெளிச்சம்! அதோ வெளிச்சம்! கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாகி வருகிறது! நெருங்கியும் வருகிறது! வெளிச்சத்துடன் புகை! யாரோ தீவர்த்தியுடன் வருகிறார்கள். நந்தினிதான் தன்னைத் தேடிக் கொண்டு வருகிறாளோ, என்னவோ! அப்படியானால் நல்லது. வேறு யாராவதாயிருந்தால்? எல்லாவற்றுக்கும் சிறிது நேரம் ஒளிந்திருந்து பார்க்கலாம். ஒளிந்து நிற்பதற்கு இங்கே இடத்துக்குக் குறைவில்லை! தூரத்திலே வந்த தீவர்த்திக் கொழுந்து அது ஒரு விசாலமான மண்டபம் என்பதைக் காட்டியது. அதில் பெரிய பெரிய தூண்கள் இருந்தன. தூண்களில் பயங்கரமான பூதகணங்களின் வடிவங்கள் செதுக்கப்பட்டிருந்தன. கீழேயிருந்து ஒரு படிக்கட்டு மேலே வந்து அங்கே ஒரு வளைவு வளைந்து திரும்பி மேலேறிச் சென்றது. அந்தப் படிக்கட்டின் அடிப் பக்கத்திலிருந்துதான் தீவர்த்தி வெளிச்சம் வந்தது என்பதையும் அறிந்து கொண்டான். ஆகையால் வருவது நந்தினியாக இருக்க முடியாது.

'பாதாளச் சிறை' என்று தான் கேள்விப்பட்டது இந்த இருண்ட மாளிகையின் அடியிலேதான் இருக்கிறதோ? ஒரு வேளை அங்கிருந்துதான் யாரேனும் வருகிறார்களோ? பாதாளச் சிறையின் பயங்கரங்களைப் பற்றி வந்தியத்தேவன் அதிகம் கேள்விப்பட்டிருந்தபடியால், அந்த எண்ணம் அவனுடைய ரோமக் கால்களில் எல்லாம் வியர்வை துளிக்கும்படி செய்தது. அடுத்த கணம் ஒரு பெரிய தூணின் மறைவில் போய் நின்று கொண்டான். மகா தைரியசாலியான வந்தியத்தேவனுடைய கை கால்கள் எல்லாம் அச்சமயம் வெலவெலத்துப் போய் நடு நடுங்கின!

படிக்கட்டின் வழியாக மேலேறி மூன்று உருவங்கள் வந்தன. மூவரும் மனிதர்கள்தான். ஒருவன் கையில் தீவர்த்தியிருந்தது. இன்னொருவன் கையில் வேல் இருந்தது. நடுவில் வந்தவன் கையில் ஒன்றும் பிடித்திருக்கவில்லை. தீவர்த்தி வெளிச்சத்தில் அவர்கள் முகங்கள் புலப்பட்டதும் வந்தியத்தேவனுடைய பீதி அடியோடு அகன்றது. பீதியைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமான வியப்பு உண்டாயிற்று. அவர்களில் முன்னால் வந்தவன் வேறு யாரும் இல்லை; வந்தியத்தேவனுடைய பிரிய நண்பனாகிய கந்தமாறன்தான்! நடுவில் வந்த உருவம், முதலில், ஓர் அதிசயமான பிரமையை வந்தியத்தேவனுக்கு உண்டாக்கிற்று. பழுவூர் இளையராணியாகிய நந்தினிதான் வருகிறாள் என்று தோன்றியது. மறுகணத்திலேயே, அந்தப் பிரமை நீங்கியது. வருகிறவன் ஆண் மகன் என்று தெரிந்தது. கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் அரைகுறையாகத் தான் பார்த்த இளவரசர் மதுராந்தகத் தேவர் என்பதை அறிந்து கொண்டான். மூன்றாவதாக, கையில் தீவர்த்தியுடன் வந்தவனை வல்லவரையன் முன்னால் பார்த்ததில்லை. அவன் வாசற் காவலனாகவோ, ஊழியக்காரனாகவோ இருக்க வேண்டும்.



வந்தியத்தேவனுடைய மூளை அதிவேகமாக வேலை செய்தது. அவர்கள் அந்தப் பாதாள வழியில் படிக்கட்டு ஏறி வருவதன் மர்மம் என்னவென்பது வெகு விரைவில் அவனுக்கு விளங்கி விட்டது. பழுவூர் இளைய ராணி பல்லக்கில் ஏறி முதல் நாளே வந்து





விட்டான். பெரிய பழுவேட்டரையர் அன்றிரவு தஞ்சைக் கோட்டைக்குத் திரும்பிவிட்டார். இருவரும் கோட்டை வாசல் வழியாகப் பகிரங்கமாக வந்து விட்டார்கள். ஆனால், மதுராந்தகத் தேவர் வெளியில் போனதும் தெரியக் கூடாது; திரும்பி வருவதும் தெரியக் கூடாது. அதற்காக இந்த இரகசியச் சுரங்க வழியைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இந்த இருளடைந்த மாளிகையின் மர்மமே இதுதான் போலும்! கந்தமாறன் தன்னைக் கொள்ளிடக் கரையில் விட்டுப் பிரிந்த பின்னர், வேறு எங்கேயோ ஓரிடத்தில் பெரிய பழுவேட்டரையருடன் சேர்ந்திருக்கிறான். இந்த அந்தரங்க வேலைக்கு அவனைப் பழுவேட்டரையர் பயன் படுத்திக் கொண்டிருக்கிறார். மதுராந்தகத் தேவரைச் சுரங்க வழியில் அழைத்துச் செல்லத் துணையாக அனுப்பி வைத்திருக்கிறார். ஆகா! இப்போது நினைத்துப் பார்த்தால் ஞாபகம் வருகிறது. ''எனக்குக்கூடத் தஞ்சாவூரில் ஒரு வேலை இருக்கிறது. நானும் அங்கே வந்தாலும் வருவேன்!'' என்று கந்தமாறன் சொன்னான் அல்லவா?.... இப்போது இங்கே நிமிர் என்று தான் கந்தமாறன் முன்னால் போய் நின்றால், அவன் என்ன செய்வான்?... இந்த எண்ணம் தோன்றியவுடனேயே அதை வல்லவரையன் மாற்றிக் கொண்டான். இந்தச் சமயத்தில் கந்தமாறன் முன்னால் தான் எதிர்ப்பட்டால், அவன் செய்துள்ள சபதத்தை முன்னிட்டுத் தன்னைக் கொல்ல நேரிடும்; அல்லது தான் அவனைக் கொல்ல நேரும். அப்படிப் பட்ட தர்மசங்கடத்தை எதற்காக வருவித்துக் கொள்ள வேண்டும்?....

இதற்குள் அந்த மூவரும் படிக்கட்டில் மேலேறிப் போய் விட்டார்கள். வெளிச்சமும் வர வர மங்கத் தொடங்கியது. அவர்களைப் பின்தொடர்ந்து போகலாமா என்று வந்தியத்தேவன் ஒருகணம் நினைத்து, அதையும் உடனே மாற்றிக் கொண்டான். அவர்கள் கோட்டைத் தளபதி சின்னப் பழுவேட்டரையரின் அரண்மனைக்குப் போகிறார்கள் என்பது நிச்சயம். அங்கே தான் திரும்பிப் போவதில் என்ன பயன்? சிங்கத்தின் குகையிலிருந்து தப்பித்து வந்த பிறகு


நீலநிறப் பூவேலை
சரசரக்கக்
கோல வெண்மை
தவழும் வாயில்
தருவது
எஸ் ஆர் எம்
ஒன்றே.
இறகினும் இலேசான எஸ் ஆர் எம் வாயில்கள், தண்மை மயம். கண்நிறைந்தவண்ண நயம். அத்துடன் இணைசேரவே, பட்டுப் போன்ற 2x2 லான்களிலும் பாப்ளின்களிலும் ரவிக்கைகள், எத்தெரிந்த ஒளிவண்ணத்திலும் கிடைக்கும்.
ஃபுல் வாயில்களும் உண்டு, பகலெல்லாம் பரவசம், இரவெல்லாம் இன்ப நேசம். உடுத்திக் களித்திடுவீர் உடலாரா.
எழில்சிந்தும் இளஞ்சிவப்பு. செழிப்பான செவ்வூதா. அனல்கனிந்த ஆரஞ்சு. பண்ணிவளப் பச்சை. மங்களகரமான மஞ்சள்.
எஸ் ஆர் எம் லேப்பெட்டுகளையும் கேட்டுப்பெறுக:
ஸ்ரீ ராம் மில்ஸ் லிட்.
ஃபெர்குஸன் ரோடு, பம்பாய்-13.
ASP/SRM-12

மறுபடியும் போய்ச் சிங்கத்தின் வாயில் தலையைக் கொடுப்பது போலத்தான்! இனித் திரும்ப நந்தினி இருந்த லதா மண்டபத்துக்குப் போவதிலும் பயன் இல்லை. ஒரு வேளை பெரிய பழுவேட்டரையர் இதற்குள் அங்கு வந்திருக்கலாம். அதுவும் அபாயகரந்தான். வேறு என்ன செய்யலாம்?.... ஏன்? இந்தப் படிக்கட்டு வழியாக இறங்கிப் போய்ப் பார்த்தால் என்ன? இவ்விதம் எண்ணி நம் வாலிப வீரன் அந்தச் சுரங்கப் படிக்கட்டில் இறங்கினன்.

நாற்பத்தொன்றும் அத்தியாயம்

நிலவறை

இருண்ட சுரங்கப் பாதையில் வந்தியத் தேவன் காலை ஊன்றி வைத்து விழுந்து விடாமல் நடந்தான். படிகள் கொஞ்ச தூரம் கீழே இறங்கின. பிறகு சம நிலமா யிருந்தது. மறுபடியும் படிகள். மீண்டும் சம தரை. இரண்டு கைகளையும் எட்டி விரித்துப் பார்த்தான். சுவர் தட்டுப் படவில்லை. ஆகவே, அந்தச் சுரங்க வழி விசாலமானதாகவே இருக்க வேண்டும். மறுபடி சற்றுத் தூரம் போனதும் படிகள் மேலே ஏறின. வளைந்து செல்வதாகவும் தோன்றியது. அப்பப்பா! இத்தகைய கும்மிருட்டில் தட்டுத் தடுமாறி இன்னும் எத்தனை தூரம் நடக்க வேண்டுமோ தெரியவில்லையே!

ஆகா! இது என்ன? இருள் சிறிது குறைந்து வருகிறதே! மிக மிக மங்கலான ஒளி தோன்றுகிறதே! இந்த மங்கிய ஒளி எப்படி எங்கிருந்து வருகிறது? மேலே கூரையில் எங்கிருந்தாவது வரும் நிலவின் ஒளியா? அல்லது சுவர்களில் உள்ள பலகணி வழியாக வரும் ஒளியா? மறைவான இடத்தில் வைத்திருக்கும் விளக்கிலிருந்து பரவும் ஒளியா?....

இல்லை, இல்லை! இது என்ன அற்புதம்? நம் கண் முன்னுல் தெரியும் இந்தக் காட்சி மெய்யான காட்சி தானு? அல்லது நமது மூளை கலங்கியதால் ஏற்பட்ட தோற்றமா?

அது ஒரு விசாலமான மண்டபம். கல்லைக் குடைந்து எடுத்து அமைத்த நிலவறை மண்டபம். அதனுலேதான் தலையை இடித்து விடும்போல் அவ்வளவு தாழ்வாகச் சம மட்டமான மேல் தளம் அமைந்திருக்கிறது. அந்த நிலவறையில் குடிகொண்டுள்ள மங்கிய நிலவொளி வெளியிலிருந்து வருவது அல்ல; கூரை வழியாகவோ பலகணி வழியாகவோ வருவதும் அல்ல. அங்கங்கே அந்த நிலவறையில் கும்பல் கும்பலாகவும் சிலவிடங்களில் பரவலாகவும் கிடக்கும் பொருள்களிலிருந்து வருகிறது. ஆ! அப்படி நிலவொளி வீசும் அப்பொருள்கள் எத்தகைய பொருள்கள்! ஒரு மூலையில் மணி மகுடங்கள்; முத்தும் மணியும் வைரமும் பதித்த மகுடங்கள்; இன்னெரு பக்கத்தில் ஹாரங்கள்; முத்து வடங்கள்; நவரத்தின மாலைகள். அதோ அந்த வாயகன்ற அண்டாவில் என்ன? கடவுளே! அவ்வளவும் புன்னை மொட்டுக்களைப் போன்ற வெண் முத்துக்கள்! குண்டு குண்டான கெட்டி முத்துக்கள்! அதோ அந்தப் பானையில் பளபள வென்று மஞ்சள் வெயில் வீசும் பொற்காசுகள். இதோ இங்கே குவிந்து கிடப்பவை தங்கக் கட்டிகள். தஞ்சை அரண்மனையின் நிலவறைப் பொக்கிஷம் இதுதான் போலும்! தனதிகாரி பழுவேட்டரையரின் மாளிகையை யொட்டி இந்த இருள் மாளிகையும் அதில் இந்தப் பொக்கிஷ நிலவறையும் இருப்பதில் வியப்பில்லை யல்லவா? அம்மம்மா! இந்த நிலவறைக்குள் நாம் வந்து சேர்ந்தோமே? இது நம்முடைய பாக்கியமேயல்லவா? பாக்கிய லக்ஷ்மியும் அதிர்ஷ்ட தேவதையும் சேர்ந்தல்லவா நம்மை இங்கே கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள்? எப்படிப்பட்ட அதிசயமான, அபூர்வமான இரகசியத்தை, நம்முடைய முயற்சி ஒன்றும் இல்லாமலே நாம் தெரிந்து கொண்டோம்! இதை எப்படிப் பயன்படுத்துவது? பயன்படுத்துவது அப்புறம் இருக்கட்டும்; இங்கிருந்து போவதற்கே மனம் வராது போலிருக்கிறதே! இங்கேயே சுற்றிச் சுழன்று கொண்டிருக்கலாம் போலத் தோன்றுகிறதே! இங்கேயே இருந்தால் பசி, தாகம் தெரியாது! உறக்கம் அருகிலும் அணுகாது! நூறு வருஷ காலமாகச் சோழ நாட்டு வீர சைன்யங்கள் அடைந்த வெற்றிகளின் பலன்கள் எல்லாம் இங்கே இருக்கின்றன. நவநிதி என்று சொல்

வார்களே ; அவ்வளவும் இங்கே இருக்கிறது! குபேரனுடைய பொக்கிஷத்தையும் தோற்கடிக்கும் செல்வக் களஞ்சியம் இங்கே இருக்கிறது! இதை விட்டு எதற்காகப் போக வேண்டும் !

வந்தியத்தேவன் அந்த நிலவறையைச் சுற்றிச் சுற்றி வந்தான். ஒரு மூலையில் கிடந்த மணி மகுடங்களைத் தொட்டுப் பார்த்தான். இன்னொரு பக்கத்தில் கிடந்த ரத்தின ஹாரங்களைக் கையில் எடுத்துப் பார்த்தான். அவற்றைப் போட்டுவிட்டு இன்னொரு பக்கம் சென்று செப்புப் பானையில் நிறைந்திருந்த முத்துக்களில் கைகளை விட்டு அளைந்தான். வேறொரு பானையில் கையை விட்டுப் பொற்காசுகளை அள்ளிச் சொரிந்தான். ஒரு மூலையில் தரையில் பளபள வென்று ஏதோ பரவலாக ஜொலிப்பதைக் கண்டு அங்கே சென்றான். முதலில் என்ன வென்று தெரியவில்லை. பிறகு, குனிந்து உற்றுப் பார்த்தான். ஐயோ! ஆண்டவனே ! அது ஓர் எலும்புக் கூடு ! ஒரு காலத்தில் சதையும் இரத்தமும் தோலும் ரோமமும் மூக்கும் முகமும் கண்ணும் காதுமாக இருந்த மனித உடலின் எலும்புக்கூடு !

ஆ ! இந்த எலும்புக்கூடு அசைகிறதே ! உயிர் பெற்று எழுகிறதே ! பொற்காசுகளைப் போலவே சத்தமிடுகிறதே ! நமக்கு ஏதோ சேதி சொல்ல எழுந்திருப்பதாய்க் காண்கிறதே !.... வல்லவரையனுடைய உடம்பிலிருந்த ஒவ்வொரு ரோமமும் குத்திட்டு நின்றது. தனக்குப் பைத்தியந்தான் பிடித்துவிட்டது என்று நினைத்தான். சீச்சீ ! எலும்புக்கூடு எழுந்திருக்கவில்லை! அதற்குள்ளேயிருந்து ஒரு பெருச்சாளி ஓடி வருகிறது ! நம் கால் மீது விழுந்து ஓடுகிறது!... ஆம்; இப்போது பார்த்தால் எலும்புக்கூடு தரையிலேதான் விழுந்து கிடக்கிறது ! ஆனால் அது நமக்கு ஒரு சேதி சொல்லுகிறது என்பது உண்மை. ''ஓடிப் போ! இங்கே தாமதியாதே ! நானும் உன்னைப்போல் உடல் படைத்த மனிதனாயிருந்தேன். இங்கு வந்து அகப்பட்டுக் கொண்டேன். இங்கேயே மாண்டு மடிந்தேன்! இப்போது எலும்புக் கூடாகக் கிடக்கிறேன்! ஓடிப் போ!'' என்று அது நம்மை எச்சரிக்கிறது. இங்கிருந்து உடனே தப்பிச் சென்றோமோ, பிழைத்தோம். இல்லாவிட்டால் அதோ கதிதான்; அந்த மனிதனுக்கு ஏற்பட்ட கதிதான்.

வந்தியத்தேவன் அந்த நிலவறையிலிருந்து வெளியேற எண்ணினான். ஆனால் வெளியேறும் வழிதான் தெரியவில்லை. வந்த வழியைக் கண்டு பிடிக்க முடியவில்லை. நிலவறையின் ஓரமாக எங்கே போனாலும் இருள் என்னும் பூதம் வாயைப் பிளந்து கொண்டிருந்தது. கீழே பார்த்தால் அதலபாதாளப் படுகுழியாகத் தோன்றியது. ஏறி வந்த படிக்கட்டு எங்கேயோ ஓரிடத்தில் இருக்கத்தான் வேண்டும். அதைக் கண்டு பிடிக்க வந்தியத்தேவன் மேலும் முயன்றான். தேடித் தேடி அலைந்தான். அப்படி அலையும் போது ஓரிடத்தில் சுவர் ஓரமாக ஒரு குப்பல் தங்கக் காசுகள் கிடப்பதைக் கண்டான். அந்தக் குப்பலின் மீது ஏதோ வலை பின்னியது போலிருந்தது. உற்றுப் பார்த்த போது, அக் குவியலின் பேரில் சிலந்தி வலை கட்டியிருப்பதாகத் தெரிந்தது. சிலந்தியின் வலை அவனது சிந்தனையைத் தூண்டியது.


பெரியோர்கள் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசைகளைச் சிலந்தி வலைக்கு ஒப்பிட்டிருக்கிறார்கள். வலையை விரித்துக் கொண்டு சிலந்தி காத்திருக்கிறது. எங்கிருந்தோ பறந்து வந்து ஈ அதில் அகப்பட்டுக் கொள்கிறது. பிறகு சிறிது சிறிதாகச் சிலந்தி ஈயை இழுத்து விழுங்குகிறது. மூன்றுவித ஆசைகளும் அப்படித்தான். மனிதன் வழி தவறிச் சென்று அந்த ஆசை வலைகளில் விழுந்து அகப்பட்டுக் கொள்கிறான் ; அப்புறம் மீளுவதில்லை ! மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய மூன்று ஆசைகளின் இயல்பையும் அன்று ஒரே நாளில் நாம் அநுபவித்தாகிவிட்டது. நந்தினி என்னும் பழுவூர் இளையராணி தன்னுடைய வலையில் நம்மை அகப்படுத்தப் பார்த்தாள். பழைய வாணர் குல ராஜ்யத்தை அடையலாம் என்னும் மண்ணாசையும் காட்டினாள். கடைசியாக, இங்கே இந்தப் பயங்கரமான பொன்னாசைப் பூதம் நம்மை அடியோடு விழுங்கப் பார்க்கிறது. முதல் இரண்டிலிருந்தும் தப்பினோம். இந்த மூன்றாவது அபாயத்திலிருந்தும் தப்ப வேண்டும். நமக்கு எதற்காக இந்த வம்பெல்லாம்? இராஜ்யம் எதற்கு? செல்வம் எதற்கு? பெண்களின் கூட்டுறவுதான் எதற்காக ? வானத்தைக் கூரையாகப் பெற்ற அகண்டமான பூமியே நமது அரண்மனை ! '' யாதும் ஊரே யாவரும் கேளிர் '' என்று பண்டைத் தமிழ் நாட்டுப் பெரியோர்கள் சொல்லியிருக்


தாத்தாவுக்கு கண்ணுக்கினிய குளுமையான வெளிச்சம் தேவை

தாத்தா எப்பொழுது பார்த்தாலும் படித்துக் கொண்டே இருப்பார். அவருக்கு வயசாகி விட்டதே யொழிய, கண் பார்வை ரொம்ப நன்றாக இருக்கிறது. இரவில்கூட உட்கார்ந்து படிப்பார். ''கண்ணுக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டு எதற்காக இரவில் படிக்கிறீர்கள்?'' என்று கேட்டால், ''என் கண்களுக்கு ஒரு தொந்தரவும் இல்லையே! நான் பிலிப்ஸ் ஆர்ஜண்டா பல்பு வெளிச்சத்தில் அல்லவா படிக்கிறேன்'' என்று பளிச்சென்று கூறுகிறார். பிலிப்ஸ் ஆர்ஜண்டா பல்புகளில் ஒரு விசேஷமான வெள்ளைப் பூச்சு பூசப்பட்டிருக்கிறது. அதன் நன்மைகள்;

☐ கண் கூசாது ☐ இருண்ட நிழல் படியாது ☐ ஒரே சீரான வெளிச்சம் பரவும்

தாத்தாவுக்கு மட்டுமே அல்லாமல், எங்கள் குடும்பத்திலுள்ள அனைவருக்குமே பிலிப்ஸ் ஆர்ஜண்டா பல்புகள் குளுமையான வெளிச்சம் தந்து கண்களுக்கு இதமளிக்கின்றன. பிலிப்ஸ் ஆர்ஜண்டா பல்புகள் 40, 60 மற்றும் 100 வாட்களில் கிடைக்கின்றன. பிலிப்ஸ் கம்பெனியார், ஆர்ஜண்டாவைத் தவிர, பூச்சு தடவாத சாதாரண மாதிரி பல்புகள், பல்வேறு உபயோகத்துக்கான நானாவித பல்புகள், ஃப்ளூரஸண்ட் ட்யூப்கள், மற்றும் மெர்குரி வேபர் லாம்ப்கள் தயாரிக்கிறார்கள்.





பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

பிலிப்ஸ் ஆர்ஜண்டா

இதமான ஒளி தருவதில் இணையற்றது


PHILIPS


HTA-PHL-7270 R.

'ஆஸ்ப்ரோ' மட்டுமே மைக்ரோஃபைண்ட் செய்யப்படுகிறது

அதிவேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' செயல்புரியும் விதம்





ஒரு மாத்திரையில் உள்ள அணுக்கூறு எவ்வளவுக் கெவ்வளவு பெரியதாக உள்ளதோ அது உங்கள் உடலில் கலப்பதற்கு அவ்வளவுக் கவ்வளவு கோமாகிறது. நீங்கள் வலியிலிருந்து நிவாரணம் பெறவும் அவ்வளவுக்கவ்வளவு காக்க வேண்டியிருக்கிறது.

மைக்ரோஃபைன்ட் ஆக இருப்பதால் புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' வின் ஒவ்வொரு மாத்திரையிலும் சுமார் 15 கோடி நுண்ணிய அணுக்கூறுகள் அடங்கியுள்ளன —எனவே, அது மேலும் துரிதமாக இரண்டறக் கலந்து விரைவில் நிவாரணம் அளிக்கிறது.

கீழ்க் கண்டவைகளுக்கு புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்: • ஜலதோஷம் ...


கீழ்க் கண்டவைகளுக்கு புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்: கோவு • தலைவலி • உடல்வலி • ஃப்ளு • ஜுரவேகத்துடன் கூடிய ஜலதோஷம் • மூட்டுவலி • தொண்டைஅழற்சி • பல்வலி

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் அதி நவீனமான வலி நிவாரணியாகும்.

சாப்பிடும் அளவு:

வயது வந்தவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவையானால் மீண்டும் சாப்பிடவும்.

குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொல்படி



புதிய


மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'

அதி வேகமாக வலியை வெளியே இழுத்து விடுகிறது.

நிகோலஸ் தயாரிப்பு

கிறார்களே! எல்லா ஊரும் நம்முடைய ஊர்தான். எல்லா மனிதர்களும் நம்முடைய உறவினர்கள்தான். ஊர் ஊராகப் போக வேண்டியது; புது வெள்ளம் பொங்கி வரும் நதிகளையும், புதிய இலைகள் தளிர்த்து விளங்கும் மரங்களையும், பல வர்ணப் பட்சிகளையும், மான்களையும் மயில்களையும், மலைகளையும் மலைகளின் சிகரங்களையும், வானத்தையும் மேகத்தையும், கடலையும் கடல் அலைகளையும் பார்த்துக் களிக்க வேண்டியது; பசிக்கு உணவு கிடைக்கின்ற இடத்திலே உண்ண வேண்டியது; உறக்கம் வந்த இடத்தில் உறங்க வேண்டியது! ஆகா! இதுவல்லவா இன்ப வாழ்க்கை! எளிதில் கிடைக்கக்கூடிய இத்தகைய ஆனந்த வாழ்க்கையை விட்டுவிட்டு, தொல்லைகளும் சூழ்ச்சிகளும் ஆசைகளும் அபாயங்களும் நிறைந்த வாழ்க்கையை ஏன் மேற்கொள்ள வேண்டும்? எப்படியாவது இந்த நிலவறையை விட்டு இப்போது வெளியேறி விட்டால் போதும்; பிறகு இந்த இருள் மாளிகையையும் இந்தத் தஞ்சாவூர்க் கோட்டையையும் விட்டு வெளியேறிவிட வேண்டும். பின்னர், இத்தகைய தொல்லைகளில் என்றைக்கும் அகப்பட்டுக் கொள்ளவே கூடாது....

ஆகா! கதவு திறந்து மூடும் ஓசை!... மறுபடியும் காலடி ஓசை!... இன்றைய இரவின் அதிசயங்களுக்கு முடிவே கிடையாது போலும்! அதிசயங்களுக்கும் அளவில்லை! பயங்கரங்களுக்கும் எல்லையில்லை! இம்முறை வெகுதூரத்திலிருந்து அந்தக் காலடிச் சத்தங்கள் கேட்டன. இரண்டு பக்கங்களிலிருந்தும் வருவதாகத் தோன்றியது. வந்தியத்தேவன் காது கொடுத்துக் கவனமாகக் கேட்டான். பொக்கிஷ நிலவறைக்கு நாலு புறமும் சூழ்ந்திருந்த இருளைக் கிழித்துக் கொண்டு பார்ப்பவனைப் போல் உற்றுப் பார்த்தான். சிறிது நேரத்துக்கெல்லாம் அவன் எதிர்பார்த்தது போலவே அபூர்வமான காட்சியைக் கண்டான்.



கூத்து மேடையிலிருந்து மிகத் தொலைவிலே உட்கார்ந்திருப்பவனுக்கு மேடையில் தோன்றும் காட்சிகள் எப்படியிருக்குமோ அப்படியிருந்தது வந்தியத்தேவன் அப்போது கண்ட காட்சி. அவன் அச்சமயம் இருந்த இடத்துக்கு உயரமான ஓர் இடத்தில், தொலை தூரம் என்று தோன்றிய தூரத்தில், அது நடந்தது.

கூத்து மேடையின் ஒரு பக்கத்திலிருந்து ஒரு தீவர்த்தி வந்தது. இன்னொரு புறத்துப் பக்கம் படுதாவை நீக்கிக் கொண்டு மற்றொரு தீவர்த்தி வந்தது. தீவர்த்திகள் இரண்டும் நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருந்தன. ஒரு தீவர்த்தி வெளிச்சத்தில் இரு நெடிய கரிய உருவங்கள் தெரிந்தன. இன்னொரு தீவர்த்தியின் ஒளியில் மற்றும் இரு உருவங்கள் காணப்பட்டன. அவற்றில் ஒன்று நெடிய கம்பீரமான உருவம்; மற்றொன்று சிறிது குட்டையான மெல்லிய வடிவம். இரு தரப்பு உருவங்களும் ஒன்றையொன்று நெருங்கி வந்து கொண்டிருந்தன. வந்தியத்தேவன் மேலும் கண் விழிகள் பிதுங்கும்படி உற்றுப் பார்த்து அந்த உருவங்கள் யாருடையவை என்பதை ஒருவாறு தெரிந்து கொண்டான். இடது பக்கத்திலிருந்து வந்த இரு உருவங்கள் மதுராந்தகத் தேவரை அழைத்துச் சென்ற கந்தமாறனும் காவலனும்; வலப்புறத்திலிருந்து வந்த உருவங்கள் பெரிய பழுவேட்டரையரும் அவருடைய இளையராணி நந்தினி தேவியும்.

இந்த இரு கோஷ்டியாரும் சந்திக்கும்போது என்ன நடக்கும்? ஏதாவது விபரீதமாக நடக்குமா? அல்லது ஒருவருக்கொருவர் வழி விட்டு விட்டுச் சாவதானமாகப் போய் விடுவார்களா?...வந்தியத்தேவன் அந்தப் பரபரப்பில் மூச்சு விடுவதைக்கூட நிறுத்திக் கொண்டு அத்தனை கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இரு கோஷ்டியாரும் சந்தித்தார்கள். அவர்கள் தடுமாறித் தயங்கி நின்றதிலிருந்து இரு சாராருக்கும் அச்சந்திப்பு வியப்பையும் திகைப்பையும் அளித்திருக்க வேண்டுமென்று தோன்றியது. ஆனால் விபரீதம் ஒன்றும் நேர்ந்துவிடவில்லை. பழுவேட்டரையர் கந்தமாறனைப் பார்த்து ஏதோ கேட்டார். அதற்குக் கந்தமாறன் ஏதோ விடை சொன்னான். கேள்வியும் விடையும் என்னவென்பது வந்தியத்தேவனின் காதில் விழவில்லை. பிறகு, பழுவேட்டரையர் கையினால் சமிக்ஞை செய்து சுரங்க வழியின் படிக்கட்டைச்

சுட்டிக்காட்டினார். கந்தமாறன் அவரைப் பணிவுடன் வணங்கினான். வணங்கி விட்டுப் படிக்கட்டில் இறங்கினான். அவனுக்குப் பின் கையில் தீவர்த்தியுடன் வந்த காவலனைப் பார்த்துப் பழுவேட்டரையர் ஏதோ சமிக்ஞை செய்தார். அவனும் மறுமொழி சொல்லாமல் ஒரு கையினால் வாயைப் பொத்திக் கொண்டு வணங்கினான். பிறகு கந்தமாறனைத் தொடர்ந்து படிக்கட்டில் இறங்கினான். பழுவேட்டரையரும் இளையராணியும் இடப் பக்கம் நோக்கிச் சென்றார்கள்.

நிழலாட்டத்தையும் பொம்மலாட்டத்தையும் ஒத்த மேற்கூறிய நிகழ்ச்சிகள் எல்லாம் சில கண நேரத்தில் நடந்து விட்டன. இவ்வளவும் சுரங்க வழியில் இறங்கும் படிக்கட்டின் அருகில் நிகழ்ந்தன என்பதை வந்தியத்தேவன் கவனித்துக் கொண்டான். ஆகா! நாம் வழியில் எங்கும் நில்லாமல் இந்த நிலவறையில் வந்து சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று! நாம் மட்டும் அந்த இரு கோஷ்டிக்கும் நடுவில் அகப்பட்டுக் கொண்டிருந்தால் நம் கதி என்னவாயிருக்கும்? ஏதோ அந்த மட்டுக்கும் பிழைத்தோம். அடுத்தபடி என்ன? தப்பித்துக் கொள்ள வழி என்ன? கந்தமாறன் மதுராந்தகத் தேவரை அழைத்து வந்த சுரங்க வழியில் திரும்பிச் செல்கிறான் என்பதில் ஐயமில்லை. அந்த வழியிலிருந்து நாம் சிறிது விலகி இந்தப் பொக்கிஷ நிலவறைக்கு வந்திருக்க வேண்டும். அப்போது கந்தமாறன் போகும் வழியைத் தொடர்ந்து சென்றால், எப்படியும் வெளியேறும் வாசலைக் கண்டு கொள்ளலாம். பிறகு ஏதேனும் உபாயம் செய்து தப்பிக்கலாம். அப்படி அவசியம் நேர்ந்தால், கந்தமாறனிடமே உதவி கேட்கலாம். இல்லாவிட்டால் அவனையும் அந்தக் காவலனையும் ஒரு கை பார்த்துவிட்டுத் தப்பிச் செல்லலாம். எனவே, கந்தமாறனை இப்போது பின்தொடரலாம்.

முதலில், தீவர்த்தி வெளிச்சம் நிலவறைக்கு அருகில் வருவது போலிருந்தது. வந்தியத் தேவன் மூச்சைப் பிடித்துக் கொண்டு நின்றான். பிறகு அவ்வெளிச்சம் அகன்று செல்வது போலிருந்தது. அதற்குள் வந்தியத் தேவன் சுற்றுமுற்றும் பார்த்துத் தான் அந்த நிலவறைக்குள் பிரவேசித்த படிக்கட்டு எது என்பதை அறிந்து கொண்டான். அதன் வழியாகக் கீழே இறங்கி மீண்டும் மேலேறினான். தீவர்த்தி வெளிச்சத்தை விட்டுவிடாமல், அதிகமாகவும் நெருங்காமல், காலடி ஓசை கேட்காதபடி மெதுவாக அடி வைத்து நடந்து சென்றான். வளைந்தும் நெளிந்தும் சுற்றியும் சுழன்றும் ஏறியும் இறங்கியும் சென்ற அந்தச் சுரங்கப் பாதையில் நாமாக இருளில் நடந்து வழி கண்டுபிடித்துப் போவது எவ்வளவு அசாத்தியமான காரியம்! வாழ்க கந்தமாறன்! அவன் இப்போது தன்னையறியாமல் நமக்குச் செய்யும் உதவிக்கு எப்போது என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்!...

அதற்கு ஒரு சந்தர்ப்பம் அவ்வளவு சீக்கிரத்திலேயே கிடைக்கும் என்று வந்தியத்தேவன் எண்ணவேயில்லை!....

சுரங்கப் பாதையின் முடிவு வந்து விட்டது. எதிரில் ஒரு பெருஞ் சுவர் தெரிந்தது. அதில் ஒரு வாசலோ, கதவோ இருக்கும் என்று யாரும் கருத முடியாது. ஆயினும் இருக்கத்தான் வேண்டும்! சுரங்கப் பாதைக்கு ஓர் இரகசிய வாசல் இருந்தே தீர வேண்டுமல்லவா?

காவலன் தன் வலது கையிலிருந்த தீவர்த்தியை இடது கைக்கு மாற்றிக் கொள்கிறான். வலது கையினால் சுவரில் ஓரிடத்தில் கைவைத்து ஏதோ செய்கிறான். திருகாணியைத் திருகுவது போல் திருகுகிறான். சுவரில் மெல்லிய கோடுபோல் ஒரு பிளவு தோன்றுகிறது. அப்பிளவு வர வரப் பெரிதாகி வருகிறது. ஓர் ஆள் நுழையும்படியான பிளவாகிறது. காவலன் ஒரு கையினால் அதைச் சுட்டிக்காட்டுகிறான். கந்தமாறன் அவனிடம் ஏதோ சொல்லி விட்டுச் சுவரில் தோன்றிய பிளவில் ஒரு காலை வைக்கிறான். ஒரு கால் இன்னும் சுரங்கப் பாதையிலேதான் இருக்கிறது. இப்பொழுது அவனுடைய முதுகுப் பிரதேசம் முழுதும் புலனாகிறது.

ஆகா! இது என்ன? இந்தக் காவலன் என்ன செய்கிறான்? அரையில் செருகியிருந்த கூரிய வளைந்த சிறு கத்தியை எடுக்கிறானே? கடவுளே! கந்தமாறனுடைய முதுகில் ஓங்கிக் குத்தி விட்டானே? படுபாதகன்! ஒருவனுக்குப் பின்னாலிருந்து முதுகில் குத்தும் சண்டாளன்!....

வந்தியத்தேவன் தான் ஒதுங்கி நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து வெளிவந்தான். ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான்! அந்தச் சத்தத்தைக் கேட்டுக் காவலன் திரும்பினான்! தீவர்த்தியின் ஒளி வந்தியத்தேவனின் கோபாவேச முகத்தில் விழுந்தது! **(தொடரும்)**

'பவழவாய்ப் புன்னகைக்கே...பல்லாயிரம் நவமணிகள் உதிரும்,
உலகமெலாம் ஒளி சிதறும்; என் குழந்தையின்
வளர்ச்சிக்கே கோடி வாழ்த்துக்கள் பொழியும். என்
பாக்கியம், நான் தேர்ந்தெடுத்தது லீவர்ஸ் குழந்தை
உணவு. பாரத நாட்டிலுள்ள குழந்தைகளை
ஊட்டிவளர்ப்பதற்கென்றே உருவாக்கப்பட்டது.
இயற்கையாகவே அது அவனுக்குப்
பூரணமாகப் பொருந்தும் உணவு.



'வழக்கமான எல்லா வைட்டமின்களையும் தவிர,
வைட்டமின் B12 சத்தினையும்
என் குழந்தைக்குக்
கிடைக்கச்செய்கிறது
லீவர்ஸ் குழந்தை
உணவு. அதோடு
ஃபாலிக அமிலமும்
கூட. இரண்டுமே இரத்த
விருத்திக்கு மிகச் சிறந்தது என்கிறார்
என் டாக்டர். புரத சத்துக்களும் அதில் வளப்பமாக
உள்ளன. என் குழந்தை திடமாக வளருவதில் வியப்பென்ன. எல்லாவற்றிற்கும்
மேலாக, உகந்த ஊட்டப் பொருள்கள் யாவினையும் உசிதமான விகித
அளவுகளிலே அடங்கப்பெற்றது— எனவே, முழுமையான
'சரிவிகித' சத்துள்ள குழந்தையுணவு.

'ஆம். லீவர்ஸ் குழந்தை உணவு உண்மையிலேயே முழுநிறைவான
உணவு. குழந்தைக்கு மேற்கொண்டு நான் எதையுமே தரத் தேவையில்லை
...அன்பைத் தவிர. உங்கள் குழந்தைக்கும் இதுவே பரிபூரணமான
பாலுணவாக அமையும் என்பது திண்ணம்'.



பாரதநாட்டிலுள்ள
குழந்தைகளை
ஊட்டிவளர்ப்பதற்கென்றே
உருவாக்கப்பட்டது

லீவர்ஸ்

குழந்தை உணவு

பரிபூரணமான பாலுணவு

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

லின்டாஸ்-LF. 6-140 TM



சங்கீதம் பேசுகிறது

சென்ற மாதம் 24-ம் தேதி தில்லிக்கு வருகை தந்த செம்மங்குடி ஸ்ரீ சீனிவாசய்யருக்கு ஒரு பாராட்டு விழா நடத்தினார்கள், தியாகப்பிரும்ம சபையினர். ரஸிகப் பெருமக்கள் திரளாகக் கூடியிருந்தனர். அன்று காலை தான் வந்திறங்கிய செம்மங்குடி மெய் வருத்தம் பாராது வருகை தந்தார் விழாவுக்கு. ஷேக் சின்ன மௌலா சாஹிப் நாதஸ்வரம் வாசிக்க, பூர்ண கும்பத்துடன் வரவேற்கப்பட்ட செம்மங்குடிக்கு, டி. கே. ஜெயராமய்யரவர்கள் பொன்னுடை போர்த்தினார்கள்.

அதுமட்டுமல்ல.

கடைசியில் ஒரு சிறிய சொற் பொழிவாற்றினார். அது ஒரு சங்கீதக் கச்சேரியாகவே அமைந்து விட்டதென்பது மிகையாகாது.



மேலே: புது தில்லி தியாகபிரும்ம சபா தலைவர் திரு டி. கே. ஜயராமய்யர், சங்கீத கலாநிதி ராஜ்யசேவாநிரத திரு செம்மங்குடி ஆர். சீனிவாசய்யருக்குப் பொன்னுடை அணிவிக்கிறார். இடதுபுறம் சபா குழுவினர் திரு வைத்தியநாதன். கீழே: திரு செம்மங்குடி தமது அனுபவங்களைக் கூறுகிறார். புகைப்படம்: ஜனார்த்தனன்

உள்ளத்திலே கருத்தும், சத்தியத்தின் கனிவும் ஏற்பட்டு விட்டால், வாக்கு தானாக மலரும்.

''என்னுடைய சஷ்டியப்த பூர்த்தி விழா இன்னும் முடியற பாடில்லை. (சிரிப்பு) அது நெடுகப் போய்க் கொண்டே இருக்கிறது. சென்னையில் நண்பர் குழாம் என்னைக் கௌரவித்தது. சபாக்கள் மாறி மாறி விழாக் கொண்டாடின. இவ்வளவுக்கும் நான் அருகனல்ல. எல்லாம் என் குருநாதர்களைச் சேரும்.

''சங்கீத வித்தை உயரியதானாலும் சேர்க்கை தோஷத்தினால் அதற்கு மதிப்புக் குறைவு ஏற்பட்டு வந்தது நமக்கு நிதர்சனம். சீலம், பக்தி, ஆசாரம் சங்கீதத்துக்குப் புறம்பல்ல. இடைசித்தத்துடன் இருந்து இவைகளை அனுஷ்டித்தால் பொலிவு நிச்சயம். இந்த நியமங்களைக் கடைப்பிடித்து சங்கீதத் தொழிலுக்கே மதிப்பும் கௌரவமும் வாங்கித் தந்தவருள் என் சகா முசிறி

சுப்பிரமணிய அய்யர் முதன்மை ஸ்தானம் வகிக்கிறார். அவர்தான் எனக்கு முன்னோடி என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

''நான் சரளிவரிசை கற்றுக் கொள்ளவில்லை. குருநாதரிடம் நேரிடையான பாடாந்தரம் தான். வசதியான சாரீரத்தின் அழகைவிட, உழைத்து ஸ்புடம் போட்ட சாரீரம்தான் மெருகுள்ளது. ரஸித்து உழைத்து, உழைத்து உருவான சாரீரம் பழுதடையாது.'' — சுப்புடு



சமீபத்தில் பம்பாயிலுள்ள பாரதிய சங்கீத சொஸைட்டியின் ஆதரவில் செம்மங்குடி ஸ்ரீ சீனிவாசய்யர் அவர்களுக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. ஸ்ரீ ஜே. ஜே. பாபா அவர்கள் தலைமை தாங்கினார். செம்மங்குடி அவர்களின் சிறப்பான கச்சேரியும் நடந்தது. பம்பாயில் மிகப் பெரிய அளவில் டாடா ஸ்தாபனத்தினர் உருவாக்கி வரும் தேசிய அரங்கக் கலைகேந்திரத்தில் கர்நாடக சங்கீதத்தின் கௌரவப் பேராசிரியராக ஸ்ரீ செம்மங்குடி நியமனமாகி யிருப்பது குறிப்பிடத்தக்கது.

அண்ணலின் வாழ்விலே.

கடமையில் கண்!

1947 ஆம் ஆண்டு பட்னா ரயில் நிலையத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி. நோவாகாலி கோரத்தைத் துடைக்கச் சென்றிருந்த காந்தியடிகள், தம் கடமையைச் செவ்வனே ஆற்றி, அமைதியை நிலைநாட்டியபின்னர் தில்லிக்குத் திரும்பிக்கொண்டிருந்தார்.

எப்பொழுதும்போல மூன்றாம் வகுப்புப் பயணம் தான். ரயில் வண்டி பட்னா ஸ்டேஷனில் வந்து நின்றது. காந்தியடிகளைக் கண்டு பேச பீஹார் ராஜ்யத்தைச் சேர்ந்த மந்திரிகளும் பிரமுகர்களும் ரயில் நிலையத்துக்கு வந்திருந்தனர். வண்டி வந்து நின்றதுமே காந்தியடிகளின் பெட்டியைச் சூழ்ந்து கொண்டு பேசலாயினர்.

வண்டி புறப்படும் நேரம் வந்துவிட்டது. மந்திரிகளும் பிரமுகர்களும் பேச்சை முடிப்பதாகத் தெரியவில்லை. வண்டியை நேரத்தில் கிளப்பியாக வேண்டுமே என்று ஸ்டேஷன்மாஸ்டர் துடித்துக் கொண்டிருந்தார். ஆயினும் வண்டியை எப்படிக் கிளப்புவது? பெரிய மனிதர்கள் அல்லவா காந்தியடிகளோடு பேசிக் கொண்டிருந்தார்கள்? 'நாம் நம் கடமையைச் செய்தால், அவர்கள் கோபத்துக்கு ஆளாக நேருமே!' - ஸ்டேஷன்மாஸ்டருக்குப் பெருத்த யோசனையாகி விட்டது!



வண்டி புறப்பட வேண்டிய நேரமும் தாண்டிவிடவே, ஸ்டேஷன்மாஸ்டரின் முகத்தில் சுயாடவில்லை. பிளாட்பாரத்தில் இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்கும் ஒருமுறை நடை பயின்றார். அப்பொழுதும் பிரமுகர்களும் மந்திரிகளும் அசைந்து கொடுப்பதாயில்லை. கடைசியில் மனத்தில் துணிவை வரவழைத்துக் கொண்டு மெதுவாகக் காந்திஜியைத் தயக்கத்தோடு நெருங்கினார். 'கைகட்டி வாய் புதைத்து' என்பது போலப் பவ்வியமான குரலில், ''வண்டி புறப்பட நேரமாகி விட்டது. நான் 'ஸிக்னல்' கொடுக்கலாமா?'' என்றார்.

மந்திரிகள் விழித்துப் பார்த்தார்கள். சட்டென்று காந்தியடிகள், ''நீங்கள் இதுபோல ஒவ்வொரு பிரயாணியிடமும் அனுமதி பெறுவீர்களா? பக்கத்துப் பெட்டியில் உள்ளவர்களிடமெல்லாம் அனுமதி பெற்றுவிட்டீர்களா? அவர்கள் அனைவரும் அனுமதி அளித்துவிட்டால் எனக்கு என்ன ஆட்சேபணை இருக்க முடியும்?'' என்றார்.

''இல்லை..... வந்து....''

''என்ன? சொல்லுங்கள் தைரியமாக!''

''மந்திரிமார்கள் பேசிக் கொண்டிருக்கிறார்களே என்று யோசித்தேன்!'' ஸ்டேஷன் மாஸ்டர் தயக்கத்தோடு கூறினார்.

''மந்திரிமார்கள் பேசினால் என்ன? அவர்களைப் பெற்ற அப்பன்மார்கள் பேசினால் என்ன? உங்கள் கடமையை நீங்கள் ஆற்ற வேண்டியதுதானே?''

''மெய்தான். இருந்தாலும்....''

''இருந்தாலும் போனாலும் என்ற பேச்சுக்கே இடம் இல்லை. கடமையில் கண்ணாயிருப்பவர்கள் யாரிடமும் அஞ்சத் தேவையில்லை. நீங்கள் உங்கள் கடமையைச் செவ்வனே செய்வதைக் கண்டு மந்திரிமார்களும், உயர்ந்த அதிகாரிகளும் உங்கள் மீது கோபம் கொள்ளுவது உசிதமாகுமா? உங்கள் தைரியத்தைக் கண்டு மெச்ச வேண்டியதுதானே அவர்கள் கடமை? அதுவேதானே அவர்களுக்கும் பெருமை தரும்?''

ஸ்டேஷன் மாஸ்டருக்கு உபதேசம் செய்வதுபோலக் கூடியிருந்த மந்திரிகளுக்கும் காந்தியடிகள் நாசுக்காகக் கடமை உபதேசம் செய்தார்.

''பாபுஜி! பல ஆண்டுகளாக இதே ரயில்வே இலாகாவில்தான் நான் பணி புரிகிறேன். நான் ரிடையர் ஆகவேண்டிய நாட்களும் அதிக தூரத்தில் இல்லை. இருந்தாலும் நாங்கள் எங்கள் மேலதிகாரிகளின் அனுமதியின்றி, ஏதாவது காரியம் செய்தாலோ, ரயிலைக் கிளப்பினாலோ, நாங்கள் படும் அவஸ்தையை அந்த ஆண்டவன்தான் அறிவான். கடமைப் பாதையில் செல்லுமாறு உபதேசம் செய்வதோடு மட்டுமின்றிச் சொல்லாலும் செயலாலும் வாழ்ந்து காட்டுபவர் தாங்கள் ஒருவர்தான் எனக்குத் தெரிந்து! அதனால்தான் தேசத் தந்தை என்னும் ஸ்தானத்தில் தங்களை வைத்து மக்கள் போற்றுகிறார்கள்!'' காந்தியடிகளிடம் உபதேசம் பெறும் பாக்கியம்பெற்ற ஸ்டேஷன் மாஸ்டர் தம்மை மறந்து காந்திஜியைப் புகழத் தொடங்கி விட்டார்!

''அடடா! என் புகழ் பாடுவதில், உங்கள் கடமையை மறந்து நேரத்தை வீணாக்குகிறீர்களே!'' என்று குறுக்கிட்ட காந்திஜி மந்திரிமார்களைப் பொருள் பொதியப் பார்த்தார். 'உங்களுக்கும் அந்த உபதேசம்தான்' என்று சொல்லுவது போல் இருந்தது அந்தப் பார்வை.

- ஜ. வீ.

படித்துப் பாருங்கள்

வழிபாடும் சமயமும்

மனிதப்பிறவி உலகியலில் எத்தனை வளம் பெற்று உயர்ந்து விளங்கினாலும் முடிவில் எல்லாம் வல்ல இறைவனை அறிந்து அவனை வழிபட்டாலன்றிப் பிறவிப் பயனை அடைய முடியாது என்பது அனைத்துலக மதாசாரியார்களின் துணிபாகும். தெய்வம் ஒன்று; பெயர் வகையில் பல இருந்தாலும் இருப்பது ஒன்றுதான். யார் எந்த முறையில் எப்படி வழிபட்டாலும் அந்த வழிபாடு, அந்த ஒரு பரம்பொருளையே சாரும். எல்லா மதங்களும் கூறும் சாராம்சமான கருத்து இதுதான். இந்தப் பரந்த மனப்பான்மையை மனத்தில் ஏற்றுக் கொண்டுவிட்டால் பகையும், பொறாமையும், மனக்காழ்ப்பும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்.

இந்நூல் இக்கருத்தைத்தான் வலியுறுத்துகிறது. இந்து மதம், ஸொராஷ்ட்ரிய மதம், ஜைன மதம், பௌத்த மதம், யூத மதம், கிறிஸ்துவ மதம், இஸ்லாமிய மதம், சீக்கிய மதம் ஆகியவற்றைப் பற்றிய விவரங்கள் சுருக்கமாகவும், தெளிவாகவும் தரப்பட்டிருக்கின்றன. பாகவதம், ராமாயணம், மகாபாரதம் முதலிய இதிகாசங்களைச் சுருக்கமாக எடுத்து இயம்பியிருப்பது பெரிதும் பயனுள்ள சேவையாகும். மாணவர்களும், மற்றவர்களும் படித்துப் பயன் அடைய வேண்டிய நூல்.

ஆசிரியர்: எச். வைத்தியநாதன்; பிரசுரம்: தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னை—8; விலை: ரூ. 4 - 50.

தமிழ்நாடு

திரு ஏ. கே. செட்டியார் அவர்கள் தொகுத்த பிரயாணக் கட்டுரைகள் கொண்ட புத்தகம், ''தமிழ் நாடு'' என்ற பெயரில் வெளி வந்துள்ளது.

தமிழில் நல்ல பிரயாணக் கட்டுரைகள் எழுதி, ''உலகம் சுற்றும் தமிழன்'' என்று பெயர் எடுத்த திரு செட்டியார் அவர்கள்தான் தமிழில் பிரயாணக் கட்டுரை இலக்கியத்துக்கே முன்னோடி என்று பலரும் நினைத்திருக்க, ''அப்படியல்ல!'' என்று நிரூபிக்க முயல்வது போல் சென்ற எழுபது எண்பதாண்டுகளில் எழுதப்பட்டுள்ள பிரயாண அநுபவங்கள் பலவற்றை அரும்பாடுபட்டுச் சேகரித்து இப்புத்தகத்தில் அளித்திருக்கிறார். இவற்றில் வசனம், கவிதை இரண்டும் உண்டு.

நல்ல வைரத்தை நோட்டம் தெரிந்தவன் ஒரு தரம் பார்த்து அத்துடன் விடுவதில்லை. பல முறை திருப்பித் திருப்பிப் பார்ப்பான். ஒவ்வொரு பட்டையிலிருந்தும் வண்ணச் சிதறல்கள் ஏற்படுவதைக் கண்டு மகிழ்வான். அதைப் போல்தான் இந்தப் புத்தகமும். நேரம் கிடைத்தபோதெல்லாம் புரட்டிப் படித்துக் கொண்டிருந்தால் புதிய புதிய ரஸானுபவங்களைப் பெறலாம்.

முதல் தடவை படிக்கும் போது எழுபது எண்பதாண்டுகளுக்கு முன்பு தமிழ் நாடிருந்த நிலையைக் கண்டு வியப்போம். அடுத்த தடவை படிக்கும் போது அன்று கையாளப்பட்ட தமிழ் நடையையும் சில சொற்றொடர்களையும் உணர்ந்து ரசிப்போம். மற்றோர் தடவை படிக்கும் போது பாரதியாருக்கு இப்படியொரு அநுபவமா, நீதிபதி முத்துசாமி அய்யர் வாழ்வில் இப்படியொரு நிகழ்ச்சியா, தமிழ்த் தென்றல் திரு வி. க.வுக்கு இப்படியொரு இன்னலா, தமிழ்த் தாத்தா சாமிநாதய்யர் இப்படியொரு பிரயாணம் செய்தாரா என்றெல்லாம் அதிசயிப்போம்.

சென்னை நகரின் அந்த நாளைய வைபவத்தையும், 'நீலிங் பஜார்' என்ற பெயரை அ. மாதவையா அவர்கள் மாற்றியதையும் இன்னோரன்ன பலப் பல விஷயங்களையும் அறியும் போது வியக்கிறோம்.

இராமேசுவர யாத்திரையைப் பற்றி 1927 லேயே எழுதப்பட்ட ஒரு நகைச்சுவை மிக்க வாக்கியத்தைப் பாருங்கள்:

''ரயில் மார்க்கமாகச் செல்லும் காலத்து, யாத்ரிகர்கள் இராமேசுவரத்தைத் தரிசிப்பதற்கு முன்னர் புரோகிதர்களின் ஏஜண்டுகளையும் அவர்களுடைய பிராயச்சித்த விளம்பரத் தாள்களையும் சந்திக்க நேரிடும். அவர்கள் செய்யும் தொந்தரவு இரயில் வண்டியில் ஏன் வந்தீர்களெனப் பிடுங்கி எச்சரிக்கை செய்யும் மூட்டைப்பூச்சியின் தொந்தரவுக்குக் கொஞ்சமும் குறைந்ததன்று.''

வெளியிட்டோர்: ஏஷியன் டிராவல்ஸ்-(இந்தியா) பிரைவேட் லிமிடெட் 1, பட்டுலாஸ் ரோடு, சென்னை -- 2; விலை: ரூ. 10-00.

சித்திரத் திருவெம்பாவை

காதார் குழை ஆட, பைம் பூண் கலன் ஆட, கோதை குழல் ஆட, வண்டின் குழாம் ஆட, சீதப் புனல் ஆடிச் சிற்றம்பலம் பாடும் பாவையர்கள் நோற்கும் பாவை நோன்பைக் குறிக்கோளாகக் கொண்ட திருவெம்பாவையின் தீந்தமிழ்க் கவிதைகளைத் தமிழ் கூறும் நல்லுலகம் முழுதும் நன்கு அறியும். தித்திக்கும் திருவாசகத்தின் சுவை ததும்பும் பகுதி அது. சைவ சமயத்துக்கும், தமிழ் மொழிக்கும், பக்தி உணர்வுக்கும் கருவூலமாக விளங்குவது திருவெம்பாவை.

பொய்கையும், அதில் புனலாடும் பூவையர்களும், பாவை நோன்பு நோற்கும் பாவையர்களும், ஆதியும் அந்தமும் இல்லாத ஜோதி சொரூபனான இறைவனும், அனைத்துலக நாயகியும், இனிமையும், அழகும், பக்திச் சுவையும் சொட்டச் சொட்ட இந்நூலில் கவிதைச் சித்திரங்களாகவே மலர்ந்திருப்பதைக் காணலாம். ஓவியர் சித்திரலேகா அவர்கள் தம் கவினுறு கைவண்ணத்தால் திருவெம்பாவையின் இருபது பாடல்களையும் அதியற்புத வண்ண ஓவியங்களாகத் தீட்டித் தந்திருக்கிறார். ஒவ்வொரு சித்திரமும் தெய்விக எழிலுடன் திகழ்வது குறிப்பிடத் தக்கது.

பக்தி இலக்கியங்கள் பலவற்றுக்கும் விளக்கம் தந்து, தமிழுக்கு அருந் தொண்டு புரிந்து வந்திருக்கும் தமிழ்ப் பேரறிஞர் பி. ஸ்ரீ. அவர்கள் திருவெம்பாவைப் பாசுரங்களுக்கு அருமையானதொரு விளக்கவுரை தந்திருக்கிறார். மணிவாசகப் பெருந்தகையின் உள்ளொளி பெற்ற உட்கருத்துக்களைத் தெளிவாக விளங்கிக் கொள்ள அவ்விளக்கவுரை பெருதவியா யிருக்கிறது.

இந்நூல் மிகவும் நல்ல தாளில் அச்சிடப்பட்டு எழிலுருவமாய் விளங்குகிறது.

பிரசுரம்: சித்திரலேகா வெளியீடு, நெ. 2, மாசிலாமணி முதலியார் காலனி, சலிவன்ஸ் கார்டன், மயிலாப்பூர், சென்னை — 4: விலை: ரூ. 7-50.

ராஜாஜியின் கடிதங்கள்

[''மழையும் பிரார்த்தனையும்'' என்ற தலைப்பில் 'கல்கி' அவர்கள் எழுதிய தலையங்கத்தைப் படித்துவிட்டு ராஜாஜி எழுதிய கடிதம்.]

23–5–52

ரா. கி.க்கு ஆசிர்வாதம்.

பொன்னேபோல் எழுதியிருக்கிறீர்கள்.

இராஜகோபாலாச்சாரி

பின்குறிப்பு :

அகம்பாவம் அடைந்து விடாமல் ஆண்டவனுக்கு வந்தனை செலுத்தி மனத்தை அடக்கி நடந்துவோமாக!

புதுதில்லி
28–12–48

அன்புக்குரிய கிருஷ்ணமூர்த்திக்கு.

ஆசிர்வாதம்.

கடிதக் கொத்து வந்தது. காந்தி மலருக்கு நான் அனுப்பிய கட்டுரையைப் பற்றி, உங்கள் கோரிக்கை வேறு, நான் அனுப்பிய விஷயம் அல்ல என்பது உணர்ந்தேதான் அனுப்பினேன். உங்களுக்கு வேண்டியது 'ஞாபகக் குறிப்பு'. 'கதை' அல்லது வேறுவிதமான பளபளப்புச் சில்லறைக் காசு. இந்த சய பாத்திரம் அல்ல. ஆனால் என்ன செய்வேன்? சில்லறை கிடைக்க மாட்டேன் என்கிறது. ஈயச் சொம்புதான் இருக்கிறது. 'அதில் மோர் கெட்டுப் போகாது' என்று என் தாயார் சொல்ல நான் முதன்முதல் தெரிந்து கொண்ட சையன்ஸ்.

இராஜகோபாலாச்சாரி

புதுதில்லி
24–11–48

அன்புக்குரிய டி. கே. சி. அவர்களுக்கு.

நமஸ்காரம்.

தங்களுடைய கடிதம் (19–11–48) என்ன காரணமோ இன்றுதான் வந்தது. சில சமயம் தபால் இம்மாதிரி செய்கிறது. அதன் பேரில் குற்றமில்லை. ஒரு குறிப்பிட்ட காலத்தில் போடுவது எடுப்பது என்று இருப்பதால் சிற்சில சமயம் கெடு தவறித் தாமதம் ஏற்பட்டு விடுகிறது. சிலர் இதற்காக ரொம்ப கோபித்துக் கொள்ளுவதுமுண்டு. விஷயம் சரியாகச் சோதித்துப் பார்த்தால், குற்றம் ஏதும் இராது.

பல் விஷயம் நன்றாகத்தான் செய்யப்பட்டு வருகிறது. தேய்ந்த பற்களில் அடைப்பு அடைத்து உபயோகிக்க முடிகிறது. இல்லாத பற்களுக்குப் பதில் பொய்ப் பற்கள் வைத்துக் கட்டுவதுதான் அவ்வளவு சுகமில்லை! எல்லாமே சரியாக முடியுமா, முடியாது. அதற்காகக் குறை கூறக் கூடாது. பொய்ப் பற்களை எடுத்து வைத்துவிட்டு இருக்கும் பற்களைச் சரியாக உபயோகிக்கிறேன். இதுவே பெரிய உதவி.

ராஜா இறந்துவிட்டு, பள்ளிக்கூடத்துக்கு ரஜா கொடுத்ததும் குழந்தைகள் கொண்டாட்டம். வீட்டிலேயே இருந்த தம்பிக்குத் துயரம். இந்த விஷயத்தைத் தாங்கள் விளக்கி எழுதியிருக்கும் வேதாந்தக் கட்டுரையை ஏதோ ஒரு பத்திரிகையில் படித்தேன். மகிழ்ச்சி அடைந்தேன். வேதாந்த உண்மையை விளக்கும்போதும் வாத்தியார்களையும் பள்ளிக்கூடங்களையும் எப்படியோ இழுத்து ஒரு போடு போட்டால்தான் உங்களுக்குத் திருப்தி. உபாத்தியாயர்களுக்குள் சிறந்த உபாத்தியாயர் ஏனோ உங்களுக்கு இந்த இனத் துவேஷம்! நானும் கூட இல்லாமல் என்னவோ பேசி அநுபவிக்கிறீர்கள். எனக்கு ரொம்ப வருத்தமாகத்தான் இருக்கிறது. என்ன செய்வது?

அன்புடன்,

இராஜகோபாலாச்சாரி

புதுதில்லி
7–6–49

அன்புக்குரிய டி. கே. சி. அவர்களுக்கு.

நமஸ்காரம்.

அருமைக் கடிதம் வந்தது. உடம்பைக் கவனித்து வருவதாக எழுதியிருப்பது திருப்தி அளித்தது.

இவ்விடம் வந்து இவ்விடத்திய சூட்டைப் பொறுக்க முடியாமல் ராமசந்திரன் அங்கே இந்த அருமையான பிரதேசத்திற்கு மான நஷ்டம் உண்டாக்கி

வருவது சரியல்ல. புது மாப்பிள்ளைகளுக்கு வெளியூர் பிடிக்கவே பிடிக்காது. ஏன் ஆனந்தியை அழைத்து வரவில்லை என்று இதை அறிந்தே கேட்டேன். அதற்கு ஏதோ பதில் சொன்னான், ஞாபகமில்லை.

கல்கி இந்த இதழில் 'கர்நாடகம்' என். எஸ். கிருஷ்ணனுடைய 'நல்ல தம்பி' படத்தைப் பற்றி எழுதியிருக்கும் விமரிசனம் மிகவும் நன்றாயிருந்தது என்று கிருஷ்ணமூர்த்திக்குச் சொல்ல வேண்டும். "நல்ல டெக்னிக்கை விரும்புகிறவர்கள் வேறு படங்களைப் பார்க்கப் போங்கள். நல்ல லட்சியம், நல்ல நடிப்பு, நல்ல சிரிப்பு — இவற்றை விரும்புகிறவர்கள் நல்ல தம்பி படத்தைப் பாருங்கள்" என்று வெகு அழகாக முடிந்திருக்கிறது. இந்த நடை கிருஷ்ணமூர்த்திக்குப் பிறகு யார் எழுதப் போகிறார்கள்!

இராஜகோபாலாச்சாரி

பி. கு: இவ்விடம் இப்போதுதான் கொஞ்சம் வெயில் வேகம் ஆரம்பம்.

சென்ற 31-3-1966ல் கும்பம் ரயில் நிலையத்திலிருந்து மூன்று கல் தொலைவிலுள்ள லட்சுமிபுரம் என்னும் இயற்கைவளம் மிக்க அழகிய சிற்றூரில் நடந்த என் உறவினர் திருமணம் ஒன்றுக்குச் சென்றிருந்தேன். அவ்வூரிலுள்ள சில அன்பர்கள், அதே ஊரில்தான் அந்த நாளில் தலைவர் ராஜாஜியுடைய திருமணம் நடந்ததாகக் கூறி அந்தத் திருமணம் நடந்த சத்திரத்தையும் காட்டினர். அந்தச் சத்திரம் இப்போது சற்றுப் பழுதடைந்து மூடப்பட்டுக் கிடக்கிறது. தலைவரது ஒரு எளிய பக்தனென்ற முறையில் அந்தப் புனித இடத்தைத் தற்செயலாக வந்த இடத்தில் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தமைக்காக நான் பெரிதும் மகிழ்ந்தேன் என்பதைக் கூறத் தேவையில்லை! திருமணம் முடிந்து மறுநாள் சென்னை திரும்பி வரும் முதல் காரியமாக 'எக்ஸ்பிரஸ்' தபாலில் யான் பெற்ற பேற்றினைக் குறித்துத் தலைவருக்கு எழுதினேன். அவரிடமிருந்து நன்றி தெரிவித்து அடியேன் பெற்ற கடிதம் - தலைவரிடமிருந்து யான் பெற்ற முதல் கடிதம். - வி. ச. வாசுதேவன்.

சென்னை - 10

3-4-1966

ஆசீர்வாதம்.

உங்கள் கடிதம். 68 ஆண்டுகளுக்கு முன் நான் இருந்த இடத்தைப் பற்றி எழுதியதைப் படித்துத் தற்காலத்தைச் சில நிமிஷங்கள் மறந்தேன். நன்றி.

இராஜகோபாலாச்சாரி

இளமைக்கோர் விளக்கம்!

தத்துவங்கள் அலையெழுப்பும் ஆழி என்பேன்!
தாமரைகள் சிரித்திருக்கும் தடாக மென்பேன்!
முத்துறங்கும் சிப்பிக்கோர் உவமை யென்பேன்!
முதிர்கனிக்குள் உறங்குகின்ற வித்தே என்பேன்!!
இத்தரையின் சிறப்பெல்லாம் அவரே என்பேன்!
இளமைக்கோர் முதுமைதரும் விளக்க மென்பேன்!
புத்துலகின் நறுமலராய் நாளு மிங்கே
பொலிவேற்கும் ராஜாஜி வாழ்க வென்பேன்!!

ஆர்த்துவரும் எதிர்ப்பிடையே நேர்மைக் காக
அஞ்சாமல் துணிவோடு தனித்து நின்று
பார்க்கின்ற நெஞ்சுரத்தை வாழ்த்து கின்றேன்!
பல்லாண்டு பல்லாண்டு பாடு கின்றேன்!!
போர்க்குணத்தால் திமிறிவிட்ட உலகி னுக்கே
பொறுமையெனும் அருமருந்தை ஊட்டு கின்ற
நேர்மைக்கோர் முழுவிளக்க மாகி வாழும்
நிமித்திகராம் ராஜாஜி நீடு வாழ்க!!

கவிஞர் தேனன்



கவி ராட்சசன்

கோவி. மணிசேகரன்

பொல்லென விடிந்த பொழுதைக் கண்டு கொல்லெனக் குரல் கொடுத்துச் சிறகடித்தன புள்ளினங்கள்.

வைகறையின் ஞானக் கண்ணன் பூவரி கீதம் பாடிப் புறப்பட்டான். விண் விழிக்கக் கண்டு மண் விழித்து மகிழ்ந்தது.

மாசறு பொன்னி நதியாள் வலம்புரிச் சுழிப்புடன் காசறு விரைகளையும் கனிகளையும் தேனையும் வழி நெடுக அள்ளியவண்ணம் தமிழ் நடை பயின்று வளைய வந்து கொண்டிருந்தாள்.

கங்கை கொண்ட சோழ புரத்துக் கொலு மண்டபம் அன்று கலகலப்புடன் காணப்பட்டது. புதிய கவிஞன் ஒருவன் புதுமைக் காவியம் ஒன்றினை அரங்கேற்றப் போகிறானாம். பொழுதை உணவாக்கி, இரவை உறக்கமாக்கி, மன்னர் தரும் விருதைத் தமதாக்கி, பொருளை விழுக்கும் ஒருசில புலவர்களுக்கு அன்று உண்மையில் எறும்பில் காய்ச்சல் கண்டிருந்தது. தாம் செய்ய மறந்த — அல்லது முடியாத பணியை எங்கிருந்தோ வந்த எவனோ ஒருவன் செய்யப் போகிறானாமே!

அனுமதிக்கக் கூடாது என்று எவ்வளவு அரற்றிப் பார்த்தும் மன்னர் குலோத்துங்கர் மனத்தைக் கவர்ந்து விட்டானே அந்த இளைஞன். புலவர் பெருந்தகை ஒட்டக்கூத்தருக்கு இது இரண்டாம் முறையாகப் போடப்பட்ட இரட்டைத் தாழ்ப்பாள்! எல்லாம் பட்டத்தரசி தியாகவல்லிதேவியாரால் வந்த வினை! அனுமதித்தவள் அவள்தானே!

வெட்டுதற்கோர் ஒட்டக் கூத்தனில்லை என்ற மாப்புகழ் பெற்ற ஒட்டக் கூத்தர் அலங்காரம் முடித்து அரச சபைக்குப் புறப்பட ஆயத்தமானார்.

"நானும் ஓலக்க மண்டபம் வந்து அந்த அரங்கேற்றக் காட்சியைக் காணலாமா?"

அதுவரை அமைதியாக நின்று கவிஞர் பெருமானின் அலங்காரத்தைக் கவனித்துக் கொண்டிருந்த அலங்காரவல்லி, மெல்லக் குரல் கொடுத்தாள். அந்தக் குரலில் சகோட யாழின் மேல் நீள நரம்பு தெறித்தது.

உருட்டி மருட்டும் கண்களை, ஒருநிலைப் படுத்தி அலங்காரவல்லியைக் கவனித்தார் ஒட்டக்கூத்தர். "நீயும் வருகிறாயா அலங்கார வல்லி? தனியாகவா, அல்லது என்னுடனா?"

"ஏன்? தங்களுடன் வரத் தகுதியில்லையா எனக்கு?"

கூர்ந்து மட்டுமா கவனித்தார் கூத்தர்? அந்தக் கூடமே அதிரும்படியாகவும் கலகல வென்று பெருநகை புரிந்தார்.

"எனிந்த ஏளனச் சிரிப்பு?"

"அலங்காரவல்லி! உன்னுடன் இருப்பவன் இன்பத்துக்கு அடிமையான ஒட்டக்கூத்தன். அவை நோக்கிச் செல்பவனோ, கவிஞர்களை அடிமையாக்கும் கவி ராட்சஸன் ஒட்டக் கூத்தன்!"

அவள் சுநாதமாய்ச் சிரிப்பை உதிர்த்தாள்.

"உன் நகைப்புக்குக் காரணம்?"

"உங்கள் காவியத் திறனுக்கு அடிமையான சாதாரண அலங்காரவல்லியை நீங்கள் இங்கு பார்க்கிறீர்கள். ஆனால் உங்களுடன் வரவிருக்கும் அலங்காரவல்லியோ, அழகு ராட்சஸி! அவள் அழகுக்காகத் தவமிருக்கும் அரசர்கள் அனந்தம்! சொன்னவர் வாயினிக்கும்! கேட்டவர் செவி வியக்கும்! கண்டவர் கண் மயங்கும்! படித்து வருவது புலமையாகலாம்; ஆனால் இயற்கையாக அமைவது அழகு! இப்போது சொல்லுங்கள்; உங்களுடன் வரத் தகுதியுடையவள்தானே?"

"ராட்சஸி அழகாக இருப்பதில்லையே?"

"ராட்சஸன் மாகவியாக மாற முடியும் என்றால், பேரழகும் ஒரு ராட்சஸம் நிறைந்தது தான்!"

எப்படி வென்று விட்டாள் இந்த எழிலரசி! கூத்தரின் கூர்த்த மதியே கூனிக்

குறுகிவிட்டது. அவர் மலைத்துச் சிலைபோல் நின்றார்.

''பெருமானே! அடியானைப் பொறுத்தருளுங்கள். என்னுடலில் கவி ராட்சஸரின் குருதியோடுகிறது. அதனால்தான் விளையாட்டாகத் தங்களிடம் காவிய வாதம் புரிந்துவிட்டேன். நான் ஏன் உங்களுடன் வரப் போகிறேன்? போய் வாருங்கள்!''

அலங்காரவல்லி அமுதமாய்ச் சிரித்தாள். அந்த அமுதக் கனிப்பில் கூத்தரும் தம்மை மறந்து காவியநகை புரிந்தார்.

பொதுவாகச் சொல்லப் போனால் இருவருமே பொன்னுக்குச் சிரிப்பவர்கள்தாமே!

திருவோலக்கம் திரண்டு காணப்பட்டது.

பொன்னாலும் மணியாலும் அலங்கரிக்கப் பெற்ற அரச கட்டிலில், மாமன்னர் குலோத்துங்க சோழர், வீறார்ந்த கோலத்துடன் வீற்றிருந்தார். எதிரே புலமை சான்ற புலவர் குழு புடைசூழ அமர்ந்திருந்தது. நடுநாயகமாக அறிவின் செருக்கார்ந்த கோலத்துடன், தமிழ் நிறைந்த செம்மாப்பு நிமிரலுடன் அமர்ந்திருந்தார் கவிராட்சஸர் ஒட்டக்கூத்தர். அது கம்பர் அவையிலில்லாத காலம். அவர்தான் வருத்தம் தெளிய வடதிசை நோக்கிச் சென்று விட்டாரே! கூத்தர் இட்டதுதான் அப்போது ஆர்த்த புகழ் கொண்ட அருந் தமிழுக்குச் சட்டம்!

மங்கலக் கருவிகள் மகிழ்ச்சிக் குரல் எழுப்ப, அரங்கேற்றத்துக்கு வந்திருந்த புலவனை அழைத்து வந்தனர். வாழ்வுக்கு எலும்பைத் தந்து, வான்புகழ் தமிழுக்கு உயிரைத் தந்து கொண்டிருந்த அந்த ஏழைப் புலவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. முறைப்படி அவனைப் பற்றிய அறிமுகம் நடந்தது. புலவனின் வணக்கத்தை ஒலக்கம் ஏற்றது.

''தொண்டை மண்டலத்துத் தமிழ்வண்ணரே! உங்கள் இனம்?''

ஒட்டக்கூத்தரின் இந்தக் கேள்வி, குலோத்துங்க சோழ மாமன்னருக்கு என்னவோ போலிருந்தது. செங்குந்தர் வகுப்பைச் சார்ந்த ஒட்டக்கூத்தருக்குத்தான் எத்துணை சாதி வெறி...?

புலவன் புகன்றான்: ''தொழுத வேளாளன்!''

''எழுதிய நூலின் தலைப்பு?''

முரசு முழங்கியது. புலவன் தமிழ்வண்ணன் சொன்னான்: 'அமைதிக் காவியம்!'

கவிராட்சசர் ஒட்டக்கூத்தரின் கண்கள் நெற்றி மேட்டுக்கு ஏறுவானேன்? இயற்கையாகவே சினமும், பெருமையும் கொண்ட



ஒட்டக்கூத்தர். இந்த அரங்கேற்றத்தில் தம்முடைய பரந்த மனப்பான்மையைப் பல்லோர் வியக்கக் காட்ட வேண்டும் என்று தான் நேற்று வரை எண்ணி வந்தார். ஏனென்றால், எப்பேர்ப்பட்ட காவியங்களை யெல்லாம் ஏற்க மறுத்த கவி ராட்சஸர், போயும் போயும் இந்த இளைய — எளிய— வறிய கவிஞனுடைய காவியத்தைத்தானு ஏற்கப் போகிறார்?' என்று பலரும் பேசத் தொடங்கியதை அவர் கேள்விப்பட்டார். 'இந்த எண்ணத்தை, மாற்றிப் புதிய ஒட்டக்கூத்தனைக் காட்ட வேண்டும்!' என்று அவருடைய புலமை நெஞ்சம் முனகிக் கொண்டது.

ஆனால் அந்த எண்ணம் செயல்படத் தொடங்கியவிதம்....

புறப்படும் போதே அவரை வெகுவாக அலங்காரவல்லி சோதித்து விட்டாள் என்பது ஒருபுறமிருக்க, அவருடைய புலமையில் குத்திய முள்ளின் கூர்மைக்கான வேற்றுக் காரணமும் இருக்கத்தான் செய்தது. முள்ளால் குத்தப் பெற்ற அந்தப் புலமை நெஞ்சம் ஒரு முறை 'அமைதிக் காவியம்' என்று முனகிக் கொண்டது.

அரங்கேற்றம் ஆரம்பமானது.

வறுமையையே அதுவரை பரிசாகப் பெற்று வந்த வண்டமிழ்ப் புலவன் தமிழ் வண்ணன், வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வாய் திறந்தான். அந்த எலும்புக் கூட்டுக்குள்ளேயும் எத்துணை இனிமை வாய்ந்த சாரீரம் குடிகொண்டிருக்கிறது! ஆகா...!

குரலைக் கேட்டு வியந்தவர், காவியத்தின் குரலைக் கேட்டு மேலும் வியந்தனர். என்னே வியப்பு ! என்னே துணிவு !

எல்லாரையும் போல அவன் இறைவணக்கம் பாடவில்லை ; எல்லாரையும் போல் அவையடக்கமும் கூறவில்லை. அவையடக்கமின்றிப் பாடும் தகுதி ஒட்டக்கூத்தரன்றி வேறு யாருக்கும் இல்லையே ! இவன் யார் அப்படிப் பாட ? இவன் இறைவணக்கத்தையே நீக்கி விட்டானே....!

தேனிலே தோய்த்தெடுத்த பலாச்சுளை போலக் காவியம் அமைவு பெற்றிருந்தது. சந்தமும், நயமும் சிந்தையை மயக்கின ; பாப்புனைவிலும், யாப்பமைதியிலும் புதிய கோணங்கள்! எல்லாவற்றுக்கும் மேலாகக் காவியத்தின் மையக் கருத்து புதுமை நிரம்பியது: புரட்சி நிரம்பியது! இந்தக் கருத்துத்தானே கவிகேசரி ஒட்டக்கூத்தர் பெருமானுக்கு முள்ளாக அமைந்துவிட்டது!

அப்படியென்ன புதுமையும் புரட்சியும் கலந்த கருத்து என்கிறீர்களா ? அக்கால நோக்குப்படி அது மாபெரும் புரட்சிக் கருத்துத்தான். போர் என்பதைப் பெரும் நாகரிகமாகக் கருதிய காலத்தைச் சாடி, அதுவே அநாகரிகத்தின் தலைவாசல் என்று பாடத் தொடங்கினான் தமிழ்வண்ணன். உலகுக்கு அமைதி தேவை ; ஒற்றுமை தேவை; ஒரே நிறை தேவை என்று அழுத்தம் திருத்தமாகப் பாடினான். பரந்து கிடக்கும் ஏக உலக ஆட்சிதான் மனிதர்களை எலும்புக் கூடாக்காத வாழ்வுக்கு அழைத்துச் செல்லும்! எண்ணற்ற மதங்கள்; எத்தனையோ கொடி போட்ட ஆட்சி, தேவையற்ற நாடு பிடிக்கும் வெறி, மொழிப் போராட்டம் இவை யாவும் நீங்குமானால்....

'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்ற நிலை தலைதூக்கும். அப்போது ஏற்றத்தாழ்வான நிலை ஒழிந்து அமைதி நிலவும்!

எத்துணை துணிவாகப் பாடுகின்றான் இந்த இளங்கவிஞன் !

வருங்கால மனித இனத்துக்கு வாழ்த்துத் தெரிவிப்பதுடன் காவியம் முற்றுப்பெற்றது. பின்னர் விவாதம் தொடங்க வேண்டும்.

கவிராட்சஸர் ஒட்டக் கூத்தரின் நெஞ்சு கனன்று கொண்டிருந்தது. கம்பராலும், புகழேந்தியாலும் கனன்றது போதாதென்று இந்தச் சிறு புலவனாலும் கருட வேண்டுமா ? மனம் என்னவோ அந்த இளங்கவிஞனுடைய அந்தத் திறம் வாய்ந்த கற்பனையைப் பாராட்டத்தான் செய்தது. தவம் செய்து சொற்களைப் பெற்று அவற்றைக் கழைக்கூத்தாடச் செய்த தமிழ்வண்ணனைக் கண்டு அஞ்சவும் செய்தார் ! ஆயினும் மறுத்துவிட வேண்டும் என்கிற மாபாவமான எண்ணம் உதயமாவானேன் ?

சூழ்ந்திருந்த புலவர்கள் தத்தம் கருத்தினை வழங்கினர். பெரும்பான்மையானவர்கள் நெஞ்சுக்குத் திரை போட்டுத்தான் மாறுபட்ட கருத்தினை வழங்கினர். ஒட்டக்கூத்தரே இப்படி வழங்கப் போகிறார் என்றால், இவர்களைச் சொல்லிக் குற்றமில்லை.

வறிய புலவனுடைய தலையெழுத்தை ஒட்டக்கூத்தர் கணித்து விட்டால், அதுவே முடிவானது.

''அமைதியைப் பற்றிப் பேசும் இந்தக் காவியத்தில், காவிய அமைதியைக் காணோம் !''

இளம் புலவன் தமிழ்வண்ணன் மருண்டான். ''எடுத்துரைக்கலாம் கவி ராட்சஸப் பெருமானே !''

''இறை வணக்கம் எங்கே?''

''காவியத்துக்குப் பொதுவாகத் தேவைப்படும் ஓர் அணி இறை வணக்கம். என் காவியத்துக்கு அது தேவையில்லை என்பதை உணர்ந்து நீக்கினேன் !''

''காரணம் !''

''மனிதர்களை ஒரே நிறைவாக நோக்கியவன் நான்! உலகம் என் காப்பியம். எந்தத் தெய்வத்துக்கு வணக்கம் கூறுவேன் ?''

''ஓகோ....! அவையடக்கம்....?''

''அவையை ஏமாற்றப் புலவன் எழுதும் அந்த நான்கு வரிகளில் எனக்கே நம்பிக்கையில்லை. ஏனென்றால், என் புலமையில் எனக்கு நிறைவான நம்பிக்கையுண்டு. அத்துடன் நான் உலகிற்கே ஒரு பொது அவையைக் கேட்டு இருக்கிறேன். அப்படித் தோன்றுங்காலை வேண்டுமானால் அடக்கம் ஆயிரம் பெறுவதாக அமையும்! எனவேதான் காவியத்தின் இறுதியில் வருங்கால உலக மக்களுக்கே வாழ்த்தைத் தெரிவித்திருக்கிறேன்.''

அரிமா போலக் கர்ஜனை எழுப்பினார் ஒட்டக்கூத்தர். அந்தக் கர்ஜனையில் சீற்றம் புயலாக எதிரொலித்தது. ''தமிழ்வண்ணரே! செருக்கைக் காட்டுகிறீர்களா ?''

''இல்லை. செம்மையைச் சொல்லுகிறேன்!''

''இந்த முடிவுடன் எந்தக் காவியமும் அரங்கேறுது என்பதனை மறந்தீர்களோ?''

''நான் வயிற்றுக்கு வேண்டுமென்றிருந்தால் யாசித்து இருப்பேன். புலமைக்கு ஆசி கேட்கிறேன். உண்மையும் உறுதியும் நாகரிகம் பெறவில்லை யென்றால், அக்காவியம் என் பிணத்தை எரிக்கப் பயன்படட்டும் என்ற உறுதி, இந்த வறிய உயிர்க்கூட்டில் இமயம் போல் இருக்கிறது.''

''காவியத்துக்குப் பாயிரம்?''


''கவி ராட்சஸர் ஒட்டக்கூத்தரையன்றி வேறு எவர்க்கும் பாயிரம் தரும் தகுதியில்லை என்ற ஆழ்ந்த நம்பிக்கையுடன் உங்கள் முன் கொண்டு வந்திருக்கிறேன்!''

''மன்னர்களையும், பார் நெறி நாகரிகத்தையும் இழிவுபடுத்தி, நிகழ முடியாத வெறும் கற்பனைக்கு நான் பாயிரம் வழங்குவதா? கருக்குற்றம் அமைந்த இக்காவியத்தை நான் மறுக்கிறேன்!''

சுழன்று வரும் முகிற் கூட்டத்திடையே எழும் இடியோசைபோல எழுந்தது ஒட்டக்கூத்தரின் ஓங்காரக் குரல்!

அவையில் பல கணங்கள் அமைதி.

இளம் புலவன் தமிழ்வண்ணன் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தது. உலகு உலகு என்று ஒரே வரியுடன் தமிழ்க் காவியங்கள் தொடங்கப் பெற்றதுடன் நாகரிகம் நின்று விட்டதா? உலகையே திரட்டி எழுதிய தன் பயன்?



AIR INDIA

October 8, 1968.

Mr C. Rajagopalachari
4, Naoroji Road
Kilpauk
MADRAS-10.

Dear Sir:

I write to you in memory of the Rev. Dr J.R. Macphail.

The Alumni Association of the Madras Christian College propose to bring out a suitable brochure in memory of Dr Macphail and his immense service to the people of India, more particularly in South India, as an educationist and a humanitarian.

In view of your having known Dr Macphail intimately, no brochure of this type could be complete without an article from yourself and, on behalf of the Alumni of the Madras Christian College, may I seek your kind assistance in providing us an article from 500 to 750 words on Dr Macphail for publication.

It is also proposed that this brochure will be distributed at a public meeting which will be duly organized by the Alumni. As such, I would request your article to be forwarded to me on or before October 31, 1968.

In the meanwhile, may I crave your confirmation that you would contribute an article as above.

Yours faithfully,

(P.S. Rajaratnam)

தமக்கு வரும் கடிதங்களின் மேலேயே தாமே தம் கைப்பட பதில் எழுதி விடுவது ராஜாஜியின் வழக்கம். இப் பதில்கள் பிறகு 'டைப்' செய்து அவர் கையெழுத்துக்கு வைக்கப்படும்.

மறுப்பு, மறுப்பு, மறுப்பு !

புலவன் எழுந்தான்; அப்போது —

''நான் இந்தக் காவியத்தை ஆதரிக்கின்றேன் !'' — கணீரென்று யாழென ஒலித்தது ஒரு குரல். அனைவரும் அருண்டு மருண்டு அண்ணாந்துநோக்கினர். அரசாணி மாடத்தில் அமர்ந்திருந்த சோழமாதேவி தியாகவல்லி தேவியார்தான் ஆதரவுக் குரல் எழுப்பினார்:

'' கூத்தர் பெருமானே ! கருவில் என்ன குற்றம் கண்டீர்கள்? இதுவரை எழுதியவர்கள் என்ன கண்டீர்கள்? அரசர்களைப் புகழ்ந்து பாடி நிரப்பினீர்கள் ; தெய்வங்களின் வாழ்க்கை சரிதைகளை எழுதினீர்கள். உலகிற்காக ஏதோ சொல்ல வந்த இரண்டாம் தமிழனை நிராகரிக்காதீர்கள். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பாடிய கனியன் பூங்குன்றனார்க்குப் பிறகு தமிழ்த்தாய் இரண்டாம் முறையாக ஒரு நல்ல மகனை ஈன்றிருக்கிறாள். ஏற்றுக் கொள்ள வேண்டும்.''

''முடியாது சோழமாதேவி; அது என்றும் முடியாது.'' எரியும் தீயில் நெய் வார்த்தது போல் இருந்தது கவிராட்சஸரின் மறுமொழி.

''இதோ நான் ஏற்றுக் கொண்டேன். மன்னரும் ஏற்றுக் கொண்டால், பின் மறுப்புக்கே இடமில்லை என்பதையாவது ஏற்றுக் கொள்வீரா?''

''ஏற்றே தீரவேண்டும் சோழமாதேவி!''

சோழமாதேவி கனிவு நிறைந்த நோக்குடன் மன்னர் பெருமானை நோக்கினாள். மாமன்னர் குலோத்துங்க சோழர், கவி ராட்சஸர் ஒட்டக்கூத்தரைப் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. அவர் தலையசைவுடன் அரியணையை விட்டெழுந்து சென்று விட்டார். அவையும் கலைந்தது.

அழுத கண்ணீரும், புலம்பிய நெஞ்சமுமாக வெளியே வந்த இளங்கவிஞன் தமிழ்வண்ணன், அரண்மனை வாயிலில் அந்த அமைதிக் காவியத்தை மனம் நொந்து தீக்கிரையாக்கினான். அதனைக் கண்ணுற்றவண்ணம் முத்துப் பல்லக்கில் சென்று கொண்டிருந்த ஒட்டக்கூத்தரின் மனமும் எரியத்தான் செய்தது! அந்த மனத்துக்கு இப்போது பேராறுதல் தேவை. அதற்கான அருமருந்து அலங்காரவல்லியின் திருமாளிகையில் கிடைக்கும் என்பதை உணர்ந்து

பல்லக்கை முந்நூற்றுவர் சாலை நோக்கிச் செல்லப் பணித்தார்.

பாதிக்கு மேல் கரைந்துவிட்ட பகற்போது.

கூத்தர் பெருமான், நேரம் கடந்துவிட்ட காரணத்தால் நேரே தம்முடைய மாளிகை நோக்கிச் சென்றிருப்பார் என்றெண்ணி உண்டு முடித்து, ஒய்வு கொள்ள மஞ்சத்தை நாடி நடந்தாள் முகிலனைய கூந்தலும், முழுமதி வெட்கும் முகமும், மைத்தடங் கண்ணும் உடையவளான அலங்காரவல்லி. அப்போது வெளிவாயிலில் அரவம் கேட்டுச் சாளரத்து வழியாக எட்டிப் பார்த்தாள். கவிராட்சஸர் ஒட்டக்கூத்தர், சாம்பிய முகத்துடன் சோர்ந்த நடை பயின்று மாளிகையில் நுழைந்து கொண்டிருந்தார்.

அன்பாக வரவேற்று ஆறுதலாக அமரச் செய்தாள் அலங்கார வல்லி.

''பெருமானே! காவியம் அரங்கேற்றம் கண்டதா?''

''...................''

''ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்?''

''என் மனத்தில் தீப்பிடித்து விட்டது அலங்காரவல்லி!''

''ஏன்? அரங்கேற்றத்தில் ஏதேனும் குழப்பம் விளைந்ததா?''

''குழப்பத்தை விளைவித்தவனே நான் தான்!''

''சற்று விரிவாகத்தான் சொல்லுங்களேன்!''

''உண்மையைச் சொன்னால்தான் இப்போதைக்கு என் மனத் தீ அடங்கும் என்று நினைக்கிறேன். அலங்காரவல்லி! நல்ல ஒரு காவியத்தை அரங்கேற விடாமல் தடுத்து விட்டேன். அதனால் அந்தக் காவியமே தீக்கிரையாகித் தமிழுக்கே நட்டமாய்விட்டது.''

''இந்த இடத்திலாவது நல்ல பெயரை வாங்கி யிருக்கலாமே!''

''என்ன செய்ய! நானும் அப்படித்தான் நினைத்தேன்! ஆனால் அவன் பாடியமையக் கருத்து நான் பல நாட்களாகப் பாட வேண்டும் என்று சிந்தித்து வைத்திருந்த கருத்தாய்ப் போய் விட்டது. சொந்த சிந்தையுடன் ஒரு காவியத்தைப் பாடுவதன் மூலம் கம்பனை நிகர்த்துவிடலாம் என்று கனவு கண்டு வந்தேன். என் கனவும், கருத்தும் எப்படித்தான் அந்த ஏழைப் புலவன் நெஞ்சில் உதயம் கண்டதோ? ஆனாலும் அதியற்புதமாகப் பாடி வைத்திருந்தான். நான்கூட அப்படிப் பாட முடியுமா என்பது ஐயத்துக்குரியதுதான்.''

''பின் ஏன் அரங்கேற்ற மறுத்தீர்கள்?''

''நான் பாட வேண்டும் என்று நினைத்த ஒன்றல்லவா?''

''பெரும் பிழை புரிந்துவிட்டீர்கள் பெருமானே! ஏதோ இருவர் கற்பனையும் ஒரே நேரத்தில் உதயம் கண்டு விட்டது. ஆனால் அவன் முதலில் பாடிவிட்டான். நீங்களே வியக்கப் பாடிய அந்தக் காவியத்தை ஏற்று நீங்கள் நினைத்த நினைவையும், அது இப்போது நிறைவாக வேற்றுப் புலவனிடம் வந்ததால் ஆதரித்துவிட்ட பெருந்தன்மையையும் பாயிரமாக எழுதிக் கொடுத்திருந்தால், உலகம் உங்களைப் போற்றிப் புகழ்ந்திருக்கும்! இதனைத் தவற விட்டுவிட்டீர்கள்!''

அலங்காரவல்லியின் விளக்கம் ஒட்டக்கூத்தரை அசையாப் பதுமையாக்கிவிட்டது. அவள் கூறியது முற்றிலும் உண்மை. இனி என்ன செய்ய முடியும்?

தீயில் வெந்த அந்தக் காவியம் மீண்டும் கூத்தர் கற்பனையில் உதயம் கண்டால்....

இருட்டுச் சிந்தையென்ற பட்டத்துடன் கவி ராட்சஸப் புகழுக்கே தீ வைத்து விடுவார்களே!



அண்ணல் மறைந்த அன்று...!

...ராஜாஜி என்ன செய்தார்?


மகாத்மா காந்தி அடிகள் சுடப்பட்டு இறந்தார் என்ற செய்தியைக் கேள்வியுற்றதும் அதிர்ச்சி அடையாதவர்கள் யார்? இந்தச் சந்தர்ப்பத்தில் ராஜாஜி எப்படி நடந்து கொண்டார்?

அப்போது ராஜாஜி மேற்கு வங்க கவர்னர். ''பி. டி. ஐ. செய்தி ஸ்தாபனத்திலிருந்து காந்தி அடிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாக டெலிபோன் வந்தது'' என்று ராஜாஜியிடம் அவரது மெய்காப்பாளர் சிங்காரவேலு கூறினார். ராஜாஜி பதற்றமோ கலக்கமோ வெளிக் காண்பித்துக் கொள்ளாமல், ''பி.டி.ஐ ஸ்தாபனத்தை நீங்கள் டெலிபோனில் திருப்பிக் கூப்பிட்டுச் சற்றுமுன் உங்களுக்குக் கிடைத்த தகவல் உண்மை தானா என்று உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்'' என்றார். மெய்காப்பாளர் அவ்வாறே செய்தார். காந்தி அடிகள் கொலையுண்டு இறந்தது உண்மைதான் என்று நிர்யாணமானதும் ''கவர்னர் ஜெனரலுக்கு 'போன் போடுங்கள்' '' என்றார் ராஜாஜி.

மவுண்ட்பாட்டனிடம் ராஜாஜி டெலிபோனில் கூறிய செய்தி இது தான்: ''நேருவை ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்ளுங்கள்!'' நேருவிடம் ராஜாஜிக்கு உள்ள அன்பு பளிங்குபோல் தூய்மையானதல்லவா?

மவுண்ட்பாட்டனிடம் பேசிவிட்டு ராஜாஜி தமது பிரத்தியேக அறைக்குள் நுழைந்து உட்புறம் கதவைத் தாளிட்டுக் கொண்டார். பிறகு ஒரு மணி நேரத்துக்கு அக்கதவு திறக்கப்படவே இல்லை! தியானத்திலும் பிரார்த்தனையிலும் ஆழ்ந்து போனார் ராஜாஜி.

பயர்ஸ்டோன் பொறுப்பு: நீங்கள் செலவிடும் பணத்திற்கு உரிய மதிப்பு



பல்லாண்டு பல்லாண்டு நீடித்துழைக்கத்தக்க டயர்களைப் படைப்பதன் மூலம் இதை நிரூபிக்கிறோம்.

பூனைக்கு ஒன்பது உயிர்கள் இருப்பதாகக் கூறுவர் மேலை நாட்டினர். பயர்ஸ்டோன் கார் டயருக்கோ ஒன்றே ஒன்றுதான்... என்றாலும் நீண்ட ஆயுள்பலத்திலே நிகரற்றது எனலாம்.

இதற்கு எவ்வாறு உறுதிபெறுகிறோம்? கூடுதலான செலவேதும் இன்றியே ஆயிரக்கணக்கில் அதிக மைலோட்டம் அளிக்கும் தனிச்சிறப்புள்ள பயர்ஸ்டோன் ரப்பர் கலவையாகிய 'ஸூப்பர்-டஃப்' விசேஷ ரப்பரை உபயோகிப்பதன் மூலம்.

இதன் ஆயுளை நீடிக்கச்செய்யும் மற்றொரு அம்சம்: சாலைமீது அதிக ரப்பரைப் பதியவைத்து...உழைப்புத் தேய்மானங்களைக் குறைத்து...எந்த வேகத்திலும் உன்னதமான நிலைப்புறுதியோடு ஓடச்செய்திடும் பயர்ஸ்டோன் 'ராப்—அரவுண்ட்' டிசைன்

Firestone

பயர்ஸ்டோன் டீ லக்ஸ் சாம்பியன் டயர் **'ராப்-அரவுண்ட்'** டிரெட் பொருந்தியது.

பயர்ஸ்டோன உங்களுக்குத் தரம், சேவை இவற்றின் சின்னம்

[மேற்கு வங்க கவர்னர் ராஜாஜியின் மெய்காப்பாளராகப் பணி யாற்றிய திரு சிங்காரவேலுவைப் பேட்டி கண்டு எழுதிய கட்டுரை:]

சிம்மத்தைக் காக்க ஒரு சிங்கார வேலர்

உதவி போலீஸ் சூப்பிரின்டெண்ட் வேலைக்கு மனுப் போட்டிருந்தான் அந்த இளைஞன். பேட்டிக்கு அழைப்பும் வந்தது. 'ரொம்பவும் ஒல்லியாக இருக்கிறானே' என்று கூறி அவனைத் தேர்வுக் குழு நிராகரித்து விட்டது — கிட்டதட்ட.

''அவன் சற்று மெலிந்திருப்பது மட்டும் தான் குறையென்றால் பரவாயில்லை. நான் அவனைத் தேர்ந்தெடுக்க விரும்புகிறேன்'' என்று குழுத் தலைவர் — அன்றைய முதலமைச்சர் — கூறினார். இளைஞன் தேர்ந்தெடுக்கப் பட்டான். சந்தோஷச் செய்தியைத் தம் கைப்பட எழுதி அனுப்பினார் முதலமைச்சர்.

இப்படிப்பட்ட முதலமைச்சர் யார் என்று வியக்கிறீர்களா ?

வியப்புக்குரிய பல காரியங்களைச் செய் துள்ள ராஜாஜி அவர்கள்தான் !

1937ம் ஆண்டு அவர் முதலமைச்சராக இருந்த போது இப்படிச் சலுகை காட்டி வேலைக்கு அமர்த்திய இளைஞன் திரு சிங்கார வேலு. இன்று இந்திய ரயில்வேயின் பாது காப்பு போலீஸ் துறையில் முக்கிய அதிகாரியாக இருக்கிறார். முன்பு சென்னையில் போலீஸ் கமிஷனராகவும் இருந்தவர்.

ராஜாஜியால் வேலைக்கு வந்த அவர் பிறகு பல சமயங்களில் ராஜாஜியுடன் சேர்ந்து பணி செய்யும் பெரும் பாக்கியத்தைப் பெற்றார். ஏன், சுதந்திரத்துக்குமுன் ஒரு சில சமயங்களில், இந்தப் போலீஸ் அதிகாரி, ராஜாஜி என்ற அரசியல்வாதியைக் கண்காணிக்க வேண்டியும் வந்ததாம்!

தம்பி, நாற்காலி தாங்காது !

''1942ம் வருஷம். நீலேஷ்வர் என்ற ஊரில் ராஜாஜியின் சொற்பொழிவு. நான் மஃப்டியில் போய் முன் பக்கம் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தேன். ஐந்து வருட போலீஸ் பயிற்சியால் சற்று சதை போட்டிருந்தேன். மேடையில் பேசிக் கொண்டிருந்த ராஜாஜி என்னைப் பார்த்தார். பேச்சை இடையில் நிறுத்தி, ''தம்பி, உன் கனத்தை அந்த நாற்காலி தாங்காது. யாராவது சற்று பெரிய நாற்காலியைக் கொண்டு வந்து போடுங்கள்'' என்று கூறிக் கலகலப்பை ஏற்படுத்தினார்'' என்று சிரித்துக் கொண்டே கூறும் திரு சிங்காரவேலு, தம் வாழ்க்கையையும் நோக்குகளையும் உருவாக்கியவர் ராஜாஜி தான் என்கிறார்.

''ராஜாஜி இந்தப் பிரச்னையை எப்படி நோக்குவார்?' என்று கேள்வி போட்டுக் கொள்வேன். என்னுடைய சின்ன அறிவுக்கு ஏதோ ஒரு வழி — விடை — தோன்றும். பல சமயங்களில் இந்த மாதிரி கிடைத்த விடைகள் பலனளித்துள்ளன'' என்கிறார்.

மேற்கு வங்காள கவர்னராக ராஜாஜி செல்கிறார் என்ற செய்தியறிந்த திரு சிங்கார வேலு, ராஜாஜிக்கு மெய்காப்பாளராகச் செல்ல மெய் துடித்தார். ராஜாஜி 1937ல் தமக்கு எழுதிய கடிதத்தின் பிரதியை எடுத்தார். அத்துடன், ''உங்களுக்குச் சேவை செய்ய ஆவலாயுள்ளேன். எனக்கு வாய்ப்புக் கிடைக்குமா ?'' என்று எழுதி இரண்டையும் இணைத்து அனுப்பினார். விளைவு: ராஜாஜியின் மெய்காப்பாளராக திரு சிங்காரவேலு நியமிக்கப்பட்டார்.

இரண்டு சம்பவங்கள்

''ஒரு வருடம் அவருடன் இருந்து நான் கற்றவை பலப் பல. துணிவு, அச்சமின்மை, பொதுப்பண நிர்வாகத்தில் கண்டிப்பு, காலம் தவறாமை, அயராது உழைத்தல் ஆகியவைகளில் ராஜாஜியை மிஞ்ச முடியாது. ஒப்புக்குச் சொல்லவில்லை. அருகில் இருந்து பார்த்தவர்களுக்குத்தான் தெரியும். கல்கத்தாவில் இரண்டு சம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன. கல்கத்தா மருத்துவக் கல்லூரியில் பிளேக். டாக்டர்கள், மாணவர்கள் தொத்து நோய்க்குப் பயந்து கல்லூரியின் பக்கமே வரவில்லை. ராஜாஜி போய்ப் பார்த்து வரக் கிளம்பினார். 'பிளேக் கோட்' என்ற உடையை அணிந்து கொண்டு போகும்படி மிலிடரி காரியதரிசி கூறினார். ராஜாஜி மறுத்து விட்டார்.

மூன்று நாள் தொடர்ந்து பிளேக் பகுதிகளுக்கு விஜயம் செய்தார். அதன் விளைவாக, மாணவர்களும் மருத்துவர்களும் தைரியம் கொள்ள ஆரம்பித்தனர். சேவையிலும் இறங்கத் தொடங்கினார்கள்.

மற்றொன்று: கல்கத்தா கார்ப்பொரேஷனின் மேல், ராஜ்ய அரசாங்கம் சில நடவடிக்கை எடுத்தது. கவர்னர் என்ற ஹோதாவில் அதற்கான உத்தரவுகளில்



திரு சிங்காரவேலு

கையெழுத்திட்டிருந்தார். கார்ப்பொரேஷன் உறுப்பினர்கள் இதன் காரணமாக ராஜாஜியின் பேரில் கோபமாக இருந்தார்கள். பெரிய கண்டனக் கூட்டம் நடத்தினார்கள். அதற்கு ராஜாஜியைப் பேச வரும்படி கூப்பிட்டிருந்தார்கள். உணர்ச்சிகள் எல்லை மிஞ்சிப் போகக்கூடிய இக்கூட்டத்தில் கலந்து கொள்ளத் தேவையில்லை என்று சொல்லப்பட்டது. ஊஹூம். அவர் போனார்.

கூட்டத்தில் பேசியவர்கள் ஒவ்வொருவராக ஆவேசமாகப் பேசிக் கொண்டே வந்தார்கள். இன்னும் சிலர் பேசினால் மக்கள் உணர்ச்சிமடை திறந்துவிடும் என்ற நிலைமை. ராஜாஜி தாம் பேச விரும்புவதாகத் தெரிவித்துவிட்டு, பேச ஆரம்பித்தார்.

நிதானமாகக் கூறினார் : "அன்பர்களே, முப்பது வருஷத்துக்கு முன்பு நானும் ஒரு சின்ன நகரசபையை நிர்வகித்து வந்தேன். அதில் அப்போதைய அரசாங்கம் தலையிட்டது. உங்களைப் போல் நானும் அன்று கோபம் கொண்டேன். கூட்டம் போட்டேன். கூட்டத்தில் கலந்து கொள்ளக் கலெக்டரைக் கூப்பிட்டேன். அவர் வரவில்லை. இன்று என்னைக் கூப்பிட்ட போது, நான் உடனே வர ஒப்புக் கொண்டேன். உங்கள் கோபத்தை நான் நன்கு புரிந்து கொண்டிருக்கிறேன்..." என்று ஆரம்பித்து எல்லா விஷயங்களையும் தெளிவாக எடுத்துச் சொன்னார். சற்று நேரத்தில் "ராஜாஜிக்கு ஜே!" என்ற கோஷம் கூட்டத்திலிருந்து கிளம்பியது!

"இந்த இரண்டு சம்பவங்களும் ராஜாஜி ஓர் அசாதாரண மனிதர் என்பதை எனக்கு உணர்த்தின" என்கிறார் திரு சிங்காரவேலு.

திரு சிங்காரவேலு, தம் வாழ்க்கையில் மறக்க முடியாததாக எதைக் கருதுகிறார்?

"ராஜாஜி தாற்காலிக கவர்னர் ஜெனரல் பதவி ஏற்கவிருந்தார். பதவி ஏற்பு விழாவின் போது, ராஜாஜியை அழைப்பது, அறிவிப்பது போன்ற சில சம்பிரதாயச் சடங்குகளைச் செய்யும் பொறுப்பை ஓர் ஆங்கிலேயரிடம் ஒப்படைத்திருந்தார்கள். நிகழ்ச்சி நிரலைப் பார்த்த ராஜாஜி ஒரு பென்சிலால் அந்த ஆங்கிலேயரின் பெயரை நீக்கிவிட்டார் : 'என்னை கவர்னர் ஜெனரல் பதவி ஏற்கும்படி அழைக்கும் வாய்ப்பையும், பாக்கியத்தையும் ஓர் இந்தியருக்கு அளிக்க விரும்புகிறேன். திரு சிங்காரவேலு இந்தப் பணிகளை விழாவின் போது செய்வார்' என்று கூறிவிட்டார். அதன்படியே எனக்கு அந்தப் பேரதிருஷ்டம் கிடைத்தது" என்கிறார் சிங்காரவேலு.



கவர்னர் ஜெனரல் மாளிகை முன்னால் ராஜாஜி.


ராஜாஜியின் மெய்காப்பாளராக இருந்த இவர் இன்று ரயிலில் செல்லும் பயணிகள், கூட்ஸ் சாமான்கள் ஆகியவைகளைப் பாதுகாக்கும் பிரிவில் பெரிய அதிகாரியாக இருக்கிறார். உத்தியோக உயர்வு கிடைத்து தில்லிக்கு வருமுன் ராஜாஜியைப் போய்ப் பார்த்தாராம். "இந்தாருங்கள் திருப்பதி பிரசாதம்" என்று அன்புடன் கூறி பிரசாதத்தைக் கொடுத்து ஆசிர்வதித்தார் ராஜாஜி.

"சத்தியம், தர்மம், பக்தி ஆகியவற்றின் கலவைதானே ராஜாஜி?" என்கிறார் சிங்காரவேலு. முன்னாள் மெய்காப்பாளரின் இந்த வார்த்தைகள் நூற்றுக்கு நூறு மெய்தான் என்பது நமக்குத் தெரியும்.

பேட்டி : **பி. எஸ். ரங்கநாதன்**

ராஜாஜி மேற்கு வங்கக் கவர்னராக இருந்தபோது எட்டயபுரம் பாரதி மண்டபத்தைத் திறந்துவைக்கத் தமிழகம் வந்தார். சென்னையில் கல்கி காரியாலயத்துக்கும் விஜயம் செய்தார். அப்போது அவரிடம் 'ஆட்டோகிராப்' கேட்டேன். தம்முடைய முகத்தைத் தாமே கார்ட்டூனாக வரைந்து அதன் கீழ் கையெழுத்தும் போட்டுத் தந்தார் ராஜாஜி.

கி. ராஜேந்திரன்



டாக்டர் சாமியார்

குட்டிகிருஷ்ணன்

எனக்கு எப்போதாவது பொழுது போகவில்லை யென்றால் ஜலதோஷம் என்றோ நெஞ்சுக் கட்டு என்றோ சொல்லிக் கொண்டு டாக்டர் சாமியாரிடம் போவேன். அவர் இயற்பெயர் சுவாமி. ஆனால் நாங்கள் எல்லோரும் அவரை டாக்டர் சாமியார் என்றேதான் குறிப்பிடுவது வழக்கம். சாமியாரிடம் போனால் எனக்குப் பொழுது போய்விடும். சுவாரஸ்யமாக ஏதாவது பேசுவார். அப்படிப் பேசுவதற்கு அவருக்கு நிறைய அவகாசம் உண்டு. ஏனென்றால் அவரைத் தேடி வைத்தியத்துக்கு என்று வருகிறவர்கள் சொற்பம் பேர்கள்தான்.

'இரண்டு நாளாகத் தலைவலி' என்று சொல்லிக்கொண்டு யாராவது வந்தால் சரி, ''இருந்தால் என்னய்யா? உங்க அம்மாவிடம் ஒரு பத்து அரைத்துத் தரச் சொல்லி நெற்றியில் போட்டுக் கொண்டு 'அக்கடா' என்று படுத்துண்டிருக்கிறது. 'மூணுக்'குன்னு டாக்டரண்டை ஓடி வந்துடணுமா? வைத்தியருக்குப் பணத்தை அழுறதிலே என்னதான் இருப்பியோ உமக்கு?'' என்பார். இப்படிப்பட்டவரிடம் யார் வருவார்கள் வைத்தியத்துக்கு?

அதுதானுகட்டும், மருந்துக் கடைகளில் நூற்றுக்கணக்கில் மைஸின்கள் வந்து குவிகின்றனவே எத்தனை எத்தனையோ கண்ணைப் பறிக்கும் கலர்களில்... எத்தனை எத்தனையோ நெஞ்சை உடைக்கும் விலைகளில்...! அவற்றில் ஏதாவது ஒன்றைத் தம்மிடம் வருகிறவர்களுக்கு எழுதித் தருவாரா? அதுவும் கிடையாது. பழங்காலத்து 'மிக்சர்' மருந்துச் சீட்டுத்தான். அதை விட்டால் ஒரு மருந்துப் பொடியைத் தாமே பொட்டலங்களாகக் கட்டிக் கொடுத்து விடுவார்.

என்னிடம் அவர் பேசுவது வேறு மாதிரி இருக்கும். அவர் சொல்வதை யெல்லாம் சுவாரஸ்யமாக ரசித்துக் கேட்டுத் தலையாட்ட அவர் என்னைத்தான் தேர்ந்தெடுத்தார். இதில் எனக்கு ரொம்பப் பெருமை! ஆனால் மற்றவர்கள், ''ஐய! அந்த 'போரை' மணிக்கணக்கில் எப்படித்தான் சமாளிக்கிறாயோ!'' என்று என்னிடம் கேட்பார்கள். நான் இதை யெல்லாம் பொருட்படுத்துவது கிடையாது.

ஒரு சமயம் எனக்கு ஜலதோஷம் என்று சொல்லிக் கொண்டு போனபோது அவர், ''அப்பா, கிருஷ்ணா! இந்த ஜலதோஷத்துக்கு மட்டும் இந்த நிமிஷம் வரை எந்த மேதாவியும் சரியான மருந்து கண்டு பிடிக்கவில்லை; தெரியுமோ உனக்கு?'' என்றார்.

இன்னொரு சமயம் வயிறு ஏதோ சங்கடப் படுத்துகிறது என்று சொல்லிக் கொண்டு போனேன்.

''இந்த வயிறு இருக்கிறதே, அதுமகா விநோதமான ஓர் உறுப்பு. வெந்ததோ வேகாததோ எதை உள்ளே போட்டாலும் ஜீரணித்துவிடுகிற அபார சக்தி படைத்திருக்கிறது இல்லையா? ஆனால் இதில் ஓர் ஆச்சரியம் பாரு. இந்த வயிறு தன்னைத் தானே ஏன் ஜீரணித்துவிடவில்லை?''


இப்படி ஒரு கேள்வியைப் போட்டு விட்டு என்னை உற்றுப் பார்த்தார் டாக்டர் சாமியார். பிறகு, ''நீ இப்படிப் பதில் சொல்லத் தெரியாமல் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருப்பதில் அதிசயம் ஒன்றுமில்லை. ஏனென்றால் பெரிய பெரிய விஞ்ஞான மேதைகள் கூட இதற்குப் பதில் சொல்லத் தெரியாமல் இன்னமும் விழித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்'' என்றார்.

மாற்று இருதயங்கள் பொருத்தப்பட்ட செய்தி வந்த அன்று என்னால் டாக்டர் சாமியாரைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. ஆவலை அடக்க மாட்டாமல் ஒரு மப்ளரை எடுத்துக் கழுத்தில் சுற்றிக் கொண்டு கிளம்பி விட்டேன்.

''மருத்துவத் துறையில் என்ன அற்புதங்கள் எல்லாம் சாதிக்கப்படுகின்றன,







பார்த்தீரா! நீர் இன்னமும் நாக்கை நீட்டச் சொல்லி, நாடி பார்த்து பவுடர் மடித்துத் தந்து கொண்டிருக்கிறீரே!'' என்றேன்.

சாமியார் ஒன்றும் பேசவில்லை. நான் சும்மா இருப்பேனா? அவர் 'மூடை'க் கிளப்பி விடுவதற்காக மேலே பேசினேன். ''அடுத்தாற்போல் மருத்துவத் துறையில் சாதிக்கப்பட வேண்டியது மாற்று மூளை பொருத்துவதுதான்'' என்றேன்.

''அந்தச் சாதனை ஏற்கனவே நிகழ்ந்து விட்டது'' என்றார் டாக்டர் சாமியார்.

''என்னது?'' என்று நான் வியப்புடன் கேட்டேன்.

''ஆமாம்! அந்தச் சாதனை பற்றிய விவரம் ஏதும் பத்திரிகையில் வராமல் அமுக்கி விட்டார்கள். ஆனால் அந்த அற்புதமும் நிகழ்ந்துதான் இருக்கிறது'' என்றார் டாக்டர் சாமியார்.

''அப்படியா? எப்போது? எங்கே? எந்த ஆண்டில் நடந்த சம்பவம்?'' என்று கேள்விகளை அடுக்கினேன். ''சொல்கிறேன்'' என்றவர் நிதானமாகப் பேச ஆரம்பித்தார்:

''கிருஷ்ணா? இந்த மூளை இருக்கிறதே, அது ரொம்ப ரொம்ப அற்புதமான ஓர் உறுப்பு. விஞ்ஞான ரீதியாகப் பார்த்தால் எல்லாருடைய மூளையும் ஒரே மாதிரி அமைப்பைக் கொண்டதாகத்தான் இருக்கிறது. ஒரே மாதிரியான நரம்புக் குவியல்களால்தான் ஆக்கப்பட்டிருக்கிறது. அதன் செல்களை மைக்கிராஸ்கோப்பில் வைத்து நுணுகி ஆராய்ந்தால் ஒரு மூளையின் செல்லுக்கும் இன்னொரு மூளையின் செல்லுக்கும் வித்தியாசம் தெரியாது. அடிப்படையில் எல்லாமே நியூக்ளிக் ஆஸிட்தான். நியூக்ளிக் ஆஸிட் என்பது எல்லாருக்கும் பொதுவான ஒரே வஸ்துதான். அப்படி இருந்தும் ஒருவன் ரொம்பக் கெட்டிக்காரனாகவும் ஒருவன் முட்டாளாகவும் ஏன் விளங்க வேண்டும்? குண இயல்புகளில் மனிதனுக்கு மனிதன் இத்தனை வேறுபாடுகள் ஏற்படுவது எதனால்?''

டாக்டர் சாமியார் விடை காண இயலாமல் நிறுத்தி விட்டார் பேச்சை.

''பிரச்னையில் கொண்டு போய் நிறுத்தி விட்டீர்களே? மாற்று மூளை பொருத்

தப்பட்ட நிகழ்ச்சியைச் சொல்லாமல்...'' என்றேன்.

''நான் சொல்லப் போவதற்கும் இந்தப் பிரச்னைக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. பொறுங்கள்! அதனால்தான் அதை விவரித்தேன்.

''அப்போது நான் இங்கிலாந்தில் சஸ்திர சிகிச்சையில் விசேஷப் பயிற்சி பெற்றுப் பட்டம் வாங்கியிருந்தேன். இளமையான உள்ளம். உலகமே இனிமையாகவும் எதிர்காலம் ஒளி மயமாகவும் எனக்குத் தோன்றிக் கொண்டிருந்த காலம். லண்டன் ஆஸ்பத்திரி ஒன்றில் என்னைப் பணி புரியுமாறு கேட்டுக் கொண்டார்கள். இரண்டு வருஷம் மட்டும் வேலை பார்ப்பதாக ஒப்பந்தம் செய்துகொண்டேன்.

''அங்கே பல விசித்திரமான 'கேஸ்'கள் வரும். சில அருவருப்பாகவும் சில பயங்கரமாயும் இருக்கும். ஒரு நாள் 'ஆம்புலன்ஸ்' வண்டி 'ஸைரன்' ஊதிக் கொண்டே வந்து சேர்ந்தது. அன்று நானும் டாக்டர் ஸ்டூவர்ட்டும் இரவு 'டியூட்டி'யில் இருந்தோம். ஆம்புலன்ஸில் வந்த நோயாளிக்கு அவசரச் சிகிச்சை அளிக்கத் தயாரானோம்.

''அந்த கேஸ் ரொம்ப பயங்கரமானது. காதலனும் காதலியுமாய்க் காரில் போயிருக்கிறார்கள். உற்சாகமாகப் பேசிக் கொண்டே வேகமாகக் காரை ஓட்டியிருக்கிறான் ஸ்மித். எதிரே வந்த ஒரு கனமான லாரியில் மோதிப் பெரிய விபத்து நேர்ந்து விட்டது. ஸ்மித்துக்கு தலையில் பலமான அடி. மண்டை ஓடு பிளவு பட்டு மூளையே வெளியே சற்றுச் சிதறியிருந்தது. அவன் இருதயத் துடிப்பு இன்னும் நிற்காமல் இருந்ததே பேராச்சரியம்தான். மயக்க நிலையில் இருந்த அவனை ஆபரேஷன் தியேட்டருக்குள் கொண்டு போனோம். எங்கள் பின்னாலேயே ஸ்மித் கிடத்தப்பட்டிருந்த வண்டியைப் பிடித்துக் கொண்டு வந்தாள் அவன் காதலி மரியா. ஸ்மித்துக்கு அத்தனை பலமாக அடிபட்டிருக்கும்போது இவளுக்கோ உடலில் நாலைந்து இடங்களில் சிராய்ப்புத் தவிர வேறு ஓர் அடியும் படவில்லை. மோட்டார் கார் விபத்துக்களில் இப்படித்தான் பல விநோதங்கள்.''

'' 'டாக்டர்! எப்படியாவது என் கண்மணியைக் காப்பாற்றுங்கள்' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டு வந்தாள் அவள்.

''இளைஞர்களான எங்களிடம் ஒரு பெரிய கேஸ் வந்ததில் எங்களிருவருக்கும் ரொம்பப் பெருமைதான். மரியாவின் தோளில் கை வைத்து அழுத்திப் பெரிய மனுஷத் தோரணையில் ஒரு பார்வை பார்த்தோம். ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. ஆப்பரேஷன் தியேட்டருக்குள் நுழைந்து விட்டோம். ஸ்மித்தை நன்கு பரிசோதனை செய்தபோது மயக்க நிலையில் உள்ள அவன் மீண்டும் கண் விழிக்கவே மாட்டான் என்பது எங்களுக்கு உறுதியாயிற்று. அந்த மயக்க நிலையிலேயே சிறிது நேரம் இருந்துவிட்டு பிறகு இறந்து போக வேண்டியவன்தான். வெளியே சிதறிய மூளை பல இடங்களில் சேதமுற்றிருந்தது. அதையெல்லாம் சரி செய்வதென்பது நடக்கிற காரியமில்லை.''

''இந்த மூளைக்குப் பதில் மாற்று மூளை வைத்தால்தான் இவன் பிழைப்பான்'' என்றான் ஸ்டூவர்ட். ஒரு பேச்சுக்கு இப்படிச் சொன்னான்.

'' 'வி' வார்டில் ஒருவன் இருதயக் கோளாறினால் இறந்து கொண்டிருக்கிறான். அவனுக்கு மாற்று இருதயம் தேவை. இவனுக்கு மாற்று மூளை தேவை.'' என்றேன் நான். சாதாரணமாகத்தான் சொன்னேன்.

சட்டென்று ஸ்டூவர்ட் அதைப் பிடித்துக் கொண்டான். ''ஏன் டாக்டர், இருவரில் ஒருவரைப் பிழைக்க வைக்க முயலலாமே நாம்?'' என்றான். இப்போது அவன் அழுத்தமாக ஒரு தீவிரத்துடன் பேசினான்.

நான் திடுக்கிட்டவனாக, ''நீ என்ன சொல்கிறாய்?'' என்றேன்.

''ஒன்று, இவன் இருதயத்தை அவனுக்குப் பொருத்துவோம்; இல்லையேல் அவன் மூளையை இவனுக்குப் பொருத்துவோம்'' என்றான் ஸ்டூவர்ட்.


எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அந்தக் காலத்தில் மாற்று இருதயம் பொருத்துவது பற்றிப் பேசப்பட்டு வந்ததே ஒழிய யாரும் அதைச் செய்யத் துணிந்ததில்லை.


''ஸ்டூவர்ட்! நீ ரொம்ப ஆபத்தான விஷயம் பற்றி யோசிக்கிறாய். நாம் பெரிய பதவியில் உள்ள டாக்டர்கள் இல்லை. ஆஸ்பத்திரியின் விதிமுறைகள் என்னென்ன உண்டோ ஆராய வேண்டும். நமக்கு இப்போது உதவக்கூடிய நர்ஸுகள் முதலானோர் பிறகு இந் நிகழ்ச்சி பற்றி மேலிடத்தில் என்ன சொல்வார்களோ என்னவோ? கடைசியில் ஏதாவது கோர்ட்டு, கேஸ் என்று வந்தால்...?''

''நீ சுத்த பயந்தாங்கொள்ளி'' என்று சீறினான் ஸ்டூவர்ட். ''டாக்டருடைய கடமை தன் திறமைக்கேற்ப உயிரைக் காப்பாற்றுவதுதான். நான் இந்த உயிரைக் காக்கத் தீர்மானித்து விட்டேன்'' என்றான் மேஜை மேலிருந்த ஸ்மித்தைக் சுட்டிக் காட்டி.

''வந்தது வரட்டும்!'' — இப்படிக் கூறிவிட்டு மளமளவென்று உத்தரவுகளைப் பிறப்பிக்கத் தொடங்கி விட்டான் ஸ்டூவர்ட். அப்போது இரவு சுமார் ஒரு மணி இருக்கும். அந்தச் சமயத்தில் 'டியூட்டி'யில் இருந்த டாக்டர்கள் நாங்கள்தான். ஆகையால் எங்கள் உத்தரவுப்படி மளமளவென்று காரியங்கள் நடந்தன. எனக்கும் பயம் போய் விட்டது. ஆராய்ச்சியில் ஏற்படும் ஒரு ஆவல் குறுகுறுப்பு என்னைப் பற்றிக் கொண்டது. ஏதோ பெரிதாகச் சாதிக்கப் போகிறோம் என்ற பெருமித எண்ணம் ஆட்கொண்டது. மகத்தான வெற்றி பெற வேண்டும் என்ற லட்சிய ஆர்வம் என்னை ஆட்டிப் படைக்கத் தொடங்கியது.

ஆறு மணி நேரத்துக்குப் பிறகு நாங்கள் இருவரும் ஆபரேஷன் தியேட்டரை விட்டு வெளியே வந்தோம். வாசலில் நின்ற மரியாவிடம் மகிழ்ச்சி பொங்க இருவரும் ஒரே குரலில் ''உன் காதலனுக்கு உயிர் கொடுத்து விட்டோம்!'' என்றோம். கடவுளின் நிலையில் அந்தச் சமயத்தில் நாங்கள் இருந்தோம். எங்கள் ஜாகைக்குத் திரும்ப மனம் இல்லை. காலை எட்டு மணிக்குப் பெரிய டாக்டர்கள் ஒவ்வொருவராக வர ஆரம்பித்தார்கள். எல்லாரிடமும் எங்களது அற்புத சாதனையை விவரித்தோம்.





பெரிய இரும்புக் கதவுகளுடனும் தேசியச் சின்னத்துடனும் விளங்கும் இந்த முன்வாயில்தான் வேலூர் மத்திய சிறையின் முன்புறத் தோற்றம். சுதந்திரப் போராட்ட காலத்தில் ராஜாஜியைச் சிறைப்படுத்தி வைத்த சிறைச்சாலைகளுள் ஒன்று. வலதுபுறம் உள்ள இரும்புக் கம்பிகளாலான கதவுடன் கூடிய அறையிலே தான் ராஜாஜி சிறை வைக்கப்பட்டிருந்தார். இந்த அறையின் முகப்பில் ''ராஜாஜி சிறைவாசம் அனுபவித்த அறை'' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட பளிங்குக் கல்லைப் பதித்திருக்கிறார்கள். இதனை ஆந்திரகேசரி பிரகாசம் திறந்து வைத்தார். புனிதமான இடமாகக் கருதப்படும் இந்த அறையில் வேறு யாரும் சிறை வைக்கப்படுவதில்லை.

''ஸ்மித் உயிருடன் இருக்கிறான் என்றா சொல்கிறீர்கள்?'' என்றார்கள் அவர்கள் நம்பிக்கை அற்ற குரலில்.

''ஆமாம், பலவீனமாக இருக்கிறான். ஆனால் உயிர் வாழ்கிறான். நன்கு கவனித்துக் கொண்டால் சில தினங்களில் நடமாட ஆரம்பித்துவிடுவான்'' என்றேன் நான்.

''பத்திரிகைகளுக்குப் போன் செய்திருக்கிறேன். இன்னும் சிறிது நேரத்தில் நிருபர்கள் இங்கு வருவார்கள்'' என்றான் ஸ்டீவர்ட். ''நமது ஆஸ்பத்திரிக்கே பெருமை! பிரிட்டனுக்கே பெருமை!'' அவன் குரலில் கர்வம் தொனித்தது.

பெரிய டாக்டர்கள் எங்களை அறைக்கு வெளியே இருக்கச் சொன்னார்கள். தங்களுக்குள் கலந்து ஆலோசித்தார்கள். பிறகு எங்களை உள்ளே அழைத்துத் தங்கள் முடிவைத் தெரியப்படுத்தினார்கள்:

''ஸ்மித்தைக் கொஞ்ச நாள் ஆஸ்பத்திரியில் வைத்திருந்து ஆராய்ச்சி புரிவது நல்லது. அப்புறமாகப் பத்திரிகைகளுக்குச் செய்தி வெளியிட்டுக் கொள்ளலாம். இன்றே நாளையோ திடீரென்று ஸ்மித்திடம் ஏதாவது கோளாறுகள் ஏற்பட்டால் நமக்குக் கெட்ட பெயர் வந்து சேரும்'' என்றார்கள். ''மேலும் இளைஞர்களாகிய நீங்கள் அவசரப்பட்டு ஆஸ்பத்திரி விதிமுறைகளைப் புறக்கணித்து இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறீர்கள். மூளை தானம் செய்தவன், மூளையைப் பெற்றவன் ஆகியோரது நெருங்கிய பந்துக்களிடம் சம்மதம் பெற்றுக் கையெழுத்து வாங்கவில்லை. இதெல்லாம் இந்த ஆஸ்பத்திரிக்கு அவப்பெயரை வாங்கிக் கொடுக்கும். அதனால் இதைப் பற்றி இப்போதைக்கு வெளியே சொல்லாமல் இருப்பதே நல்லது.''

''உறவினரைத் தேடிப் போய்க் கையெழுத்து வாங்கவெல்லாம் நேரம் எங்கே இருந்தது?'' என்று முணுமுணுத்தான் ஸ்டீவர்ட். கத்துக்குட்டி டாக்டர்கள் இருவர் இவ்வளவு பெரிய பெருமை அடைவதைக் காணச் சகியாமல் ஆஸ்பத்திரி பெரிய டாக்டர்கள் விஷயத்தை அமுக்கி விட்டார்கள் என்றே ஸ்டீவர்ட் கருதினான். நானும் அப்படித்தான் எண்ணினேன். ஆஸ்பத்திரி ரிஜிஸ்தர்களில் இந்த ஆப்பரேஷன் பற்றி எதுவுமே எழுதப்படவில்லை.

டாக்டர் சாமியார் கதையை முடித்து விட்டார். ''ஆகவே உலகின் முதல் மாற்று மூளை ஆப்பரேஷன் என்று எதிர்காலத்தில் செய்தி வந்தால் அதை நம்பாதே! மாற்று மூளை ஆபரேஷன் ஏற்கனவே வெற்றிகரமாக நடந்திருக்கிறது!'' என்றார்.

''அது சரி, மரியா என்ன ஆனாள்? ஸ்மித்தைக் காதலித்த அவள் அவனுடன் சந்தோஷமாக இல்லறம் நடத்துகிறாளா?'' என்றேன்.

''இல்லை, அவனை அவள் சீக்கிரமே விவாகரத்து செய்து விட்டாள்.''

''ஏன்?''

''ஸ்மித் பிழைத்தெழுந்த நாலாம் நாள் மரியா ரொம்ப ஆசையுடன் ஒரு பாதிரியை ஆஸ்பத்திரிக்கே அழைத்து வந்து படுத்த படுக்கையாக இருந்த ஸ்மித்தைக் கல்யாணம் செய்து கொண்டாள். நானும் ஸ்டீவர்டும் அருகில் இருந்து கல்யாணத்தை நடத்தி வைத்தோம். சந்தோஷ மிகுதியில் ஸ்டீவர்டின் கன்னத்திலும் என் கன்னத்திலும் மரியா திருமணச் சடங்கு சம்பிரதாயப்படி முத்தமிட்டாள். மேலும் சில தினங்கள் சென்றபின் ஸ்மித்தை 'டிஸ்சார்ஜ்' செய்து வீட்டுக்கு

அனுப்பி வைத்தோம். ஆனாலும் அவனை ஓர் ஆராய்ச்சிப் பொருளாகக் கருதி அடிக்கடி போய்ப் பார்த்துப் பரிசோதித்து வந்தோம். அவன் தேக ஆரோக்கியம் திருப்திகரமாக இருந்தது. ஆனால் மரியா தான் அவன் தான் காதலித்த பழைய ஸ்மித்தாக இல்லை என்றும் வேறு விதமாகத் தனக்குப் பிடிக்காத விதமாக வெல்லாம் நடந்து கொள்ளுகிறான் என்றும் புகார் செய்தாள். ஆக்ஸ்போர்டு சர்வ கலா சாலையில் படித்துப் பட்டம் பெற்ற ஸ்மித், பேச்சிலோ, நடத்தையிலோ அதற்கேற்ப விளங்கவில்லை, இப்போது. மரியாவின் அறிவாற்றலுக்குச் சமதையாக அவனால் சம்பாஷிக்க முடியவில்லை. கணவன் என்கிற முறையில் அவளிடம் அன்பும் பிரியமும் காட்ட அவன் முயன்றபோது அதில் நாசூக்கோ நளினமோ இல்லை. முரட்டுத்தனமாக நடந்து கொண்டான். இதையெல்லாம் பொறுக்க முடியாமல் மரியா மூன்று மாதங்களில் அவனை விவாக ரத்து செய்து விட்டுப் பிரிந்தாள். இரண்டு வருஷங்கள் கழித்து வேறு ஒருவனைக் காதலித்து மணம் புரிந்துகொண்டான். அவளுக்கு இப்போது நாலு குழந்தைகள். வேல்ஸில் வசிக்கிறார்கள்.''

''ஸ்மித்தின் அறிவிலும் குணத்திலும் மாறுதல்ஏற்படக் காரணம் என்ன டாக்டர்?''

''அவனுக்கு மூளை தானம் செய்தவனுக்கு எந்த அளவுக்கு அறிவு இருந்ததோ அந்த அறிவு ஸ்மித்துக்குக் கிடைத்தது. அன்று இருதய நோயினால் பாதிக்கப்பட்டு இறக்கும் தறுவாயிலிருந்த டோனி ஒரு கசாப்புக் கடை வைத்திருந்தான். நாலாவது வகுப்போடு பள்ளிக்கூடத்துக்கு முழுக்குப் போட்டுவிட்டவன் அவன்!''

''டாக்டர் ஸ்டீவர்ட் இப்போது எங்கே பணியாற்றுகிறார் டாக்டர்?'' என்று கேட்டேன்.

''அவர் செத்துப் போய் ரொம்பக் காலமாகிவிட்டது! அவர் கொலையுண்டு இறந்து போய்விட்டார்!''

''என்னது!''

''ஆமாம். ஒரு நாள் ஸ்மித் ஸ்டீவர்டைக் குத்திக் குடலைக் கிழித்துக் கொன்றுவிட்டான். கோரமான கொலை!''

''ஐய்யய்யோ! ஏன் அப்படி? அவனுக்கு உயிர்ப்பிச்சை அளித்தவரல்லவா ஸ்டீவர்ட்?''

''அது சரிதான்; ஆனால் அதனால் ஸ்மித் அனுபவித்த வேதனை அவனுக்கல்லவா தெரியும்! தான் ஸ்மித்தா அல்லது டோனியா என்று புரியாத ஒரு தர்மசங்கட நிலையில் சித்திரவதைக்குள்ளாகிக் கொண்டிருந்தான். ஸ்டீவர்டோ, தான் ஓர் அற்புதத்தைச் சாதித்துவிட்டதாக அவனிடமே அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தான். ஸ்மித், மரியாவுக்காக ஸ்மித்தாக வாழ முயன்றான். ஆனால் டோனியின் மூளை அவனை அப்படி வாழ விடவில்லை. மரியா விவாக ரத்து செய்துவிட்டுப் போனதும் அவன் மனக் குழப்பம் மேலும் அதிகரித்தது. திடீரென்று அவனுக்குத் தான் கொலை செய்யப்பட்டிருக்கிறோம் என்ற எண்ணம் தோன்றிவிட்டது!

''ஒரு நாள் அவன் ஸ்டீவர்டும் நானும் தங்கியிருக்கும் அறைக்கு வந்தான். வந்ததும் வராததுமாக, 'டோனியைக் கொலை செய்து விட்டீர்களே' என்று குற்றம் சாட்டினான்; ஸ்மித்தைக் காப்பாற்ற வேண்டும், ஒரு பெரிய சாதனையைச் செய்து காட்ட வேண்டும் என்ற அபரிமிதமான ஆர்வத் துடிப்பில் டோனி மரணமடையும்வரை காத்திராமல் ஓர் அநாகரிகமான பரபரப்புடன் டோனியின் மூளையை ஆபரேஷன் செய்து எடுத்து ஸ்மித்துக்குப் பொருத்திவிட்டதாகக் குற்றம் சாட்டினான். ''யார் கண்டார்கள்? ஆண்டவன் அருளால் ஓர் அற்புதம் நிகழ்ந்து டோனி பிழைத்து எழுந்து நடமாடியிருக்கலாம்; அவன் உயிரைப் பறிக்கும் உரிமை உங்களுக்கு ஏது?' என்றான்.

''அவன் சொல்வதெல்லாம் வெறும் பிதற்றல் என்று நாங்கள் வாதாடிப் பார்த்தோம். அவன் கேட்கவில்லை. நிமிஷத்துக்கு நிமிஷம் அவன் கோபம் அதிகமாகி வந்தது. திடுமென்று இடையில் மறைத்து வைத்திருந்த கத்தியை உருவி எடுத்துக் கொண்டான். 'என்னைக் கொன்றவர்களை நான் சும்மா விடமாட்டேன்' என்று கூறியபடியே ஸ்டீவர்ட் மீது பாய்ந்தான். நான் அலறிப் புடைத்துக் கொண்டு தப்பி வெளியே ஓடினேன். துணைக்கு ஆட்களை அழைத்துக் கொண்டு வருவதற்குள் ஸ்மித்தின் வெறி அடங்கிவிட்டது. ஸ்டீவர்டின் வாழ்நாளும் முடிந்து விட்டது. ஒரு பெரிய மருத்துவ மேதை கொலையுண்டு இறந்து கிடந்தான்.

''போலீஸார் வந்து ஸ்மித்தைக் கைதாக்கி கொண்டு போனார்கள். அவன் கூறியதை யாரும் நம்பவேயில்லை. அவனுக்கு மூளை சரியில்லை என்று பைத்தியக்கார விடுதியில் போட்டார்கள். சில வருஷங்கள் கழித்து அவன் அங்கேயே மாண்டுவிட்டதாக எனக்குச் செய்தி வந்தது.''

''உங்கள் கதையைக் கேட்டு எனக்கே பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறது. டாக்டர்'' என்றேன் நான். ''இன்னும் ஒரே ஒரு சந்தேகம்.''

''கேள்'' என்றார் டாக்டர் சாமியார்.

''அந்த ஆஸ்பத்திரி பெரிய டாக்டர்கள் இவ்வளவு நிகழ்ந்த பிறகு அந்த நிகழ்ச்சியை அமுக்கி விடவே முயலுவார்கள். ஸ்டீவர்ட், ஸ்மித், டோனி எல்லாரும் செத்துப் போய் விட்டார்கள். சந்தோஷமாகக் குடும்பம் நடத்தும் மரியா, தான் இடையில் சிறிது காலம் ஒரு கொலைகாரனைக் காதலித்ததாக ஒப்புக்கொள்ள முன்வரவே மாட்டாள். அப்படி இருக்க, இந்த மாற்று மூளை ஆபரேஷன் நடந்தது என்பதற்கு உங்கள் வாக்கு ஒன்று தவிர வேறு என்ன அத்தாட்சி?'' என்று கேட்டேன்.

''கொஞ்சம் இரு. இதோ வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு டாக்டர் சாமியார் உள்ளே போனார். சற்று நேரத்தில் அவர் திரும்பி வந்தபோது அவர் ஆபரேஷன் செய்யப்போகும் டாக்டரைப் போல் முகமூடி அணிந்திருந்தார். கையில் மூளை ஆபரேஷனுக்குரிய ஆயுதங்கள் - வெட்ட ஒன்று, குத்த ஒன்று, குடைய ஒன்று... இத்யாதி, இத்யாதி ஏழெட்டு இருந்தன.

''டேய், கிருஷ்ணு! என்னடா இப்படிப் பயந்து ஓடுகிறாய்? வாடா இங்கே!'' என்று கூவி அழைத்தார் டாக்டர் சாமியார்.

பதில் சொல்ல நான் அங்கிருந்தால்தானே?

அஞ்சலி



தூய அன்பின் வலிமையைக் கால வெள்ளத்தால்கூடக் குன்றச் செய்ய முடிவதில்லை. அன்பிறால் பிணைக்கப் பட்டவர் உலகை விட்டுச் சென்று லும் அவர் நினைவு என்றும் பசுமை யாகவே நிற்கிறது. டிசம்பர் 13ம் தேதியுடன் ஸ்ரீமதி சுந்தரம்மாள் மறைந்து எட்டு ஆண்டுகள் ஆகின் றன. என்றாலும் மாறாத அன்புடன் அவரது கணவர் திரு வி. தியாக ராஜன் (முன்னாள் 'அபீஷியல் அஸ்ஸைனி') அவர்களும் அவரது குடும்பத்தினரும் சுந்தரம்மாளின் தெய்வீகக் குண நலன்களைக் கசிந்த உள்ளத்துடன் நினைவு கூராத நாளில்லை. அவர்களது நினைவு மேலுலகை எய்திவிட்ட அப்பெரு மாட்டி ஸ்ரீமதி சுந்தரம்மாளின் ஆன்மாவுக்கு என்றென்றும் சாந்தியளிக்குமாக!

உங்கள் முதலும் வட்டியும், சென்னை அரசாங்கத்தாரால் உத்திரவாதம் அளிக்கப்படுகின்றன.

பிக்ஸட் டெபாசிட்கள்

கீழ்க்கண்ட கவர்ச்சிகரமான வட்டியில் ரூ 50,000 வரை இப்பொழுது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன

ஒரு வருடமும், அதற்கு மேலும் ஆனால் 2 வருடங்களுக்குள்ளாக —5¾%

2 வருடங்களும், அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்குள்ளாக —6%

3 வருடங்களும், அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்களுக்குள்ளாக —6¼%

5 வருடங்களும், அதற்கு மேலும் —————————— 6½%

குறைந்த பக்ஷம் ஏற்றுக்கொள்ளப்படும் பிக்ஸட் டெபாசிட் தொகை ரூ. 1000/-

MIIC மதறாஸ் இண்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்பொரேஷன் லிமிடெட்.

எல். எல். ஏ. பில்டிங்ஸ். 150-A. மவுண்ட் ரோடு. மதறாஸ்-2.
கிளை : 1231, தெற்கு மெயின் தெரு. தஞ்சாவூர்

டி. வி. நரஸிம்மன், எம்.ஏ., ஸி.ஏ., ஐ.ஐ.பி.
செக்ரட்டரி

Criterion MIIC2087

ஸ்ரீ கே. சுப்பாராவ் அவர்கள் சட்டத்துறை நிபுணர். நீதி பரிபாலனத் துறையில் உயர் பதவிகள் வகித்து, பாரத சுப்ரீம் கோர்ட்டின் பிரதம நீதிபதியாகச் சிறப்புப் பணியாற்றியவர். தனிநபர் சுதந்திரத்துக்கு அரசியல் சாஸனம் தந்துள்ள உத்தரவாதத்தைக் காப்பதில், நீதிபதி என்ற முறையில் அவர் காட்டிய கண்டிப்பு குறிப்பிடத்தக்கது.

ராஜாஜி ஏற்றிய தீபம்

கே. சுப்பாராவ்

இம்மாதம் எட்டாந் தேதி ராஜாஜி தொண்ணூற்று ஒன்றாவது பிராயத்தைத் தொடங்குகிறார். சாதாரணமாகப் பிறந்த நாள் என்பது காலம் சென்றுகொண்டேயிருப்பதைத்தான் குறிக்கிறது. சென்ற வருஷத்தை விட ஒருவர் மேலும் ஓர் ஆண்டு வயோதிகராகி விட்டார் என்பதே பிறந்த நாளின் பொருள். ஆனால் ராஜாஜி போன்ற மகா புருஷர்களின் விஷயத்தில் பிறந்த நாளுக்கு விசேஷ முக்கியத்வம் உண்டு. அவருக்குப் பிறந்த நாள் வருகிறது என்றால், யுக யுகமாகச் சேர்ந்துள்ள நமது ஞானச் செல்வக் குவியலுக்கு மேலும் செல்வம் சேர்க்கிற ஒரு வாழ்க்கையின் பாதையில் இன்னொரு மைல் கல் காண்கிறோம் என்று அர்த்தம். இப்பிறந்த நாளைக் கொண்டாடுவது, அவரது கடந்த காலத்துக்கு மக்கள் தெரிவிக்கும் பாராட்டையும், இனி வரவிருக்கும் காலத்தில் அவர் நமக்குச் செய்ய விருக்கும் தொண்டுகளைக் குறித்து மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும் பிரதிபலிப்பதாகும். அவரது குணநலன்களை நினைவு கொள்ளவும், இந்தக் குணநலன்களை இளம் தலைமுறையினரிடம் பதிவிக்கவும் ஒரு சந்தர்ப்பத்தை அவரது பிறந்த நாள் நமக்குத் தருகிறது.



ஆழ்ந்து ஆராயும் அறிவு, நுண்ணிய சிந்தனை, புதுமைக் கருத்து, தெள்ளிய நோக்கு, தீர்க்கமான புலமை, விரிந்த அநுபவம், பழுத்த ஞானம், உத்தமமான நிர்வாகத்திறன் — இவை ராஜாஜியின் சில குணநலன்கள்.

சுதந்திரம் கிடைத்த பிறகு நம் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு ஆட்சியாளர்கள் மனப்பூர்வமாக முயற்சி தொடங்கினர். இந்தப் பரந்த தேசம் ஒரே ஆட்சியின் கீழ் சுதந்திரமாகக் கொண்டுவரப்பட்டது இதுவே முதன் முறையாகும். சுதந்திர சகாப்தம் தொடங்கிய பின் தேசம் முழுவதையும் அபிவிருத்தி செய்வதன் பொருட்டுத் தொழில் துறைக்கு அடித்தளம் அமைக்கப்பட்டது. தனியார் உடைமை குறித்துச் சட்டங்களை மாற்றிச் சமூகச் சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டன. நகர்ப்புறத் தொழிலாளர் நிலை மேம்படுத்தப்பட்டது. இடைத் தரகர்களை விலக்குவதற்கும், குத்தகை விதிகளில் அநுகூலம் ஏற்படுத்துவதற்கும் புரட்சிகரமான விவசாயச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. சர்வதேச அரங்கிலும் தேசத்துக்குச் சிறிது அந்தஸ்து பெற்றுத் தரப்பட்டது. நாட்டைச் சுபிட்சப் பாதையில் திருப்பியாயிற்று என்றே தோன்றியது.

ஆனால் நாளடைவில் எப்படியோ எல்லாம் திசை மாறித் தவறாகச் செல்லத் தொடங்கின. ஏக கட்சி ஆட்சி முறை வளர்ந்து ஜனநாயகத்தின் எதிர் காலம் குறித்து அச்சம் உண்டாயிற்று. சோஷலிஸப் பாதை அதிகார வர்க்கத்தின் வளர்ச்சிக்கும், சர்க்காரின் சர்வாதிபத்தியத்துக்கும் இட்டுச் செல்லலாயிற்று. வறுமையும், லஞ்ச ஊழலும் நாட்டில் தலைவிரித்தாடலாயின. எல்லா அரசியல் கட்சிகளும் வறுமையின் தீனக் குரலைக் கேட்டபோதிலும் அவை இந்நிலையை மாற்றச் செய்த நன்முயற்சியைத் துரதிர்ஷ்டவசமான பேத உணர்ச்சிகளும், முரணான பொருளாதார கோஷங்களும் நிஷ்பலமாக்கின. மொழிப் பிரச்னை நாட்டைத் துண்டாடி விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டது. மதச் சார்பின்மை என்பதைத் தவறாகப் பொருள் கொண்டதன் விளைவாக வாழ்க்கையின் உயர் பண்புகள் மதிப்பிழந்த நாணயம் போலாயின. சக்தி வாய்ந்த இரு அந்நிய எதிரிகள் நம்மைத் தாக்கினர். மேலும் தாக்கக்கூடிய பயங்கர வாய்ப்பையும் உண்டாக்கினர். கூட்டுச் சேராக் கொள்கை காரணமாகச் சக்தி வாய்ந்த நண்பர் எவரும் இல்லாத நிலையை அடைந்தோம். அந்நியக் கடன் என்பது நிரந்தர வியாதியாயிற்று. சர்வதேச அரங்கில் கடனாளியானோம். பணவீக்கம், விலைவாசி உயர்வு ஆகிய தொத்து நோய்களால் பற்றப்பட்ட தேசப் பொருளாதாரம் சீர்குலைந்தது. சுருங்கச் சொன்னால், அரசியல், சமூக நிலை, பொருளாதாரம் இவற்றோடு தேசப் பாதுகாப்பிலும் கூட நாடு தாழ்நிலை அடைந்திருந்தது. மக்கள் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தனர். எல்லாவற்றையும் இழந்தாயிற்று என்றே தோன்றியது. நம்முடைய அரசியல் சாஸனமும், அது கூறும் ஜனநாயக வாழ்முறையும்

தான் இதற்கெல்லாம் காரணம் என்று நம் நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள விரோதிகள் பழித்துக் கூறினர். ஏதோ ஒரு விதத்தில் சர்வாதிகாரம் ஏற்பட்டால்தான் விமோசனம் பிறக்கும் என்பதே இவர்கள் குறிப்பால் காட்டிய வழி.

இச்சூழ்நிலையில் ரட்சகராகத் தோன்றினார் ராஜாஜி. அவர் தமது ஆட்சேபக் குரலை எழுப்பினார். வியாதியின் காரணத்தைக் கண்டறிந்தார். அதற்குச் சக்தி வாய்ந்த பரிகாரங்களையும் கூறினார். ஆட்சி பீடத்தில் அதிகாரக் குரலைத் திடமாக எதிர்த்தார். ஆட்சியாளருக்கு முகஸ்துதி பாடியவர்களின் கேலிகளுக்கு தீரமாக முகம் கொடுத்தார். நேர்மையான மனச்சாட்சி தெம்பிழந்திருந்த போது அதைச் சுண்டிவிட்டுக் கிளப்பினார்: அறிவின் நேர்மையை இழக்காதோர் யாவரும் அவரது குரலுக்குப் பதில் குரல் எழுப்புமாறு செய்தார்.

கண்ட்ரோல் — லைசென்ஸ் முறையின் தவிர்க்க முடியாத விளைவே லஞ்ச ஊழல் என்பதை ராஜாஜிதான் அழுத்தமாக எடுத்துக் காட்டினார். சிரம காலத்தைக் கடப்பதற்காகத் தாற்காலிகமாகக் கண்ட்ரோல்கள் விதிப்பது அவசியமாக இருக்கலாம். ஆனால் கண்ட்ரோல் முறையே ஆட்சிக் கொள்கையாகிவிட்டால், லஞ்ச ஊழலே பொது வாழ்க்கை என்றாகிவிடும். இதனால் வாழ்வின் உயர் பண்புகள் யாவும் நாசமாகி விடும். இந்த நோயைக் கூர்மையாக எடுத்துக் காட்டியது ராஜாஜி பெர்மிட்—லைசென்ஸ் ராஜ்யத்தை எதிர்த்துச் செய்த போராட்டமேயாகும். எனினும் ஆட்சியாளர்கள் அவர் சொற்படி நடக்கவில்லை. சோஷலிஸத்துக்காகவே பெர்மிட்-லைசென்ஸ் முறை என்று சொல்லப்பட்டாலும், இதன் விசித்திர விளைவாக நேர்மையற்ற அதிகார வர்க்கத்தினரும், செல்வாக்குள்ள பணக்காரர்களும்தான் லாபம் அடைந்துள்ளனர். ஏழைகளும், மத்தியதர மக்களும் பழைய படியேதான் உள்ளனர்.

ஏக கட்சியின் ஆட்சி என்பது கெட்டியாக உறைந்துபோய் ஜனநாயகத்தையே அழிக்கக் கூடிய பயங்கர நிலையில், இது தவிர்க்க வொண்ணாதது என்று நாடு முழுவதும் தலை வணங்கி நிற்கின்றபோது, ராஜாஜி சக்தி நிறைந்த ஆட்சேபக் குரலை முழக்கினார். ஒரு காலகட்டத்தில் அந்தத் தனியொரு மனிதரே எதிர்க் கட்சியாக உருவெடுத்திருந்தார். காலக்கிரமத்தில் அவரது உண்மை நிறைந்த கண்டனம் அறிஞர் உலகில் பரவியது. அவர்களைத் தூக்கத்திலிருந்து எழுப்பியது. செத்துக் கொண்டிருந்த எதிர்க் கட்சிக் கோஷ்டிகளுக்குப் புனர் ஜீவனம் ஊட்டினார். ஆளும் கட்சியின் குறைகளைப் பளிச்சென்று காட்டி, தெளிவாக வரையறுத்த கொள்கைகளும் செயல் திட்டமும் கொண்ட ஒரு புதுக் கட்சியைத் தொடங்கினார். தேசத்தின் பல பகுதிகளிலுமுள்ள எதிர்க் கட்சிக் கோஷ்டிகளின் வெற்றிக்கு ராஜாஜியே பெரும்பாலும் காரணகர்த்தராவார்.

சமீபத்திய பொதுத் தேர்தல் தேசத்தின் அரசியல் நிலையை மாற்றியுள்ளது. பெண்டுலம் மறுமுனைக்கு நகர்ந்துள்ளது: இரண்டு அல்லது மூன்று கட்சிகள் இருப்பதற்குப் பதில் மாறுபட்ட கோட்பாடுகள் கொண்ட ஏராளமான கட்சிகள் தோன்றியுள்ளன. ஒருசில ராஜ்யங்களைத் தவிர மற்றவற்றில் பல கட்சிகள் சேர்ந்து அமைத்துள்ள கூட்டுச் சர்க்கார்கள் அவற்றுக்கு முன்னிருந்த ஆட்சியை விட எவ்விதத்திலும் சிறப்பாகச் செயலாற்றவில்லை. கட்சி அரசியல் முறை என்பது இப்போது ஒரு பிரவாகத்தில் அடித்துச் செல்லப்படுகிறது. இன்று அரசியல் துறையில் மூன்று சக்திகள் செயல்படுகின்றன. (1) ஜனநாயக சக்தி; (2) யதேச்சாதிகார சக்தி; (3) ஜனநாயக சக்தி போல் வேஷமிடும் யதேச்சாதிகார சக்தி. சில சந்தர்ப்பங்களில் ஒரே கட்சியிலேயே இந்த மூன்று சக்திகளும் காணப்படுகின்றன. இவற்றில் மூன்றாவது சக்தி மிகவும் ஆபத்தானது. இதைக் கட்டுப்படுத்தாவிடில் நாடு யதேச்சாதிகார முகாமில் சேர்ந்துவிடும். ஜனநாயக சக்தி என்பது போட்டியாலும், திடமான நல்ல பொதுஜன சேவையாலும், மக்கள் சுதந்திரத்தில் நிலையான நம்பிக்கை வைத்து அதைப் பிரத்யட்சமாகச் செயலாக்கிக் காட்டுவதாலுமே உயிர்வாழ முடியும். 'மானுடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வாழ்க்கையின் உயர் பண்புகளைப் பலியிடத் தேவையில்லை; மனிதனை உலகியல் சௌகரியத்துடன் வாழச் செய்வதற்காக அவனுடைய தனிமனிதப் பண்புகளை அழித்து, அவனை ஆன்மிகமற்றவனாகச் செய்ய வேண்டியதில்லை; உடம்போடு மனம், ஆன்மா இவற்றையும் ஒன்று சேர வளர்ப்பதால்தான் உண்மையான ஆனந்த வாழ்வை எய்த முடியும்' — இந்த உண்மைகளைச் செயல் உருவில் ஜனநாயகம் நிரூபித்துக்காட்டி, யதேச்சாதிகாரத்தை விட ஜனநாயகமே சிறந்தது என்பதை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும். இதற்கு மாறாக, ஜனநாயகத்தைச் சொல்பவர்களே யதேச்சாதிகார விளையாட்டில் இறங்கினால், ஜனநாயகம் என்பது யதேச்சாதிகாரத்தின் கையில் சிக்கிக் கொண்டு, நாளடைவில் யதேச்சாதிகாரத்துடன் ஐக்கியமாகி விட வேண்டியதுதான். ஒரேபோன்ற சிந்தனைப் போக்குள்ள ஜனநாயகக் கட்சிகள் யாவும் ஒன்று சேரவும் ஜனநாயக சக்தியைப் பலப்படுத்தி, நமது ஜனநாயகத்தைக் காக்கவும் ராஜாஜியின் உதவி நமக்கு வேண்டும்.

நமது ஜீவாதார உரிமைகளும், சுதந்திரங்களும் இன்று அபாய நிலையில் உள்ளன. பார்லிமெண்டில் கொண்டுவர உத்தேசித்திருக்கும் சாஸனத் திருத்தம் நிறைவேறி விட்டால், அதுவே நமது சுதந்திரங்களின் அழிவுக்குத் தொடக்கமாகி விடும். பல நூற்றாண்டுகளாகச் செய்த தியாகத்தினால் கிடைத்தவையே இச் சுதந்திர உரிமைகள். பார்லிமெண்டு முறைப்படி நடக்கும் ஆட்சியையே நாசம் செய்ய விரும்புகிறவர்கள், 'பார்லிமெண்ட் மற்ற எல்லாவற்றுக்கும் மேம்பட்டது' என்ற கவர்ச்சிகரமான போலிக் கோஷத்தை எழுப்பிப் பார்லிமெண்ட் வாக்கின் மூலம் அடிப்படைச் சுதந்திரங்களை நாசம் செய்யப் பார்க்கிறார்கள். அரைத் தூக்கத்திலிருந்த ஜனநாயக சக்திகளையும் இந்தப்

போலிக் கோஷம் ஆட்கொண்டு விட்டது. யதேச்சாதிகாரத்தின் இந்தத் திருப்பு முனையிலிருந்து ராஜாஜியின் வாதம்தான் தேசத்தை இன்றேனும் காக்கக் கூடும்.

தேசத்தின் நோய்க்கு ஒரு முக்கியமான காரணம் நாட்டு வாழ்வில் சமய உணர்வின் சக்தி நலிந்திருப்பதே என்பதை ராஜாஜி கண்டார். விஞ்ஞானமும் தொழில் நுணுக்கக் கலையும் மனிதனின் மகத்தான வெற்றி என்பது வாஸ்தவம். அவை மானுடத் தேவைகளை நிறைவேற்ற உதவும் என்பதும் வாஸ்தவம். எனினும் விஞ்ஞானத்தின் உலகாயதத்தைச் சமயத்தினால் பக்குவமாக்கினால் ஒழிய, எல்லாத் துறைகளிலும் இழிநிலையே ஏற்படும். தார்மிக வாழ்க்கைக்குச் சமயமே பின்னணி. மனச்சாட்சியை உயர்த்துவது அதுவே. வாழ்க்கையின் உன்னதப் பண்புகளில் ஒருவரை நம்பிக்கை வைக்குமாறு செய்வது சமயம். தவறுகளிலிருந்து சரியானவற்றையும், கெட்டவற்றிலிருந்து நல்லவற்றையும் பிரித்துத் தேர்வு செய்ய உதவுவது சமயம். எல்லாச் சமயங்களும் சத்தியத்துக்கு இட்டுச் செல்கின்றன. இதை உணர்ந்தால் சமயங்கள் பல இருப்பினும் சகிப்புத்தன்மை ஏற்படும். சகிப்புத் தன்மை ஒருமைப்பாட்டுக்கு இட்டுச் செல்லும். இந்தச் சகிப்புத் தன்மையை உணர்ந்துதான் நமது அரசியல் சாஸனம், எல்லா சமயங்களும் அவற்றின் தனி இயல்புகளுக்கேற்ப மலருவதற்கான நிலையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என்று விதித்தது. 'மதச் சார்பின்மை' என்ற வார்த்தை நமது அரசியல் சாஸனத்தில் இடம் பெறவில்லை. எனினும் 'மதச்சார்பின்மை' என்றால் நாஸ்திகம் என்று பொருள் கொண்டு, இதை ஒரு பெரிய தேசிய இலட்சியமாகப் பிரகடனம் செய்து வருகிறார்கள். இந்தத் தவறான கருத்தை நீக்க ராஜாஜி முயன்று வருகிறார். சமயமும் சகிப்புத் தன்மையுமே நன்னடத்தையின் முதுகெலும்பு என்பதையும், நன்னடத்தை இல்லாவிடில் இந்தியா தான் தூளாகிச் சிதறிவிடும் என்பதையும் ராஜாஜி தமது எழுத்துக்களின் மூலம் உணர்த்தி வருகிறார்.

மதபேதங்களைச் சகிப்புத் தன்மையுடன் ஒப்புக்கொள்ள வேண்டும் என்ற கொள்கை எல்லா மதங்களும் ஆரோக்கியமாக வளர வகை செய்யும். ஹிந்து மதத்தை வளர்க்க விரும்புகிறவர்கள் முதலில் தங்களது மதத்தை ஒழுங்குசெய்துகொள்ள வேண்டும். நமது சமயத்தின் தூய அம்சங்களை அதன் புற அழுக்குகளிலிருந்தும், ஒட்டடையிலிருந்தும் பிரித்தெடுக்க வேண்டும். ஹிந்து சமயத்தின் மிகவும் நொய்ந்துபோன பாகம் ஜாதி முறையும், தீண்டாமையுமே. இவற்றில் ஹிந்து மதாபிமானிகள் தீவிர கவனம் செலுத்த வேண்டும். ஜாதி முறை பற்றி ராஜாஜியின் கருத்து என்ன என்பதை நான் அறிந்திருக்கவில்லை. ஆனால் தீண்டாமையை அகற்றுவதில் அவருக்கு உள்ள தீவிர உணர்ச்சியை அனைவரும் நன்றாக அறிவர். என் அபிப்பிராயப்படி தீண்டாமை என்பதும் ஜாதி முறையின் ஓர் அங்கம்தான். ஏனெனில் நடைமுறையில், ஜாதி என்பது பிறப்பின் அடிப்படையில் பிரித்துப் பார்ப்பதைத் தவிர வேறெதுவும் அல்ல. உயர்ந்த அல்லது தாழ்ந்த ஸ்தானத்தைக் குறிக்கிற ஓர் அடையாளச் சீட்டே ஜாதி. ஜாதி முறையை அரசியல் சாஸனம் புறக்கணிக்கிறது. ஆயினும் அரசியல்வாதிகள் இதைக் காத்து வளர்க்கிறார்கள். ஜாதி முறையின் உயர்வு—தாழ்வு அரசியல் துறையில் நேர் எதிராகச் செயல்படுவது ஒரு விசித்திரம். அரசியலில் வகுப்புவாதத்தை ஆழ வேரூன்றுவதற்கு இதுவே காரணம். சூழ்நிலை சாதகமாக உள்ள இப்போதே, சட்டம், அதிகாரம், சமூக சீர்திருத்தம், சக்தி வாய்ந்த தனிக் குரல்கள் யாவும் ஒன்று சேர்ந்து இம்முறையை அகற்ற வேண்டும். அல்லது பலவீனப்படுத்தவாவது வேண்டும். நிச்சயமாக ராஜாஜி இவ்விஷயத்தில் வழிகாட்டுவார். ஏனெனில் ஜாதி முறை என்ற கட்டுமானம் இருக்கும் வரையில் அவரது இதயத்துக்கு உகந்த தீண்டாமை ஒழிப்பு சாத்தியமல்ல.

இந்தியா இன்னமும் தன் ஆன்மாவை இழக்கவில்லை. இந்தியா இந்தியாவாக இல்லாமல் அழிந்துவிட முடியாது. எனவே ராஜாஜி தமது ஆழ்ந்த கல்வி, அநுபவம் ஆகியவற்றைக் கொண்டு கூறும் உபதேசத்தைக் காலம் கடக்கு முன் மக்கள் கேட்பார்களென நம்பலாம். அவரது ராமாயண மகாபாரத நூல்கள் வெறும் மொழிபெயர்ப்புகள் அல்ல. அவரது புதிய பார்வையும் கலந்த கருக்கங்களே அவை. மூல கிரந்தங்களைத் தமது ஆழ்ந்த ஆராய்ச்சி ஆற்றலுடன் விளக்கி அவர் ஹிந்து மதத்தைப் பற்றி எழுதும் கட்டுரைகள், 'விஷயஞானமில்லாத சோதரர்கள் ஹிந்து வாழ்முறையிலிருந்து வழுவிவிடக் கூடாதே' என்பதில் அவரது மத நம்பிக்கை மிகுந்த ஆன்மா கொண்டுள்ள தாபத்தைக் காட்டுகின்றன. அவரது நூல்கள் பல மொழிகளில் பெயர்க்கப்பட்டு, பல பதிப்புகள் கண்டுள்ளன என்பது அவை ஹிந்து சமூகத்தின் பல்வேறு வரிசையில் உள்ளவர்களையும் சென்றடைந்துள்ளன என்பதைக் காட்டுகிறது.

ராஜாஜி தீர்க்கதரிசனம் வாய்ந்த மேதை; ஞானி. இன்று அறிவு நிலையில் மத்திம தரத்தில் உள்ள சமூகம் அவரைப் புரிந்துகொள்ளாமற் போகலாம்; வேண்டுமென்றே அவர் கூறுவதைத் தவறாக விளக்கவும் செய்யலாம். அதிகாரமும், அதிகாரத்தில் உள்ளவர்களை முகஸ்துதி செய்யும் மனோபாவமும் அவரை அலட்சியப்படுத்தலாம். அவரது பெருமையைச் சிறுமைப்படுத்தவும் பார்க்கலாம். ஆயினும் முதிர்ந்த விருத்தாப்பியத்தில் அவர் ஆன்ம சக்தியால் செய்யும் மகோன்னதமான பணி வீண் போகாது. அவர் வெற்றி காண்பார் என்பது மட்டுமல்ல; தமது வாழ்நாளிலேயே அந்த வெற்றியைக் காண்பார் என்றும் நம்புகிறேன்.

ராஜாஜி வழி காட்டி விட்டார். அவர் ஏற்றிய தீபத்தை ஏந்தி, ஜனநாயக வாழ்வைக் காப்பது இளந் தலைமுறையினரின் பணியாகும்.

இன்றைய சிரம தசையில் மக்களுக்கு மிகவும் தேவைப்படும் ராஜாஜி தேச சேவையிலேயே இன்னும் பல்லாண்டு வாழ்வாராக!

அப்பாச்சி கிளுகிளு என்று சிரித்தான். அவனுக்கு எல்லாவற்றுக்குமே சிரிப்புத்தான் வரும். எதற்குத்தான் சிரிக்கிறது என்று கிடையாது. பெயர் மிகவும் பொருத்தமாகத்தான் வைத்திருக்கிறார்கள்! பெயரிலேயே அவனுடைய 'கெட்டிக்காரத்தனம்' புலப்படும்படியாக!

அவனுடைய சிரிப்புக் குரலைக் கேட்டதும் அடர்ந்த புதருக்குப் பக்கத்திலிருந்த ஒரு பெரிய முகம் திடுக்கிட்டுப் போய்த் திரும்பிப் பார்த்தது. அப்பாச்சிக்குப் பயமாகப் போய்விட்டது. இருந்தாலும் அவனுடைய சிரிப்பு நிற்கவில்லை. அவனுக்குத்தான் எல்லாவற்றுக்குமே சிரிக்கிற பழக்கமாயிற்றே! ஆனந்தமாக இருந்தாலும் சரி, அழுகையாக வந்தாலும் சரி, அவனுக்குச் சிரிப்புத்தான்! பயமாக இருந்தாலும் பரிதாபமாக இருந்தாலும் திகைப்பாக இருந்தாலும் வியப்பாக இருந்தாலும் அவனுடைய உணர்ச்சிகளுக்கு வேறு உருவம் கிடையாது. வண்ணமும் கிடையாது. சிரிப்பு, சிரிப்பு, சிரிப்புத்தான்!

ஆனால் அந்த முகத்தையே ஒரு கணத்துக்கு மேல் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த அவனுக்குத் தன்னை யறியாமலே சிரிப்பு மெல்ல மெல்ல அடங்கிவிட்டது. ஒளிப் பொறியாகப் பறந்து வரும் இரு சுடர் விழிகளைத்தான் அவன் பார்த்தான். அந்த மாதிரியான அகன்ற விழிகளையோ, பார்வையையோ அவன் எந்த மனிதர்கள் முகத்திலும் இதுவரை கண்டதில்லை. அவனுடைய பைத்தியக்காரத்தனத்தையே போக்கடிக்கிற மாயப் பார்வை. ஏதோ ஒரு மாதிரியான விவேகம் எட்டிப் பார்ப்பதுபோல் அவன் உறங்கி நின்றான்.

கிட்டத்தட்ட, சிங்கம்போல இருந்தது அந்த முகம். தாடியும் மீசையும் புதராக வளர்ந்து கிடந்தன. தலை, புருவம், தாடை, வாய் ஒன்றுமே தெரியவில்லை. ஒளி வீசும் கண்களை மட்டும்தான் அப்பாச்சி கண்டான்.

மண்டி போட்டு உட்கார்ந்திருந்த அந்த உருவம் மெல்ல எழுந்தது. இதுவரையில் அனுபவித்தறியாத ஒரு கிலி, மறுபடியும் தொண்டைக்குள்ளே ஒலிக்கும் கலகல ஒலியாக வெளிப்பட்டது. ஆஜானுபாகுவான ஒரு பிரகிருதி. நீளமான கைகள்; கால்கள்; பரந்த பாறை போன்ற மார்பு, ஒட்டிய வயிறு; கிழிசலான ஒரு முண்டு...

அந்த கம்பீரமான உருவம் அவனை நோக்கி வந்தது. அப்பாச்சிக்கு இருந்த பயத்தில் அந்த இடத்திலிருந்து ஓடக்கூடத் தோன்றவில்லை. அவன் வைத்த கண்ணை எடுக்காமல் அந்த ஆகிருதியையே பார்த்துக் கொண்டிருந்தான். அந்த உருவம் அவனை நெருங்கி வர வர அவனுக்கு மூச்சு முட்டியது. தொண்டையின் கிளுகிளுப்பு அந்த மூச்சோடு அடைத்துக் கொண்டது.

''யார் நீ?''

''அப்பாச்சி!''

''இங்கே என்ன செய்யறே?''

''உங்களைத்தான் பார்த்தேன்.''

''எல்லாம் பார்த்தியா?''

''ஆமாம்.''

''என்ன பார்த்தே?''

''நீங்க பேசிக் கொண்டிருந்ததை யெல்லாம் பார்த்தேன். .....''

அந்த உருவம் சட்டென்று அவனை மேலே பேச விடாமல் அவனுடைய வாயைப் பொத்தியது.

ஒரு கணம், இரண்டு கணம், ஐந்து, பத்து. அப்பாச்சி திருதிருவென்று விழித்துக்கொண்டிருந்தான். அந்த உருவத்தின் ஒளி பாய்ச்சும் கண்கள் எதிரே சூனியத்தைப் பார்த்துக் கொண்டிருந்தன.

அடுத்த வினாடி. அந்த உன்மத்தமான உருவம் அவன் வாயைப் பொத்திய கையை எடுத்துவிட்டு அவனைப் பார்த்து அவன் சிரிப்பது போலச் சிரித்தது.

''உனக்கு என்ன வேண்டும்?''

''ஒன்றும் வேண்டாம்.''

''பயப்படாதே!''

''ஹ ஹ் ஹெ.....''

சிரிப்பு. அவருக்கு மட்டுமே கேட்கிற சிரிப்பு.



''சரி; உனக்கு எல்லாம் கிடைக்கும். வேண்டிய பணம், நல்ல அழகான பெண்டாட்டி, நிறைய பூமி. போதுமா?''

''போதும், ஆனால் என்னாலே இவ்வளவும் வச்சுக்க முடியாதே!''

''முடியும். முடிஞ்சால் வேணுமா?''

''வேணும்தான்!'' மறுபடியும் சிரிப்பு.

''எல்லாம் கிடைக்கும்.''

''நான்தான் அசடாச்சே! எனக்கு யார் கொடுப்பா?''

''நான் கவனிச்சுக்கிறேன், அதை.''

''உங்ககிட்ட ஏது?''

''நான் கொடுத்தால்தானா? யார் கொடுத்தால் உனக்கு என்ன? உனக்குக் கிடைச்சால் சரிதானே?''

''சரிதான்.''

''ஆனால் ஒன்று.''

''என்ன?''

''இதை நீ யார் கிட்டேயும் சொல்லப்படாது. அதாவது இங்கே நடந்ததை. நீ பார்த்ததை!''

''சரி, சொல்லல்லே.''

''இன்னொருத்தருக்கு இது தெரியப்படாது.''

''சரி; நான் சொன்னாத்தானே?''

''மறந்து போய் நீ கொடுத்த வார்த்தையை மீறினா என்ன ஆகும், தெரியுமோ?''


''தெரியாது.''

''எல்லாம் வந்த வழியே போய்விடும்.''

''அப்படியா?''

''ஆமாம்.''

''ஆனா நான் ஜாக்கிரதையா வச்சுக்கிண்டாக்கூடவா போயிடும்?''



''நீ எப்படி வச்சுக்கிண்டாலும் போயிடும்.''

''நான் சொல்லாமே இருந்தா?''

''அப்ப என்ன செய்தாலும் போகாது. அது தான் நீ ஜாக்கிரதையா இருக்கிற ஒரே வழி. யார் கிட்டேயும் சொல்லாதே: உன்னை யாராலேயும் அசைக்க முடியாது.''

''சரி.''

''போயிட்டு வா! திரும்பிப் பார்க்காமே போயிடு.''

''உங்களை அப்புறம் பார்க்கணும்னா எங்கே பார்க்கறது?''

''எதுக்காகப் பார்க்கணும்?''

''இவ்வளவும் கிடைக்கலேன்னா?''

''நான் சொல்றதிலே நம்பிக்கை இல்லையா?''

''எதை வச்சிண்டு நம்பறது? நீங்க சொல்றதை நம்பலாம்னு எனக்குத் தோண வேண்டாமா?''

''தோணல்லியா?''

''எனக்கு ஒண்ணுமே தோணல்லே!''

''கிடைச்சுட்டா?''

''கிடைச்சுட்டாலும் உங்களைப் பார்த்துப் பேசணும் போல இருக்காதா?''

''அப்புறம் எதுக்காகப் பார்க்கணும்?''

''எதுக்கோ பார்க்கணும்போல இருந்தா?''

''இருக்கப்படாது. மறந்துடு. என்னை மறந்தால்தான் இங்கே நடந்ததும் உனக்கு மறக்கும். அதுதான் உனக்கு நல்லது. சௌக்கியமா, சந்தோஷமா இருக்கலாம்!''

அப்பாச்சிக்கு இதைக் கேட்டதும் சிரிக்க வேண்டும் போல இருந்தது. ஆனால் ஏதோ ஒன்று — சிரிக்கக் கூடாது என்ற விவேகம் தடுத்தது. இந்த விவேகம் எப்படி உண்டாயிற்று? அவனுக்குப் புரியவில்லை. அவன் சிரிக்கவில்லையே தவிர அந்தக் காட்டு மலைப் பிரதேசமெல்லாம் எதிரொலிக்கச் சிரித்தபடியே அந்தக் கம்பீரமான உருவம் கல்லிலும் புல்லிலும் நடந்து, புதரிலும் பள்ளத்திலும் மறைந்து எங்கோ சென்றுவிட்டது. அவர் போன வழியைத் தேடித் தேடி அலைந்தன அவன் கால்கள்.

மூன்று மணி நேரம் போலச் சுற்றி அலைந்துவிட்டு அவன் ஏதோ ஒரு கிராமத்தின் எல்லையருகே வந்து நின்றான். சுற்றிச் சுற்றிப் பார்த்தபோது அது ஏதோ அவன் இதற்கு முன் பார்த்த கிராமம் போல இருந்தது.

''யாரு அது நிக்கறது? அப்பாச்சியா?''

அந்தக் குரலைக் கேட்டதும் அப்பாச்சி திரும்பிப் பார்த்தான்.

''பெரிய பாட்டீ!''

''வந்தியாடா என் கண்ணே! வாடா, உங்க பெரியப்பனுக்கு எல்லாம் தயாரா இருக்குடா, வா! நீ தாயாரிடா கண்ணே — நீதான் கொள்ளி போடணும். அது தாண்டா ரத்த சம்பந்தம் என்கிறது. என்னமா உன்னைக் கொண்டு வந்து இந்தச் சமயத்துக்கு விட்டிருக்கு, பார்த்தியா? பத்தாயிரம் வச்சிருக்காண்டா. கொள்ளி போடறவனுக்குக் கொடுக்கணும்னுட்டு! பத்தாயிரம்டா—அத்தனையும் ரொக்கம் — எங்கிட்டத்தான் இருக்கு. வா!''

ஈரத் தலையும் குடமுமாக நின்ற கிழவியைப் பின்பற்றிப் போனான் அப்பாச்சி.

அந்த உன்மத்தப் பிரகிருதியைப் பார்த்து முப்பது நாழிகை கூட ஆகவில்லை. பத்தாயிரம் ரூபாய் அவன் கைக்கு வந்துவிட்டது. அப்படியானால் அந்த மனிதர் சொன்னபடியெல்லாம் நடக்கும் போலிருக்கிறதே! ''யார் கொடுத்தால் உனக்கு என்ன? உனக்குக் கிடைச்சால் சரிதானே?''

இப்போது அவன் சிரிக்க மறந்துவிட்டான். சிந்திக்கிற திறமை மட்டும் வந்திருக்கிறது.

அவர் ஆஞ்சநேய சுவாமி பிரத்யட்சமானது போலப் பேசிக் கொண்டிருந்ததைத் தான் அவன் கேட்டான். உருவத்தை அவன் பார்க்கவில்லை. அவன் கண்களுக்கு அந்தக் கம்பீரமான உருவம் மட்டும்தான் தெரிந்தது. இவர் பைத்தியம் போலப் பேசிக் கொண்டிருக்கிறாரோ என்றுதான் அப்பாச்சி சிரித்தான். ஆனால் அவர் — மற்றவர்கள் கண்ணில் படக் கூடாத காட்சியை அவன் பார்த்துவிட்டதாக எண்ணிப் பயந்துவிட்டார் போலிருக்கிறது. ஆஞ்சநேய சுவாமி பெயரைச் சொல்ல வருவதற்குள்ளேயே அவர்தான் அவன் வாயை அடைத்து விட்டாரே!

மூன்றாவது நாள் அவன் நித்திய விதியை முடித்துவிட்டு, பெரிய பாட்டியோடு பேசிக் கொண்டிருந்தபோது வாசலில் ஏதோ பேச்சுக் குரல் கேட்டது.

அவனுடைய ஒன்று விட்ட பெரியப்பாவின் மைத்துனன்தான் கிளி மாதிரி ஒரு பெண்ணைக் கூடவே அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தார்.

''சேஷனாடா!'' என்று கேட்டுவிட்டுப் பாட்டி பெரிதாக அழுதாள். அப்புறம் சாப்பாடெல்லாம் ஆன பிறகு, ''இவன்தாண்டா அப்பாச்சி! பன்னிரண்டு வருஷம் கழிச்சு பெரியப்பனுக்குக் கொள்ளி போட எங்கே யிருந்தோ தெய்வம் இவனைக் கொண்டுவந்து விட்டிருக்கு!'' என்று சேஷனிடம் சொன்னாள் பாட்டி.

''அப்ப அந்த ரூபாயெல்லாம்?''

''இவனுக்குத்தாண்டா! பொட்டியைத் தூக்கி அவனண்டே கொடுத்திட்டேன்!''

''அப்ப இன்னொண்ணையும் செய்ய வேண்டுமே நீங்க!'' என்றார் சேஷன்.

''என்னாலே முடிஞ்சா, செய்யமாட்டேங்கறேன்! சொல்லுடா சும்மா!''

''பொட்டியை ஒப்படைச்ச கையாலே, நாராயணியையும் ஒப்படைச்சுடறோம்.''

''அட பைத்தியக்காரா! அதெப்படிடா நான் நெனைச்சதையே நீயும் சொல்றே! அவ எனக்கு நாட்டுப் பெண்ணா இருக்கட்டும்டா! எங்க அப்பாச்சிக்கு ஒண்ணும் தெரியாது. அவதாண்டா அவனையும் சேர்த்துப் பார்த்துக்கணும். அப்பாச்சி இனிமே அவனோட அப்பா அம்மா இருக்கிற ஊருக்குப் போக மாட்டான். சொல்லி யனுப்பிச்சுட்டாப் போதும்; எங்கேயோ இருந்து தொலையட்டும்னு இருந்துடுவா அவா. அஞ்சாறு பிள்ளைகள் இருக்கிறச்சே இந்த அசட்டுப் பிள்ளையை அவா ஏன் தேடப் போறா?''

''நான் அசடுன்னு சொல்றியா பாட்டி!''

''அசடா இருந்தா இருந்துட்டுப் போடா. அசடா இருந்தாத்தாண்டா அதிருஷ்டம்! பாரேன், இந்த மாதிரிப் பெண்ணைத் தேடிப் போனாக்கூடக் கிடைக்குமாடா? அது உன்னைத் தேடிண்டு வந்திருக்கே!'' என்றாள் பாட்டி.

''போ, பாட்டீ!'' என்று சிரித்தான் அப்பாச்சி!

''போங்கோ பாட்டீ!'' என்று நாராயணியும் சிரித்தாள்.

''இந்தக் காரியமெல்லாம் ஒரு வழியா முடியட்டும்; அடுத்தபடியா உங்க விஷயத்தைக் கையோடே நிறைவேற்றி வைக்கிறேன்! ஏண்டி நாராயணி, எங்க அப்பாச்சியை நீ கல்யாணம் பண்ணிக்கிறயா? பிடிச்சிருக்கா?''

''எனக்கு என்ன பாட்டி தெரியும்? அவா என்ன சொல்றான்னு மொதல்லே கேளுங்கோ.''

''ஏண்டா அப்பாச்சி?''

''எனக்கு என்ன பாட்டி தெரியும்? நீ சொல்றபடி நான் செய்துட்டுப் போறேன். உனக்குப் பிடிச்சிருந்தா எனக்குப் பிடிச்ச மாதிரிதான்.''

''எனக்குப் பிடிக்கலேன்னா?''

''சேச்சே, அப்படிச் சொல்லாதே பாட்டி! பொண்ணு கிளியாட்டமா இருக்கா. ரொம்பப் பிடிச்சிருக்குன்னு சொல்லு பாட்டி!''

''அட அசட்டு அப்பாச்சி!''

''இருந்துட்டுப் போறேன் பாட்டி. அசட்டுக்குத்தான் அதிருஷ்டம்!''

மூன்றாவது மாதம் கல்யாணமாகிவிட்டது. அப்பாச்சி அடுத்த ஊரிலே போய் ஒரு கடை வைத்துவிட்டான்.

மூன்றாவது வருஷத்துக்குள் அப்பாச்சிக்கு ஐந்தாறு ஊர்களில் வியாபாரம் இருந்து வந்தது. ஐம்பது, அறுபது ஏக்கருக்கு மேல் நிலம் வாங்கிவிட்டான். அவனாக எங்கே நிலத்தைத் தேடிக் கொண்டு போனான்? அதுவாக அல்லவா அவனைத் தேடி வந்தது? விற்றவன், காய்க்காத எலுமிச்சைக் கொல்லையையும், விளையாத தரிசு நிலத்தையும் பத்து வரையில் ஆதாயம் என்று ஏமாற்றி விற்றுவிட்டதாக நினைத்தான். இருநூற்றைம்பது எலுமிச்சை மரங்கள்! ஒன்றாவது காய்க்க வேண்டுமே! அதாவது விற்றவனிடம் இருந்தவரையில்.

அப்பாச்சி அது காய்க்கிற கொல்லையா, காய்க்காததா என்றுகூடக் கேட்கவில்லை. நாராயணிக்கு நன்றாக விசாரித்துப் பார்த்து வாங்க வேண்டும் என்று எண்ணம். எவனாவது இவர் தலையில் கொண்டு வந்து கட்டிவிடுவான் என்று அவளுக்குச் சந்தேகம். ஆனால் அப்பாச்சி, அந்த நிலத்துச் சொந்தக்காரன் பயந்து கொண்டு கேட்ட விலையை அப்படியே கொடுத்து விட்டான்!

''வாங்கியாச்சா?''

''வாங்கியாச்சு! பணம் கொடுத்தாச்சு! ரிஜிஸ்டர் பண்ணியாச்சு!''

''பெரிய பாட்டி சொல்றப்பலேதான் இருக்கு!''


''அதாவது அசடு என்கிறியாக்கும்!''

''இப்ப நான் ஒண்ணும் சொல்லலே! அதுமட்டும் காய்க்காமெ இருக்கட்டும். அப்புறம் சொல்றேனா இல்லையா, பாருங்கோ!''

''பாரு, பாரு!''


கொல்லையை விற்றவன் ஆறு மாதம் கழித்து ஓடி வந்தான்.





பாம்பே மெடல்ஸ் & அலாய்ஸ் கம்பெனியைச் சேர்ந்த கே. எச். சீதாராமனின் மூத்த குமாரி சௌபாக்கியவதி விமலாவுக்கும் மதராஸ் ஏ. சுப்ரமணிய அய்யரின் குமாரன் சிரஞ்சீவி சிவராமனுக்கும் பம்பாயில் சமீபத்தில் விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.

வாழ்க, விமலா – சிவராமன்



அணுவிரத இயக்கத் தலைவர் ஆசாரிய துளசி அவர்கள் நவம்பர் 15ந் தேதி ராஜாஜியை அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடினர். தேசிய மொழியைவிட உலக மொழி உருவாவதைப் பற்றியே இன்று நாம் சிந்திக்க வேண்டும் என்றும், மக்களிடை அச்சமின்மை ஏற்பட வேண்டும் என்றும் ராஜாஜி கூறினர். அணுவிரத இயக்கத்தைச் சிலாகித்துவிட்டு, எனினும் இது ஒரு தனி மதமாகி விடக்கூடாது என்று எச்சரிக்கையும் விடுத்தார்.

''சாமி — உங்களை ஏமாத்திப்பிட்டதா நினைச்சேன். ஆனு நான்தான் சரியானபடி ஏமாந்து போனேன். மோசம் போயிட்டேன், சாமி. அப்படிச் சடை சடையாகக் காய்க்கத் தொங்குது. ஒரே வருஷத்துலே நீங்க போட்ட பணம் வந்துடும் போலே இருக்கே. மோசக்காரக் கொல்லே, என் வாயிலே அடிச்சு, என் வயித்தெரிச்சலே இப்படிக் கொட்டிக்கிட்டுதே !'' என்று அடித்துக் கொண்டான்.

அப்படி வண்டி வண்டியாக அத்தனை மரங்களும் காய்த்துக் கொட்டிவிட்டன !

அது மட்டுமல்ல; இத்தனை காலமும் தரிசாகக் கிடந்த நிலமெல்லாம் ஒன்றுக்குப் பத்தாக, பொன்னுக விளைந்தன.

அதை யெல்லாம் பார்த்து நாராயணி வாயடைத்துப் போனுன். அப்பாச்சி சிரித்தான்.

''என்ன சொல்லப் போறே இப்ப ?'' என்று ராத்திரி படுக்கையில் உட்கார்ந்து கொண்டு கேட்டான்.

''இந்தச் சமயத்திலே பேசறதுக்கு என்ன இருக்கு ? அப்படியே உங்களை ஆசை தீரக் கட்டிக்கப் போறேன் ! எனக்கு வேறே ஒன்னும் பேசவே தோணலே !'' என்றுன் நாராயணி.

''அப்ப யார் அசடு ?''

''நீங்கதான், நீங்கதான் !''

''இப்பவும் நான்தானு? ஏன்?''

''நீங்கதான் சொல்வேளே — அசட்டுக்குத் தான் அதிர்ஷ்டம்னு. உங்களுக்கு அதிர்ஷ்டம் அடிக்கிறது. அதனுலே நீங்க நிச்சயமா அசடுதான் !''

''பைத்தியமே — நானு அசடு ? உனக்கு உண்மை தெரிஞ்சா இப்படிப் பேசுவியா ? இதுக்கெல்லாம் என்ன காரணம் தெரியுமா?''

''என்ன காரணம் ?''

அப்பாச்சிக்குத் திடீரென்று சிரிப்பு வந்தது. அந்தச் சிரிப்பு அந்த அறையெங்கும் சென்று மோதி எதிரொலித்தது. அந்த எதிரொலி கலகலவென்று, கணீரென்று காடு மேடு மலையெல்லாம் சூழ்ந்த பிரதேசமெங்கும் சென்று மோதித் திரும்புவது போன்ற ஒரு பிரமையை எழுப்பியது.

''ஐயையோ !'' என்றுன் அப்பாச்சி.

''என்ன?''

''ஊஹும்; நான் மாட்டேன். என்னை ஒரு காரணமும் கேட்காதே. நான் சொல்லமாட்டேன். ஊஹும்; கேட்காதே. வேண்டாம் ; கேட்காதே !''

நாராயணி இதைப் பார்த்து விட்டுச் சிரித்தாள்.

''என்ன சிரிக்கிறே ?''

''சிரிக்காமெ என்ன செய்யறது ? எனக்குத்தான் காரணம் தெரியுமே !''

'' உனக்குத் தெரியுமா ? எப்படித் தெரியும் ?''

''அதை நான் சொல்ல மாட்டேன். சும்மா சும்மா அசடு அசடுன்னு சொல்லமாட்டேன்! நான் வந்த வேளைதான் இத்தனை அதிர்ஷ்டத்துக்கும் காரணம்.''

''அப்பாடா! பொழைச்சேன். உனக்குத் தெரியும்னதும் ஒரு நிமிஷம் நான் பயந்தே போயிட்டேன் '' என்றுன் அப்பாச்சி.

அடுத்த மூன்று வருஷங்களுக்குள் அசட்டு அப்பாச்சி, அப்பாச்சி அன் கோ பிரைவேட் லிமிடெட் உரிமையாளராகி விட்டான். ஏற்றுமதி இறக்குமதி வியாபாரமும், அதை ஒட்டின ஒரு தொழிற்சாலையுமாக அவன் கை வலுத்து விட்டது.

நாராயணிக்கு உள்ளூறப் பயம்தான். ஒரு சாமர்த்தியமும் இல்லாமல் இப்படியே எல்

லாம் ஒன்றுக்கு மூன்றாக வளருவதைக் கண்டு அவன் பயந்தான். அப்பாச்சியும் வர வர நிம்மதியில்லாமல் தவித்தான். இதெல்லாம் அவனுடைய அசட்டுத்தனத்தின் கோளாறு என்று நினைத்து அவள் சமாதானம் செய்து கொண்டாள்.

திடீர் திடீரென்று அப்பாச்சி யாரிடமும் எதுவும் சொல்லிக் கொள்ளாமல் அந்தக் கம்பீரமான முகத்தைத் தேடி அந்தப் பழைய இடத்துக்குப் போய்ச் சுற்றிச் சுற்றிப் பார்த்து விட்டு வந்தான். அந்த ஒளி வீசும் கண்களைக் காணாத ஏக்கத்தோடு திரும்பி வந்தான்.

வந்த பிறகு ஒவ்வொரு தடவையும் முன்னிலும் அதிகமாக நிம்மதியின்றித் தவித்தான்; தூக்கம் கொள்ளாமல் புரண்டான். அந்தத் தவிப்பும் தாபமும் நாளுக்கு நாள் விசுவரூபமெடுத்து வந்தன.

''எப்படியோ இருந்தோம்; எப்படியோ ஆகிவிட்டோம். அப்புறமும் ஏன் இந்த அரட்டல் புரட்டல்?'' என்றாள் நாராயணி.

''இன்னும் உனக்கு என்ன காரணம்னு தெரியல்லியே !''

''ஊஹும்; நீங்கதான் அதைச் சொல்லல்லியே. எனக்குத் தெரிஞ்சதெல்லாம் ஒரே ஒரு காரணம்தான். அதுதான் சரியான காரணம் !'' என்றாள் அவள்.

திடீரென்று மூன்று மாதங்கள் கழித்து ஒரு நாள் நடு ராத்திரியில் எழுந்து உட்கார்ந்து கொண்டு மனைவியை எழுப்பினான்.

''நாராயணி ! ஒரு காரியம் செய்தால் என்ன ?''

''என்ன?''

''எல்லாம் உன்னாலே வந்த அதிருஷ்டம்னு சொன்னே இல்லியா முந்தி ?''

''அது என்னமோ சும்மாச் சொன்னேன்; பெண்டாட்டி வந்த வேளைன்னு சொல்ற இல்லியா ? அதை நினைச்சிண்டு சொன்னேன் ! நான் என்னத்தைக் கண்டேன்?''

''அதனாலேதான் நானும் சொல்றேன். எல்லாத்தையும் நான் உன் பேரிலே மாற்றி எழுதி வைக்கப் போறேன்.''

''எதுக்காக ?''

''எனக்கு என்னவோ பயமாயிருக்கு. என் கிட்டேயே எனக்கு வர வர நம்பிக்கையில்லே. நான்தான் அசடாச்சே. சாமர்த்தியமோ உறுதியோ போறாது. அதனாலே சொல்றேன்.''

''யார் பேரிலே இருந்தா என்ன ? நீங்க வேறே, நான் வேறயா ? இரண்டும் ஒண்ணு தானே ?''

''அப்படியா சொல்றே ? நீயும் நானும் ஒண்ணுன்னு சொல்றே ?''

''ஆமாம், ஆமாம்; பெரிய பாட்டி சொல்லியிருக்கா. கல்யாண மந்திரத்திலே சொல்லியிருக்காம். நீங்க பாதி; நான் பாதி. இரண்டு பேரும் சேர்ந்துதான் ஒண்ணு. நான் இல்லாமெ நீங்க பாதிதான். அதே போல நீங்க இல்லாமெ நானும் பாதிதான்!''

'' உம்...ம்... அதானே பார்த்தேன்!'' என்று சிரித்தான் அப்பாச்சி.

''எதுக்கு இப்படித் திடீர்னு?''

''நாளைக்கு எதுக்கும் வக்கீலைப் பார்த்து எல்லாத்தையும் உன் பேருக்கு எழுதிப்புட்டு அப்புறம் சொல்றேன் !''

மறு நாளும் அப்பாச்சி நடு ராத்திரியில் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து சிரிக்கத் தொடங்கினான். அவன் முகத்தைப் பார்க்கவே நாராயணிக்குப் பயமாக இருந்தது. கண்களில் என்னவோ ஒரு வெறி.

''எதுக்கு இப்படி ராத்திரியிலே எழுந்து உட்கார்ந்து கொண்டு சிரிக்கணும்? எனக்குப் பயமாக இருக்கே!'' என்றாள் நாராயணி.

''எதுக்கு இனிமே பயப்படறே ? எல்லாத்தையும் எழுதிப் பங்கிடு பண்ணியாச்சு. நாளை முதற்கொண்டு நான் எஜமானன் இல்லே ; எல்லாத்துக்கும் நீதான் எஜமானி. நாளைக்கு என்ன, இன்னியிலேருந்தே நீதான் எல்லாத்துக்கும் சொந்தக்காரி.''

''ஏன் அப்படி ?''

''ஏன்னு இனிமே என்னாலே தாங்க முடியாது. இன்னிக்கு அதே நாள். அமாவாசை!''

''எதே நாள் ?''

''எனக்கு இந்த அதிருஷ்டமெல்லாம் உண்டாகறதுக்குக் காரணமாக இருந்த நாள். நீ எனக்குக் கிடைச்சே பாரு, அதுக்கே அந்த நாள்தான் காரணம். இத்தனை சௌகரியங்களுக்கும் மூலகாரணமாக இருந்த அதே நாள்.''

''அதனாலே ?''



அறிவு, அமைதி, அடக்கம்

ராஜாஜி தூய தன்னடக்கத்துடன் எச்சமயமும் அமைதியாகக் காணப்படுகிறார். விஷயங்களை ஆய்வதில் நிபுணத்துவம் படைத்தவர் என்றும், ஆய்ந்த உண்மையைக் கண்டிப்பான முறையில் அமைதியான வகையில் எடுத்துச் சொல்பவரென்றும் கருதப்படுகிறார். எண்ணுவதிலும், பேச்சிலும் பொருளுடையவர். கேட்போரின் உள்ளங்களைக் கவரும் வகையில் நகைச்சுவையுடன் இடித்துப் பேசுவதில் வல்லமை படைத்தவர். அவருடைய அறிவு விரைவில் முக்கியமானவற்றைக் கவனிக்கும் சக்தி பெற்றது; மிகவும் கூர்மையானது. தேசியப் போராட்டத்தில் பங்கு எடுத்துக் கொண்ட அவருடைய மற்ற தோழர்களைப் போல் உணர்ச்சிக்குக் கடுகளவும் இடம் கொடுக்காதவர்.

மைக்கேல் பிரீச்சர் எழுதிய ''நேரு ஒரு அரசியல் சரித்திரம்'' என்ற நூலிலிருந்து ஒரு பகுதி. மொழி பெயர்த்தவர்: ஏ.எம். அலி இப்ராஹீம்.

புள்ளியும் கோடும்



ராஜாஜி மேற்கு வங்க கவர்னராக இருந்தபோது என்னுடைய மைத்துனர் திரு எஸ். கிருஷ்ணமூர்த்தி அவரிடம் காரியதரிசியாகப் பணியாற்றினார். ஒரு சமயம் ஐம்பது அல்லது அறுபது "சைக்ளோ ஸ்டைல்" செய்யப்பட்ட கடிதங்களை ராஜாஜியின் கையெழுத்துக்காக அவர் மேஜை மீது வைத்தார். அவற்றில் சில முக்கியமான வார்த்தைகளில் ஐ (i) என்ற எழுத்தின் மீது உள்ள புள்ளியும் டி (t) என்ற எழுத்தின்மீது உள்ள குறுக்குக் கோடும் சரியாக விழவில்லை. இதைக் கவனிக்காமல் போகுமா ராஜாஜியின் கூரிய கண்கள்? ஒவ்வொரு கடிதத்திலும் i என்ற எழுத்தின் மீது புள்ளியையும் t என்ற எழுத்தின் மீது குறுக்குக் கோட்டையும், போட்டுக் கொண்டு வந்தார் ராஜாஜி. அருகில் நின்ற கிருஷ்ணமூர்த்தி, "ஒரு கடிதத்தில் நீங்கள் இதைச் செய்தால் போதாதா? மற்றவற்றில் நாங்கள் கவனித்துத் திருத்துகிறோமே?" என்றார்.

"நீங்கள் செய்வீர்கள்தான்; நான் மறுக்கவில்லை. ஆனால் கையெழுத்துப் போடுவது நானல்லவா?" என்றார் ராஜாஜி. எல்லாக் கடிதங்களிலும் புள்ளியையும் கோட்டையும் போட்டு முடித்தார்.

ஒவ்வொரு சிறு காரியத்தையும் அவர் உன்னிப்பாகக் கவனித்துச் செய்கிற அழகையும் அருகில் இருப்பவரது மனம் நோகாமல் அவர் பேசிய சாமர்த்தியத்தையும் நினைத்து இன்றைக்கும் வியந்து கொண்டிருக்கிறார் கிருஷ்ணமூர்த்தி.

தகவல்: டாக்டர் கே. எஸ். ரங்கநாதன்

"அதனாலேதான் முன்ஜாக்கிரதையா என்கிட்டே இருந்த எல்லாத்தையும் உன் பேருக்கு மாத்தி எழுதி வைச்சுட்டேன். என் பேரிலே இருந்தாத்தானே வம்பு? என் பேரிலே இருந்தாத்தானே எல்லாம் போகும்? இப்ப?"

"எப்படியிருந்தாலும் நீங்களும் நானும் ஒண்ணேதான்! நம்ம ரெண்டு பேரிலே யார் பேரிலே இருந்தாலும் ஒண்ணேதான். நான் வேறே, நீங்க வேறேயே இல்லே!"

அப்பாச்சி இதைக் கேட்டு உற்சாகம் இழந்தான்.

"அப்படியானு அதனாலே அப்பவும் ஆபத்துத்தான்னு சொல்றியா?" என்று கேட்டுவிட்டுச் சிரித்தான்.

"உங்களுக்கு எல்லாத்துக்குமே சிரிப்புத்தானா? நான் வேறே ஒண்ணும் சொல்லலே. ஆபத்தோ, ஆபத்து இல்லேயோ எனக்கு நீங்க சொல்றது ஏதாவது புரிஞ்சாத்தானே? என் கையைப் புடிச்ச அன்னிக்கு நீங்க சொன்ன மந்திரப்படி, நீங்களும் நானும் ஒண்ணு. அதுதான் எனக்குத் தெரியும். அதைத்தான் நான் சொல்றேன். எனக்கு வேறே ஒண்ணும் தெரியாது."

அப்பாச்சி அப்படியே சிறிது நேரம் சிலையாக உறைந்து கிடந்தான். பிறகு மறுபடியும் கிளுகிளு வென்று அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"ஹஹ்ஹஹ.... அப்பச் சரி; அதானே கேட்டேன். நீயும் நானும் ஒண்ணுதானே? நீ வேறே, நான் வேறே இல்லேயே! அப்ப உங்கிட்டே அதைச் சொன்னா எங்கிட்டேயே சொல்லிக்கிறப்பலேதானே? இன்னொருத்தர் கிட்டே சொன்னதாக ஆகாதே? அந்த விதமாப் பார்த்தாலும் பயமில்லே. இனிமே உங்கிட்டே அந்த விஷயத்தைச் சொல்லலாம். எல்லாத்துக்கும் என்ன காரணம்னு சொல்லலாம். ஆனா ஒண்ணு: மறந்துடாதே. நீ மறந்து போய்க்கூட அதை வேறே ஒருத்தர் கிட்டே சொல்லிடப்படாது. ஆமாம்; சொன்னயோ அத்தனேயும் போச்சு!"

"அப்படியானா வேண்டாம். எங்கிட்டேகூட நீங்க எதையும் சொல்ல வேண்டாம்."

"நாராயணி! இங்கே பாரேன்,— நாராயணி!"

"ஐயோ, வேண்டாம்! வேண்டவே வேண்டாம்."

"நாராயணி! என் தவிப்பு, என் சங்கடம் உனக்குத் தெரியல்லியா? என்னைப் பாரேன்!"

"ஊஹும்; நான் பார்க்கல்லே. எங்கிட்டே சொல்ல வேண்டாம்."

"நாரா — யணி!"

அவனுடைய அதட்டல் குரலைக் கேட்டு அவள் பயந்து நடுங்கி விட்டாள்.

"நான் தவிக்கணும்; நீ சுகமாத் தூங்கலாம்னு பார்க்கறியா? என்னாலே எத்தனை நாள் அதை மனசுக்குள்ளேயே வச்சுண்டு தவிக்க முடியும்னு நினைக்கிறே? நானும் மனுஷன்தானே? என் நெஞ்சே வெடிச்சுடும் போல இருக்கே. அது தெரியல்லியா உனக்கு? நீ வேண்டாம், வேண்டாம்னு சொல்லச் சொல்ல, உங்கிட்டே அதைச் சொல்லலேன்னா என்னாலே தாங்காது போலிருக்கு. மண்டையே வெடிச்சுடும் போலிருக்கு!"

நாராயணி அவன் முகத்தைப் பார்த்தாள்; நெற்றி நாளங்கள் எல்லாம் சடைப் பூரான் மாதிரி தடித்திருந்தன. கண்களிலே அரை உன்மத்தமான வெறி, பொறி பறந்து கொண்

டிருந்தது. நரம்புகள் எல்லாம் புடைத்து விட்டன.

''பாத்தியா, இதுக்கு மேலே என்னாலே தாங்க முடியாது. நீதான் உறுதியாய்ச் சொல்றியே, நீயும் நானும் ஒண்ணுன்னு. அப்ப ஏன் பயப்படறே? வேறே வேறேன்னு வை; நான்தான் அதுக்கும் முன் ஜாக்கிரதையா உன் பேருக்குச் சட்டப்படி எல்லாத்தையும் எழுதி வச்சுப்புட்டேனே. இந்த நிமிஷம் முதல் நான் வெறும் ஆள். இத்தனை சொத்துக்கும் அதிகாரி நீ. எல்லாம் நான் சுயமாகத் தேடின சொத்து. நான் இஷ்டப்பட்டு யாருக்கு வேணும்னாலும் கொடுக்கலாம். அப்படியே கொடுத்துட்டேன். ஏராளமாச் செலவழிச்சு ரிஜிஸ்தர் பண்ணியாச்சு. அப்புறம் நீயோ நானோ எதுக்குப் பயப்படணும்? இனிமே எனக்கு என்ன பயம்? என்ன பயம்?''

நாராயணி அவன் பிடியில் சிக்கிக் கொண்டு, பேச முடியாமல் அவனையே பார்த்தவாறு இருந்தாள்.

'' ஒருத்தர்கிட்டேயும் சொல்ல மாட்டியே !''

''ஊஹும்; மாட்டேன் !''

''சொன்னா என்ன ஆகும், தெரியுமா ?''

''என்ன ஆகும் ?''

''எல்லாம் போயிடும்.''

''எது ?''

''உன் ஆஸ்தி, பாஸ்தி அத்தனையும்!''

''அது உங்களுக்கும் சொந்தமில்லையா?''

''பார்த்தியா, மறுபடியும் என்னைக் குழப்பறியே ! என்னை என்ன வெறும் அசடுன்னு இன்னமும் எண்ணிண்டிருக்கியா ? எனக்கு அன்னிக்கே விவேகம் வந்துடுத்து. அந்த விவேகத்தினாலேதான் எல்லாம் பெருகியிருக்கு !''

''சரி சரி, நான் ஒண்ணும் தப்பா நினைக்கல்லே !''

''இதெல்லாம் ஏது தெரியுமா ?''

''எதெல்லாம் ?''

''இத்தனை அதிருஷ்டத்துக்கும் என்ன காரணம், தெரியுமா?''

''சொல்லுங்கோ ! எனக்குத்தான் தெரியாதே !''

''சொல்லப் போறேன். ஹ ஹ.... சொல்லப் போறேன். ஹ ஹா...! சொல்லப் போறேன், ஹ ஹா! அது வந்து பெரிய ரகசியம்... அந்த ரகசியத்தைத்தான் சொல்லப் போறேன். ஹ ஹ ஹா !''

அப்பாச்சி பாக்கி இரவெல்லாம் இதையே திருப்பித் திருப்பிச் சொல்லிச் சிரிப்போடு புலம்பிக் கொண்டிருந்தான். பொழுது விடிந்த பிறகு நன்றாகத் தூங்கிப் போனான். அப்புறம் சாயங்காலமாக எழுந்தான்.

''நாராயணி !''

'' என்ன ?''

''நான் வந்து அந்த ரகசியத்தை உன்கிட்டே சொல்லிட்டேனா ?''

''சொல்லியாச்சு போலிருக்கே.''

''அந்தக் காட்டிலே ஆஞ்சநேய ஸ்வாமி பிரத்தியட்சமா வந்து அந்தக் கம்பீரமான மனிதர்கிட்டே பேசிக் கொண்டிருந்தாரே, — அதைச் சொல்லிட்டேனா? அதை நான் எட்டிப் பார்த்தேனே, அதைச் சொல்லிட்டேனா? நான் சிரிச்சதும் அந்தக் கம்பீரமான மனிதர் எழுந்து வந்து, என்னைப் பார்த்துச் சொன்னதை யெல்லாம் சொல்லிட்டேனா ? வெளியிலே சொன்னா வந்த அதிருஷ்டமெல்லாம் போயிடும்னாரே, அதையும் சொல்லிப்புட்டேனா?''

''சொல்லியாச்சு; சொல்லியாச்சு!''

''அப்படியானால் சரி.''

அப்பாச்சி இடிஇடி என்று சிரிக்கத் தொடங்கினான். அப்புறம் மூன்று மாதங்கள் கழித்துத்தான் அவனுக்குச் சுய நினைவு வந்தது. பக்கத்தில் யாரோ உட்கார்ந்து கொண்டு கலகலவென்று சிரிப்பதுபோல இருந்தது.

''அடடே, நீங்களா ?''

''அப்பாச்சி, இப்படிச் செய்துப்புட்டியே ! செய்யலாமா ?''

''அதான் நான் அப்பவே சொன்னேனே, ஸ்வாமி. என்னாலே இதெல்லாம் வச்சுக்க முடியாதுன்னு. நீங்கதானே முடியும்னு சொன்னீர்கள் ? அது சரி; இப்ப அதனாலே என்ன ஆச்சு ?''

''புயல் வந்தது; புயல் போல் பெரிய பெரிய நஷ்டமெல்லாம் வந்தது. ஒவ்வொண்ணாப் போக ஆரம்பிச்சுட்டுது.''

''எல்லாம் போயிட்டுதா ?''

''இன்னும் மூணே மாசத்திலே எல்லாம் போயிடும்.''

''என்னை விட்டுப் போயிருக்காதே. நாராயணியை விட்டுத்தானே போச்சு ?''

''யாராயிருந்தா என்ன? நீங்க ரெண்டு பேரும் வேறே வேறேயாயிருந்தாலும் ஒண்ணுதானே ?''

''என்னது, வேறே வேறேயாயிருந்தாலும் ஒண்ணுதானா ? அப்படின்னா ?''

''நீங்க ரெண்டு பேரும் ஒண்ணுதான் ; வேறே வேறேயும்தான் !''

''போகட்டும்; போகட்டும். ஆனா ஒண்ணு மட்டும் போகாது. நிச்சயமாப் போகாது.''

''என்னது ?''

'' என் அசட்டுத்தனம் ! அதுவும், போயிடுமோ ?''

''அதுவும் போயிட்டுது அப்பாச்சி ! எல்லாரும் எது போகாதுன்னு தனியாய்த் தவிக்கிறாங்களோ அது உன்னை விட்டுச் சுலபமாப் போயிட்டுது அப்பாச்சி ! எல்லாரையும் எது கலபத்திலே விடாதோ அது உன்னைச் சுலபமா விட்டுட்டுதே !''

அப்பாச்சி 'ஹோ ஹோ' என்று சிரிக்கத் தொடங்கினான். அந்தக் கம்பீரமான ஆகிருதியும் கூடவே சேர்ந்து சிரித்துக் கொண்டிருந்தது.


Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor : T. Sadasivam



ஸ்வஸ்திக்

பர்:ப்யூம்டு காஸ்டர் ஆயில்

முரட்டு கேசத்தையும்
படியச்செய்கிறது—
நாள் முழுவதும்
மழமழப்பாய் வைக்கிறது



இழைய வாரிவிடப்பட்டு
பளபளக்கும் அழகிய
கேசம்...நறுமணம் வீசும்
அடர்த்தியான கேசம்—நாள்
முழுவதும் மழமழப்புடன்
திகழச் செய்வது ஸ்வஸ்திக்
பர்:ப்யூம்டு காஸ்டர் ஆயில்

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட்., பம்பாய்

Shilpi-SOM 23 Tam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

புதுமை!

அஸ்ட்ரா... எத்தகைய பேராற்றலோடு நீங்கள் எழமுடியும் என்பதை உணர்த்தும்

திணறடிக்கிறதோ இன்றைய வாழ்வின் அசுரவேகம்...சலித்துப் பின்தங்குகிறதோ உங்கள் தெம்பு? துள்ளியெழுந்து சுறுசுறுப்பான ஒரு புத்தேடு புரட்டுவீர்! அழுந்திக் கிடக்கும் உங்கள் தெம்பை வெளிக்கொணருவீர்! அதற்கென்றே பிறந்துவரும் ஒரு புதிய பாலமுத பானம் அஸ்ட்ரா. இந்தியாவில் உணவியல் ஆராய்ச்சியிலே முன்னிற்கும் ஒரு நிலையத்தின் சிபாரிசுபெற்ற 4 டானிக் சத்துக்கள் இணைந்த அஸ்ட்ரா ஒரு சக்திக் களஞ்சியம். ஓடியாட உறுதுணையான உரமூட்டும் உன்னத பானம்.

துடித்தெழுந்து நாளைத் துவக்க ஓர் இனிய தூண்டுகோல் அஸ்ட்ரா. உற்சாகப் பூரிப்பையே பருகுவீர்! ஊக்கத்தின் உச்சியிலே விளங்குவீர்!



தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் மட்டுமே கிடைக்கின்றன.

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட்டின் தரமான தயாரிப்பு. (ரிஜிஸ்டர்டு யூஸர்ஸ்)

லின்டாஸ்–AST.1-140 TM